வரு.76 இல. 38 ★
www.vaaramanjari.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

2024 செப்டெம்பர் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை | September 29 Sunday, 2024

24 பக்கங்கள் | 100/-




02
அரசியல் பின்புலமற்ற முதலாவது பெண் பிரதமர் ஹரிணி அமரசூரிய



05
பொதுத்தேர்தலிலும் மக்கள் ஒத்துழைப்பு வழங்குவர் என்பதில் எமக்கு நம்பிக்கை!





12
இஸ்ரேல்–அமெரிக்க கூட்டு லெபனான் மீதான தரைவழித் தாக்குதலுக்கு தயாராகின்றதா?

24
தொடரை கைப்பற்ற இலங்கைக்கு இன்னும் 5 விக்கெட்டுகள் தேவை



## ஜனாதிபதி அநுர குமாரவுக்கு சிங்கப்பூர் ஜனாதிபதி வாழ்த்து



சிங்கப்பூர் ஜனாதிபதி தர்மன் சண்முகரத்தினம் மற்றும் பிரதமர் லோரன்ஸ் வோங் ஆகியோர் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு தங்களது வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர். ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு வாழ்த்து தெரிவித்து கடிதமொன்றை எழுதியுள்ளதாக

06

## புதிய அமைச்சுகளின் விடயதானங்கள்

**அதிவிசேட வர்த்தமானியில்**




புதிய அமைச்சுகளுக்கு அமைவான நிறுவனங்கள் மற்றும் அமைச்சர்களின் கீழான விடயப் பரப்புகளை வேறுபடுத்துவதற்கு அமைவான

06

## சர்வதேச புத்தக கண்காட்சியை பார்வையிட்ட ஜனாதிபதி



இலக்கிய மாதத்தையொட்டி 25ஆவது தடவையாக கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்படும் சர்வதேச புத்தகக் கண்காட்சியை ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க நேற்று (28)

06

## கட்டுப்பாட்டு விலையில் இனி அரிசி விநியோகம்

**அரிசி ஆலை உரிமையாளர்கள் தீர்மானம்**



அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு விலையின் கீழ் அரிசியை சந்தைக்கு விநியோகிக்க பாரிய அரிசி ஆலை உரிமையாளர்கள் தீர்மானித்துள்ளதாக பிரபல அரிசி ஆலை உரிமையாளர் டட்லி சிறிசேன தெரிவித்தார்.

06

**ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டோருக்கு**

## தேர்தல் செலவுகளை சமர்ப்பிக்க உத்தரவு



ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்களும் தமது தேர்தல் செலவு அறிக்கைகளை எதிர்வரும் ஒக்டோபர் 12 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்க வேண்டுமென

06

**2023 / 2024 ஆம் ஆண்டுகளுக்குரிய**

# வருமான வரியை செலுத்த செப். 30 வரை காலக்கெடு



**இறைவரி திணைக்களம் அறிவிப்பு; மேலதிக தகவலுக்கு 1944 இலக்கத்துக்கு அழைக்கலாம்**

2023/2024ஆம் ஆண்டுகளுக்குரிய வருமான வரியை செப்டெம்பர் 30ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துமாறு வரி செலுத்துவோருக்கு உள்நாட்டு இறைவரி திணைக்களம் அறிவித்தல் விடுத்துள்ளது.

இது தொடர்பான மேலதிக தகவலுக்கு 1944 எனும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறும் அல்லது அருகிலுள்ள தமது பிராந்திய அலுவலகத்தை நாடுமாறும், உள்நாட்டு இறைவரி திணைக்களம் தெரிவித்தது.

2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான வருமான வரி செலுத்த வேண்டிய அனைவரும்

06

**குறிப்பிட்ட திகதிக்குள் வரி செலுத்த தவறின் அபராதம் விதிப்பதுடன், வட்டி தள்ளுபடியோ அல்லது குறைக்கப்படவோ மாட்டாது**

## குமார வெல்கம காலமானார்



களுத்துறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான குமார வெல்கம தனது 74ஆவது வயதில் நேற்று காலமானார். கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் சிகிச்சை பெற்று வந்த அவர், நேற்று அதிகாலை

06

## சிறிதரனுக்கு கிடைத்த முதலிடம்



பாராளுமன்ற அமர்வுகளில் சிறப்பாக செயற்பட்ட உறுப்பினர்களின் தர வரிசை வெளியீட்டில் முதல் 15 இடத்துக்குள் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். 2020ஆம் ஆண்டு தொடக்கம் 2024ஆம் ஆண்டுவரை பாராளுமன்றத்தில் 52

06

## சட்டத்தரணிகள் சங்கத்துக்கு புதிய தலைவர் நியமனம்



இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் புதிய தலைவராக ஜனாதிபதி சட்டத்தரணி அநுர மெத்தெகொட தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முன்னர் பதவி வகித்த கௌசல்ய நவரத்ன இராஜினாமா செய்ததன் காரணமாக தலைவர்

06

**நிகழ்வுகளுக்காக பெற்றோரிடமிருந்து**

## பாடசாலை நிர்வாகம் பணம் வசூலிக்க தடை

**கல்வி அமைச்சு அறிவிப்பு**

பாடசாலைகளில் முன்னெடுக்கப்படும் பல்வேறு நிகழ்வுகளின் போது பெற்றோரிடம் பணம் வசூலிக்கக் கூடாதென கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு அறிவித்துள்ளது.

பாடசாலைகளில் சிறுவர் தினம், ஆசிரியர் தினம் உள்ளிட்ட பல்வேறு விழாக்களை கொண்டாட பெற்றோரிடம் பணம் வசூலிப்பதாக பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் ஜே. எம். திலக்கா ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இதனால் பெற்றோர் மற்றும் மாணவர்கள் அதிகம் பாதிக்கப்படுவதுடன், ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதாகவும் செயலாளர்

06

## ஐ.ம.ச கட்சியில் வேட்புமனு வழங்கலில் புதிய கட்டுப்பாடு

**ஊழல், மோசடியில் ஈடுபட்டோருக்கு இடமில்லை - சஜித்**



பாராளுமன்ற தேர்தலில் ஊழல், மோசடி குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான எவருக்கும் தனது கட்சியில் வேட்புமனு வழங்கப்பட மாட்டாதென்று ஐக்கிய மக்கள் சக்தி முடிவு செய்துள்ளது.

அரசாங்கத்திடமிருந்து மதுபான உரிமம் அல்லது சலுகைகளை பெற்றதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள அனைவருக்கும் எதிராக உடனடியாக விசாரணையை ஆரம்பிக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச,

06

## பொதுத் தேர்தலில் பொதுச் சின்னத்தில்

**களமிறங்குகிறார் திலித் ஜயவீர**



பாராளுமன்ற தேர்தலில் புதிய சின்னத்தில் போட்டியிடுவதுடன் பலமான அரசியல் கூட்டணியை தோற்றுவிப்பதாக மவ்பிம ஜனதா கட்சியின் தலைவர் திலித் ஜயவீர தெரிவித்தார். சுயாதீனமாக செயற்படுவதாக குறிப்பிட்டுக்

06

**தினகரன் வாரமஞ்சரி**

## எங்கள் கருத்து

### நாகரிக அரசியல் பாதையில் பயணிக்கும் இலங்கைத் தேசம்

இலங்கை மாத்திரமன்றி, சர்வதேசமே மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஜனாதிபதித் தேர்தல் நடந்து முடிந்துள்ளது. ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளின் பரபரப்பு தணிவதற்கிடையில், பொதுத்தேர்தலுக்கான தயார்படுத்தல்கள் ஆரம்பமாகி விட்டன. எனவே இவ்வருட இறுதிவரை நாட்டின் அரசியல் களம் பரபரப்பாகவே இருக்கப் போகின்றது.

இலங்கை மக்கள் அனைவருமே வியக்கும்படியாக, வன்முறைச் சம்பவங்களின்றி அமைதியாக நடந்து முடிந்திருக்கின்றது ஜனாதிபதித் தேர்தல். கடந்த காலத்தில் நிலைமை இவ்வாறாக இல்லை. கைகலப்புகள், துப்பாக்கிச் சூடுகள், கொலைகள், தாக்குதல்கள் என்றெல்லாம் ஏராளமான வன்முறைகளுடனேயே தேர்தல்கள் நடந்து முடிவதுண்டு.

ஆனால் இம்முறை நடைபெற்றுள்ள தேர்தல் வியப்பு அளிக்கின்றது. மேற்குலக நாடுகளில் நடைபெறுகின்ற தேர்தல்களை ஒத்ததாக இலங்கையிலும் தேர்தலொன்று நடைபெற்றுள்ளது.

06

**அடுத்து வரும் 05 வருடகால ஆட்சியில்**

## தமிழர் தீர்விலும் ஜனாதிபதி காத்திரமான முடிவு எடுப்பார்

**பா. அரியநேத்திரன் நம்பிக்கை தெரிவிப்பு**



வாசுகி சிவகுமார்

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, நாட்டின் ஜனாதிபதியாக பதவியேற்ற நாள் முதல் தான் கொடுத்த வாக்குறுதிகளை படிப்படியாக நிறைவேற்றி வருகிறார். தமிழ் மக்களின் அபிலாஷைகள் தொடர்பிலும் அவர் காத்திரமான முடிவை எடுப்பாரென்பது அவரது செயற்பாடுகளிலிருந்து தெரிய வருவதாக தமிழர் தரப்பு பொது வேட்பாளரான ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட பா. அரியநேத்திரன் தெரிவித்தார்.

06

## லேக் ஹவுஸ் புதிய தலைவராக காமினி வருஷமான நியமனம்



லேக் ஹவுஸ் (ANCL) நிறுவனத்தின் புதிய தலைவராக காமினி வருஷமான கடமைகளை பொறுப்பேற்றுள்ளார். லேக் ஹவுஸ் நிறுவனத்தில் கடந்த 25ஆம் திகதி அவர் உத்தியோகபூர்வமாக தனது கடமையை பொறுப்பேற்றுள்ளார்.

களனி பல்கலைக்கழகத்தில் இளங்கலை விஞ்ஞானப் பட்டதாரியான அவர், லேக் ஹவுஸ் நிறுவனத்தின் சண்டே ஒப்சர்வர் பத்திரிகையின் ஊடகவியலாளராக தனது தொழில் வாழ்க்கையை ஆரம்பித்திருந்தார். பல்வேறு நிறுவனங்களில் ஆய்வாளராகவும் அவர் பணியாற்றியுள்ளார். களனி பல்கலைக்கழகத்தில் வெகுஜன தொடர்பாடலில் முதுமாணி பட்டத்தையும், கொழும்பு

06

## ஹிஸ்புல்லா தலைவர் கொல்லப்பட்டார்

**இஸ்ரேல் இராணுவம் தெரிவிப்பு**



தமது தாக்குதலில் ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்லா கொல்லப்பட்டுள்ளதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. பெய்ரூட்டில் நேற்று முன்தினம் இரவு ஹசன் நஸ்ரல்லா மற்றும் சிரேஷ்ட

06

# அரசியல் பின்புலமற்ற முதலாவது பெண் பிரதமர் ஹரிணி அமரசூரிய



## எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தல் அரசியலில் பெண்களின் பங்களிப்பை கூட்டுமா?

இலங்கை அரசியல் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயமாக, தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமர சூரிய 16ஆவது பிரதமராக பதவிப் பிரமாணம் செய்துகொண்டதையடுத்து, பெண் அரசியல் பிரதிநிதித்துவத்தின் அவசியம் பலராலும் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

சிறிமாவோ பண்டார நாயக்க 1960இல் இலங்கையின் பிரதமரானார். அவர் இலங்கையின் முதல் பெண் பிரதமர் மட்டுமின்றி, உலகின் முதல் பெண் பிரதமர் என்ற பெருமையையும் பெற்றார். அவரைத் தொடர்ந்து, 1994ஆம் ஆண்டு அவரது மகள் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க சிறிது காலம் பிரதமர் பதவி வகித்ததுடன். பின்னர் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியாக பல வருடங்கள் பதவி வகித்தார். எனினும் இவர்கள் இருவருமே அரசியல் பின்புலம் உள்ளவர்கள். ஆனால் ஹரிணி அமரசூரிய எந்த குடும்ப அரசியல் பின்னணியுமின்றி இந்த நாட்டில் பிறந்த முதல் பெண் பிரதமர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

அதுமட்டுமின்றி கலாநிதி பட்டம் பெற்ற முதலாவது பெண் பிரதமரும் இவரே.

1970ஆம் ஆண்டு கொழும்பில் பிறந்த இவர், கொழும்பு பிஷப் கல்லூரியில் தனது ஆரம்பகல்வியை கற்றார். பின்னர் இந்தியாவிலுள்ள டெல்லி பல்கலைக் கழகத்தில் சமூகவியல் இளங்கலைப் பட்டம் பெற்றார். பின்னர் அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் உள்ள மெக்குவாரி பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றார். அதன்பின்னர் எடின்பர்க் மற்றும் குயின் மார்கரெட் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார்.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சமூக அறிவியல் பிரிவில் விரிவுரையாளராக பணியாற்றி வந்த ஹரிணி அமரசூரிய, மெல்ல மெல்ல அரசியலை நோக்கி நகர்ந்தார். 2011 ஆம் ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6% கல்விக்கு ஒதுக்கக் கோரி பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் நடத்திய போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டு பலரின் கவனத்தையும் ஈர்த்தார். கடந்த 2012 மற்றும் 2013 ஆகிய ஆண்டுகளில் திறந்த பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் செயலாளராகவும், 2014 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளில் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் உதவிச் செயலாளராகவும், 2016 இல் அச்சங்கத்தின் செயலாளராகவும் பணியாற்றினார்.

அதுமட்டுமின்றி தேசிய மக்கள் சக்தியின் முக்கிய தலைவர்களில் ஒருவராக வேகமாக வளர்ந்த ஹரிணி அமரசூரிய, தீவிர அரசியலில் ஒருகட்டத்தில் இறங்கினார். கடந்த 2020 ஆம் ஆண்டு தேசியப் பட்டியல் உறுப்பினராக பாராளுமன்றத்துக்குள் பிரவேசித்தார். பாராளுமன்றத்திலும் அவர் பல பதவிகளை வகித்துள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் தேர்தல் வெற்றிக்காக பெரிதும் பாடுபட்டார். தேர்தலுக்கு முன்னர் அவரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேசிய மக்கள் சக்தியின் பெண்கள் மாநாடு அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.

ஜனாதிபதி தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக நாடு முழுவதும் 21500 கி.மீ நீண்ட பயணத்தை மேற்கொண்டதாக அவர் தனது சமூக வலைத்தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே பிரதமர் ஹரிணி போன்றவர்களின் அரசியல் பிரதிநிதித்துவம் பலருக்கும் இன்று முன்னுதாரமாக விளங்குகின்றது. இலங்கையில் 1931இல் சர்வஜன வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்ட போதே ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரே நேரத்தில் வாக்குரிமை வழங்கப்பட்டது. எனினும் பால்நிலை சமத்துவமின்மை என்பது இன்றும் பரந்தளவில் காணப்படுகின்றது.

பெண்களை வரிசையில் நிற்கவைத்து வாக்கு பெறும் கலாசாரமே நிலவுகின்றது. அவர்களுக்கான சுயமான அரசியல் பங்குபற்றல், பிரதிநிதித்துவம் என்பது ஒப்பிட்டளவில் குறைவாகவே உள்ளது.

ஆரம்பகாலங்களில் பெரும்பாலான குடும்பங்களில் அரசியல் பற்றிய கருத்தாடல்களில் அப்பா, மாமா, தாத்தா என ஆண்களே மட்டுப்படுவதை கண்டிருப்போம். அது ஆண்களுக்குரிய ஒன்றாகவே பார்க்கப்பட்டது

பெண்கள் பெரிதாக அரசியலில் ஆர்வம் காட்டுவதில்லை.

குடும்பப் பெண்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்ற அறிவும் தெளிவும் அவர்களிடம் காணப்பட்டாலும் அந்த முடிவை அப்பாவோ அல்லது கணவனோ தான் எடுப்பார்கள். அவர்கள் சொல்லும் கட்சிக்குத்தான் நிறையப் பெண்கள் இன்றும் வாக்களிக்க பழகியுள்ளனர்.

பெண்களுக்கான அரசியல் பிரதிநிதித்துவத்தை எடுத்துக்கொண்டால், இலங்கை கைச்சாத்திட்டுள்ள பெண்களுக்கு எதிரான அனைத்து பாரபட்சங்களையும் அகற்றுவது தொடர்பான (சீடோ சமவாயம்)

ஐக்கிய நாடுகளின் ஒப்பந்தத்தின் மூலம் பெண்களின் சமமான அரசியல் பங்கேற்பு மற்றும் பிரதிநிதித்துவம் சட்டரீதியாக இலங்கையில் உறுதி செய்யப்பட்டுள்ளது. எனினும் நடைமுறையில் பெண்களை வலுவூட்டுவதற்கான வாய்ப்புகள் மிக குறைவாகவே காணப்படுகின்றது.

1947 ஆம் ஆண்டு முதல் 2020ஆம் ஆண்டு வரையான பாராளுமன்ற பொதுத்தேர்தல்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் 13 ஐ ஒருபோதும் தாண்டவில்லை.

சட்டமன்றத்துக்கு தெரிவான முதலாவது பெண் மொலமுறோவாகும். அவரை தொடர்ந்து

**1947ஆம் ஆண்டு 3, 1952ஆம் ஆண்டு 2 ,**
**1956ஆம் ஆண்டு 4, 1960 (மார்ச்) 3,**
**1960 (ஜூலை) 3, 1965ஆம் ஆண்டு 6,**
**1970ஆம் ஆண்டு 6, 1977ஆம் ஆண்டு 11,**
**1989ஆம் ஆண்டு 13, 1994ஆம் ஆண்டு 12,**
**2000 ஆம் ஆண்டு 9, 2001ஆம் ஆண்டு 10,**
**2004ஆம் ஆண்டு 13, 2010ஆம் ஆண்டு 13,**
**2015 ஆம் ஆண்டு 12, 2020ஆம் ஆண்டு 12**

என்ற எண்ணிக்கையிலேயே பெண்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் காணப்படுகின்றது.

அதேநேரம் மாகண சபைகளில் 0 % உள்ளூர் அதிகார சபைகளில் 1.9% மாகவும் பெண் பிரதிநிதித்துவம் காணப்படுகின்றது.

அரசியலில் ஈடுபட வேண்டும், தேர்தலில் போட்டியிட வேண்டும் என்ற ஆர்வம் பெண்கள் மத்தியில் இருந்தாலும் அவர்கள் தங்களை வலுப்படுத்த போதியளவு வாய்ப்புகள் கிடைப்பதில்லை. அவள் குடும்பம், கட்சி, சமூகம் என அனைத்து விடயங்களிலும் போராட வேண்டியுள்ளது. பெண்களால் ஆண்களை போல் முழுநேர அரசியலில் ஈடுபட முடிவதில்லை. குடும்பத்தையும் நிர்வகிக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. இத்தகைய சந்தர்ப்பத்தில் குடும்பம் எந்த அளவிற்கு அனுசரணையாகவிருக்கும் என்பதை கூறமுடியாது. இதனாலேயே பெரும்பாலான பெண்கள் அஞ்சுகின்றனர்.

அடுத்ததாக அரசியல் கட்சிகளில் பெண்களுக்கான வாய்ப்புகள் குறைவாகவே காணப்படுகின்றன. இதனால் பெண்கள் பட்டியலில் இடம் பெறுவதற்கே அதிகமாகப் போராட வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இலங்கையிலுள்ள பெரும்பாலான அரசியல் கட்சிகளின் கடந்தகால தேர்தல் விஞ்ஞாபனங்களை ஆராய்ந்து பார்த்தால் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் தொடர்பில் எந்தவித புதிய வேலைத்திட்டங்களையும் காணமுடியாது.

அதுவும் ஒப்பீட்டளவில் சிறுபான்மைக் கட்சிகளில் பெண்களுக்கான இட ஒதுக்கீடு மிக குறைவாகவே காணப்படுகின்றது.

நேசம் சரவணமுத்து, தங்கேஸ்வரி கதிர்காமன், சாந்தி ஸ்ரீ கந்தராஜா, பேரியல் அஷ்ரஃப், ஏ.டி அன்ஜான் உம்மா, விஜயகலா மகேஸ்வரன் போன்ற குறிப்பிட்ட சிலரே இதுவரை சிறுபான்மை இனத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்றம் சென்றுள்ளனர்.

இதுதவிர பெண்களுக்கு கள அரசியல், பொருளாதாரம் என எண்ணற்ற தடைகள் உள்ளன. அதுமட்டுமன்றி பெண்கள் மீது விழும் குற்றச்சாட்டுகளும், அவதூறுகளும் கூட பெண்களின் அரசியல் பங்குபற்றலை தடுக்கிறது.

கடந்தகால தேர்தல்களில் போட்டியிட பல பெண்கள் வெறுப்புப் பேச்சுகளால் மனரீதியாக பெரிதும் பாதிக்கப்பட்டதாக தெரிவிக்கின்றனர். இவர்களுக்கு எதிராக சமூக ஊடகங்களில் மொழி, உடை, நடை, வயதை வைத்து வெறுப்புப் பேச்சுகள் பகிரப்பட்டதாக தெரிவிக்கின்றனர்.

எனவே பெண்களின் பிரத்தியேக பிரச்சினைகளை வெளியில் கொண்டு வருவதற்கு அவர்களின் அரசியல் பங்குபற்றலை அதிகரிக்க வேண்டும்.

எதிர்வரும் பொதுத்தேர்தல் அதற்கு சிறந்த களமாக அமைய வேண்டும்.


அடலீன் மொலமுரே


நேசம் சரவணமுத்து


பேரியல் அஷ்ர:.ப்,


ஏ.டி. அன்ஜான் உம்மா


விஜயகலா மகேஷ்வரன்


**வசந்தா அருள்ரட்ணம்**


**ஏற்றுமதிக்கான ரெட் லேடி (Red Lady) பப்பாசிப்பழம் டெனின் (Tanin) பப்பாசிப்பழம் கொள்வனவு செய்யப்படும்.**

தொடர்புகள் :
சீ.ஆர். எக்ஸ்போட்ஸ் (பிரைவட்) லிமிட்டட்
கம்பஹா

ருவன் - 0777681729
(காலை 08, மாலை 05 இற்கிடையில் அழையுங்கள்)







## இலண்டன் தமிழவையின் வெள்ளிவிழா





இலண்டன் தமிழவையின் வெள்ளிவிழா எதிர்வரும் 05.10.2024 அன்று இலண்டனில் Woodford Green Essex IG8 7 DQ என்ற இடத்தில் உள்ள Woodbridge High School அரங்கில் முழுநாள் நிகழ்வாக நடைபெற இருக்கின்றது.

கடந்த 25 வருடங்களாக தமிழுக்கும், தமிழ் இலக்கியத்துக்கும், தமிழர் விழுமியங்களுக்கும் பெரும் தொண்டாற்றிவருகின்ற இந்த தமிழவையை நிறுவி பல நிகழ்வுகளை செய்து வருபவர் தமிழவையின் நிறுவனர் புலவர் ந.சிவன்தான் இவர் வேறு யாருமல்ல இலங்கையின் தேசிய கீதத்தை தமிழில் மொழிபெயர்த்த முத்தமிழ் புலவர் நல்லதம்பியின் புதல்வர் ஆவார். பொறியியலாளரான இவர், தனது தந்தையரைப் போல் ஒரு சிறந்த கவிஞராகவும் தமிழறிஞராகவும், நாட்டிய நாடகங்களை எழுதி அவற்றை நெறிப்படுத்தி அரங்கேற்றுபவராகவும், தொல்லியல் ஆய்வாளராகவும், பல நூல்களை எழுதிய எழுத்தாளராகவும் இருக்கின்றார்.

இவர் நிறுவி வெள்ளிவிழா காணவிருக்கும் தமிழவை மிக சிறப்பாக இயங்கி வருகின்றது. இவரோடு தமிழவையில் பல தமிழறிஞர்களும், புத்திஜீவிகளும் இருக்கின்றார்கள். இவர்கள் எல்லோரும் சேர்ந்தே தமிழ் கலாசாரத்தையும், தமிழ்மொழியின் வரலாற்றுச் சிறப்பையும் அதன் இலக்கிய மற்றும் புராண, இதிகாசங்கள் பற்றிய சிறப்புகளையும் எதிர்கால இளம் சந்ததியினர் அறிந்துகொள்ள வேண்டும் என்ற நல்ல நோக்குடன் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ்மூலம் பல படைப்புகளை தயாரித்து அவர்களுக்கு மேடை நிகழ்சிகள் மூலம் அரங்கேற்றுகின்றார்கள். பல இளஞர்கள், யுவதிகள்

ஆர்வம்கொண்டு இந்த நிகழ்வுகளில் பங்கேற்கிறார்கள்.

**கோவிலூர் செல்வராஜன்**
**இலண்டன்**





பந்தளராஜன் நற்பணி மன்றத்தின் (புனித சபரிமலை யாத்திரை குழு) ஏற்பாட்டில் கொழும்பு, ஜிந்துப்பிட்டி, நீதிராஜா கல்யாண மண்டபத்தில் டாக்டர். குணாளனின் ஏற்பாட்டில் நேற்று (28) காலை தொடக்கம் மாலை வரையில் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. நோயாளர்களை மருத்துவர்கள் பார்வையிடுவதையும் மருத்துவ பரிசோதனைக்கு பின்னர் மருந்து மற்றும் மூக்குக்கண்ணாடி வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.



# நீர்க் கசிவிலிருந்து கனவு இல்லத்தை பாதுகாப்போம்



வீடொன்றைக் கட்டுவதென்பது நாம் வாழ்வதற்கான இடத்தை தோற்றுவிப்பது மாத்திரமல்ல அது சௌகரியம், அழகியல் மற்றும் நீண்ட கால பராமரிப்பிற்கான ஒரு முதலீடு. *SLIIT Business School* இன் துணை பீடாதிபதியான கலாநிதி மனோ வெலிகொடபொல, தரமான முடிவு வேலைப்பாடுகள் மற்றும் நிலைபேணத்தக்க பராமரிப்பு நடைமுறைகளுக்கு முன்னுரிமையளிக்கின்ற ஒரு வீட்டு உரிமையாளர் என்ற வகையில் தனது தனிப்பட்ட அனுபவத்தைப் பகிர்ந்து கொள்கின்றார்.

இந்த நேர்காணலில், வீட்டின் நீண்ட கால உழைப்பு, துப்புரவு மற்றும் ஒட்டுமொத்த தோற்றத்தில் நீர்க்காப்பு பெயின்ட் வகைகள் எவ்வாறு முக்கிய பங்கு வகிக்கின்றன என்பது குறித்த பெறுமதிமிக்க ஆழமான விடயங்களை அவர் வழங்கியுள்ளார்.

**வீடொன்றைக் கட்டும் போது முக்கியமாக கருத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் யாவை?**

எனது கணவரும், நானும் சேர்ந்து எமது கனவு இல்லத்தை கட்ட ஆரம்பித்த போது, நாம் விரும்பியவாறு வீட்டைக் கட்டி முடிப்பதற்கு கட்டடக்கலைஞரான எனது சகோதரியுடன் நெருக்கமாக இணைந்து செயற்பட்டோம். நாம் வீட்டைக் கட்டிய காணி முன்பு ஏரியாக இருந்தமையாலும், நிலம் பாறையாக இருந்தமையாலும் பாதுகாப்பான அத்திவாரமொன்றை இட்டுக் கொள்வதை உறுதிப்படுத்த வேண்டியது மிகவும் முக்கியமான அம்சங்களில் ஒன்றாகக் காணப்பட்டது. நிலத்தின் கடந்தகால வரலாறு மற்றும் ஆபத்துக்களுக்கான வாய்ப்புகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, நீர்க்காப்பு என்பதற்கு நாம் முன்னுரிமையளித்ததுடன், புத்தம்புதிய தோற்றத்தை தொடர்ந்தும் பேணுவதிலும் கவனம் செலுத்தினோம்.

**உங்களுடைய வீட்டின் நீடித்த உழைப்பு மற்றும் தோற்றம் ஆகிய இரண்டையும் பேண வேண்டியதன் முக்கியத்துவம் யாது?**

நீண்ட கால சேமிப்புக்களைப் பொறுத்த வரையில் அவற்றின் நீடித்த உழைப்பினை உறுதி செய்வது மிகவும் முக்கியம். உங்களுடைய வீட்டின் மூலப்பொருட்கள் மற்றும் முடிவு வேலைப்பாடுகள் சிறந்த தரம் கொண்டவையாக இருப்பின், திருத்த வேலைகள் மற்றும் புதிதாக மாற்றிக் கொள்ள வேண்டிய தேவைகளுக்கு நீங்கள் அடிக்கடி செலவு செய்யத் தேவையில்லை. காலப்போக்கில் பராமரிப்புச் செலவுகளை குறைக்க உதவும் வகையில், எனது வீட்டில் அனைத்துமே நீண்ட காலம் உழைக்கும் தரம் கொண்டவையாக இருப்பதை உறுதி செய்வதில் நான் கவனம் செலுத்தினேன். அதேசமயம், வீட்டின் அழகியல் தோற்றத்தைப் பேணிப்பாதுகாப்பதும் இதற்கு ஈடாக முக்கியமானது. மிகவும் சிறப்பாக பேணிப் பராமரிக்கப்படுகின்ற வீடானது எக்காலத்திலும் நீடித்து நிலைபெறுவது மாத்திரமன்றி, அதன் அழகினை தொடர்ந்தும் பேணி, அதன் ஒட்டுமொத்த வசீகரம் மற்றும் கவர்ச்சியையும் மேம்படுத்துகின்றது.

**உங்களுடைய வீட்டின் நீடித்து நிலைக்கும் அழகினை நீங்கள் பேணிவந்துள்ளீர்களா, அதனை அடைவதற்கு என்ன படிமுறைகளை மேற்கொண்டீர்கள்?**

ஒரு வீட்டின் வெளித்தோற்றம் மிகவும் முக்கியமானது. பாரிய கட்டமைப்பைக் கொண்டிருப்பது என்பதன்றி, உங்களுடைய வீடு வரவேற்கத்தக்கதாகவும், அழகாகவும் இருத்தல் வேண்டும். எமது திறந்த கோட்பாடுடனான வடிவமைப்பு என்பது, மாறுகின்ற காலநிலைகளுக்கு வீடு முகங்கொடுக்க வேண்டியுள்ளதுடன், இது மேற்பரப்பு இலகுவாக சேதமடைவதற்கு வழிகோலுகின்றது. உயர்தரம் கொண்ட பெயின்ட் வகைகள் பிரகாசத்தையும், வர்ணத்தையும் பேண உதவுவதுடன், அடிக்கடி பெயின்ட் பூச வேண்டிய தேவையைக் குறைக்க உதவுகின்றது. அடிக்கடி பெயின்ட் பூசுவதற்கான செலவு மற்றும் நேரத்தையும் சேமிக்க உதவுகின்றது.

**உங்களுடைய வீட்டுக்கு உயர் தர பாதுகாப்பளிக்கும் வெளிப்புற தயாரிப்புக்கள் மீது முதலீடு செய்வதால் கிட்டும் நீண்ட கால நன்மைகள் எவை?**

நிலத்தின் கடந்த கால வரலாற்றைக் கருதுகையில், நீர்க்காப்பு என்பது உச்ச முன்னுரிமையாக காணப்பட்டது. நீண்டகால உத்தரவாதத்துடன், உயர் தரம் கொண்ட தயாரிப்புக்களை நாம் பயன்படுத்தியதுடன், பல ஆண்டுகள் கழிந்த பின்னரும் எவ்விதமான பிரச்சினைகளுக்கும் நாம் முகங்கொடுக்கவில்லை. ஆகவே எமது தெரிவு மிகுந்த பலனளித்துள்ளது. வீட்டின் புதிய தோற்றத்தை அவ்வாறே பேண உதவுவது இந்த முதலீடுகளின் மகத்தான அம்சமாகும். இத்தனை காலம் கடந்த பின்னரும் வீடு இன்னமும் புதிதாகவும், தற்காலத்திற்கு ஈடானதாகவும் காட்சியளிப்பதுடன், எவ்விதமான பாரிய திருத்தவேலைகளையோ அல்லது மாற்றங்களையோ மேற்கொள்ள வேண்டிய தேவை எமக்கு ஏற்படவில்லை.



**வெளிப்புறச் சுவர்களில் பூஞ்சை படர்வதிலிருந்து உங்களுடைய வீட்டைப் பாதுகாப்பதற்கு நீங்கள் மேற்கொண்ட தடுப்பு ஏற்பாடுகள் எவை?**

பூஞ்சை எதிர்ப்புப் பண்புகளுடன், விசேடமாக வடிவமைக்கப்பட்ட பெயின்டினை உபயோகிக்குமாறு எமது ஆலோசகர்கள் எமக்கு ஆலோசனை வழங்கியிருந்தனர். இந்த பெயின்ட் வகைகள் ஈரப்பதத்தைத் தடுக்க உதவுவது மாத்திரமன்றி, வெளிப்புற சுவர்களைப் பாதுகாத்து, காலம் காலமாக அவற்றைப் பாதுகாப்பாக பேணவும் உதவுகின்றது. முறையான காற்றோட்டம், குறிப்பாக குளியலறைகள் மற்றும் ஏனைய ஈரமான பகுதிகளில் அது முறையாக இருக்க வேண்டியது மற்றொரு முக்கியமான காரணி. நல்ல காற்றோட்டத்தை உறுதி செய்து, எந்தவொரு நீர்க்கசிவையும் உடனடியாக கவனித்து அதற்கான நடவடிக்கையை எடுத்தது எமது வீட்டை பூஞ்சையிலிருந்து பாதுகாப்பாக வைத்துக்கொள்ள எமக்கு உதவியுள்ளது. கிரமமான அடிப்படையில் சுத்தப்படுத்தல் மற்றும் சிறு திருத்தவேலைகளைக் கூட உடனடியாக கவனித்தல் ஆகியனவும் பாரிய, செலவுமிக்க பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் நிலைமைகளை தவிர்ப்பதில் பெரும்பங்கு வகித்துள்ளன.

**ஒரு வீட்டு உரிமையாளர் என்ற ரீதியில், இலங்கையிலுள்ள ஏனைய வீட்டு உரிமையாளர்கள் தமது வீடுகளைக் கட்டும் போது எதனைக் கருத்தில் கொள்ளத் தவறுகிறார்கள்?**

நீங்கள் சுற்றிலும் அவதானித்தால், பல வீடுகளில் சுவர்கள் நிறம் மங்கியதாகவோ அல்லது பூஞ்சை மற்றும் வெடிப்புக்கள் கொண்டதாகவோ தோற்றமளிப்பதைக் காணலாம்.

இது உண்மையில் வீட்டின் அழகினைப் பாதிப்பதுடன், மக்கள் மலிவான மூலப்பொருட்களை நாடும் போது இவ்வாறு நேருவதை நான் கண்டுள்ளதுடன், நீண்ட காலத்தில் அவர்கள் அதைவிட அதிகமாக செலவு செய்ய நேரிடுகின்றது. உதாரணத்திற்கு, எமது வீட்டைக் கட்டும் பணிகளை நாம் முன்னெடுத்த போது நீண்ட கால உத்தரவாதம் கொண்ட உயர்தர நீர்க்காப்பு பெயின்ட் வகைகளை உபயோகிப்பதென நாம் முடிவு செய்தோம். பூஞ்சை அல்லது ஈரப்பதம் குறித்த எவ்விதமான பிரச்சினைகளுக்கும் நாம் முகங்கொடுக்க வேண்டி ஏற்படாமையாலும், சுவர்கள் இன்னமும் சிறப்பாக தோற்றமளிப்பதாலும் எமது தீர்மானம் வீண்போகவில்லை.

சிறந்த மூலப்பொருட்களுக்கு முற்கூட்டியே சற்று அதிகமாக செலவளிப்பது, காலப்போக்கில் அடிக்கடி முகங்கொடுக்க வேண்டிய திருத்த வேலைகள் மற்றும் சிறுசிறு பூச்சு வேலைகளைத் தவிர்த்து உங்களுடைய பணத்தைச் சேமிக்க உதவுகின்றது.









சவுதி அரேபியாவின் 94 ஆவது தேசிய தின விழா இலங்கைக்கான சவுதி அரேபியத் தூதுவர் காலித் ஹமூத் அல் கஹ்தானி தலைமையில் கொழும்பு சங்ரிலா ஹோட்டலில் நடைபெற்ற போது, பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், தூதுவர் அல் கஹ்தானி, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன ஆகியோர் கேக் வெட்டி கொண்டாடுவதையும் அல் ஹிக்மா நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ் ஷேக் எம்.எச் ஷேஹுத்தீன் மதனி தூதுவருடன் காணப்படுவதையும் வைபவத்தில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# நாட்டுக்கு சேவை செய்யும் உத்வேகம் பிறந்திருக்கிறது





(அஷ்ரப் ஏ சமத்)

"மேல்மாகாண ஆளுநராக பொறுப்பேற்குமாறு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க என்னை அழைத்திருந்தார். நான் ஒரு வர்த்தகர். எனக்கு ஏன் இந்தப் பொறுப்பை தருகின்றீர்கள் என நான் அவரிடம் கேட்டேன். இந்த மாகாணத்தில் உள்ள அனைவரும் இணைந்து செயற்பட்டால் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடியும். பழைய முறைமையை விட்டு வெளியே வந்து மக்களுக்கு நாம் சிறந்த சேவை செய்வதற்கு என்னோடு ஒத்துழையுங்கள் என்றார். நான் ஒரு வர்த்தகராக இருந்தும் இந்த வயதிலும் எனது நாட்டிற்கு நல்ல சேவை செய்ய வேண்டும் என்ற உத்வேகம் பிறந்திருக்கிறது" என மேல் மாகாணத்தின் புதிய ஆளுநர் ஹனீப் யூசுப் தெரிவித்தார். மேல் மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்ட ஹனீப் யூசுப், தமது கடமையை பத்தரமுல்லையில் உள்ள மேல் மாகாண சபை ஆளுநர் அலுவலகத்தில் கடந்த 26ஆம் திகதி பொறுப்பேற்றுக் கொண்டார்.



# நிறைவேறும் மக்களின் நீண்டகால கனவு



"அன்றாடம் சூரியன் உதிக்கும். ஒவ்வொரு பொழுதிலும் மக்கள் காணும் கனவுகள் உள்ளன. அந்தக் கனவானது இன்று இருப்பதை விடவும் சிறந்த நாட்டை உருவாக்குவதாகும். ஆனாலும் பல வருடங்களாக அது கனவாகவே போய்விட்டது என்பதை நான் அறிவேன். சந்தர்ப்பவாதம், அதிகார மோகம், சர்வாதிகாரம் மற்றும் இனவாதம் காரணமாக எமது நாட்டை மேலும் உயர்த்தி வைக்க எம்மால் முடியாமல் போயுள்ளது. எமது வரலாற்றில் நழுவ விட முடியாத சந்தர்ப்பம் ஒன்று கிடைத்துள்ளது. நாம் அனைவரும் ஒன்றிணைந்து பல்வகை தன்மையை ஏற்றுக் கொள்ளும் செழிப்பான நாட்டை கட்டியெழுப்புவோம்"

எங்கும் அநுர. எதிலும் அநுர. உள்நாட்டில் மட்டுமன்றி சர்வதேச ரீதியிலும் இக்காலத்தில் அதிகம் பேசப்படும் ஒரு நபராக மிகக் குறுகிய காலத்தில் மாறியுள்ளார் நமது நாட்டின் தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க.

தமது நீண்ட கால எதிர்பார்ப்பையும் நாட்டு மக்களின் நீண்ட கால கனவையும் பாராளுமன்றத்தில் வெறும் மூன்று ஆசனங்களை வைத்துக் கொண்டு நிறைவேற்றியுள்ளார்.

முதிர்ந்த, அனுபவம் மிக்க, பல சவால்களை ஏற்று நாட்டு மக்களின் போற்றுதலுக்கு இலக்காகியிருந்த பல தலைவர்கள் தேர்தலில் போட்டியிட, அத்தனை தலைவர்களையும் தூக்கி எறிந்து விட்டு நாட்டு மக்கள் மனங்களிலும் சிந்தனையிலும் உறுதியாக இருத்திக் கொண்ட தலைவனாக அவரைப் பார்க்க முடிகிறது. ஜே.வி.பி எதனையும் 'நீட்'டாக செய்யும் என்பது தொடர்ச்சியாக அந்தக் கட்சிக்கு இருந்து வந்த பெருமை. இந்தத் தேர்தலிலும் பிரசாரங்களிலாகட்டும் வழங்கிய வாக்குறுதிகளிலாகட்டும் தேர்தலுக்காக வகுத்த திட்டங்கள் செயற்பாடுகளாகட்டும் அத்தனையிலும் அந்த 'நீட்' என்ற நேத்தியை காண முடிந்தது. அதுதான் இந்த அபார வெற்றிக்குக் காரணம்.

நாட்டு மக்கள் நேர்த்தியையும் நேர்மையான செயற்பாடுகளையும் விரும்புகின்றனர் என்பதற்கும், இது மிகச் சிறந்த அங்கீகாரம். தேர்தல் பிரசாரங்களுக்கான இறுதி நாளன்று நடத்திய நிகழ்ச்சியில், "வென்றால் உலகே திரும்பிப் பார்க்கும் வகையில் அந்த வெற்றி அமைய வேண்டும்" என்று அந்த நிகழ்ச்சியை தொகுத்து வழங்கியவர் தெரிவித்தார். அது நிதர்சனமாகியுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ரூபா சம்பளம். பல காலம் தொடர்ச்சியாக இழுபட்டு வந்து பல்வேறு பேச்சுவார்த்தைகள், வர்த்தமானி வெளியீடு, நீதிமன்ற தீர்ப்பு என தொடர்ந்து இறுதி வரை அந்த மக்கள் ஏமாற்றப்பட்டனர். அந்த விவகாரம் பல அரசியல்வாதிகள் தமது அரசியலை மிக இலாவகமாக முன்னெடுத்துச் செல்ல பயன்படுத்தப்பட்டது. நாம் எதிர்பார்த்தது போலவே அது தேர்தல் பிரசாரம் வரை வந்து, தேர்தல் வாக்குறுதியாக மாறியது. "பழைய குருடி கதவைத் திறடி" என்பது போல் மீண்டும் புதிதாக 1350 ரூபாவைத் தருகின்றோம் மீதம் 350 ரூபா இதர செயற்பாடுகளை வைத்துப் பார்க்கலாம் என்ற நிலைக்குத் திரும்பியது. "இத்தகைய ஏமாற்று வாக்குறுதிகளை இனியும் நாங்கள் நம்பத் தயாரில்லை என்ற முடிவுக்கு வந்த மலையக மக்கள், இந்த முறை அவர்களது வரலாற்றுத் தலைவர்களையெல்லாம் தூக்கியெறிந்து விட்டு, "எது வந்தாலும் பரவாயில்லை. இந்த முறை அநுர குமாரவுக்குக் கொடுத்துப் பார்ப்போம்" என்று எடுத்த முடிவு தான் மலையகத்தில் அவருக்கு குவிந்த வாக்குகள்.

நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கி, நாளைபற்றிய நம்பிக்கையை மக்கள் இழந்திருந்த சந்தர்ப்பத்தில், எவரும் இந்த நாட்டைப் பொறுப்பேற்க முன் வராத ஒரு காலகட்டத்தில் மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக நாட்டைப் பொறுப்பேற்றவர் தான் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. உண்மையில் பெரும் சவாலை ஏற்றுக் கொண்டவர் அவர்.

மிகக் குறுகிய காலத்தில் நாட்டின் பொருளாதாரத்தையும் மக்களின் வாழ்வாதாரத்தையும் இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கு முழுமூச்சாக செயற்பட்டவர் என்பதை மக்களே ஏற்றுக் கொண்டனர். இம்முறை அவரைக் கைவிட்டு விட்டால் மீண்டும் அந்த நெருக்கடி நிலையை அனுபவிக்க நேருமோ என்றும் வேறு யாருக்காவது ஆதரவளித்தால் அவர்கள் வந்து புதிதாக திட்டங்களை ஆரம்பித்து அதனை நடைமுறைப் படுத்துவதற்கு எவ்வளவு காலம் செல்லுமோ?

அப்படியானால் மீண்டும் கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கம் போன்று ஆகிவிடுமோ என்றெல்லாம் மக்கள் சிந்தித்தது மட்டுமன்றி பலரும் அதனை வெளிப்படுத்தியதை நாம் கண்டோம். நாட்டில் இன்னும் ஒரு தரப்பினர் ஐக்கிய தேசியக் கட்சி பிளவுபட்டு ரணில் சஜித் என்று பிளவு பட்டு இருந்ததாலும் அத்துடன் ரணில் விக்கிரமசிங்க தரப்பு பல தளங்களில் கால் வைத்திருந்ததாலும் இந்த முறை சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவை வழங்குவோம் என்ற நிலைப்பாட்டில் இருந்தனர்.

சஜித் பிரேமதாச வழங்கிய வாக்குறுதிகள் ஒரு பக்கம் இருக்க, அவர் தேர்தலுக்கு வரும் முன்னரே எதிர்க்கட்சியிலிருந்து எந்தளவுக்கு மக்களுக்கு சேவைகளை வழங்க முடியுமோ அதனை செயலில் காட்டியிருந்தார்.

அந்த வகையில் தேர்தல் பிரசாரத்தின் இறுதிக் கட்டம் வரை சஜித் பிரேமதாசவின் கூட்டங்களுக்கு திரண்ட மக்களைக் கண்டவர்கள் சஜித் பிரேமதாச தான் அடுத்த ஜனாதிபதி என்று தீர்மானித்து விட்டனர். மக்கள் மட்டுமின்றி எங்கிருந்தோவெல்லாம் அவருடன் இணைந்து கொண்டவர்களும் அதற்கு சான்றாக இருந்தனர்.

ஒரு குறுகிய காலத்தில் இந்த அனைத்துமே மாறிவிட்டது. மக்கள் ஒரு தீர்க்கமான முடிவை எடுத்து விட்டனர். மாற்றத்தை எதிர்பார்த்த ஆர்ப்பாட்டம், ஆர்ப்பாட்டத்தின் விளைவுகள், அதனையடுத்து ஆர்ப்பாட்டத்தின் மூலம் எதிர்பார்த்து ஆனால் அடைய முடியாது போனஇறுதி வெற்றியை இம்முறை தேர்தல் மூலம் அடைந்து விட முடியும். அதற்கான ஒரே நபர் அநுர குமார திசாநாயக்க தான் என்பதை உறுதி செய்து விட்டனர். அந்த அசையாத உறுதி தான் 12 இலட்சத்துக்கும் மேற்பட்ட மேலதிக வாக்குகளை அநுர குமாரவுக்கு பெற்றுக் கொடுத்தது.

தேர்தல் முடிவுற்று புதிய அரசாங்கம் ஆட்சியமைத்துள்ளது. ஜனாதிபதி, பிரதமர் தவிர ஒரே ஒரு அமைச்சர் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளார். இந்த மூவரிடமும் முக்கியமான பல அமைச்சுப் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அந்த அமைச்சுக்கள் மூலம் முக்கியமாக எதனை செய்ய வேண்டுமோ அந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன.

அடுத்த மிக முக்கியமான விடயமாக பாராளுமன்றத் தேர்தலை நடத்தும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு அதற்கான திகதியும் அறிவிக்கப்பட்டு விட்டது. மீண்டும் கட்சிகள், கூட்டணிகள், கட்சித் தாவல்கள், தேர்தலில் வெல்வதற்கான வியூகங்கள் என கவனம் அந்தப் பக்கம் சென்றிருந்தாலும் மக்களுக்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை புதிய அரசாங்கம் படிப்படியாக மேற்கொண்டு வருவதைக் காண முடிகிறது.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க கடந்த சில தினங்களுக்கு முன் நாட்டு மக்களுக்கு விசேட உரையொன்றை ஆற்றினார். அந்த உரையில் இரத்தினச் சுருக்கமாக சில விடயங்களை அவர் தெரிவித்திருக்கின்றார்.

மக்கள் எதிர்பார்ப்பதையெல்லாம் அல்லது நாட்டுக்கு தேவையானதையெல்லாம் ஒரேயடியாக செய்வதற்கு தான் ஒன்றும் மாயாஜால வித்தைக் காரன்அல்ல என்பதை அவர் சுட்டிக் காட்டியுள்ளார். அதற்காக அனைவரதும் ஒத்துழைப்பு மிக அவசியம் என தெரிவித்துள்ள அவர், நாட்டைக் கட்டி யெழுப்புவதில் உண்மையுடன் நேர்மையாக செயற்படக்கூடியவர்களுக்கு தமது அரசாங்கத்தில் கதவு திறந்தே இருக்கின்றது என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவரது உரையில் உண்மையும் நேர்மைத் தன்மையும் காணப்பட்டது. இதைத்தான் செய்வேன். இவ்வாறு தான் செய்வேன் இதற்கு ஒத்துழைப்பைத் தாருங்கள் என்ற அழைப்பு அதில் உள்ளடக்கப்பட்டிருந்தது. குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்துடனான தொடர்புகளில் அவர் அக்கறை செலுத்த மாட்டார். சர்வதேச ரீதியான உறவுகள் அவரது காலத்தில் சீர்குலைந்து போகும். அவ்வாறு நடந்தால் நாடு மீண்டும் நெருக்கடி நிலைக்குத் தள்ளப்படுவதை எவராலும் தடுக்க முடியாது என்றெல்லாம் மக்கள் மத்தியில் பரப்பப்பட்ட விசமப் பிரசாரங்களை பொய்யாக்குவதாக அவரது உரை அமைந்திருந்தது.

மிக விரைவாக சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கப்போவதாகவும் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் நடவடிக்கைகளை தொடரவுள்ளதாகவும் அவர் அந்த உரையின் தொடக்கத்திலேயே தெரிவித்துள்ளார்.

இந்த நாடு ஜனநாயக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் கட்டியெழுப்பப்பட வேண்டும். மக்கள் அனைவருக்கும் சமத்துவமாக வாழக் கூடிய உரிமையும் அவசியம் என்பதை சுட்டிக் காட்டி நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்படும் என்றும் நாடு தொடர்பில் மக்கள் கண்ட கனவை தனது காலத்தில் நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் செயல்படுவதாகவும் அதற்கு அனைவரதும் பூரண ஒத்துழைப்பு அவசியம் என்றும் தெரிவித்துள்ளார். அந்த உரை மக்கள் மத்தியில் அவருக்கு இருந்த நன்மதிப்பை மேலும் அதிகரித்துள்ளது என்றே குறிப்பிட முடியும்.

அந்த வகையில் அவரது உரையின் சில முக்கிய பகுதிகளை இங்கு சுட்டிக் காட்ட முடியும்.

சர்வதேச நாணய நிதியத்துடன் துரிதமாக பேச்சுவார்த்தையை ஆரம்பித்து நீடிக்கப்பட்ட கடன் வசதியுடன் தொடர்புள்ள விடயங்களை தொடர்ந்து முன்னெடுக்க எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்திருந்தார்.

மக்கள் மீது ஏற்றப்பட்டுள்ள அதிக வாழ்க்கைச் சுமையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் நாட்டின் கடவுச்சீட்டை உலகமே மதிக்கும் நிலைக்கு நம் நாட்டை கட்டியெழுப்புவது அவசியம் என்றும் தெரிவித்தார்.

சந்தர்ப்பவாதம் அதிகாரமோகம் சர்வாதிகாரம் மற்றும் இனவாதம் காரணமாக எமது நாட்டை மேலும் உயர்த்தி வைக்க எம்மால் முடியாமல் போயுள்ளது என்பதை சுட்டிக் காட்டிய அவர், எமது வரலாற்றில் நழுவ விட முடியாத சந்தர்ப்பம் ஒன்று கிடைத்துள்ளது, நாம் அனைவரும் ஒன்றிணைந்து பல்வகை தன்மையை ஏற்றுக் கொள்ளும் செழிப்பான நாட்டை கட்டியெழுப்ப ஒன்றிணைவோம் என்றும் தெரிவித்திருந்தார். மக்கள் இறைமைக்கு மதிப்பளிக்கும் அதே நேரம் அவர்களின் ஜனநாயக உரிமைகளை பாதுகாப்பதற்காக அர்ப்பணிப்போம் என்பதை உறுதிபட தெரிவித்துள்ள அவர், எம் மீதான சந்தேகம் காரணமாக நிச்சயமற்ற நபர்கள் இருப்பதை நாம் அறிவோம். எமது செயற்பாடுகளின் ஊடாக அவர்களின் நம்பிக்கையை வெற்றி கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் என்றும் தெரிவித்திருந்தார்.

அரசியலமைப்புக்கு அமைவாக நாட்டைக் கொண்டு செல்வதற்கான எதிர்பார்ப்பையும் அதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளையும் அவர் சுட்டிக் காட்டியிருந்தார்.

அன்றாடம் சூரியன் உதிக்கும் ஒவ்வொரு பொழுதிலும் மக்கள் காணும் கனவுகள் உள்ளன. அந்தக் கனவானது இன்று இருப்பதை விடவும் சிறந்த நாடாகும். ஆனாலும் பல வருடங்களாக அது கனவாகவே போய்விட்டது என்பதையும் நான் அறிவேன். சந்தர்ப்பவாதம், அதிகார மோகம், சர்வாதிகாரம் மற்றும் இனவாதம் காரணமாக எமது நாட்டை மேலும் உயர்த்தி வைக்க எம்மால் முடியாமல் போயுள்ளது.

எமது வரலாற்றில் நழுவ விட முடியாத சந்தர்ப்பம் ஒன்று கிடைத்துள்ளது. நாம் அனைவரும் ஒன்றிணைந்து பல்வகை தன்மையை ஏற்றுக் கொள்ளும் செழிப்பான நாட்டை கட்டியெழுப்புவோம். நாம் இலங்கை பிரஜைகள் என்று பெருமையுடன் வாழக்கூடிய நடைமுறை சாத்தியமான ஒரு நாடு உருவாகும் வரை இந்த நாடு தோல்வி அடையுமே தவிர வெற்றியடையாது. அரசியலமைப்பு ரீதியான பொருளாதார அரசியல் மறுசீரமைப்புகளை மேற்கொள்ள ஒருபோதும் நாம் பின்வாங்க மாட்டோம். மக்களுக்கு பாதகமான அழுத்தங்கள் ஏற்படாத வகையில் எதிர்பார்த்த மாற்றங்கள் படிப்படியாக இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

ஏற்றுமதிப் பொருளாதாரம், இந்த நாட்டின் உயிர்நாடியான விவசாயம், சுற்றுலாத்துறை மற்றும் மக்களுக்கான அத்தியாவசிய துறைகள் துரிதமாக கட்டி யெழுப்பப்பட வேண்டியது அவசியம். அவ்வாறான நடவடிக்கைகள் நேர்மையாக முன்னெடுக்கப்படுமானால் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு நாட்டு மக்களின் முழுமையான ஆதரவு நிலைத்திருக்கும் என்பது உறுதி.

**லோரன்ஸ் செல்வநாயகம்...**

# ஜே.வி.பியின் மாற்று அரசியலுக்காக காத்திருக்கும் இலங்கை மக்கள்

மக்களுக்கு சம வாய்ப்பு, சம பங்கீடு, பேதங்களுக்கு அப்பாற்பட்ட சேவை வழங்கல், மத, சாதி, இன வேற்றுமைகளை கவனத்தில் கொள்ளாமை என்பன சோஷலிச கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட கட்சிகளின் அல்லது நாடுகளின் முக்கிய இயங்கு சக்தியாகக் காணப்படும். சாதாரண ஒரு அரசியல் கட்சி நேரத்துக்கும், சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ற மாதிரி தனது நிலைப்பாடுகளை மாற்றிக் கொள்ளும். ஆனால் சோஷலிச அல்லது கம்யூனிச கட்சிகள் அல்லது அரசுகள் நினைத்த மாதிரி தமது கொள்கைகளை மாற்றிக் கொள்வதில்லை. அவற்றுக்கு கோட்பாடுகள் முக்கியம். கொள்கைகளை விட்டுக் கொடுக்க மாட்டா. அக் கொள்கைகளும் மக்கள் அபிவிருத்தி – முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதாலும் அவற்றை விட்டுக் கொடுக்க முன்வராமைக்கான பிரதான காரணமாகும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலை எடுத்துக் கொண்டாலும், நாடு வங்குரோத்தாகிவிட்டது என்று கூறிய கட்சிகளே, வாக்கெடுப்பு தினம் நெருங்கிவரும் சமயத்தில் அரசு ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு, கொடுப்பனவுகளில் அதிகரிப்பு என பல்லாயிரம் கோடி செலவை ஏற்படுத்தக்கூடிய யோசனைகளை நிறைவேற்றி வைப்போம் என ஏட்டிக்குப் போட்டியாக உறுதிமொழிகளை வழங்கின. இன்றைய பொருளாதாரச் சூழலில் இவை நிறைவேறக்கூடியவை அல்ல என்பது இலங்கை அரசியலை அறிந்தோருக்குத் தெரியும். கடந்த எழுபது ஆண்டுகளை எடுத்துக் கொண்டால் அரிசியலை வைத்தே பல வருடங்களை ஓட்டினார்கள். தமிழரை சிங்களவருக்கு எதிராக பூச்சாண்டியாகவும் தமிழ்ச் சமூகத்திடம் சிங்களப் பூச்சாண்டியையும், காட்டியே மிகுதி தேர்தல் அரசியலை ஓட்டினார்கள். இறுதியாக முஸ்லிம் பூச்சாண்டியை முன்நிறுத்தி தேர்தலில் வெற்றியீட்டினார்கள்.

ஜே.வி.பி என அறியப்படும் மக்கள் விடுதலை முன்னணி ஆரம்பத்தில் வன்முறை கிளர்ச்சியை முன்னிலைப்படுத்திய அமைப்பாக இயங்கியது. அதனை நிறுவிய தலைவரான ரோஹண விஜேவீர, அரசியல் சக்தி துப்பாக்கிக் குழாய்களில் இருந்தே பிறக்கின்றன என்ற மாவோவின் வாக்கியங்களில் நம்பிக்கை கொண்டவராகத் திகழ்ந்தார். அதன் விளைவாக 1971 இல் ஒரு தடவையும் 1988 – 89 காலப்பகுதியில் மற்றொரு ஆயுதக் கிளர்ச்சியும் இந்நாட்டில் நடைபெற்றது. பலத்த உயிர்ச் சேதத்தையும் பொருட் சேதத்தையும் ஏற்படுத்தியது.

1989 ஆயுத கிளர்ச்சியை அன்றைய அரசு மூர்க்கவேகத்தில் அடக்கி நசுக்கியது. அப்போது சென்னைக்கு படகு வழியாக தப்பிச் சென்றவர் சோமவன்ச அமரசிங்க மட்டுமே. எனினும் அவர் திரும்பி வந்து ஜே.வி.பி.யை ஒன்றிணைத்தார். சிதறிக் கிடந்த ஜே.வி.பியினரை ஓர் அமைப்பின் கீழ் கொண்டு வந்தார். அப்போது வன்முறைப் பாதையைக் கை கழுவுவது என்றும் ஜனநாயக முறைகளின் கீழ் இயங்குவது என்றும் தீர்மானிக்கப் பட்டது.

ஆயுத போராட்டங்களின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றும் ஒரு வழிமுறை சில நாடுகளில் ஒரு காலக்கட்டத்தில் பின்பற்றப்பட்டது உண்மைதான். ஆனால் அந்த அரசியல் மற்றும் பொருளாதாரச் சூழல்கள் வேறு. ஸார் அரசனிடமிருந்து ரஷ்யாவை மீட்டு தொழிலாளர்களின் ஆட்சியை அமைப்பதற்கு லெனின் ரஷ்யாவின் ஆயுத புரட்சியை கைக் கொள்ள வேண்டியிருந்தது. மக்களின் நலன்களை கொஞ்சமேனும் கருத்தில் கொள்ளாத ஒரு அரச பரம்பரையின் ஆட்சியை ஒழித்துவிட்டு மக்களின் ஆட்சியை அமைப்பதற்கான ஒரு புரட்சியில் வெற்றி பெறுவதற்கு ஆயுதத்தைக் கையில் எடுப்பதைத் தவிர வேறு வழி தோழர் லெனினுக்கு அக் காலக்கட்டத்தில் இருக்கவில்லை.

அதே வழிமுறையைத்தான் சீனாவில் தலைவர் மாவோசே துங் பின்பற்றினார். அரசியல் அதிகாரம் துப்பாக்கிக் குழல்களில் இருந்தே பிறக்கிறது என்று மாவோ கூறியதன் பொருள் இதுதான். மக்களை கருத்தில் கொள்ளாத ஆட்சியை வீழ்த்த அங்கே ஜனநாயக வழிமுறைகள் காணப்படவில்லை. எனவே இலட்சியத்தை அடைவதற்கான வழி ஆயுதப் போராட்டமாகவே இருந்தது. தமது



'ஜே.வி.பி தொடர்பாகக் கட்டி எழுப்பப்பட்டுள்ள மாயத்தோற்றங்களை தவிடு பொடியாக்குவதன் மூலமே சிறுபான்மை சமூகங்கள் மத்தியில் புரிதலை ஏற்படுத்த முடியும். அதே சமயம் சிங்கள சமூகத்துக்கும் தமிழக மக்களுக்குமிடையிலான திரையும் கிழித்தெறியப்பட வேண்டும்'

மக்களையே சுரண்டிக் கொழுக்கும் ஒரு குழுவினரிடமிருந்து மக்களை மீட்டு, அவர்களின் வளங்களை அவர்களிடமே வழங்குவது புரட்சிவாதிகளின் வழிமுறையாக இருந்தது. லாவோஸ், வியட்னாம், கியூபா போன்ற நாடுகளில் இவ்வழி பின்பற்றப்பட்டது.

ஆட்சியை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படும்போது அதை ஜனநாயக வழியில் செய்வதற்கான வழிமுறை இருக்கும் போது ஆயுத போராட்டத்துக்கான தேவை ஏற்படுவதில்லை. இந்தியாவில் கம்யூனிசம் வெற்றி பெற முடியாமல் போனமைக்கு பிரதான காரணமாக இதைக் கொள்ளலாம். இலங்கையில் இரண்டு தென்னிலங்கை ஆயுத போராட்டங்கள் தோல்வி அடைந்ததற்கான காரணமும் இதுவே.

இதன் காரணமாகவே ஜே.வி.பி. ஆயுத போராட்ட வழிமுறையை கைவிட்டு ஜனநாயக வழிமுறைக்குத் திரும்பியது. வடக்கில் தோன்றிய ஆயுத போராட்டம் ஒரு கட்டத்தில் வலிமை பெற்றபோது, அன்றைய உள்ளூர் மற்றும் வெளியுலக சூழல்களுக்கு ஏற்ப தன்னை அப்போராட்டம் மறுசீரமைத்து ஜனநாயக வழிமுறைக்குத் திரும்பியிருக்க வேண்டும். யஸர் அரபாத் அதை ஒரு கட்டத்தில் செய்தார். ஜே.வி.பி. செய்ததைப் போலவே விடுதலைப் புலிகளும் ஜனநாயக வழிமுறைகளுக்கு ஒரு சரியான, பொருத்தமான சந்தர்ப்பத்தில் இணங்கியிருந்தால் பலத்த உயிர், பொருட் சேதங்களைத் தவிர்த்திருக்கலாம். ஒரு நாடு தழுவிய சுரண்டல் கலாசாரம் மேல் எழுவதையும் தடுத்திருக்கலாம் என்பதை இங்கே சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.

நாங்கள் ஏன் வித்தியாசமானவர்கள் என்பதையும் ஆட்சி அதிகாரம் கிடைத்தால் என்னென்ன மாற்றங்களைக் கொண்டு வருவோம் என்பதையும் அரகலயவின் பின்னர் ஜே.வி.பி. படிப்படியாக மக்களுக்கு புரிய வைத்தது. நாட்டின் செல்வத்தைப் பங்கு போடுவதற்காகவே மக்களின் வாக்குகளை அவர்களை ஏமாற்றுவதன் மூலம் பெற்று. பாராளுமன்றம் வந்து செல்வத்தை தமக்கிடையே பங்குபோட்டுக் கொள்வதை தொடர்ச்சியாக நடத்தி வந்திருப்பதால் தான் இப்பொருளாதார வீழ்ச்சி நிகழ்ந்திருக்கிறது. இது மேலும் தொடராமல் நிறுத்தப்பட வேண்டும். நாட்டின் செல்வத்தை குறி வைக்காத, கட்டுக்கோப்பான சேவை மனப்பான்மையுடன் மக்கள் நலனை மட்டும் முன்நிறுத்திய ஒரு அரசு இந்நாட்டை பொறுப்பேற்றால் மட்டுமே நாடு காப்பாற்றப்பட முடியும் என்ற ஜே.வி.பி.யின் பிரசாரம் அல்லது உண்மைகளை எடுத்துச் சொன்னதை மக்கள் குறிப்பாக சாதாரண சிங்கள சமூகம் புரிந்து கொண்டது. பாரம்பரிய கட்சிகள் மீதான மக்களின் வெறுப்பு ஏற்கனவே இருந்தது. இனி, பாரம்பரிய கட்சிகளுக்கு பதிலாக கொள்கை பேசும் ஜே.வி.பி.க்கு ஒரு சந்தர்ப்பம் அளிப்பதே சரி என மக்கள் கருதியதன் விளைவாகவே அநுர குமார திசாநாயக்க ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ளார்.

தோழர் அநுர கிளிநொச்சியில் பேசும்போது, தென்னிலங்கை மக்கள் ஒரு தீர்மானத்துக்கு வந்திருக்கிறார்கள். அதற்கு ஆதரவாக நீங்களும் வாக்களிக்க வேண்டும் என்று கூறி வாக்கு கேட்டார். ஆனால் அந்த கோரிக்கையை எதிர்த்தரப்பு விஷமத்தனமாக திசைதிருப்பி, பலாத்காரத்துக்கு பழகிப்போன ஜே.வி.பி., தமிழர்களை பயமுறுத்தி வாக்களிக்கும்படி நிர்பந்தப்படுத்துகிறது என்ற பிரசாரத்தை கட்டவிழ்த்துவிட ஊடகங்களும் அதை பெரிதுபடுத்தின. சிங்களவர்களை தமிழர்களின் எதிரியாகக் காட்டும் மற்றொரு முயற்சி தான் இது.

தற்போது நாடு தழுவிய நிலையில் தமது தேசிய உரிமைகளுக்காகவும் சுத்தமான ஒரு நிர்வாகத்துக்கும் மக்கள் தமது வாக்குகள் ஊடாக ஜனநாயக கிளர்ச்சியில் ஈடுபட்டதை கடந்த 21ஆம் திகதி கண்டோம். ஜே.வி.பி விடுத்த செய்தி தமிழ் வாக்காளர்களைச் சென்றடையவில்லை என்பது உண்மையானாலும் தென்னிலங்கையில் பெருமளவு தமிழர்கள், அரசு அலுவலர்கள் ஜே.வி.பிக்கு வாக்களித்தனர்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ஏற்கனவே கூறியபடி, தனக்கு வாக்களிக்காதவர்களிடம் ஏன் ஜே.வி.பி. நாட்டுக்கு பொருத்தமான கட்சி என்பதை எடுத்துச் சொல்ல வேண்டியது அவசியம். செல்வத்தை பங்கிட்டு ஆண்டு அனுபவிப்பது சிங்கள சமூகத்தில் மட்டும் நிகழ்ந்து வரும் ஒரு அரசியல் விளையாட்டு அல்ல. தமிழ், இஸ்லாமிய சமூகங்கள் மத்தியிலும் இதே அரசியல்தான் நடைபெற்று வருகிறது. இந்த உண்மையை தமிழ் பேசும் சமூகம் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த அரசு இந்தியாவுடன் நெருங்கிய நட்புறவைப் பேணினால் மட்டும் போதாது. தமிழக அரசுடனும் அம்மக்களுடனும் தமது நட்புணர்வை ஏற்படுத்தி அதை வளர்க்கும் முயற்சிகளில் ஈடுபட வேண்டும். முன்னைய அரசுகள் தமிழக அரசையும் தமிழகவாசிகளையும் எதிரிகளைப்போல் சிங்கள சமூகத்தினரிடம் உருவகப்படுத்திக் காட்டுவதில் வெற்றிபெற்று வந்தன. தமிழகம் இந்திய மாநிலங்களில் ஒன்றாக இருந்தாலும் இலங்கைக்கு எதிரான கருத்துகளை உருவாக்கக் கூடிய மாநிலம்.

மத்திய அரசின் மீது அழுத்தம் செலுத்தக் கூடிய மாநிலம் என்பதால் இம் மாநிலத்தை தனியாக அணுக வேண்டிய அவசியம் ஜனாதிபதிக்கு உண்டு. சிங்கள சமூகம் தொடர்பான பல தவறான கருத்துகள் அங்கே உள்ளன. கலாசார பரிமாற்றம், ஊடகவியலாளர் பரிமாற்றம் என்பன மிக அவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டும். தமிழகம் தொடர்பாக தனிக் கொள்கை கடைபிடிக்கப்படுவது அவசியம்.

இலங்கையின் சிறுபான்மை சமூகங்களையும், கருத்துருவாக்கம் செய்யக் கூடிய தமிழ் சமூகத்தையும், புதிய பாராளுமன்றத்தின் கீழ் விசேட வழிமுறைகளின் கீழ் கவனிக்கப்பட வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பு.

இதேசமயம் 24 ஆண்டுகளின் பின்னர் ஒரு பெண்ணை பிரதமராக்கி இருக்கிறது ஜே.வி.பி. இந்த மாற்றுச் சிந்தனை போற்றப்பட வேண்டிய ஒன்று. இலங்கை மகளிருக்கு ஒரு கௌரவம் கிடைத்திருக்கிறது.

**அருள் சத்தியநாதன் ...**




# பொதுத்தேர்தலிலும் மக்கள் ஒத்துழைப்பு வழங்குவர் என்பதில் எமக்கு நம்பிக்கை!

## தேசிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் வைத்திய கலாநிதி நிஹால் அபேசிங்க கூறுகின்றார்



**ஜனாதிபதித் தேர்தலில் வழங்கிய ஒத்துழைப்பைப் போன்று, பொதுத்தேர்தலிலும் மக்கள் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாக தேசிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் வைத்திய கலாநிதி நிஹால் அபேசிங்க தெரிவித்தார். கொள்கை அடிப்படையில் கூட்டிணைந்து உருவாக்கப்பட்ட தேசிய மக்கள் சக்தி என்ற அரசியல் கட்டமைப்புக்குள் பதவிகள், பொறுப்புகளுக்கான எந்தப் போட்டியும் இல்லையென அவர் குறிப்பிட்டார். தனியார் தொலைக்காட்சியொன்றின் கலந்துரையாடல் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.**

**கே: ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றதும், பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் நடத்தப்படவிருக்கிறது. இந்த நிலையில் அநுர குமார திசாநாயக்கவின் பாராளுமன்ற வெற்றிடத்திற்கு லக்ஷ்மன் நிபுணாராச்சி நியமிக்கப்பட்டு அவருக்கும் அமைச்சுப் பதவி வழங்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஏன் இது நிறைவேற்றப்படவில்லை?**

பதில்: ஜனாதிபதியின் பாராளுமன்ற வெற்றிடத்துக்கு லக்ஷ்மன் நிபுணாராச்சியின் பெயர் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டது. இது விடயத்தில் இரு நிலைப்பாடுகள் காணப்பட்டன. வர்த்தமானி அறிவித்தலில் பெயர் வெளியிடப்பட்ட பின்னர் அமைச்சுப் பொறுப்புகளை அவர் ஏற்க முடியும் என்றதொரு நிலைப்பாடு முன்வைக்கப்பட்ட போதும், பாராளுமன்றத்தில் பதவிச்சத்தியப் பிரமாணம் செய்த பின்னரே அவர் அமைச்சுப் பொறுப்புகளை வகிக்க முடியும் என்றதொரு நடைமுறைச் சிக்கல் ஏற்பட்டது. இவ்வாறான பின்னணியில் சட்டத்துக்கு மதிப்புக் கொடுப்பது என்ற கொள்கையைக் கொண்ட நாம், பாராளுமன்ற உறுப்பினராக சபையில் பதவிச்சத்தியப் பிரமாணம் செய்வதற்குப் போதிய காலம் இன்மையால் ஜனாதிபதி உட்பட மூவருக்குள் அமைச்சுப் பதவிகளைப் பகிர்வதற்கும், மூவரைக் கொண்ட அமைச்சரவையை நியமிப்பதற்கும் தீர்மானித்தோம்.

**கே: ஆட்சிமாற்றம் ஒன்றின் போது அமைச்சின் செயலாளர்கள் புதிதாக நியமிக்கப்படுவார்கள். எனினும், உங்கள் அரசாங்கத்தில் சகல அமைச்சுக்களுக்குமான செயலாளர்களை மாற்றவில்லை. அந்தந்தப் பதவிகளில் இருந்த செயலாளர்கள் பலர் அவ்வாறே இருக்க, புதிய செயலாளர்கள் சிலர் மாத்திரம் நியமிக்கப்பட்டுள்ளனர். இதனை எவ்வாறு சிந்தித்தீர்கள்?**

பதில்: உண்மையில், குறுகிய காலத்துக்குள் பொதுத்தேர்தலொன்றுக்குச் செல்ல வேண்டியிருப்பதால் அதற்கான ஆயத்தப்படுத்தல்களே மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஜனாதிபதியினால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது. இதனால் எமக்கு இன்னும் குறுகிய காலமே உள்ளது. அமைச்சுகளை வினைத்திறனான முறையில் செயற்படுத்தி மக்களின் அன்றாட தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும், அவர்களின் வாழ்க்கைச் சுமையைக் குறைப்பதற்கான வேலைத்திட்டங்களை சரியான முறையில் கொண்டு செல்லவேண்டிய தேவையும் உள்ளது. எனவே புதிய செயலாளர்களை நியமித்து அவர்களின் ஊடாக இதனை முன்னெடுப்பதற்கு சிறிது காலம் ஏற்படும். எனவேதான் ஏற்கனவே இருந்த அமைச்சின் செயலாளர்களைக் கொண்டு அரசாங்கத்தின் திட்டங்களை முன்னெடுக்கத் தீர்மானித்தோம்.

**கே: ஜனாதிபதித் தேர்தலில் நீங்கள் உள்ளிட்ட தேசிய மக்கள் சக்தியின் அனைவரும் கடுமையாக செயற்பட்டிருந்தீர்கள். இவ்வாறான நிலையில் பொதுத்தேர்தலில் இந்தளவு மட்டத்திற்குச் செல்ல முடியும் எனக் கருதுகின்றீர்களா?**

பதில்: நாங்கள் உண்மையில் 2021 டிசம்பர் 21ஆம் திகதியே ஜனாதிபதித் தேர்தலுக்கான தயார்படுத்தலுக்கான திட்டத்தை வகுத்து 24 மாதங்கள் இதற்காகப் பாடுபட்டோம். எனினும், பொதுத்தேர்தலுக்கு 52 நாட்கள் என்ற குறைந்தளவு நாட்களே இருக்கின்றன. இருந்தபோதும் நாம் களைப்படையவில்லை. இந்தத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் செயற்பாட்டாளர்கள் மாத்திரமன்றி பொதுமக்களும் பெருமளவில் எமக்கு ஆதரவு வழங்கியிருந்தனர். இதேபோன்று, பொதுத்தேர்தலிலும் மக்களின் முழுமையான ஒத்துழைப்பைப் பெற்று வெற்றிகொள்ள முடியும் என நாம் நினைக்கின்றோம். பலம்மிக்க மக்களின் அரசாங்கத்தை அமைப்பதற்கு தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவோம்.

> **தேசிய மக்கள் சக்தியை முழுமையாகப் புரிந்து கொள்ளாத மக்கள் பலர் இருக்கின்றனர். குறிப்பாக கிராமப்புறங்கள் மற்றும் எமக்கு வாக்களிக்காத பகுதிகளில் தேசிய மக்கள் சக்தி குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியுள்ளது.**

**கே: ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை அப்படியே பொதுத்தேர்தலுடன் இணைத்துப் பார்க்கும்போது பெரும்பான்மையைப் பெறுவது கடினமானதொன்றாக இருக்கலாம். இருந்தபோதும், ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற கட்சி பொதுத்தேர்தலிலும் வெற்றிபெறுவது கடந்த காலங்களில் காணப்பட்ட நிகழ்வாகும். உங்களுடைய கணிப்பு எவ்வாறானதாகும்?**

பதில்: 3 வீதமாக இருந்த எமது வாக்கு வங்கி ஜனாதிபதித் தேர்தலில் 42 வீதமாக அதிகரித்தே இந்த வெற்றியை அடைய முடிந்தது. தேர்தல் காலத்தில் எமது கட்சி தொடர்பில் மக்களைக் குழப்பும் வகையில் போலியான பிரசாரங்கள், விமர்சனங்கள் பல முன்வைக்கப்பட்டன. இவ்வாறான சேறுபூசல்கள் மத்தியிலும் மக்கள் எமக்காக நின்றுள்ளனர். அது மாத்திரமன்றி, தேசிய மக்கள் சக்தியை முழுமையாகப் புரிந்து கொள்ளாத மக்கள் பலர் இருக்கின்றனர் என்பதை நாம் கவனத்தில் எடுத்துள்ளோம்.

குறிப்பாக கிராமப்புறங்கள் மற்றும் எமக்கு வாக்களிக்காத பகுதிகள் எனப் பல இடங்களில் தேசிய மக்கள் சக்தி குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியுள்ளது. இதுவரை எம்முடன் இணைந்து கொள்ளாத மக்கள் தொடர்பில் கவனம் செலுத்தி அவர்களையும் இணைத்துக் கொண்டு இந்தக் கஷ்டமான பயணத்தை மேற்கொள்ள எதிர்பார்க்கின்றோம்.

**கே: நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் புதியவர்கள் பலர் தெரிவுசெய்யப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. தேசிய மக்கள் சக்தியின் சார்பில் வேட்பாளர் பட்டியல்களைத் தயாரிக்கும்போது எவ்வாறான கொள்கைகளைக் கடைப்பிடிக்க எதிர்பார்க்கின்றீர்கள்?**

பதில்: தேசிய மக்கள் சக்திக்கு இது பிரச்சினையாக இருக்கும் என நான் நினைக்கவில்லை. ஏனெனில், இது உண்மையிலேயே கூட்டு முயற்சியாகும். கடந்த 6 வருடங்களாக பல்வேறு தரப்பினர்களுடன் இணைந்து கூட்டாகக் கட்டியெழுப்பப்பட்டுள்ள அரசியல் கட்டமைப்பாகும். தேசிய மக்கள் சக்தியை அமைப்பதில் ஜே.வி.பி பாரிய பங்காற்றியது. ஜே.வி.பி கடந்த பல வருடங்களாக இலங்கையில் முற்போக்கான இடதுசாரியைப் பின்பற்றிவந்த கட்சியாகும். எனவே, மக்கள் எதனை எதிர்பார்க்கின்றார்கள் என்பது தொடர்பில் ஜே.வி.பிக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் வலுவான அனுபவம் உள்ளது. நாம் அனைவரும் கூட்டாக இணைந்து செயற்படுகின்றோம். எவரும் அதிகாரத்தையும், பதவியையும் எதிர்பார்த்துப் பணியாற்றவில்லை. எனவே எந்தவொரு பதவியையும், பொறுப்பையும் எம்மைவிடப் பொருத்தமானவர்களுக்கு வழங்க நாம் எப்பொழுதும் தயாராக இருக்கின்றோம். இதனால் தேசிய மக்கள் சக்தியில் வேட்பாளர் பட்டியல் தயாரிப்பு உள்ளிட்ட விடயங்கள் பிரச்சினையாக இருக்காது.

**கே: இம்முறை தேசிய மக்கள் சக்தியில் போட்டியிடுவதற்குப் பலர் முன்வருவார்கள். பொதுவாக கட்சிக்குள் விருப்பு வாக்குகள் குறித்த போட்டிகள் நிலவுவது வழமை. தேசிய மக்கள் சக்தியில் இது பற்றி யோசித்துள்ளீர்களா?**

பதில்: நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்று இது கூட்டாக இணைந்து உருவாக்கப்பட்ட அரசியல் கட்டமைப்பு. இதில் உள்ள எவரும் விருப்பு வாக்குகளுக்காக கட்சிக்குள் போட்டி போடுபவர்கள் இல்லை. மக்களின் தீர்ப்புக்கு மதிப்பளித்து நாம் செயற்படுவோம்.

---

# உலகநாடுகளை பதற்றத்தில் ஆழ்த்தியுள்ள சீனாவின் தொலைதூர ஏவுகணை சோதனை!



## அமெரிக்கா வரை இலக்கு வைக்கக் கூடிய திறன்மிக்க ஆயுதம்!

கண்டம் தாண்டிய இலக்குகளை நோக்கித் தாக்குதல் நடத்தும் தொலைதூர ஏவுகணைகளை (intercontinental ballistic missile ICBM) வைத்துச் சோதனை நடத்தியுள்ளதாக சீனா கூறியிருக்கிறது.

சர்வதேச கடல்பரப்பில் சீனா இத்தகைய சோதனையை மேற்கொண்டது அண்டை நாடுகளில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த நாற்பது ஆண்டுகளில் முதன்முறையாக கடந்த புதன்கிழமையன்று இத்தகைய சோதனையை சீனா மேற்கொண்டுள்ளது. இது ஒரு வழக்கமான சோதனை ஓட்டம்தான் என்று கூறிய சீன அரசு, எந்தவொரு நாட்டையும் இலக்காக வைத்து இத்தகைய சோதனையை நடத்தவில்லை என்றும் கூறியுள்ளது.

சீனாவின் இந்தச் செயல் இந்தோபசிபிக் பிராந்தியத்தில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில், நிபுணர்கள் சீனாவின் அணு ஆயுதங்களின் திறனை இந்தச் சோதனை ஓட்டம் மேற்கோள்காட்டியுள்ளது என்று கூறுகின்றனர்.

சீனா கடந்த ஆண்டு பாதுகாப்புத் தேவைக்காக அணு ஆயுதக் கிடங்கு ஒன்றை உருவாக்கியதாக அமெரிக்கா எச்சரிக்கை விடுத்திருந்தது. இந்தச் சூழலில், தற்போது நடந்திருக்கும் சோதனையோட்டத்திற்கு உட்படுத்தப்பட்ட ICBM ஏவுகணைகள் 5,500கி.மீ தூரம் பயணித்து இலக்குகளைத் தாக்கும் திறன் கொண்டவை எனத் தெரியவந்துள்ளது. இது அமெரிக்காவின் பிரதான பகுதியையும், ஹாவாயையும் தாக்கும் திறனைக் கொண்டதாக உள்ளது.

ஆனால் பெய்ஜிங்கில் உள்ள அணு ஆயுதக்கிடங்கானது, அமெரிக்கா மற்றும் ரஷ்யாவின் ஆயுதக்கிடங்குகளை விடவும் ஐந்து மடங்கு சிறியது என்கிறார்கள் இராணுவ ஆய்வாளர்கள். மேலும் சீனா தன்னுடைய அணு ஆயுதப் பராமரிப்பு தொடர்பாகக் குறிப்பிடும் போது இது வெறும் தடுப்பு நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்படும் பணிகள் என்றே தெரிவித்து வருகிறது.

செப்டம்பர் 25 ஆம் திகதி தொலைதூர ஏவுகணை ஒன்று சோதிக்கப்பட்டது என்று பெய்ஜிங் தெரிவித்துள்ளது. அந்தச் சோதனை ஓட்டத்தின் போது ஏவப்பட்ட ஏவுகணையின் இலக்கு தெற்கு பசிபிக் பிராந்தியத்தில் இருப்பதாக நம்பப்படுகிறது.

ஆனால், இந்தச் சோதனை ஓட்டம், ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் பயிற்சியின் ஒரு அங்கமாக வழக்கமாக நடைபெறும் நிகழ்வு என்று சீனாவின் பாதுகாப்புத் துறை தெரிவித்துள்ளது.

ஆனால், 1980 இற்குப் பிறகு கடந்த நாற்பது ஆண்டுகளில், தொலைதூர ஏவுகணையை சீனா ஏவியிருப்பது இதுவே முதல்முறை என்று நிபுணர்கள் கூறுகின்றனர். மேலும், இதற்கு முன்பு இத்தகைய ஏவுகணைகள் சீனாவின் மேற்கே ஜின்ஷியாங் பிராந்தியத்தில் உள்ள தக்லமகான் பாலைவனத்தில்தான் ஏவப்பட்டுள்ளன என்றும் சீனா தெரிவித்துள்ளது.

சீனாவில் தற்போது அணு ஆயுதங்களை நவீனப்படுத்தும் நிகழ்வுகள் கணிசமான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. சீனாவின் அணுகுமுறையிலும் இத்தகைய மாற்றம் ஏற்பட்டிருப்பதை இந்தச் சோதனை ஓட்டம் உறுதி செய்கிறது. சீனாவின் இந்தச் செயல்பாட்டுக்கு உலக நாடுகள் கண்டனத்தைப் பதிவு செய்துள்ளன. இது அதிக கவலை அளிப்பதாக ஜப்பான் தெரிவித்துள்ளது.

இந்தப் பிராந்தியத்தைத் தவறாக மதிப்பிடுவதால் உருவாகும் சிக்கல்களை இது அதிகப்படுத்துகிறது என்று அவுஸ்திரேலியா கூறியுள்ளது. மேலும் இந்தச் சோதனை ஓட்டத்திற்கான விளக்கத்தை சீனாவிடம் கேட்டிருப்பதாகவும் அவுஸ்திரேலியா கூறியுள்ளது. இது தேவையற்றது என்றும், கவலை அளிக்கக் கூடிய நிகழ்வு என்றும் நியூசிலாந்து கூறியுள்ளது.

> **500 இற்கும் மேற்பட்ட அணுஆயுதங்களை வைத்துள்ளதா சீனா?**



சீனா ஒரு அரசியல் செய்தியை அளிப்பதற்காக இதை மேற்கொண்டுள்ளது என்று ஆய்வாளர்கள் நம்புகின்றனர். ஆசியாவில் தங்களின் அணு ஆயுத நிலைப்பாட்டை உடனுக்குடன் மாற்றிக் கொள்ளும் அமெரிக்காவுக்கும், இந்தப் பிராந்தியத்திலும் இது ஒரு தெளிவான நினைவூட்டலாக இருக்கும் என்கிறார்கள் அவர்கள்.

அமெரிக்கா மற்றும் அதன் கூட்டணி நாடுகளுக்கு ஒரு அழைப்பு மணியாக இந்தச் செயல் இருக்கலாம் என்று சில நிபுணர்கள் கூறுகின்றனர்.

சீனாவின் இந்தச் செயற்பாடு, தாய்வான் தொடர்பான விவகாரங்களில் தலையீடு நிகழும் பட்சத்தில் உங்கள் நாடும் தாக்குதலுக்கு ஆளாகும் பலவீனமான நிலையில்தான் இருக்கிறது என்ற செய்தியை அமெரிக்காவுக்குக் கடத்துவதாக இருக்கிறது என்று தென்கொரியாவில் உள்ள எவா பெண்கள் பல்கலைக் கழகத்தின் சர்வதேச உறவுகள்துறை பேராசிரியர் லெய்ஃப்எரிக் ஏஸ்லே கூறுகிறார்.




ஆசியாவில் உள்ள அமெரிக்கக் கூட்டணி நாடுகளுக்கு, ஒரே நேரத்தில் பலமுனை தாக்குதலை நடத்துவதற்கான திறன் தன்னிடம் இருப்பதை நிரூபிக்க இந்தச் சோதனையை சீனா நடத்தியுள்ளது என்றும் அவர் கூறுகிறார்.

இந்த சோதனை நடந்திருக்கும் நேரம் தான் முக்கியம் என்று கூறுகிறார்கள் ஆய்வாளர்கள்.

சீனா தன்னுடைய அறிக்கையில் எந்த நாட்டையும் இலக்காக வைத்து இதனை நடத்தவில்லை என்று கூறுகிறது. ஆனால் இந்தச் சோதனை ஓட்டம் சீனா, மற்றும் ஜப்பான், பிலிப்பைன்ஸ், தாய்வான் இடையே அதிக பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையேயான உறவு கடந்த ஆண்டு மேம்பட்டு வந்த நிலையில், இந்தப் பிராந்தியத்தில் தன்னுடைய அதிகாரத்தைத் தக்கவைப்பதில் அதிக கவனம் செலுத்துகிறது சீனா. கடல் பகுதியில் சர்ச்சைக்குரிய இடங்களில் தொடர்ந்து சீனா மற்றும் பிலிப்பைன்ஸ் நாட்டினரின் படகுகள் மோதிக்கொள்வது இவ்விரு நாடுகளுக்கும் இடையே பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த மாதம், சீனாவின் உளவு விமானம் ஒன்று ஜப்பானின் எல்லைக்குள் உலவியதாகக் குற்றம்சாட்டிய ஜப்பான், அந்த நடவடிக்கையை துளியும் ஏற்றுக் கொள்ள இயலாது என்று குற்றம்சாட்டியிருந்தது.

தாய்வானின் பாதுகாப்பு அமைச்சர் சீனா நடத்திய சோதனை ஓட்டம் குறித்து வெளியிட்ட அறிக்கையில், தாய்வானைச் சுற்றி 23 சீன இராணுவ விமானங்கள் செயற்பட்டு வந்ததாக சுட்டிக்காட்டியுள்ளார்.

ஊடுருவல்களை நியாயப்படுத்தும் வகையில் தாய்வானின் நீர்வழிகள் மற்றும் வான்வெளியில் சீனா தொடர்ச்சியாகக் கப்பல்களையும் விமானங்களையும் அனுப்பி வருகிறது.

தாய்வானுக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆயுதங்களை வழங்கியதால் ஜுலையில் சீனா அமெரிக்காவுடனான அணுஆயுதக் கட்டுப்பாடு தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தை ரத்து செய்தது.

அமெரிக்காவைப் பார்க்கிலும் சீனா குறைவாகவே ஆயுதங்களை வைத்திருக்கும் போதும், கடந்த ஆண்டு சீனாவின் ஆயுதங்களை நவீனப்படுத்தும் செயற்பாடுகளுக்கு அமெரிக்கா கண்டனம் தெரிவித்தது.

அமெரிக்காவின் பாதுகாப்புத்துறை அலுவலகமான பெண்டகன், சீனாவின் அணு ஆயுதக் கிடங்குகளில் 500 இற்கும் மேற்பட்ட அணு ஆயுதங்கள் இருப்பதாகவும் அவற்றில் 350 ஆயுதங்கள் தொலைதூர ஏவுகணைகள் என்றும் மதிப்பிட்டுள்ளது.

2030 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 1000 ஆக இருக்கும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் ரஷ்யாவும் அமெரிக்காவும் 5000 இற்கும் மேலே இத்தகைய ஆயுதங்களை வைத்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

**எஸ்.சாரங்கன்...**

# சமய, சமூக சேவையாளர் அருளானந்தன் காலமானார்



பிரபல வர்த்தகரும் சமய, சமூக சேவையாளர் எஸ்.ரி.எஸ். அருளானந்தன் நேற்று முன்தினம் காலமானார்

அன்னார், கதிர்காமம் யாத்திரிகர் தொண்டர் சபையின் தலைவராகவும் அகில இலங்கை இந்து மாமன்றம், கொழும்பு விவேகானந்த சபை ஆகியவற்றின் துணைத் தலைவராகவும் விளங்கி சிவப்பணிகள் ஆற்றியவராவார்.

இவரது பூதவுடல் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணி முதல் இரவு 9.00 மணிவரையும் நாளை திங்கட்கிழமை காலை 9.00 மணி முதல் இரவு 9.00 மணிவரையும் இறுதி அஞ்சலிக்காக கொழும்பு, பொரளை ஜயரத்ன மலர்ச்சாலையில் வைக்கப்பட்டிருக்கும். எதிர்வரும் முதலாம் திகதி மாலை 4.00 மணிக்கு பொரளை கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# அடுத்த சில நாட்களில் நாட்டில் அதிக மழை

## வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு



இலங்கையை சூழவுள்ள பகுதிகளில் உருவாகிய தாழ் வளிமண்டல தளம்பல் நிலை காரணமாக அடுத்த சில நாட்களில் மழை நிலைமை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் பிற்பகலில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படும்.

மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் களுத்துறை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் சில இடங்களில் 100 மி.மீ க்கும் அதிகமான பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

தென் மாகாணத்திலும் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களிலும் காலை வேளையிலும் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்று வீசக் கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்

# களுத்துறையில் தூய்மையான அரசியல் பணியை குமார வெல்கம முன்னெடுத்தவர்

## முன்னாள் எம்.பி. மர்ஜான் பளீல் அனுதாபம்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான குமார வெல்கம களுத்துறை மாவட்டத்தில் தூய்மையான அரசியல் பணியை முன்னெடுத்து வந்ததாக, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் தெரிவித்தார்.

களுத்துறை மாவட்டத்தன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான குமார வெல்கம கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் தனது 74ஆவது வயதில் காலமானார்.

இவரது மறைவையிட்டு முன்னாள் எம்.பி. மர்ஜான் பளீல் விடுத்துள்ள அனுதாபச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்தார். அச்செய்தியில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"களுத்துறை மாவட்டத்தின் மத்துகம தேர்தல் தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்தி தான் இறக்கும்வரை மக்கள் பிரதிநிதியாக இவர் செயற்பட்டார். பாராளுமன்ற உறுப்பினராக, அமைச்சராக நீண்டகாலமாக தொடர்ந்து எமது மாவட்டத்தை அலங்கரித்தார்.

தன்னை விட தனது மக்களின் தேவைகளுக்கு முக்கியத்துவம் வழங்கி செயற்பட்டார். இனவாதத்தை ஒருபோதும் விரும்பாத இவர், எமது மாவட்டத்தின் மூவின மக்களுக்கும் எவ்வித பேதமுமின்றி பணிபுரிந்தார்.

இந்நிலையில் முன்னாள் அமைச்சர் குமார வெல்கமவின் திடீர் மறைவு களுத்துறை மாவட்டத்திலுள்ள மூவின மக்களுக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்" என்றார்.

# ஜனாதிபதி அலுவலகத்தின் சட்ட பணிப்பாளர் நாயகமாக சிரேஷ்ட சட்டத்தரணி ஜே.எம்.விஜேபண்டார நியமனம்

ஜனாதிபதி அலுவலகத்தின் சட்ட பணிப்பாளர் நாயகமாக சிரேஷ்ட சட்டத்தரணி ஜே.எம்.விஜேபண்டார ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான நியமனக் கடிதம் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் நேற்று முன்தினம் (27) ஜனாதிபதி அலுவலகத்தில் சிரேஷ்ட சட்டத்தரணி ஜே.எம். விஜேபண்டாரவிடம் கையளிக்கப்பட்டது.

கொழும்பு ஆனந்தா கல்லூரியின் பழைய மாணவரான விஜேபண்டார, கொழும்பு பல்கலைக்கழகத்தில் இளங்கலை (கௌரவ) பட்டம், திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டமாணி (கௌரவ) பட்டத்தையும் பெற்றுள்ளார்.

சிரேஷ்ட சட்டத்தரணி ஜே.எம்.விஜேபண்டார, கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தின் முன்னாள் விரிவுரையாளரும் ஆவார்.

## திராய்மடுவில்

# கத்தி குத்துக்குள்ளாகி இளம் மீனவர் பலி

**மட்டக்களப்பு சுழற்சி நிருபர்**

மட்டக்களப்பு, கொக்குவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திராய்மடு பிரிவு வீட்டுத்திட்ட பகுதியில் நேற்று முன்தினம் இரவு இரு தரப்பினருக்கு இடையே ஏற்பட்ட கைகலப்பில் 18 வயதுடைய இளம் மீனவர் ஒருவர் கத்தியால் குத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். மீனவ தொழிலாளியான தங்கேஸ்வரன் அபிலாஷ் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இந்த சம்பவத்துடன் தொடர்புடையதாக கருதப்படும் இளம் குடும்பஸ்தர் ஒருவரை சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளை செலுத்தியது தொடர்பிலேயே கைகலப்பு ஏற்பட்டதாகவும் இதன்போது சந்தேக நபர் கத்தியால் குத்தியதாகவும் பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

## ஜனாதிபதி அநுர குமாரவுக்கு...

சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி தர்மன் சண்முகரத்தினம் தனது வாழ்த்து கடிதத்தில், நாட்டை முன்னோக்கி வழிநடத்துவதற்கு இலங்கை மக்கள் உங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையின் நிரூபணம் இது என்று குறிப்பிட்டுள்ளார். சிங்கப்பூரும் இலங்கையும் நீண்டகால உறவுகளை அனுபவித்து வருகின்றன. இரு நாடுகளின் நெருங்கிய பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மக்கள் உறவுகளால் ஆதரிக்கப்படுகின்றன என்றும் அவர் கூறியுள்ளார். இதேவேளை சிங்கப்பூர் பிரதமரும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு தனது வாழ்த்தை தெரிவித்துள்ளார்.

## கட்டுப்பாட்டு விலையில்...

நாட்டில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க ஆற்றி வரும் பணிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் நேற்று சனிக்கிழமை முதல் அனைத்து அரிசி வகைகளையும் கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்ய தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## லேக் ஹவுஸ் புதிய தலைவராக...

பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் முதுமாணி பட்டத்தையும் பெற்றுள்ளார்.

அவர், பண்டாரவளை மத்திய கல்லூரியின் பழைய மாணவராவார்.

## சிறிதரனுக்கு...

தமிழ் பேசும் உறுப்பினர்கள் தமிழ், முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களுள் சிறப்பாக செயற்பட்ட முதலாவது தமிழ் பாராளுமன்ற உறுப்பினராக சிவஞானம் சிறிதரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## ஐ.ம.ச. கட்சியில் வேட்புமனு...

கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவை அறிவுறுத்தியுள்ளார். இந்த குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படும் எவருக்கும் வேட்புமனு வழங்கப்பட மாட்டாது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் மதுபான அனுமதிப்பத்திரம் பெற்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ள முன்னாள் எம்.பி.க்கள் மூவருக்கும் வேட்புமனு வழங்குவதில்லையென ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் ஏற்கனவே தீர்மானித்திருந்தார்.

## குமார வெல்கம...

காலமானதாக குடும்ப உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இறுதிக்கிரியைகள் தொடர்பான விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படுமென குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

சுகயீனம் காரணமாக குமார வெல்கமவுக்கு மூன்று மாத கால விடுமுறை வழங்குவதற்கு பாராளுமன்றம் அண்மையில் அங்கீகாரம் வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

1994 ஆம் ஆண்டு முதல் அவர் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தமை குறிப்பிடத்தக்கது.

## சட்டத்தரணிகள் சங்கத்துக்கு...

பதவி வெற்றிடமாக காணப்பட்டது. இதனையடுத்தே சட்டத்தரணி அநுர மெத்தெகொட தலைவர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் பிரதித் தலைவராக ஜனாதிபதி சட்டத்தரணி ராசிக் சரூக் நியமிக்கப்பட்டுள்ளார்.

## வருமான வரியை செலுத்த...

அந்த மதிப்பீட்டு ஆண்டுக்குரிய அனைத்து வருமான வரிகளையும் நாளை திங்கட்கிழமை 30ஆம் திகதிக்குள் செலுத்தி முடிக்க வேண்டுமென இறைவரி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.ஏ.சேபாலிக்கா கேட்டுக் கொண்டுள்ளார்.

இதற்கமைய குறிப்பிட்ட திகதிக்குள் வரி செலுத்த தவறும் பட்சத்தில் அபராதம் விதிக்கப்படுமென்பதுடன், வட்டி தள்ளுபடி செய்யப்படவோ அல்லது குறைக்கப்படவோ மாட்டாதெனவும், இறைவரி திணைக்களம் தெரிவித்தது.

எதிர்வரும் ஒக்டோபர் 30ஆம் திகதி அல்லது அதற்கு முன் நிலுவையிலுள்ள அனைத்து முன்னிருப்பு வரிகளையும் செலுத்தி முடிக்க வேண்டுமெனவும் வரி செலுத்துவோருக்கு அறிவுறுத்தியுள்ள உள்நாட்டு இறைவரி திணைக்களம், குறிப்பிடப்பட்ட திகதிக்கும் பின்னர் வரி செலுத்தாது தவறும் போது வரிகளுக்கான உள்நாட்டு இறைவரி சட்ட நியதிக்கமைய சட்ட நடவடிக்கையுடன் கடுமையான சேகரிப்பு நடவடிக்கையும் எடுக்கப்படுமெனவும் குறிப்பிட்டது.

## சர்வதேச புத்தக கண்காட்சியை...

பார்வையிட்டார். அதன்போது இலங்கை புத்தக வெளியீட்டாளர்கள் சங்கத்தின் தலைவர் சமந்த இந்தீவர, சிறுவர் புத்தகங்கள் தொடர்பிலான தேசிய கொள்கைப் பத்திரத்தை ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிடம் வழங்கி வைத்தார். இந்நிலையில் கண்காட்சிக்கு வருகை தந்த மக்கள் ஜனாதிபதிக்கு விசேட வரவேற்பளித்தது டன், அவற்றை பார்வையிட வந்திருந்த மக்களோடும் ஜனாதிபதி சிநேகபூர்வமாக கலந்துரையாடினார்.

இங்கு 400 புத்தக கூடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இலங்கை புத்தக வெளியீட்டாளர் சங்கத்தினால் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படுகின்ற 'கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சி' செப்டெம்பர் 27ஆம் திகதி முதல் ஒக்டோபர் 6ஆம் திகதி இரவு 9.00 மணிவரை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் நடத்தப்படுகிறது.

பேராதனை பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர் லியனகே அமரகீர்த்தி, கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் உதார திக்கும்புர, பணிப்பாளர் சமந்தி ஜயசூரிய, மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் இணை நிர்மாணப்பிரிவின் தலைவர் ருவன்திகா சேனநாயக்க உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.

## பாடசாலை நிர்வாகம்...

சுட்டிக்காட்டியுள்ளார். எனவே பாடசாலைகளில் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாதவாறு அதிபர்கள் உறுதியளிக்க வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். இதன்படி இது போன்ற நிகழ்வுகளை நடத்துவதற்காக பெற்றோரிடம் பணம் வசூலிக்கக் கூடாதென மாகாணக் கல்விச் செயலாளர்கள், மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், பிராந்தியக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டப் பணிப்பாளர்கள், அரசாங்க அதிபர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகள் மற்றும் அதிபர்களுக்கு கடிதம் மூலம் செயலாளர் அறிவித்துள்ளார்.

## ஹிஸ்புல்லா தலைவர்...

தளபதிகளை இலக்கு வைத்து தொடர் தாக்குதலை நடத்தியதாக இஸ்ரேல் கூறியிருந்தது. இத்தாக்குல்களில் ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்லா கொல்லப்பட்டுள்ளதாக இஸ்ரேல் இராணுவம் அறிவித்துள்ளது.

## தமிழர் தீர்விலும்...

தினகரன் வாரமஞ்சரிக்கு அவர் வழங்கிய நேர்காணலிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் 05 வருட கால ஆட்சிக்காலத்தில் அவர் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான காத்திரமான நிரந்தரத் தீர்வை முன்வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இதுவரை இலங்கையை ஆட்சி செய்த எட்டு ஜனாதிபதிகளில் தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க முற்றிலும் மாறுபட்டவராக காணப்படுகிறார்.

இவரும் போராட்ட வாழ்விலிருந்து அரசியலுக்கு வந்தவர்தான்.

நாட்டில் நல்லதொரு ஆட்சி அமைய வேண்டும் என்றுதான் ஜே.விபியினர் 1970 களில் போராடினர்.

அது போலவே நாங்களும் போராடினோம். நாங்கள் எங்களுக்கு உரிமைகள் கிடைக்கவில்லையென்றே போராடினோம்.

நாட்டைப் பிரிப்பதற்காக அல்ல. ஒற்றையாட்சிக்குள் தமிழருக்கு சிறந்த தீர்வை அவர் முன்வைப்பார் என்பது அவரது செயற்பாடுகளில் இருந்து தெரியவருகின்றது.

அவ்வாறு அவர் சிறந்ததொரு தீர்வை முன்வைப்பாரானால் தமிழ் பொது வேட்பாளருக்கான தேவை அடுத்த தேர்தலில் இருக்காதென்றும் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

(பா. அரியநேத்திரனுடனான நேர்காணல் 07 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய அமைச்சுகளின்...

2403/53 – 2024 இலக்க வர்த்தமானி அறிவிப்பு நேற்று முன்தினம் (27) வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 44ஆவது உறுப்புரையின் (1) இலக்க உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவினால் இந்த வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

புதிய அரசாங்கத்தின் தற்காலிக அமைச்சரவையும் அண்மையில் தெரிவு செய்யப்பட்டது. அதன்படி புதிய அரசாங்கத்தினதும் நிறுவனங்களினதும் விடயப்பரப்புகள் அடங்கிய முழுமையான வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி பாதுகாப்பு, நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுத்தல், திட்டமிடல் மற்றும் சுற்றுலத்துறை, வலுசக்தி விவசாயம், காணி, மற்றும் கால்நடை, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீர் வழங்கல் ஆகிய அமைச்சு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

அதற்கமைய பாதுகாப்பு அமைச்சின் கீழ் 26 நிறுவனங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன.

தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களம், தேசிய பாதுகாப்பு நிதியம் உட்பட நிதி அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை 62 ஆகும்.

இலங்கை மின்சார சபை உட்பட 11 நிறுவனங்கள் வலுசக்தி அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.விவசாய அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை 35 ஆகும்.

அதன்படி 134 நிறுவனங்கள் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவின் கீழ் உள்ள 5 அமைச்சுகளுக்கு 165 நிறுவனங்கள் ஒதுக்கப்பட்டன.

அதன்படி சட்ட மாஅதிபர் திணைக்களம், சிறைச்சாலை திணைக்களம் உள்ளிட்ட 38 திணைக்களங்கள் நீதி அமைச்சில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பரீட்சை திணைக்களம் உட்பட 45 நிறுவனங்கள் கல்வி அமைச்சின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளன. விளையாட்டு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 15 நிறுவனங்களில் சுகததாச தேசிய விளையாட்டு அரங்கும் அடங்கும். வர்த்தக அமைச்சு, கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் உட்பட 41 நிறுவனங்களை உள்ளடக்கியுள்ளது.

சுகாதார அமைச்சுக்கு தேசிய சுகாதார ஆராய்ச்சி நிறுவனம் உட்பட 26 நிறுவனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் அமைச்சர் விஜித ஹேரத்துக்கு கீழ் உள்ள 6 அமைச்சுகள் 142 நிறுவனங்களை கொண்டுள்ளன.

பௌத்த மத விவகார திணைக்களம் உட்பட 53 நிறுவனங்கள் பௌத்த சாசன மற்றும் மத கலாசார அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

# எங்கள் கருத்து...

# நாகரிக அரசியல் பாதையில் பயணிக்கும் இலங்கைத் தேசம்

வன்முறைகள், ஆரவாரங்கள் எதுவுமின்றி அமைதிப் புரட்சியின் ஊடாக மக்கள் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர். ஜனநாயக அரசியலில் எமது மக்கள் முன்னேறிச் செல்கின்றரென்றே கூற வேண்டியுள்ளது.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலிலும் இவ்வாறே அமைதி கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்பதே அமைதியை விரும்புகின்ற மக்களின் விருப்பமாகும். எந்தவொரு வேட்பாளரையும் ஆதரிக்கின்ற ஜனநாயக உரிமை வாக்காளர்கள் ஒவ்வொருவருக்கும் உள்ளது. வாக்காளர்கள் தமது உரிமையை தேர்தலில் இரகசியமாக வெளிப்படுத்துவதே உகந்தது.

எதிர்தரப்பு ஆதரவாளர்களை அகௌரவப்படுத்துவதோ, அவர்களுக்கு ஊறு விளைவிப்பதோ நாகரிகம் அல்ல. இம்முறை ஜனாதிபதித் தேர்தல் நாகரிகமாகத்தான் நடந்து முடிந்துள்ளது. அதேவேளை, இத்தேர்தலில் இன்னுமொரு விடயத்தையும் அவதானிக்க முடிந்தது. வெற்றி பெற்ற தரப்பினர் தமக்கு எதிரானவர்களுக்கு துன்பம் விளைவித்ததாக எந்தவொரு முறைப்பாடுகளும் பதிவாகவில்லை. வெற்றி பெற்றவர்கள் மாத்திரமன்றி, தோல்வியுற்ற தரப்பினரும் அமைதியையே கடைப்பிடித்துள்ளனர்.

இதுவே அரசியல் நாகரிகம் என்பதாகும். அரசியலைப் பொறுத்தவரை இவ்வாறான புரிந்துணர்வு, ஒழுக்கம் கடைப்பிடிக்கப்படுவது வரவேற்கத்தக்கதாகும்.

பெரும்பாலான மக்களின் ஆதரவுடன் அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாகப் பதவியேற்றிருக்கிறார். அரசியல் விரோதங்களை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு நாட்டின் நலன்கருதி ஒத்துழைப்புடன் செயற்படுவதே அனைத்து அரசியல் கட்சிகளும் இன்று கடைப்பிடிக்க வேண்டிய பண்பு ஆகும்.

## தேர்தல் செலவுகளை...

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அவ்வாறு செய்யாத அனைத்து வேட்பாளர்களுக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவுகள் ஒழுங்குமுறைச் சட்டம் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது முதன்முறையாக அமுல்படுத்தப்பட்டதுடன், ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு முடிவடைந்த 21 நாட்களுக்குள் அனைத்து வேட்பாளர்களும் தமது செலவு அறிக்கையை தேர்தல் ஆணைக்குழுவிடம் கையளிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதன்படி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்களும் ஒக்டோபர் 12ஆம் திகதிக்கு முன்னர் தமது செலவு அறிக்கைகளை ஆணைக்குழுவில் சமர்ப்பிக்க வேண்டும்.

உரிய திகதியில் அறிக்கைகளை சமர்ப்பிக்காமல் இருப்பது மற்றும் தவறான அறிக்கைகளை சமர்பிப்பது சட்டப்படி குற்றமென்றும், சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ள தண்டனைகளுக்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தலைவர் கூறினார்.

அதன்படி, தேர்தல் செலவு அறிக்கையை சமர்ப்பிக்காதவர்கள் அல்லது வரம்பை மீறி செலவு செய்தவர்கள் அல்லது சட்டவிரோத செலவுகள் குறித்து எவரேனும் முறைப்பாடு செய்யலாம். இது தொடர்பில் ஆராய்ந்து சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் சட்ட மாஅதிபர் ஊடாக வழக்குத் தொடரவும் பொலிஸாருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதென்றும் அவர் தெரிவித்தார்.

## பொதுத் தேர்தலில்...

கொள்பவர்கள் எம்முடன் கைகோர்க்கலாமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மவ்பிம ஜனதா கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதித் தேர்தலில் கணிசமான அளவு வாக்குகளை பெற்றுக் கொண்டுள்ளேன். எனக்கு வாக்களித்த மற்றும் வாக்களிக்காத அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்தல் பிரசாரத்தின் போது பொய்யான வாக்குறுதிகளை நான் வழங்கவில்லை.

நடக்கவிருக்கும் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவேன். அதேபோல் 22 தேர்தல் மாவட்டங்களிலும் மவ்பிம ஜனதா கட்சியின் உறுப்பினர்களை களமிறக்குவேன். பொதுத் தேர்தலில் புதிய சின்னத்தில் போட்டியிடுவேன். சுயாதீனமாக செயற்படுவதாக குறிப்பிட்டுக் கொள்பவர்கள் எம்முடன் கைகோர்க்கலாம். பலமாக அரசியல் கூட்டணியை ஸ்தாபிப்போமென்றார்.

பொருளாதார நெருக்கடிக்கு ராஜபக்ஷர்களை போன்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பொறுப்புக் கூற வேண்டும்.

பொருளாதார நெருக்கடியை முன்னிலைப்படுத்தி மக்களாணையை பெற்றுக்கொள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயற்சித்தார். அவரது முயற்சியை மக்கள் தோற்கடித்தனர். அதேபோல் பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்புக் கூற வேண்டிய ராஜபக்ஷர்களையும் மக்கள் புறக்கணித்துள்ளனர்.

தேசியத்தை பேசிக் கொண்டு ராஜபக்ஷர்களால் இனி ஆட்சிக்கு வர முடியாது. நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் மக்கள் சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளுக்கு தகுந்த பாடம் புகட்ட வேண்டும் என்றார்.

# தோல்வியடையும் வேட்பாளருடன் ஒப்பந்தம் செய்வதில் பயனில்லை

## பொது வேட்பாளராகப் போட்டியிட்ட பாக்கியசெல்வம் அரியநேத்திரன்.

***இந்தத் தேர்தலிலும் தமிழரசுக் கட்சியின் ஒருசாரார் ஜனாதிபதி வேட்பாளருடன் உடன்பாடு செய்து கொண்டு தற்போது படுகுழியில் குப்புற விழுந்திருக்கின்றார்கள். தோல்வியடையும் வேட்பாளருடன் ஒப்பந்தம் செய்வதில் எந்தப் பயனும் இல்லை என்று ஆணித்தரமாகக் கூறுகின்றார் 'பொது வேட்பாளராகப் போட்டியிட்ட பாக்கியசெல்வம் அரியநேத்திரன். அவர் தினகரன் வாரமஞ்சரிக்கு வழங்கிய நேர்காணலில் வெற்றியடையும் ஜனாதிபதியுடன்தான் நாங்கள் பேரம் பேசலாம். இப்போது அநுர குமார திசாநாயக்க வெற்றிபெற்றிருக்கின்றார். ஆனாலும் பாராளுமன்ற தேர்தலுக்குப் பிறகுதான் அவ்வாறன முயற்சிகள் சாத்தியமாகும் என்கிறார். அவரது நேர்காணல் வருமாறு...***

***ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளராக நீங்கள் களமிறங்கினீர்கள். இந்தத் தேர்தலில் கட்டுப்பணம் இழந்தவர்களில் நீங்களும் ஒருவர். ஆனால் தமிழர் தரப்பில் இதுவொரு வெற்றியாகப் பார்க்கப்படுகின்றதே?***

எங்களைப் பொறுத்தவரை, இந்தத் தேர்தலில் ஒரு சேதி சொல்லப்பட்டிருக்கிறது. வடமாகாணத்தில் மட்டும் எனக்கு ஒரு லட்சத்து பதினாறாயிரம் மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். கிழக்கு மாகாணத்திலும் வாக்களித்திருக்கிறார்கள். வட, கிழக்கு சட்ட ரீதியாகப் பிரிக்கப்பட்டாலும் மக்கள் இன்னமும் இணைந்தே இருக்கின்றார்கள் என்பதைத் தான் இந்தத் தேர்தலில் எனக்குக் கிடைத்த வாக்குகள் காண்பிக்கின்றன.

இராண்டாவது விடயம் என்னவென்றால் கடந்த காலங்களில் போட்டியிட்ட ஜனாதிபதி வேட்பாளர்களால் ஏமாற்றப்பட்ட வாக்காளர்கள் தான் இவ்வாறு வாக்களித்திருக்கின்றார்கள். இப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதிக்கும் அந்தச் செய்தி உணர்த்தப்பட்டுள்ளது என்றே நம்புகின்றேன். இப்போது தேசிய அளவில் ஏற்பட்டிருக்கும் மாற்றம் அனேகர் எதிர்பாராதது. எனவே 'பொது வேட்பாளர்' மூலம் அவருக்கும் சேதிசொல்லியிருக்கின்றோம்.

அதேவேளை சர்வதேசத்துக்கும் தமிழர்களின் அபிலாஷைகள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. அவர்கள் தங்கள் பிரச்சினைகளுக்காக ஒருமித்து வாக்களித்திருக்கின்றார்கள் என்ற செய்தியை சொல்லியிருக்கின்றோம். இலங்கையில் ஐந்தாமிடத்தில் மக்கள் என்னை நிலையிநிறுத்தியிருக்கின்றார்கள் என்பது பெரிய விடயமல்லவா?

***இதற்கு முன்னரும் ஜனாதிபதித் தேர்தல்களில் தமிழ் வேட்பாளர் நிறுத்தப்பட்டிருக்கிறார். எண்பதுகளின் ஆரம்பத்தில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் குமார் பொன்னம்பலம் வேட்பாளராகப் போட்டியிட்டு லட்சக்கணக்கான வாக்குகளைப் பெற்றிருக்கின்றாரே?***

குமார் பொன்னம்பலம் நான் நினைக்கின்றேன். 1982ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்டு 173,934 வாக்குகளைப் பெற்றிருந்தார். ஆனால் அவர் பொது வேட்பாளராகப் போட்டியிடவில்லை. இந்தத் தேர்தலில் பல்வேறுபட்ட தரப்பினர் எங்களுக்கு பிரசாரம் செய்தார்கள். போராட்டம் இடம்பெற்றதன் பின்னர் சுமார் 12 லட்சம் மக்கள் புலம்பெயர்ந்திருக்கின்றார்கள். அவர்கள் இதுவரை காலமும் வேறுபட்ட கொள்கைகளால் சிதறுண்டு போயிருந்தவர்கள். இந்தத் தேர்தல் புலம்பெயர்ந்த மக்களை ஒன்றுபடுத்தியிருக்கிறது. அவர்கள் பொது வேட்பாளருக்காக ஒற்றுமைப்பட்டு வாக்களித்திருக்கின்றார்கள். அதேபோலவே சிவாஜிலிங்கமும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டார். ஆனால் அந்த தேர்தல்களில் மக்களிடம் ஒரு அலையை அவர்கள் ஏற்படுத்தவில்லை. எனவே அவற்றுடன் இம்முறைத் தேர்தலை ஒப்பிடமுடியாது. இந்த முறை இடம்பெற்ற 9ஆவது ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மை மக்களுக்கு ஒரு பிரச்சினை இருக்கின்றது. அதனை வெளிப்படுத்தவே அவர்கள் தேர்தலில் வேட்பாளரை இறக்கியிருக்கின்றார்கள் என்ற செய்தி சொல்லப்பட்டிருக்கின்றது.

***தமிழ்பொது வேட்பாளராக நீங்கள் ஏன் எந்தவொரு பிரதான வேட்பாளருடனும் ஒரு உடன்பாட்டிற்கோ அல்லது ஒப்பந்தமொன்றிற்கோ செல்லவில்லை? அதன் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வொன்றிற்கான அடித்தளத்தை இட்டிருக்கலாமல்லவா?***

இந்தத் தேர்தலிலும் அவ்வாறு உடன்பாடு செய்துகொண்ட தமிழ்த் தரப்பு உண்டல்லவா? தமிழரசுக் கட்சியின் ஒருசாரார் அவ்வாறு ஒரு உடன்பாட்டைச் செய்து கொண்டு தற்போது படுகுழியில் குப்புற விழுந்திருக்கின்றார்கள். தமிழரசுக் கட்சியில் 90 வீதமானவர்கள் என்னை ஆதரித்தார்கள். 10 சதவீதமானோரே சஜித் பிரேமதாசவை ஆதரித்தார்கள். ஆதரித்ததற்கு அவர்கள் கூறிய காரணம் மூன்று வேட்பாளர்களில் வெற்றிபெறக்கூடிய வேட்பாளர் சஜித் பிரேமதாச தான் என்பதுதான். அவர்தான் வெற்றிபெறுவார் என்று அவர்கள் நம்பினார்கள். அதனால்தான் தப்புக்கணக்குப் போட்டு விட்டார்கள். தோல்வியடையும் வேட்பாளருடன் ஒப்பந்தம் செய்வதில் எந்தப் பயனும் இல்லை. வெற்றியடையும் ஜனாதிபதியுடன்தான் நாங்கள் பேரம் பேசலாம். இப்போது அநுர குமார திசாநாயக்க வெற்றிபெற்றிருக்கின்றார். ஆனாலும் அவருக்கான நிலையான அரசாங்கமொன்று இன்னமும் ஏற்படுத்தப்படவில்லை. பாராளுமன்ற தேர்தலுக்குப் பிறகுதான் அவ்வாறன முயற்சிகள் சாத்தியமாகும்.

***'பொது வேட்பாளர்' என்பவரை ஜனாதிபதித் தேரதலில் நிறுத்துவதற்கு மேற்கொள்ளபட்ட முயற்சி ஜனாதிபதித் தேர்தலுடன் நின்றுவிடுமா?***

***உங்களை தேர்தலில் நிறுத்திய கட்சிகள் சிவில் அமைப்புகளின் அடுத்த கட்ட நகர்வு என்னவாக இருக்கும்?***

'பொது வேட்பாளர்' என்பது ஜனாதிபதித் தேர்தலுக்காக எடுக்கப்பட்ட முயற்சிதான். அடுத்த கட்டம் பாராளுமன்றத் தேர்தல். 7 கட்சிகள் இணைந்துதான் பொது வேட்பாளரைக் கொண்டு வந்தன. ஆனால் பாராளுமன்றத் தேர்தலில் அந்த 7 கட்சிகளும் தாங்கள் தங்களுக்கான பிரதிநிதித்துவத்தைப் பெறவேண்டும் என்றுதானே செயற்படும்?

தற்போதுள்ள பிரதிநிதித்துவத்தைச் சிதறவிடாமல் ஒரே சின்னத்தில் கேட்ட வேண்டும் என்றுதான் நானும் வலியுறுத்தினேன். ஆனால் அது எத்தனை பேருக்கு உவப்பாக இருக்கும்? ஆனால் பாராளுமன்றத் தேர்தலில் பிரிந்து போட்டியிட்டாலும் கொள்கை ரீதியான விடயங்களில் அவர்கள் எல்லோரும் ஒன்றிணைவார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. பிரிந்து தேர்தலில் போட்டியிட்டாலும் வெற்றிபெறும் பாராளுமன்ற உறுப்பினர்களை ஒன்றிணைந்து ஒரு கொள்கைக்காகச் செயற்படலாம் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

தமிழ் தேசிய கட்சிகளில் வெற்றிபெறுபவர்களை ஒன்றிணைத்து செயற்படலாம். இப்போது ஒன்றிணையும்போது வேட்பாளர் பட்டியல் தயாரிப்பில் கூட பிரச்சினைகள் ஏற்படலாம் . ஆனால் தற்போது பொதுக் கட்டமைப்பில் இணைந்திருக்கும் கட்சிகள் பொதுத் தேர்தலிலும் இணைந்தே போட்டியிடுவதாகவே நான் அறிகின்றேன்.

ஆனால் தமிழரசுக் கட்சியினர் தம்முடன் ஏனையவர்கள் இணையவேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருக்கின்றனர். எனவே அதில் ஒரு இழுபறியிருக்கின்றது. எப்படியானாலும் வெல்லும் தமிழ் வேட்பாளர்களை ஒன்றிணைத்துச் செயற்படலாம் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

***அவ்வாறு தேர்தல்களின் போட்டியிடும் போது அரசுக்கு அல்லது தெற்கின் ஏதாவது ஒரு கட்சிக்கு நிபந்தனையுடன் ஆதரவளிப்பதற்கான சாத்தியக்கூறு உள்ளதா?***

இதில் ஒன்று தெளிவுபடுத்தப்பட வேண்டும். நான் பாராளுமன்றத் தேர்தல்களில் போட்டியிடப் போவதில்லை. பாராளுமன்றத் தேர்தல்களில் போட்டியிடுவதில்லை என்று 2020 ஆம் ஆண்டே நான் தீர்மானம் எடுத்து விட்டேன். கடந்த ஏப்ரல் மாதம் அதனை பகிரங்கமாக அறிவித்தும் விட்டேன். பொது வேட்பாளராக வரவேண்டும் என்ற அன்புக் கோரிக்கையை ஏற்று ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டேன்.

அதில் இரண்டு லட்சத்து பதினையாயிரம் வாக்குகளைப் பெற்றதால், பாராளுமன்றத் தேர்தலிலும் நான் போட்டியிடலாம் என்ற பயம் பலருக்கு இருக்கின்றது. நான் இளையவர்களுக்கு வழிவிட்டு அதிலிருந்து எப்போதோ ஒதுங்கி விட்டேன்.

***பொதுத் தேர்தலில் நீங்கள் யாருக்கு உங்கள் ஆதரவை வழங்குவீர்கள்? தமிழரசுக்கட்சிக்கா?***

நான் இப்போதும் தமிழரசுக் கட்சிக்காரன் தான். அதில் மாற்றமில்லை. தமிழ் தேசிய கொள்கை ரீதியில் போட்டியிடுபவர்களுக்கு நான் எனது ஆதரவை வழங்குவேன். தமிழரசுக் கட்சியிலிருந்து எனக்காக வேலை செய்தவர்களுக்கு நான் கட்டாயம் ஆதரவு வழங்குவேன்.



***பொது வேட்பாளருக்காக புலம் பெயர் தமிழர் பலரும் ஆதரவாக பிரசாரம் செய்ததாகக் கூறினீர்கள். எதிர்காலத்தில் அவர்களுடன் இணைந்து தமிழர் பிரதேசங்களிலான அபிவிருத்திகளுக்கு அரசுடன் ஒத்துழைப்பீர்களா?***

புலம் பெயர் நிதியைப் பெறுவதில் ஏற்கனவே இருந்த ஜனாதிபதிகள் தங்கள் ஒத்துழைப்பை வழங்கவில்லையே? ஆனால் தற்போதைய ஜனாதிபதியும் புலம் பெயர் நாடுகளுக்குச் சென்று தனக்கு ஆதரவு திரட்டியவர். எதிர்காலத்தில் அவ்வாறு நிதியுதவி பெற அவர் அனுமதிப்பாராக இருந்தால் இணைந்து. செயற்படலாம். ஆனால் பாராளுமன்ற தேர்தலில் அறுதிப் பெரும்பான்மையை அவர் பெற்றால் நிச்சயம் அதற்கான வாய்ப்புக் கிடைக்கும். அவரும் பொதுக்கட்டமைப்புடன் பேசுவதற்கான சந்தர்ப்பம் அப்போது கிடைக்கும் என்றே நம்புகின்றேன். நிறைவேற்றதிகாரம் இருப்பினும் பாராளுமன்ற பெரும்பான்மையும் அவரது கட்சிக்கு கிடைத்தால் நிச்சயம் எதிர்பார்க்கலாம்.

***வடக்கு, கிழக்கை இணைப்பதற்கான ஒரு அங்கீகாரத்தையே மக்கள் உங்களுக்கு வாக்களித்ததன் மூலம் உணர்த்தியிருக்கின்றார்கள் என்று குறிப்பிட்டீர்கள். ஆனால் பொதுவாகவே கிழக்கு மக்கள் வடக்கு மக்களுடன் இணைவதை விரும்பவில்லை. என்ற கருத்தொன்று நிலவுகின்றதே?***

என்னை பொது வேட்பாளராக நியமித்தபோது பல விமர்சனங்கள் இது குறித்து எழுந்தன. பொது வேட்பாளர் என்பது ஒரு முட்டாள்தனமான முடிவு , எனவே அவர் தோற்கடிக்கப்பட வேண்டும். என்று எனது கட்சியிலுள்ள சிலரே கங்கணம் கட்டிக்கொண்டு நின்றார்கள். சுமந்திரனின் பருத்தித்துறைத் தொகுதியிலேயே நான் அவரைத் தோற்கடித்திருக்கிறேன். அதாவது அவர் ஆதரித்த வேட்பாளரான சஜித்தைத் தோற்கடித்தேன்.

வடக்கு மக்களுடன் கிழக்கு மக்களும் இணைந்து வாழ விரும்பவில்லை என்பது மிகவும் பிழையான கூற்று. 2004ஆம் ஆண்டு முதல்தான் இவ்வாறான பொய்கள் கூர்மையடைகின்றன. சில தமிழ் அரசியல் கட்சிகள் தாம் பிழைப்பு நடத்துவதற்காக பிரதேசவாதத்தை கட்ட விழ்த்து விட்டிருக்கின்றன. வடக்கான், கிழக்கான் என்ற குரோத மனோநிலை அவர்களால்தான் உருவானது. என்னை வேட்பாளராக நிறுத்தியதன் பின்னர் கிழக்கில் இருந்து வந்த கருத்துக்களை சமூக வலைத்தளங்களில் பார்த்திருப்பீர்கள். வடக்கு மக்கள் எனக்கு வாக்களிக்க மாட்டார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் கிழக்கு மக்களைப் புறக்கணிப்பார்கள். என்றெல்லாம் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால் வடக்கு மக்கள் அந்தக் கருத்துக்கள் பொய் என்பதை நிரூபித்துள்ளனர்.

கிழக்கிலும் பார்க்க எனக்கு வடக்கு மக்கள் தான் அதிகளவில் வாக்களித்திருக்கின்றார்கள். எனவே அதுவொரு பெரியவெற்றியல்லவா?

***பொது வேட்பாளரை நியமித்ததன் மூலம் இனவாதம் தூண்டப்படுவதாகக் கூடச் சொல்லப்பட்டதே?***

பொதுவாகச் சொல்லப்படும் குற்றச்சாட்டு பொது வேட்பாளரை நிறுத்தியதன் மூலம் இனவாதம் தூண்டப்படுகின்றது என்பதுதான்.

ஏற்கனவே இருந்த சில ஜனாதிபதிகளும், ஆட்சியாள ர்களும் தான் இனவாதத்தைத் தூண்டினார்கள். தற்போது இனவாதத்துக்கு சிங்கள மக்கள் முற்றுப்புள்ளி வைத்திருக்கிறார்கள். அரகலய போராட்டம் மூலம் இனவாதத்தை சிங்கள மக்கள் தூக்கியெறிந்திருக்கிறார்கள். இந்த தேர்தலில் இனவாதமோ வன்முறையோ இல்லை.

**வாசுகி சிவகுமார் ...✍**

# முஸ்லிம் அரசியலின் அடுத்த கட்ட நகர்வு: இனி எந்தத் திசைவழியை நோக்கி...?

*19 ஆம் நூற்றாண்டின் பிற்கூறில், சட்ட நிரூபண சபையில் தனியான முஸ்லிம் பிரதிநித்துவம் தேவை என்ற கோரிக்கை வலுவடைந்தது.*

*இதன் விளைவாக, 1889 இல் எம். சி.அப்துர் ரஹ்மான் பிரிட்டிஷாரால் சட்ட நிரூபண சபை அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.*

*நவீன கால முஸ்லிம் அரசியலின் தொடக்கப் புள்ளியாக ஆய்வாளர்கள் இதைக் குறிப்பிடுவர். பின்னர் இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில், எண்ணிக்கைப் பெரும்பான்மை எண்ணிக்கைச் சிறுபான்மை என்ற விவகாரம் கூர்மை பெற்றது.*

*அப்போது, 'நாட்டின் சுதந்திரம் தான் முதன்மையானது. அதற்காக எமது விடயங்களை விட்டுக்கொடுக்கவும் தயாராக உள்ளோம்' என்று, அப்போதைய முஸ்லிம் தலைவரான ரீ.பி.ஜாயா பேசினார்.*

*சுதந்திர இலங்கையில் தேசிய அரசியல் கட்சிகளில் இணைந்து, முஸ்லிம் தலைவர்கள் பயணித்தனர்.*

*இதன்போது சமூகத்துக்குப் பயனளிக்கும் பல்வேறு விடயங்கள் சுமுகமாக நடந்தேறின. இந்தக் காலகட்ட அடைவுகளுக்கு ஒரு நீண்ட பட்டியலே போடலாம்.*

*அதன் பின்னர், 1980 களின் பிற்கூறில் கூர்மை பெற்ற சிவில் யுத்தம் புதிய சமூகஅரசியல் சூழமைவை (New SocioPolitical Context) உருவாக்கியது.*

*போரினால் முஸ்லிம் சமூகமும் பாதிப்படையத் தொடங்கியது. படுகொலைகள், கப்பம் கோரல், ஆட்கடத்தல்கள், விவசாய நிலங்களைக் கைவிட வேண்டி வந்தமை... என்று பல இருப்பு சார்ந்த நெருக்கடிகள் உருவாகத் தொடங்கின.*

*இந்த சவால்கள், அச்சுறுத்தல்கள் குறித்து பிரதான கட்சிகள் போதிய கவனம் செலுத்தவில்லை. அவற்றில் அங்கம் வகித்த முஸ்லிம் உறுப்பினர்கள் கூட, தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களின் அபிலாசைகளை வெளிப்படுத்தத் தவறினர். இது முற்றிலும் வெறுமையான, கைவிடப்பட்ட சூழலொன்றை உருவாக்கியது.*

*இந்த வெற்றிடமே தனியான முஸ்லிம் அரசியல் கட்சியொன்றின் தேவையை வலுவாக உணரச் செய்தது.*

*அதன் பின்னரே முஸ்லிம் இனமையக் கட்சி உருவானது. தனியான முஸ்லிம் கட்சியின் வருகை பல்வேறு சாதக, பாதகங்களை ஏற்படுத்தியது. இப்போது அது தனி வரலாறாகியுள்ளது.*

*முஸ்லிம் அரசியல் கட்சி ஒருமையில் தொடங்கி, இன்று காங்கிரஸ்கள் கிளைக் காங்கிரஸ்கள் என்று பன்மையாகியுள்ளன.*

*ஆனால், கட்சிகள் பெருகிய அளவுக்கு, மக்களது அரசியல் அபிலாசைகள் முறைப்படுத்தப்பட்டதாகவோ கூர்மைப்படுத்தப்பட்டுள்ளதாகவோ தெரியவில்லை.*

*பேரம் பேசுதல் என்ற பெயரில், சந்தர்ப்பவாத அரசியலே தொடர்கிறது. உரிமைக் கோரிக்கைகள் தளர்ந்து போய், அபிவிருத்தி அரசியல் என்னும் பெயரில் கொள்கைகளை நீர்த்துப் போகச் செய்தனர்.*

*இந்த அடிப்படை மாற்றத்தால் முஸ்லிம் அரசியல் மலினப்படுத்தப்பட்டு விட்டது. அதன் தர்க்க விளைவு, சூதாட்ட அரசியலாக மாறிவிட்டிருப்பதாய் கடும் விமர்சனங்கள் எழுந்தன.*

*தலைமைகள் என்ற பெயரில் சில தனிநபர்களது சுயநல நோக்கங்களுள் புதைந்து போயிருக்கும் முஸ்லிம் அரசியலை மீட்டெடுக்க வேண்டிய காலத்தின் கட்டாயத்தில் இருக்கிறோம் என பரவலாகப் பேசப்படுகிறது.*

*திரும்பத் திரும்ப பசப்பு வார்த்தைகள் பேசும் மாமூல் அரசியலாக அது குறுகிப் போயுள்ளது. முஸ்லிம் அரசியல் இன்று ஒரு முட்டுச் சந்தில் (Deadlock)*

*வந்து இறுகியிருக்கிறது.*

*முன்னே நகரும் பாதை பற்றிய தெளிவின்மையைத்தான் அதன் தலைவர்கள் அடிக்கடி பிரதிபலிக்கின்றனர். சரியாகச் சொன்னால், முஸ்லிம் அரசியல் அதன் தொலைநோக்கை தூர தரிசனத்தை (Vision) இழந்து கையறு நிலையில் நிற்கிறது.*

*தொடங்கிய காலத்தின் நோக்கங்களிலிருந்து அது பெரிதும் தடம்புரண்டு, திசைமாறித் தடுமாறி நிற்கிறது.இப்போது நாட்டில் ஏற்பட்டுள்ள யுகப் புரட்சியோடு தளமாற்றத்தோடு (Paradigm Shift), முஸ்லிம் அரசியல் தன்னைத் தகவமைத்துக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கைகளும் அபிலாசைகளும் பரவலான வாதவிவாதங்களாக வெளிவந்த வண்ணம் உள்ளன.*





*இதன் காரணமாக, முஸ்லிம் அரசியல் இன்று ஒரு புதிய திசைவழியை நோக்கித் திரும்பியிருக்கிறது.*

*முஸ்லிம் அரசியலுக்குள்ளும் ஒரு அமைதி வழியான ஜனநாயகபூர்வமானை 'அரகலய' (போராட்டம்) நிகழ வேண்டும் என்று பலரும் வெளிப்படையாகப் பேசி வருகின்றனர்; எழுதவும் செய்கின்றனர். இது மாற்றத்தின் தேவையை வலியுறுத்துகிறது.*

*தகுதியற்றவர்களின் கைகளில் அகப்பட்டிருக்கும் முஸ்லிம் அரசியலை மீட்டு, ஒரு முறைமை மாற்றத்தின் (System Change) பால் வழிநடத்த வேண்டும் திசைப்படுத்த வேண்டும் என்ற குரல்கள் சமூகத் தளத்திலிருந்து வலுவாக மேற்கிளம்பி வருகின்றன. 76 வருடங்களாக இந்நாட்டை மாறி மாறி ஆண்ட சக்திகளின் கையிலிருந்து நாடு மீட்கப்பட்டிருக்கிறது. முற்றிலும் புதிய திசைவழியில், ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க நாட்டை வழிநடத்திச் செல்கிறார்.*

*இதில் நாமும் பங்காளிகளாக மாற வேண்டும். நாட்டைக் கட்டியெழுப்பும் பணி நமது தோள்களிலும் உள்ளது. நாம் பார்வையாளராக ஒதுங்கியிருக்க முடியாது. பங்காளர்களாக மாற வேண்டும்.*

*ஆதலால், புத்துணர்ச்சியும் புதுப்பொலிவும் பெற்றுள்ள தேசிய அரசியல் நீரோட்டத்தில் கலக்க வேண்டும் என்ற வலுவான குரல்கள் ஒலிக்கத் தொடங்கியுள்ளன.*

*கட்சிகள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், முஸ்லிம் அரசியல் புதிய திசைவழியில் நகரத் தொடங்கி விட்டது. முஸ்லிம் அரசியல் கட்சிகள் சொல்லும் பாதையை விட, சுயாதீனமான அரசியல் தெரிவை நோக்கி, முஸ்லிம் இளைஞர்களும் புத்திஜீவிகளும் தொழில்வாண்மையாளர்களும் கருத்துருவாக்கத் தலைவர்களும் நகரத் தொடங்கி விட்டனர்.*

*இதில் கணிசமானவர்கள் பெண்களும் யுவதியரும் என்பது குறிப்பிடத்தக்கது.*

*இந்த மாற்றத்தின் வீச்சு, வெவ்வேறு தலைமுறையினரிடையே வெவ்வேறு பரிமாணங்களில் விரவிப் பரவியுள்ளது.*

*குறிப்பாக, இளம் தலைமுறையினர் இதில் மிக முன்னணியில் நின்று இயங்குகின்றனர்.*

*மரபார்ந்த அரசியல் போக்கிலிருந்து மாறுபட்டு, இனமைய அரசியல் (Ethnocentric Politics) போக்கிலிருது விலகிச் செல்லும் அடையாளங்களையும் மாற்றத்தின் சமிக்ஞைகளையும் முஸ்லிம் அரசியல் வெளிக்காட்டத் தொடங்கி விட்டது.*

*2015 ஜனாதிபதித் தேர்தலில், குடும்ப ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவருவதும் ஜனநாயக மீட்பும் அதிகார துஷ்பிரயோகத்தைக் கட்டுப்படுத்துவதும் ஊழல் ஒழிப்புமே பிரதான பேசுபொருள்களாக இருந்தன.*

*அப்போது மக்கள் முஸ்லிம் அரசியல் கட்சிகளின் முடிவுகளுக்காகக் காத்திருக்கவில்லை. முஸ்லிம் மக்கள் தீர்மானித்த பின்னரே வேறு வழியில்லாமல் முஸ்லிம் அரசியல் கட்சிகளும் அதே தீர்மானத்தை எடுக்க வேண்டிய நிர்ப்பந்த நிலைக்கு அப்போது ஆளாகின.*

*ஏறத்தாழ இப்போதும் அப்படித்தான். 2024 ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் அரசியலின் புதிய பண்பு மாற்றத்தை உய்த்தறிய முடிகிறது.*

*2015 போலவே 2024 இலும் கணிசமான முஸ்லிம் வாக்காளர்கள் முஸ்லிம் கட்சிகளின் தீர்மானத்திற்காகக் காத்திருக்கவில்லை.*

*கணிசமான முஸ்லிம் வாக்காளர்கள் புதிய ஜனாதிபதியையும் தேசிய மக்கள் சக்தியையும் தீவிரமாக ஆதரித்தனர்.*

*முஸ்லிம் அரசியல் நெறி பிறழ்ந்து வழி தவறிச் செல்கின்றன என்ற கடுமையான விமர்சனங்கள் எழுந்தன. முஸ்லிம் அரசியல் கட்சிகள் இனவாதம் பேசுவதாக கடுமையான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.*

*இந்தத் தடுமாற்றத்தை, முஸ்லிம் அரசியல் தலைமைகள் மிக வெட்ட வெளிச்சமாகப் புலப்படுத்தின.*

*ஆதலால், தேசிய அரசியல் மாற்றத்திற்கு சமாந்தரமான மாற்றம் ஒன்று தேவை என்ற குரல்கள், முஸ்லிம் அரசியல் அரங்கிலும் வெகுஜனத் தளத்திலும் தாக்கம் மிக்க வகையில் வெளிப்பட்டு வருகிறது.*

*முஸ்லிம் அரசியல் முற்றாக அழியவில்லை என்பது உண்மைதான். ஆனால், அது வீழ்ச்சிப் பாதையில் செல்கிறது என்பது அதைவிடப் பெரிய உண்மை.*

*அந்தந்த சமூகங்களின் தனித்துவங்களுக்கு மதிப்பளித்து, எல்லா இலங்கையரும் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும் என்ற எண்ணம் வலுப்பட்டு வருகிறது.*

*ஆழமான இனப் பிளவுகளாலும் துருவமயப்பட்டுள்ள தன்மையாலும் (Polorization), நலிவடைந்திருக்கும் இலங்கையை மீளக் கட்டியெழுப்ப வேண்டும்.*

*ஊழல் மோசடியைக் கட்டுப்படுத்தி, பொருளாதார மீட்சியை மீள நிலைநிறுத்துவது மட்டுமல்ல, பன்மைத்துவமும் இன நல்லுறவும் மிகமிக அவசியம் என நாட்டு மக்கள் உணரத் தலைப்பட்டு விட்டனர்.*

*அதனால்தான் இந்தத் தேர்தலில் இனவாதக் குரல்கள் ஓங்கி ஒலிக்கவில்லை. கொஞ்சம் தளர்ந்திருந்தன.*

*முஸ்லிம் அரசியலும் பல்லின பல் சமூக நல்லிணக்கப் பாதையில், சுயகௌரவத்தோடும்சமத்துவத்தோடும் ஜனநாயகப் பண்புகளோடும் நகரவே விரும்புகிறது.*

*அதுவே இப்போதுள்ள வரவேற்கத்தக்க மாற்றமாகும்.*

*'தனித்துவமும் ஒன்றிணைந்த தேச நலனும்' என்ற இணைப்பு, முஸ்லிம் அரசியலை மேலும் மெருகேற்றி வருகிறது.*

*மாற்றம் ஒன்றே மாறாதது. இந்த மாற்றத்தை ஜனாதிபதித் தேர்தலை விட, பொதுத் தேர்தல் இன்னும் சிறப்பாகவும் துல்லியமாகவும் அடையாளம் காட்டும் என்று துணிந்து எதிர்வு கூறலாம்.*

*முஸ்லிம் அரசியலின் புதிய மாற்றம் நாட்டின் எதிர்காலத்திற்கு நன்மை பயக்கும் என்று நம்பலாம்.*

***சிராஜ் மஷ்ஹூர்...✍***



# ஐ.தே.கவையும் ஐ.ம.சக்தியையும் ஒன்றிணைக்க தீவிர முயற்சிகள்!

**ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு அரசியலமைப்பின் ஊடாக வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத்தேர்தலுக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.**



## தேசிய மக்கள் சக்தியின் அலை தற்போது பலமாக வீசுவதால், ரணில்–சஜித் தரப்புகளை ஓரணியில் கொண்டுவந்து பொதுத்தேர்தலை எதிர்கொள்ள திரைமறைவில் பிரயத்தனங்கள்!

ஜனாதிபதியின் அறிவித்தலுக்கு அமைய 9 ஆவது பாராளுமன்றம் கடந்த 24ஆம் திகதி நள்ளிரவுடன் கலைக்கப்பட்டு, 10 ஆவது பாராளுமன்றத்துக்கான தேர்தல் எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி நடைபெற்று, நவம்பர் 21ஆம் திகதி புதிய பாராளுமன்றம் கூடவுள்ளது.

ஒக்டோபர் 04ஆம் திகதி முதல் ஒக்டோபர் 11ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படவுள்ளன. ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றால் உடனடியாகப் பாராளுமன்றம் கலைக்கப்படும் என அநுர குமார திசாநாயக்க ஜனாதிபதித் தேர்தல் பிரசார மேடைகளில் கூறிவந்தார்.

அவர் கூறியதைப் போன்று ஜனாதிபதியாகப் பதவியேற்றவுடனேயே பாராளுமன்றத்தைக் கலைக்கும் அறிவிப்பை வெளியிட்டார். இதற்கு முன்னராக காபந்து அரசாங்கத்தை அமைக்கும் நோக்கில் தமது பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்த கலாநிதி ஹரிணி அமரசூரிய மற்றும் விஜித ஹேரத் ஆகியோரையும் உள்ளடக்கியதான மிகவும் சிறியதொரு அமைச்சரவையை நியமித்தார். அமைச்சரவை நியமனம் இடம்பெற்ற கடந்த 24ஆம் திகதி நள்ளிரவே பாராளுமன்றமும் கலைக்கப்பட்டு விட்டது.

இலங்கையின் அரசியல் வரலாற்றை எடுத்துப் பார்க்கும்போது, ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்ததும் சூட்டோடு சூடாகப் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத்தேர்தல் நடத்தப்பட்ட சந்தர்ப்பங்களைக் காணமுடியும்.

இவ்வாறு நடத்தப்பட்ட தேர்தல்களில் ஜனாதிபதியாக வெற்றிபெற்ற தரப்புக்குப் பாராளுமன்றத்தில் அதிக ஆசனங்கள் கிடைத்திருப்பது வரலாறு. இதற்கு சிறந்த உதாரணமாக கடந்த முறை நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ வெற்றி பெற்ற பின்னர் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு நடந்த பொதுத்தேர்தலில் பொதுஜன பெரமுனவுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்தது.

இதற்கு முன்னரான தேர்தல்களிலும் இவ்வாறான பெரும்பான்மைகள் பெறப்பட்டுள்ளன. இதனை அடிப்படையாகக் கொண்டு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவும் தனது கொள்கைகளை நிறைவேற்றுவதற்குப் பலமான பாராளுமன்றமொன்றைக் கோரி தேர்தலுக்கான அழைப்பை விடுத்துள்ளார்.

'சிஷ்டம் சேஞ்ச்' என்ற முறைமை மாற்றமொன்றை எதிர்பார்த்து வாக்களித்திருந்த நாட்டு மக்களுக்கு மற்றுமொரு ஜனநாயக சந்தர்ப்பம் மீண்டும் ஏற்பட்டுள்ளது.

**ரணிலின் அறிவிப்பும் எதிர்க்கட்சிகளின் குழப்பமும்:**

'பாராளுமன்றத்தில் உள்ள 225 பேரும் தேவையில்லை' என்ற கோஷங்கள் முன்வைக்கப்பட்டிருந்த நிலையில் தமக்குப் பொருத்தமான, நேர்மையான மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான வாய்ப்பு தற்பொழுது மக்களுக்குக் கிடைத்துள்ளது.

தற்போது கிடைத்துள்ள இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி மக்களுக்காக பணிசெய்யக் கூடிய பிரதிநிதிகளை வாக்காளர்கள் தெரிவுசெய்ய வேண்டியது மக்களின் கடமை ஆகும். வாக்காளர்களுக்கு ஜனநாயக ரீதியான தெரிவுக்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ள நிலையில், தேர்தலுக்குத் தயாராக மிகவும் குறுகிய காலமே அரசியல் கட்சிகளுக்குக் கிடைத்துள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியின் காரணமாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவான தரப்பிலும், சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவான தரப்பிலும் குழப்பம் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளிவருகின்றன. ஜனாதிபதித் தேர்தலில் 'அநுர அலை' அதிகரிக்கத் தொடங்கிய போதே சஜித் ரணில் ஒன்றிணைய வேண்டும் என்ற கோஷம் வலுத்திருந்தது. பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள இன்றைய நிலையில் இந்த விடயம் மேலும் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போட்டியிடப் போவதில்லையென்றும், தேசியப் பட்டியல் ஊடாகப் பாராளுமன்றம் நுழையப் போவதில்லையென்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவர் ருவன் விஜயவர்தன அறிவித்துள்ளார்.

அது மாத்திரமன்றி, ஐக்கிய மக்கள் சக்தியையும் ஐ.தே.கவையும் இணைப்பதற்கான முயற்சிகளை எடுக்கப் போவதாகவும் அவர் கூறியிருந்தார். இரு தரப்பையும் இணைக்கும் பொறுப்பு அவருக்கே கட்சியினால் வழங்கப்பட்டுள்ளது. இருந்தபோதும் ஐ.தே.கவுடன் இணைந்து கொள்ளும் நிலைப்பாட்டை இன்னமும் சஜித் எடுத்திருப்பதாகத் தெரியவில்லையென்றே அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறுகின்றன.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் கூடிய ஐக்கிய மக்கள் கூட்டணியின் கூட்டத்தில் பிரதமர் வேட்பாளராக சஜித்தைக் களமிறக்குவதென்றும், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட கூட்டணியிலேயே தொடர்ந்தும் பொதுத்தேர்தலை எதிர்கொள்வதென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் போட்டியிடவில்லையென்றால், அதன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து எந்தப் பயனும் இல்லை என சஜித் பிரேமதாச பகிரங்கமாக ஊடகங்களுக்குக் கூறியிருந்தார்.

இருந்தபோதும், ஐ.தே.கவையும் ஐக்கிய மக்கள் சக்தியையும் ஒன்றிணைத்து தேர்தலை எதிர்கொள்ளச் செய்ய வேண்டும் என்பதில் இருதரப்பிலுமுள்ள சிலர் முயற்சிக்கின்றனர். இருதரப்பையும் இணங்கச் செய்வதற்கு வர்த்தகப் பிரமுகர்கள் சிலரும் களமிறங்கியிருப்பதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக ஐ.தே.கவின் உபதலைவர் ருவன் விஜயவர்த்தன மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர் லக்ஷ்மன் பொன்சேகா ஆகியோரிடம் இதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பொறுப்பு சஜித்துக்கு வழங்கப்பட்டால் இருதரப்பும் இணைந்து செயற்படுவதில் அர்த்தமிருக்கும். இல்லாவிட்டால் இணைவதில் பலனில்லையென தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். இரு கட்சிகளும் இணைந்து கொள்வது குறித்துக் கவனம் செலுத்தியுள்ள நிலையில், ரணில் விக்கிரமசிங்கவை நம்பி அவருக்கு ஆதரவு வழங்கி வருகின்ற பொதுஜன பெரமுனவின் முன்னாள் முக்கியஸ்தர்கள் நெருக்கடியில் உள்ளனர். அவர்கள் பொதுஜன பெரமுனவிலிருந்து வெளியேறி புதிதாக கூட்டணி அமைத்துக்கொண்ட தரப்பினர் ஆவர்.

> **பொதுஜன பெரமுனவிலிருந்து வெளியேறி ரணிலுடன் இணைந்தவர்களின் அரசியல் எதிர்காலம் கேள்விக்குறி!**

குறிப்பாக பொதுஜன பெரமுனவிலிருந்து வெளியேறி ரணிலுடன் இணைந்து கொண்டவர்கள் தினேஷ் குணவர்தன தலைமையில் 'பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணி' என்ற புதிய கூட்டணியை உருவாக்கியிருந்தனர். ஐ.தே.க தற்பொழுது ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து கொண்டால் இவர்களின் நிலைமை கேள்விக்குறியாகியுள்ளது.

கடந்த பொதுத்தேர்தலில் 'மஹிந்த ராஜபக்ஷ' என்ற அரசியல் பிம்பத்தை முன்னிலைப்படுத்தி பாராளுமன்றத்துக்குத் தெரிவான இவர்கள், ரணில் விக்கிரமசிங்கவை நம்பி நடுத்தெருவுக்கு வரும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இருந்தபோதும், பொதுத்தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது என்பது தொடர்பில் அவர்கள் ரணிலுடன் பேச்சுக்களில் ஈடுபட்டு வருகின்றனர். அதேபோல, ஐக்கிய மக்கள் கூட்டணியில் உள்ள ஏனைய கட்சிகளின் தலைவர்கள் எவ்வாறான முடிவுகளை எடுப்பது என்பதில் குழம்பிப் போயிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மறுபக்கத்தில், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் படுதோல்வியைச் சந்தித்த மஹிந்த தலைமையிலான பொதுஜன பெரமுன இம்முறை தனித்து பொதுத் தேர்தலை எதிர்கொள்ளப் போவதாகக் கூறியுள்ளது.

மோசடிக்காரர்கள், திருடர்கள் எனப் பெயரெடுத்த எவருக்கும் இம்முறை தாம் வேட்புமனுக்களை வழங்கப் போவதில்லையென அக்கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் கூறியுள்ளார். நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் நாமல் ராஜபக்ஷ 3 வீதத்திற்கும் குறைவான வாக்குகளையே பெற்றிருந்தார். இந்த நிலையில் பொதுத்தேர்தல் அவர்களுக்கு எந்தளவு வெற்றியளிக்கும் என்பது கேள்விக்குறியே ஆகும்.

**நம்பிக்கையுடன் தேசிய மக்கள் சக்தி:**

எதிர்க்கட்சிகளின் குழப்பம் இவ்வாறானதாக இருக்கையில் அநுர குமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தி பொதுத்தேர்தல் குறித்து நம்பிக்கையுடன் உள்ளது. ஏனைய கட்சிகளைப் போன்று தமது கட்சி உறுப்பினர்கள் மத்தியில் விருப்பு வாக்குகளுக்கான மோதல்கள் இல்லையென்பதால் வேட்புமனுக்கள் குறித்து தமது கட்சிக்கு எந்தப் பிரச்சினையும் இல்லையென தேசிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் வைத்திய கலாநிதி நிஹால் அபேசிங்க தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தி என்பது நீண்டகால அரசியல் அனுபவம் உள்ள ஜே.வி.பி மற்றும் பல்வேறு துறைசார் நிபுணர்கள் சிவில் அமைப்புக்கள் எனப் பல்தரப்பினரையும் உள்ளடக்கிய பரந்த சமூகமொன்றின் ஒன்றிணைவே ஆகும்.

பல்வேறு துறைகளைச் சார்ந்த நிபுணர்கள் இதில் அங்கம் வகிப்பதால் மக்கள் எதிர்பார்க்கும் அறிவார்ந்த சமூகத்தைப் பாராளுமன்றத்திற்கு அனுப்புவதற்கான தெரிவுகள் பல அவர்களிடம் உள்ளன. எனவே, ஜனாதிபதி அநுர குமார மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை நிறைவேற்றுவதற்கு பலமான பாராளுமன்றத்தின் அவசியத்தை உணர்ந்து மக்கள் அதற்கு வாக்களிப்பார்கள் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் ஏற்பட்ட அநுர அலை பொதுத்தேர்தலிலும் தாக்கம் செலுத்துவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதால், அக்கட்சி அதிக ஆசனங்களை வெல்வதற்கான வாய்ப்புக்களும் அதிகமாகவே காணப்படுகின்றன. சவாலான நேரத்தில் நாட்டைப் பொறுப்பேற்றுள்ள ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மக்களின் மனங்களை வெல்லும் வகையில் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் பொதுத்தேர்தலில் அவர்களின் கட்சிக்கான ஆதரவை மேலும் அதிகரிக்கும் என்பதே பலரதும் கருத்தாகும்.

அதேபோல, நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தல் பல அரசியல்வாதிகளுக்கு சிறந்த பாடத்தைப் புகட்டுமொரு தேர்தலாக அமையப் போகின்றது. குறிப்பாக ஊழல் குற்றச்சாட்டுக்கள் கொண்ட, அவ்வப்போது கட்சி தாவும் அரசியலை மேற்கொள்ளும் பலர் இத்தேர்தலில் தோற்கடிக்கப்படுவதற்கான வாய்ப்புக்களும் அதிகம். எனவே, எதிர்வரும் நாட்கள் அரசியல் பரபரப்புக்கள் நிறைந்த நாட்களாக அமையப் போகின்றன என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

பி.ஹர்ஷன்...

# லெபனான் மீது தீவிர விமானத் தாக்குதல்கள்!



> **உடனடியாக யுத்தத்தை நிறுத்துமாறு பாப்பரசர் மற்றும் உலகத் தலைவர்கள் வலியுறுத்துகின்ற போதிலும், போர்நிறுத்த அழைப்பை நிராகரித்த இஸ்ரேல்!**

தெற்கு லெபனான் உட்பட லெபனானின் பல பிரதேசங்களில் இஸ்ரேல் கடும் விமானத் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளது. ஹிஸ்புல்லாஹ்வின் நிலைகளை இலக்கு வைத்து தாக்குதல் நடத்துவாக இஸ்ரேல் குறிப்பிடுகின்ற போதிலும், இற்றைவரை 569 இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் 50 சிறுவர்களும், 94 பெண்களும் அடங்கியுள்ளனர். இவர்களில் இருவர் யூ.என். எச்.சிஆர் உத்தியோகத்தர்களாவர். இத்தாக்குதல்களில் 2000 பேர் காயமடைந்துள்ளனர் என்று லெபனானின் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. குறிப்பாக பெய்ரூட்டின் தஹ்யா பிரதேசத்தில் அமைந்துள்ள ஹிஸ்புல்லா தலைமையகத்தின் மீது 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலையில் யுத்த விமானங்கள் மூலம் கடும் தாக்குதலை முன்னெடுத்த இஸ்ரேல், அத்தாக்குதலில் ஹிஸ்புல்லாவின் தலைவர் ஹசன் நஸ்ருல்லா உட்பட சில முக்கியஸ்தர்கள் கொல்லப்பட்டதாக அறிவித்துள்ளது. இத்தாக்குதலில் நஸ்ருல்லாவின் மகள் சைனப் கொல்லப்பட்டுள்ளதை லெபனானிய ஊடகங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

கடந்த திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்ட இத்தாக்குதல்களில் 250 போர் விமானங்கள் ஈடுபட்டுள்ளதோடு, லெபனானின் பல பகுதிகளிலும் 2,000 இற்கும் மேற்பட்ட விமானத் தாக்குதல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

'ஹிஸ்புல்லாஹ்வைப் பலவீனப்படுத்தவும், வடக்கு இஸ்ரேலில் இருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு பாதுகாப்பை உறுதிப்படுத்தவுமே இந்நடவடிக்கையை முன்னெடுப்பதாக இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு குறிப்பிட்டுள்ளார்.

'எங்கள் குடிமக்கள் அனைவரையும் அவர்களது வடக்கு எல்லையிலுள்ள வீடுகளுக்குப் பாதுகாப்பாகக் கொண்டுவரத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுப்போம்' என்று இஸ்ரேலிய இராணுவ பேச்சாளர் தெரிவித்திருக்கிறார்.

இந்நிலையில் லெபனான் இஸ்ரேல் எல்லையில் கடமையாற்றவென 10 ஆயிரம் ரிசர்வ் படையினருக்கு அழைப்பு விடுத்துள்ள இஸ்ரேல், தரைவழி இராணுவ நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான தயார்படுத்தல்களை மேற்கொண்டிருக்கிறது.

இந்தச் சூழலில் யுத்தத்தை உடனடியாக நிறுத்துமாறு உலகளாவிய ரீதியில் வலியுறுத்தப்படுகிறது. பாப்பரசர் முதலாவது பிரான்சிஸ், ஐ.நா. செயலாளர் நாயகம் அந்தோனியோ குட்டரெஸ், பிரான்ஸ் உட்பட பல தலைவர்களும் லெபனான் மீதான போரை நிறுத்துமாறு கோரியுள்ளனர். அமெரிக்கா, பிரான்ஸ், கனடா, அவுஸ்திரேலியா, ஜப்பான், சவுதி அரேபியா, கட்டார், ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகள் 21 நாட்கள் யுத்த நிறுத்த முயற்சிகளை விரைவுபடுத்தியுள்ளன. ஆனால் அம்முயற்சிகளுக்கு இஸ்ரேலின் வலது சாரி அரசியல்வாதிகள் சிலர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதோடு, வெளிவிவகார அமைச்சர் கட்ஸ் அந்த யோசனையை நிராகரித்துள்ளார். அதனால் இஸ்ரேலுக்கும் ஹிஸ்புல்லாஹ்வுக்கும் இடையில் முழு அளவிலான போர் வெடிக்கும் உச்சகட்ட பதற்றம் ஏற்பட்டுள்ளது.

காஸா மீதான யுத்தத்தை இஸ்ரேல் கடந்த வருடம் ஒக்டோபர் 07 ஆம் திகதி ஆரம்பித்தது. அந்த யுத்தத்தை நிறுத்தக் கோரி இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லாஹ் தாக்குதல்களைத் தொடங்கியது. ரொக்கட், ட்ரோன், ஏவுகணை போன்ற ஆயுதங்களைக் கொண்டு எல்லை தாண்டிய தாக்குதல்களை ஹிஸ்புல்லாஹ் மேற்கொள்கையில் இஸ்ரேலும் ட்ரோன், ஏவுகணை மற்றும் யுத்த விமானங்கள் மூலமான தாக்குதல்களை முன்னெடுத்து வருகிறது. இரு தரப்பினரும் எல்லை தாண்டிய தாக்குதல்களில் தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக இஸ்ரேலின் இராணுவ கட்டமைப்புகளையும் தொடர்பாடல் மற்றும் உளவு பிரிவுகளையும் விமானப்படை தளங்களையும் இலக்கு வைத்து தாக்குதல்களை மேற்கொள்கிறது ஹிஸ்புல்லாஹ்.

இவ்வாறான சூழலில் கடந்த சில மாதங்களாக ஹிஸ்புல்லாஹ்வின் முக்கியஸ்தர்களைத் துல்லிய தாக்குதல்கள் மூலம் படுகொலை செய்யும் நடவடிக்கையை இஸ்ரேல் ஆரம்பித்தது. இத்தகைய துல்லிய தாக்குதல்கள் நாளுக்கு நாளோ அல்லது இரண்டு நாட்களுக்கு ஒரு தடவையோ என்றபடி முன்னெடுக்கப்படுகிறது. இத்தாக்குதல்களின் விளைவாக ஹிஸ்புல்லாஹ் முக்கிய தளபதிகளை இழப்பது அந்த அமைப்புக்கு பெரும் ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. அதனால் ஹிஸ்புல்லாஹ்வின் தலைவர் ஹஸன் நஸ்ருல்லாஹ் தம் உறுப்பினர்களை அன்ரொய்ட் கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்த வேண்டாம் என்று அறிவுறுத்தினார்.



ஹிஸ்புல்லா தலைவர் விமானத் தாக்குதலில் படுகொலை

ஹிஸ்புல்லாஹ்வின் மூத்த உறுப்பினர் புவாரட் சுகூர் கடந்த ஜுலை 31 ஆம் திகதியன்று பெய்ரூட்டில் படுகொலை செய்யப்பட்டார். அதேதினம் ஹமாஸ் அரசியல் பிரிவுத் தலைவர் இஸ்மாயீல் ஹனியா ஈரானின் தலைநகர் தெஹ்ரானில் கொல்லப்படட்டார்.

இதன் விளைவாக மத்திய கிழக்கில் உச்சகட்டப் போர்ப்பதற்றம் உருவானது. அமெரிக்கா யுத்த கப்பல்களையும் விமானந்தாங்கிக் கப்பல்களையும் நீர்மூழ்கிக் கப்பலையும் மத்திய கிழக்கு பிராந்தியத்திற்கு நகர்த்தியது. ஈரானும் ஹிஸ்புல்லாஹ்வும் இஸ்ரேல் பழிவாங்கப்படும் என்றன. ஆனால் பாரிய தாக்குதல்களை உடனடியாக முன்னெடுக்காத ஹிஸ்புல்லாஹ் எல்லை தாண்டிய தாக்குதல்களைத் தொடர்ந்தது.

இந்நிலையில் கடந்த ஓகஸ்ட் 25 ஆம் திகதி ஹிஸ்புல்லாஹ் இஸ்ரேலின் டெல் அவிவ், மெரோன் தளம், ஆக்கிரமிக்கப்பட்ட கோலான் குன்றுகளில் உள்ள நான்கு தளங்கள், க்ளிலோட்டை தளமாகக் கொண்ட உளவுப் பிரிவு உட்பட 11 இராணுவ தளங்கள் மீது 320 கட்டுஷா ரொக்கட்டுகள் மற்றும் ட்ரோன்களை ஏவி பாரிய தாக்குதல்களை ஹிஸ்புல்லாஹ் மேற்கொண்டது.

இந்நிலையில் 48 மணி நேர அவசர நிலையைப் பிரகடனப்படுத்திய இஸ்ரேல் இத்தாக்குதல்களால் எவருக்கும் எத்தகைய பாதிப்பும் ஏற்படவில்லை என அறிவித்ததோடு ஹிஸ்புல்லாஹ் தாக்குதல்களை ஆரம்பிப்பதற்கு முன்னரான அரைமணி நேர காலப் பகுதிக்குள் நூறு யுத்த விமானங்களைப் பயன்படுத்தி, ஹிஸ்புல்லாஹ்வின் நூற்றுக்கணக்கான ரொக்கட் மற்றும் ஏவுகணைத் தளங்களைத் தாக்கியழித்ததாகக் குறிப்பிட்டது.

இந்த சூழலில் ஹிஸ்புல்லாஹ், தகவல் தொடர்பாடலுக்காக அன்ரொய்ட் கையடக்கத் தொலைபேசியில் இருந்து பேஜர் தொழில்நுட்ப பயன்பாட்டுக்கு சென்றது. இத்தொழில்நுட்பத்திற்குள் பிரவேசித்து சில வாரங்கள்தான் கடந்திருக்கும். கடந்த 18 ஆம் திகதி பேஜர்களும், 19 ஆம் திகதி வோக்கிடோக்கிகளும் திடீர்திடீரென வெடித்துச் சிதறி மரணங்களையும் காயங்களையும் ஏற்படுத்தின. இது திட்டமிடப்பட்ட குண்டுத் தாக்குதல் என்று லெபனான் பிரதமர் நஜீப் மிகாடியும் ஹிஸ்புல்லாஹ் தலைவரும் குற்றம் சாட்டினர். பேஜர் வெடிப்பு தாக்குதல் மூலம் 12 பேரும் வோக்கி டோக்கி வெடிப்பு தாக்குதல் மூலம் 25 பேரும் கொல்லப்பட்டனர். அத்தோடு பேஜர் வெடிப்பினால் 2800 பேரும், வோக்கி டோக்கி வெடிப்பினால் 608 பேரும் காயமடைந்தனர் என்று லெபனான் சுகாதார அமைச்சு அறிவித்தது.

இத்தாக்குதலின் ஊடாக ஹிஸ்புல்லாஹ்வின் 500 பேர் பார்வை இழந்துள்ளதோடு, 1500 உறுப்பினர்கள் போராட்டக் களத்தில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர் என்று 'ரொய்ட்டர்' செய்தி வெளியிட்டுள்ளது.

பேஜர் மற்றும் வோக்கிடோக்கி வெடிப்பு தாக்குதல்களால் ஏற்பட்டிருந்த பதற்றம் தணிவதற்குள் கடந்த 20 ஆம் திகதி இப்றாஹீம் அகீல் உட்பட ஹிஸ்புல்லாஹ்வின் 11 உயர்மட்ட முக்கியஸ்தர்கள் துல்லிய தாக்குதல்கள் மூலம் கொல்லப்பட்டனர். இதனை ஹிஸ்புல்லாஹ்வும் உறுதிப்படுத்தியுள்ளது.

இத்தகைய தாக்குதல்களின் ஊடாக தெற்கு லெபனான் மீது பாரிய தாக்குல்களை கடந்த 23 ஆம் திகதி ஆரம்பித்த இஸ்ரேல், எதிர்வரும் 30 ஆம் திகதி வரை அவசரநிலையையும் பிரகடனப்படுத்தியுள்ளது. இப்பிரகடனத்தின் கீழ், இஸ்ரேலிய பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்க இராணுவத்திற்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை தெற்கு லெபனானிலுள்ள சுமார் 80 ஆயிரம் பேரின் கையடக்கத் தொலைபேசிகளுக்கு உடனடியாக வெளியேறுமாறு அறிவுறுத்தும் ஒலிப்பதிவு குறுஞ்செய்தி வந்துள்ளது. இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. லெபனானும் இஸ்ரேலும் வேறு வேறு பகுதிகள். அப்படியிருந்தும் லெபனானியர்களின் கைபேசிகளுக்கு இந்த ஒலிபரப்பு பதிவு எவ்வாறு வந்தது என்பது வியப்பாக உள்ளது. லெபனானியர்களின் கைபேசிகளுக்குள் ஊடுருவி இஸ்ரேல் இதனைச் செய்துள்ளதாக லெபனான் தரப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்த வெளியேற்ற அறிவுறுத்தலால் பெருந்தொகையான தெற்கு லெபனானியர்கள் பெய்ரூட் நோக்கி அவசர அவசரமாக இடம்பெயரத் தொடங்கினர். இதன் விளைவாக பெய்ரூட் நெடுஞ்சாலைகளில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டது. தெற்கு லெபனானில் ஒரு இலட்சம் பேர் ஏற்கனவே இடம்பெயர்ந்துள்ளனர். கடந்த சில தினங்களாக முன்னெடுக்கப்படும் தாக்குதல்களினால் எல்லாமாக சுமார் 5 இலட்சம் பேர் இருப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளனர். இதேவேளை இஸ்ரேலின் இராணுவ கட்டமைப்புகளை இலக்கு வைத்து தாக்குதல்களை முன்னெடுத்துவரும் ஹிஸ்புல்லாஹ், கடந்த புதனன்று டெல்அவிவ்விலுள்ள மொசாட் உளவுப் பிரிவு தலைமையகத்தை இலக்கு வைத்து பிளாஸ்டிக் ஏவுகணைத் தாக்குதலை முதற்தடவையாக முன்னெடுத்துள்ளது.

இவ்வாறான உச்சகட்டப் போர்ப் பதற்றத்துக்கு மத்தியில் பெய்ரூட் சர்வதேச விமான நிலையம் வெறிச்சோடிக் காணப்படுகிறது.

லெபனானிலுள்ள பிரித்தானிய பிரஜைகளை உடனடியாக வெளியேறுமாறு அறிவுறுத்தியுள்ள பிரித்தானியா 700 படையினரை, அவர்களை மீட்பதற்காக சைப்பிரஸுக்கும், அமெரிக்கா யுத்தகப்பல்களை மத்திய தரைக்கடலுக்கும் அனுப்பி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



மர்லின் மரிக்கார்...

**புயல் வீசி ஓய்ந்தது போல 2024ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தல் நடந்து முடிந்துள்ளது. வன்முறை சம்பவங்கள் இல்லாத போதிலும், தேர்தல் காலத்தில் நிலவிய பரபரப்பு மிகவும் அதிகம்.**



# அமைதிப் புரட்சியொன்றினால் ஆட்சியை உருவாக்கிய மக்கள்!

வார இறுதி
## அரசியல் குறிப்பேடு
சம்யுக்தன்

### நாட்டு மக்களின் நீண்ட கால ஏக்கங்களின் வெளிப்பாடாக அமைந்துள்ள ஆட்சி மாற்றம்!

தற்போது அரசியல் பரபரப்பு ஓரளவு அடங்கியுள்ள நிலையில், மற்றுமொரு விறுவிறுப்பான தேர்தல் களத்துக்கு நாடு தயாராகி வருகின்றது. இலங்கையின் தேர்தல் வரலாற்றில் 75 ஆவது தேர்தல் முடிவடைந்து 76 ஆவது தேர்தலுக்கு நாடு தயாராகி வருகின்றது.

இதுவரை அதாவது 1931ஆம் ஆண்டு முதல் இதுவரை எல்லாமாக 75 தேர்தல்கள் நடத்தப்பட்டுள்ளன. 1931ஆம் ஆண்டு இலங்கையின் முதலாவது அரசு சபைக்கான தேர்தலும், 1936ஆம் ஆண்டு இரண்டாவது அரசு சபைக்கான தேர்தலும், 1947ஆம் ஆண்டு முதல் 2020ஆம் ஆண்டுவரை 16 பாராளுமன்றத் தேர்தல்களுக்கும், ஒரு சர்வஜன வாக்கெடுப்பு, அவ்வப்போது நடைபெற்ற மாகாணசபைத் தேர்தல்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் என 75 தேர்தல்களுக்கு இதுவரை நாடு முகங்கொடுத்துள்ளது.

இதுவரை நடைபெற்ற தேர்தல்களில் ஒப்பீட்டளவில் அமைதியான மற்றும் வன்முறைகள் குறைந்த தேர்தலாக 2024 ஜனாதிபதித் தேர்தல் பார்க்கப்படுகின்றது.

2022 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட மக்கள் போராட்டத்தின் பின்னரான அரசியல் சூழலில் தமக்கு மாற்றமொன்று வேண்டும் என்பதைத் தெரிவிப்பதற்கு ஜனநாயக முறையொன்றை மக்கள் எதிர்பார்த்திருந்தனர். பல்வேறு அழுத்தங்களுக்கு முகங்கொடுத்திருந்த மக்கள் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்த தேர்தலொன்றை எதிர்பார்த்திருந்தனர்.

இதற்கான சந்தர்ப்பமாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை எதிர்பார்த்திருந்த போதும், நிதியைக் காரணம் காட்டி அத்தேர்தலை முன்னைய ஆட்சியாளர்கள் நடத்தியிருக்கவில்லை. இது அடிப்படை உரிமையை மீறும் செயல் என்பது உயர்நீதிமன்றத்தினால் தீர்ப்பாக வழங்கப்பட்டிருந்தது.

இவ்வாறான நிலையில், ஜனாதிபதித் தேர்தலையும் ஒத்திப்போடுவதற்கு அல்லது இழுத்தடிப்பதற்கு எடுக்கப்பட்ட பிரயத்தனங்கள் கைகூடியிருக்கவில்லை. இது விடயத்தில் உறுதியாக இருந்த தேர்தல்கள் ஆணைக்குழு, ஜனாதிபதித் தேர்தலை உரிய நேரத்தில் நடத்தி மக்களின் ஜனநாயக உரிமையை நிறைவேற்றியிருக்கின்றது.

**வன்முறைகளற்ற தேர்தல்:**

இவ்வாறு மக்களின் எதிர்பார்ப்பின் மத்தியில் நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் பல்வேறு செய்திகளைக் கூறிச் சென்றுள்ளது. ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்று கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் தேர்தல் பிரசார காலத்திலும் சரி, தேர்தலின் பின்னரான காலப்பகுதியிலும் சரி பாரிய வன்முறைகள் இடம்பெறவில்லை. தேர்தல் விதிமீறல்கள் குறித்த முறைப்பாடுகள் பல பதிவாகியிருந்தபோதும், வன்முறைச் சம்பவங்கள் எது பற்றியும் முறையீடு செய்யப்படவில்லை எனத் தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் பலவும் சுட்டிக்காட்டியுள்ளன.

கடந்த காலங்களில் தேர்தல் பிரசாரங்களின் போது இரு கட்சிகளின் ஆதரவாளர்களுக்கிடையிலான மோதல்கள், கைகலப்புகள், அடிதடிகள் என வன்முறைச் சம்பவங்கள் பல இடம்பெற்றுள்ளன. இம்முறை தேர்தல் இந்த நிலையிலிருந்து விடுபட்ட தேர்தலாகப் பார்க்கப்படுகின்றது. தேர்தலில் போட்டியிட்ட 39 வேட்பாளர்களுக்கும் இதற்கான கௌரவம் சென்றடைய வேண்டும்.

தேர்தல் பிரசாரங்களின் போது மற்றைய கட்சிக்காரர்கள் மீது வன்முறைகளைத் தூண்டும் வகையிலான பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை. சமூக ஊடகங்களிலும், பொதுமேடைகளிலும் மற்றைய வேட்பாளர்களைக் கடுமையாக விமர்சித்து, சேறுபூசியிருந்தாலும் அவை வன்முறைகளாக மாறியிருக்கவில்லை என்பது நாட்டுக்கு சாதகமான செய்தியாகும்.

அதற்கும் அப்பால், தேர்தலுக்கான அரசியல் மேடைகளில் பகிரங்கமாக இனவாதம் பேசப்படாமையும் சிறந்தொரு அறிகுறியாக அமைந்தது. பொருளாதார ரீதியில் நாட்டுக்கு ஏற்பட்ட பாதிப்பு அனைத்து இன மக்களையும் சமமான முறையில் பாதித்திருப்பதால் இனவாதத்தை இம்முறை தேர்தலில் விற்கமுடியாமல் போய்விட்டது என்பதே உண்மை.

இவ்வாறானதொரு அமைதியான தேர்தலை முன்னெடுப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கிய தேர்தல்கள் ஆணைக்குழு, அரசியல் கட்சிகள் மற்றும் பொதுமக்களுக்குப் பாராட்டுகள் சென்றடைய வேண்டும். தேர்தல் மாத்திரமன்றி, தேர்தலுக்குப் பின்னரான அதிகாரப் பரிமாற்றமும் எவ்வித முரண்பாடுகளும் இன்றி சுமுகமான முறையில் இடம்பெற்றிருப்பது நாட்டுக்குப் புதியதொரு கலாசாரத்தை அறிமுகப்படுத்திச் சென்றுள்ளது. வெற்றிக் கொண்டாட்டங்களும் இன்னொரு மக்களை அல்லது வெற்றியாளருக்கு எதிராகச் செயற்பட்டவர்களின் மனங்களை நோகடிக்கச் செய்யும் வகையில் அமையவில்லையென்பது மற்றுமொரு விடயமாகும். பட்டாசுகொளுத்தி தேர்தல் வெற்றி கொண்டாடப்படாமைக்கு மக்களைப் பாராட்டத்தான் வேண்டும்.





**பொருளாதார வீழ்ச்சிக்குள்ளான நாட்டைப் பொறுப்பேற்றுள்ள ஜனாதிபதி அநுர குமார முறியடிக்க வேண்டிய சவால்கள்!**

**அநுர குமாரவின் வெற்றி:**

அமைதியான தேர்தலில் வெற்றிபெற்ற தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட 9 ஆவது ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ளார். நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் பலமுனைப் போட்டிக்களமாகத் தொடங்கிப் பின்னர் மும்முனைப் போட்டிக்களமாக மாறியது. இறுதிக் கட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க ஆகியோருக்கிடையிலான போட்டியாக அமைந்தது.

ஜே.வி.பியினர் மற்றும் பல்வேறு துறைசார் நிபுணர்கள் ஆகியோர் இணைந்து சுமார் 06 வருடங்களுக்கு முன்னர் உருவாக்கிய தேசிய மக்கள் சக்திக்கு இந்தத் தேர்தல் பாரியதொரு வெற்றியாக அமைந்தது.

தேசிய மக்கள் சக்தியானது 2021ஆம் ஆண்டு இறுதியிலிருந்தே ஜனாதிபதித் தேர்தலுக்கான ஆயத்தப்படுத்தலைத் தொடங்கியிருந்தது. நாட்டின் சகல பகுதிகளுக்கும் சென்று கூட்டங்களை நடத்துவது, மக்களைச் சந்திப்பது எனத் தொடர்ச்சியான பிரசாரங்களை அநுர குமார தலைமையிலான குழுவினர் ஆரம்பித்திருந்தனர். ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுமா, இல்லையா என்ற விடயத்தில் ஏனைய அரசியல் கட்சிகள் சிந்தித்துக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில், தேசிய மக்கள் சக்தி முழுவீச்சில் தனது பிரசாரங்களை கிராம மட்டங்களில் முன்னெடுத்திருந்தது.

ஏற்கனவே ஆயத்தமாக இருந்தமையால் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அறிவிப்பு வெளியானதும் தேசிய மக்கள் சக்தி தனது பிரசாரத்தை முடுக்கி விட்டிருந்தது. சம்பிரதாயபூர்வமான அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் பலவும் ரணில் மற்றும் சஜித் ஆகியோருக்கு உறுதுணையாகப் பிரசாரங்களுக்கு உதவியபோதும், சமூக ஊடகங்களை அதிகளவாக நம்பி தேசிய மக்கள் சக்தி தனது பிரசாரங்களை முன்னெடுத்திருந்தது.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அக்கட்சியின் கூட்டங்களின் ஒருங்கிணைப்புக்கள் பல்வேறு தரப்பினரின் பங்களிப்புடன் கூட்டு முயற்சியாக முன்னெடுக்கப்பட்டிருந்தன.

ஆரம்பம் முதலே தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கணிசமான மக்கள் கலந்துகொள்ளத் தொடங்கியிருந்த போதும், அக்கூட்டங்கள் யாவும் போலியாக ஒன்று திரட்டப்பட்ட மக்கள் எனக் காண்பிப்பதற்கான முயற்சிகளை ஐக்கிய மக்கள் சக்தியினரும், ஐக்கிய தேசியக் கட்சியினரும் முன்னெடுத்திருந்தனர். குறிப்பாக தேசிய மக்கள் சக்தியினர் ஆட்சிக்கு வந்தால் பௌத்த மதத்துக்கான முன்னுரிமை இல்லாமல் போய்விடும், 88-89ஆம் ஆண்டு காலத்தில் நிகழ்ந்தது போல வன்முறைகள் அதிகரிக்கும் என்பவை போன்ற மக்களை அச்சமூட்டும் விடயங்களைக் கட்டவிழ்த்து விட்டிருந்தனர்.

இருந்தபோதும் எது எதனையும் கருத்தில் கொள்ளாது 56 இலட்சத்து 34ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் அநுரகுமார திசாநாயக்கவுக்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர்.

அதேநேரம், சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவாக 43 இலட்சத்து 63 ஆயிரத்துக்கும் அதிகமானோரும், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக 22 இலட்சத்து 99 ஆயிரத்துக்கும் அதிகமானவர்களும் வாக்களித்திருந்தனர்.

மொத்தமாக வாக்களித்தவர்களில் எந்தவொரு வேட்பாளரும் 50 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெறத் தவறிய போதும், இரண்டாவது விருப்பு வாக்குகளும் கணக்கெடுக்கப்பட்ட பின்னர் அநுரகுமார திசாநாயக்க 42.31 வீத வாக்குகளைப் வெற்றி பெற்றதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்தது.

**புதிய ஜனாதிபதி எதிர்கொள்ளும் சவால்:**

நாட்டின் பெரும்பான்மையான மக்களின் ஆதரவுடன், எதிர்பார்ப்புடன் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள அநுர குமார திசாநாயக்க பொறுப்பேற்றுள்ள நாடு மிகவும் சவால் மிக்கது. பொருளாதார ரீதியிலும், பல்வேறு வழிகளிலும் நாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்ல வேண்டிய தேவை காணப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியைவிட்டுச் செல்லும்போது வெளியிட்டிருந்த கருத்தில், பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட இலங்கை என்ற குழந்தையை கயிற்றுப் பாலத்தில் பாதுகாப்பாகத் தூக்கிக் கொண்டு வந்தேன். இதிலிருந்து இந்தக் குழந்தையை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பு ஜனாதிபதி அநுரவுக்கு உள்ளது எனக் குறிப்பிட்டிருந்தார்.

உண்மையில் இது சவாலான பொறுப்பாகவே அமைகின்றது. இருந்தபோதும், 25 வருடங்களுக்கு மேலாக பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் அனுபவம் மற்றும் அரசியல் ரீதியாக எதிர்கொண்ட பல்வேறு சவால்களில் கிடைத்த அனுபவத்தின் ஊடாக நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்வதற்கான திறமை ஜனாதிபதி அநுரவுக்கு உள்ளது என்பது பலரதும் கருத்தாகும்.

ஆரம்பத்திலேயே ஜனாதிபதி மேற்கொண்ட ஒரு சில நடவடிக்கைகள் பலரதும் பாராட்டுக்களைப் பெற்றுள்ளன. குறிப்பாகப் பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கு முன்னர், தாம் உட்பட மூவரைக் கொண்ட அமைச்சரவையை நியமித்திருந்தார். இதில் பிரதமராக கலாநிதி ஹரிணி அமரசூரியவை நியமித்தமை பாராட்டுக்களைப் பெற்றுள்ளது.

கடந்த பொதுத்தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்குக் கிடைத்த ஒரு தேசியப் பட்டியல் வாய்ப்பில் கலாநிதி பட்டத்தைப் பெற்ற சிரேஷ்ட விரிவுரையாளராக இருந்த ஹரிணி அமரசூரியவை பிரேரித்திருந்தனர். ஜே.வி.பியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் இருந்தபோதும் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் ஹரிணி அமரசூரியவுக்கு இந்த வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

இவ்வாறு பாராளுமன்றத்திற்கு நுழைந்த கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கு மக்கள் மத்தியில் நல்லபிப்பிராயமே காணப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் மோசமானவர்கள் என்ற பொதுவான மக்கள் கருத்து இருந்தபோதும், ஹரிணி அதில் விதிவிலக்கானவராகப் பார்க்கப்பட்டார். இவ்வாறு மக்களின் நம்பிக்கையைப் பெற்ற ஒரு பெண் அரசியல்வாதியைப் பிரதமராக நியமிக்க ஜனாதிபதி எடுத்த முடிவு சிறப்பானது.

இதன் மூலம் இலங்கையின் மூன்றாவது பெண் பிரதமர் என்ற பெருமையையும், தெற்காசியாவிலேயே எந்தவித குடும்ப அரசியல் பின்னணியும் இன்றித் தெரிவான முதலாவது பெண் பிரதமர் என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார்.

அது மாத்திரமன்றி, புதிய அமைச்சுக்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள செயலாளர்கள் பற்றியும் குறிப்பிட வேண்டும். ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டுள்ள திட்டங்களை தொடர்ந்தும் முன்கொண்டு செல்லும் வகையில் அமைச்சின் செயலாளர்கள் பெருமளவில் மாற்றப்படவில்லை. ஏற்கனவே வகித்த பதவிகளுக்கே அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஒரு சில புதிய செயலாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தாலும், பலர் ஏற்கனவே இருந்த பதவிகளில் இருக்கின்றனர். அரச இயந்திரம் என்ற கப்பல் கவிழ்ந்துவிடாது தொடர்ந்தும் பயணிப்பதை இலக்காகக் கொண்டு ஜனாதிபதி இத்தீர்மானத்தை எடுத்திருப்பதையும் அரசியல் அவதானிகள் சாதகமான நிலைப்பாடாகப் பார்க்கின்றனர். இதன் மூலம் குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்துடனான ஒத்துழைப்புக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்ற எண்ணம் உருவாகியுள்ளது.

புதிய ஜனாதிபதியுடன் விரைவில் பேச்சுக்களைத் தொடங்கவிருப்பதாக சர்வதேச நாணய நிதியமும் அறிவித்துள்ளது. எனவே, ஆரம்பத்திலேயே நல்ல சமிக்ஞைகள் வெளியாகியிருப்பதால் நாடு சரியான பாதையில் பயணிப்பதற்கான அறிகுறிகள் தோன்றியுள்ளன என்கிறார்கள் அரசியல் அவதானிகள்.

---

# ஆம் ஆத்மி கட்சிக்கு அக்னி பரீட்சை



இந்தியத் தலைநகர் டெல்லியில் கடந்த பத்தாண்டுகளாக ஆட்சியில் இருக்கும் ஆம் ஆத்மி கட்சி தற்போது அக்னி பரிச்சையில் தன்னை சோதித்துக் கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. டெல்லி மாநில மதுபானக் கொள்கை வழக்கில் முறைகேடு செய்திருப்பதாக ஆம் ஆத்மி கட்சியின் தலைவரும், டெல்லி மாநில முதலைமச்சருமான அர்விந்த கேஜ்ரிவால் கைது செய்யப்பட்டு திஹார் சிறையில் 155 நாட்களாக இருந்து கடந்த 13ஆம் திகதி பிணையில் விடுதலையானார்.

வழக்கு இன்னும் முடிவடையாத நிலையில் முதமைச்சர் அலுவலகம் செல்லக் கூடாது கோப்புகளில் கையொப்பம் இடக்கூடாது என்ற நிபந்தனைகளுடன் நீதிமன்றம் அவருக்குப் பிணை வழங்கியிருக்கிறது. ஊழலுக்கு எதிரான கட்சியாக செயல்படும் என்று ஆட்சியைப் பிடித்த ஆம் ஆத்மி கட்சியின் முதலைமைச்சரே இன்று ஊழல் வழக்கில் கைதாகியிருப்பது அரசியல் மட்டத்தில் அதிருப்தியை உண்டாக்கியிருக்கிறது. திட்டமிட்டு சதிசெய்து வழக்கில் சிக்க வைக்கப்பட்டுள்ளதாக ஆம் ஆத்மி கட்சியினர் குரல் கொடுத்தாலும், தங்கள் மேல் பூசப்பட்டுள்ள கறையை எவ்வாறு துடைக்கப்போகிறார்கள் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

பா.ஜ.கவுக்கு ஆதரவு இல்லாத மாநில முதலைமைச்சர்கள் மீது தொடர்ந்து பல குற்றச்சாட்டுகளை முன்வைக்கப்பட்டு பழிவாங்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டு இருந்தாலும் அர்விந்த் கெஜ்ரிவால் எவ்வாறு தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டிலிருந்து விடுபட்டு தன்னைக் குற்றமற்றவர் என்று மக்கள் மத்தியில் நிரூபிக்கப் போகிறார்? நிறைய போராட வேண்டியிருக்குமே? என்ற நிலையில் இது தனக்கான அக்னிப் பரீட்சை என்று அவரே தெரிவித்திருக்கிறார்.

இதை ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு முதலைமைச்சர் பதவியிலிருந்து விலகி தான் குற்றமற்றவன் என்று நிரூபித்து, மீண்டும் மக்களைச் சந்தித்து வெற்றி பெற்ற பின்பே முதலைமைச்சர் நாட்காலியில் அமர்வதாக சபதம் ஏற்றிருக்கும் அவரது துணிச்சலைப் பாராட்டவேண்டும். துணை முதலைமைச்சராக இருந்த மணீஷ் சிசோடியாவும் மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் கைது செய்யப்பட்டு தற்போது அவரும் பிணையில் இருப்பதால், அவரும் மக்கள் மன்றம் சென்று தன்னை குற்றமற்றவர் என்று நிரூபிக்கப் போவதாக உறுதி எடுத்துள்ளார். இவர்கள் இருவருமே பதவியில் நீடிக்க முடியாதசூழல் இருப்பதால் கட்சியின் அரசியில் விவகாரக்குழு கூடி, விவாதித்து கல்வித்துறை அமைச்சராக பதவி வகித்து வந்த ஆதிஷி சிங் மர்லேனாவை முறைப்படி தேர்வு செய்து டெல்லியின் முதலைமைச்சராக்கியிருக்கிறது.

தற்போது டெல்லியின் முதலைமைச்சராக பொறுப்பேற்றிருக்கும் ஆதிஷி டெல்லியின் முதல் இளம் வயது (43) முதல்வர் என்பதோடு, மூன்றாவது பெண் முதல்வர் என்ற பெருமையையும் பெற்றிருக்கிறார் . டெல்லியின் முதல்வர்களாக ஏற்கனவே பா.ஜ.க.வின் சுஷ்மா ஸ்வராஜ், காங்கிரஸ் கட்சியின் ஷீலா தீட்சித் ஆகியோர் பதவிவகித்துள்ளனர். அடுத்த ஆண்டு பெப்ரவரியில் ஆம் ஆத்மி கட்சியின் ஆட்சிக்காலம் நிறைவடைகிறது. எனவே வரும் பெப்ரவரி மாதம் வரையில் ஆதிஷி சிங் மர்லேனா தலைமையிலான ஆம் ஆத்மி கட்சி ஆட்சிப் பொறுப்பில் இருக்கும்.

பா.ஜ.க கொடுத்து வரும் நெருக்கடியில் இருந்து எப்படி வெளியே வந்து வெற்றி பெறுவது என்பது தான் அர்விந்த் கெஜ்ரிவாலுக்கு தற்போது இருக்கும் சவால், நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் டெல்லியில் ஆம் ஆத்மி கட்சிக்கு ஒரு இடம் கூட கிடைக்காத நிலையில், மக்கள் மத்தியில் செல்வாக்கு குறைந்து வருகிறதோ என்ற ஐயமும் இருக்கிறது. பா.ஜ.க காங்கிரஸ் இரண்டு கட்சிக்கும் மாற்றாக டெல்லி மக்களிடையே வரவேற்பைப் பெற்ற ஆம் ஆத்மி கட்சி மீதான ஊழல் குற்றச்சாட்டு மக்களிடத்தில் மதிப்பைக் குறைத்துள்ளதோ என்றும் அவதானிக்க வேண்டியுள்ளது.

எவ்வளவு நெருக்கடிகள் வந்தாலும் சவாலாக ஏற்றுக்கொண்டுமுறியடிக்க வேண்டும் என்பதில் முனைப்போடு அர்விந்த் கெஜ்ரிவால் மக்கள் மன்றத்திற்கு வந்திருக்கிறார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஆம் ஆத்மி கட்சிக்கு... (09ஆம் பக்கத் தொடர்)

அண்மையில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் அவர் பேசும் போது பிரதமர் நரேந்திர மோடி குறித்து ஆர்.எஸ்.எஸ் தலைவர் மோகன் பாகவத்திடம் ஐந்து கேள்விகளை முன்வைத்திருக்கிறார்.

பா.ஜ.க.வில் 75 வயதுக்குப் பிறகு பொறுப்பிலிருந்து ஒய்வு பெற வேண்டும் என்ற விதி மூத்த தலைவர் எல்.கே அத்வானிக்கு கடைப்பிடிக்கப்பட்டது. ஆனால், மோடிக்கு ஏன் இந்த விதி கடைப்பிடிக்கவில்லை. மோடி எதிர்க்கட்சிகளை உடைத்து அக்கட்சி உறுப்பினர்களை தன் கட்சியில் சேர்க்கிறார். இதற்கு அமுலாக்கத் துறை சி.பி.ஐ ஆகிய அமைப்புகளை அவர் பயன்படுத்துகிறார். அவரது இந்த நடவடிக்கை சரியானதா?ஊழல்வாதிகள் என்று தான் குற்றம் சாட்டிய தலைவர்களை .இப்போது அரசியல் லாபத்துக்காக மோடி தன் கட்சியில் சேர்த்து வருகிறார். மோடியின் இந்த அரசியலுடன் ஆர்.எஸ்.எஸ் உடன்படுகிறதா? பா.ஜ.க தேசியத் தலைவர் நட்டா. பா.ஜ.க.வுக்கு இனி ஆர் எஸ் எஸ் தேவையில்லை என்று கூறியது குறித்து ஆர். எஸ். எஸ். அமைப்பு என்ன நினைக்கிறது ? ஆர். எஸ்.எஸ் அமைப்பிலிருந்து உருவான கட்சி தான் பா.ஜ.க. பா.ஜ.கவின் தவறுகளை என்றாவது ஆர்.எஸ்.எஸ் தடுத்திருக்கிறதா? என்று அர்விந்த் கெஜ்ரிவால் கேள்வி எழுப்பியிருக்கிறார். ஆனால், இந்தக் கேள்விகளுக்கான பதில் பா.ஜ.கவிடம் இருந்தோ ஆர்.எஸ்.எஸிடம் இருந்தோ வரப்போவதில்லை என்றாலும். பா.ஜ.க மீதான தனது விமர்சனத்தின் மூலம் தன் மீதான குற்றச்சாட்டு நியாயமில்லை என்பதை மக்களிடத்தில் எழுத்துரைக்க முயற்சி செய்கிறார் என்று புரிந்து கொள்ளலாம். என் மீதான ஊழல் குற்றச்சாட்டுகள் என்னைக் காயப்படுத்தின. அதன் காரணமாகவே நான் முதல்வர் பதவியை இராஜினாமா செய்கிறேன். கடந்த 10 ஆண்டு கால ஆட்சியில் நான் மக்களிடம் மரியாதையைத்தான் சம்பாதித்துள்ளேன் பணத்தை அல்ல. எனவே வரும் டெல்லி சட்டமன்ற தேர்தல் எனக்கு சவாலானதாக இருக்கும். ஆனால், நிச்சயம் வெற்றி பெறுவார் என்று நம்பிக்கையோடு களத்தில் நிற்கிறார்.

அர்விந்த் கெஜ்ரிவாலின் அரசியல் எதிர்காலத்தை ஒன்றுமில்லாமல் ஆக்கவேண்டும் என்று பா.ஜ.க பல நெருக்கடிகளை கொடுத்து வந்தாலும், மக்கள் அவரைக் கைவிட மாட்டார்கள் என்று அவர் நம்பிக்கையோடு இருக்கிறார். தன்னுடைய கடந்த பத்தாண்டு காலத்தில் மக்களுக்கு செய்துள்ள நன்மைகளை மக்கள் மறந்துவிட மாட்டார்கள் என்று அவர் எண்ணுகிறார். இந்தியா கூட்டணியில் ஆம் ஆத்மி கட்சி இருந்தாலும் டெல்லிசட்டமன்றத் தேர்தலில் தனித்தே போட்டியிட்டு தன்னை நிருபிக்கவேண்டிய கட்டாயமும் இருக்கிறது. ஆனால், ஆளும் கட்சியான பா.ஜ.கவின் வியூகங்களை அது எப்படி முறியடிக்கும் என்ற சாவாலும் ஆம் ஆத்மிக்கு இருக்கிறது. அதிகார பலம், பணபலம் இரண்டுமே பா.ஜ.கவிடம் கூடுதலாக இருக்கும் போது தேர்தல் நேரத்தில் இன்னும் பல நெருக்கடிகளை சந்திக்க வேண்டியிருக்கும். அதை எல்லாம் எவ்வாறு முறியடித்து வெற்றிபெறும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாக இருக்கிறது. ஆம் ஆத்மியின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் சக்தியாகவே பெப்ரவரியில் வர இருக்கும் டெல்லி சட்டமன்றத் தேர்தல் இருக்கும் என்பதே அரசியல் விமர்சகர்களின் எதிர்பார்ப்பாகவும் இருக்கிறது. தேர்தல் நேரத்து மக்களின் மனநிலையைப் பொறுத்தே மாற்றம்வரும் என்பதே கடந்தகால அரசியல் தீர்ப்புகளாக இருந்திருக்கிறது.

எனவே டெல்லி மக்கள் என்ன செய்யப் போகிறார்கள். ஆத்மி கட்சி மீண்டும் டெல்லியைக் கைப்பற்றுமா? என்று பொறுத்திருந்து பார்ப்போம்.




## புலவர் நல்லதம்பியின் வாரிசு; புலவர் சிவநாதன்

ஐக்கிய ராஜ்ஜியத்தில் வாழ்ந்து வரும் அண்ணர் புலவர் சிவநாதன் அவர்களை எனக்கு ஒன்றரை தசாப்தங்களாக தெரியும். இவரது தமிழிலும், பேச்சிலும்,எழுத்திலும், தமிழுக்காக இவர் செய்யும் தொண்டிலும், பழகும் விதத்திலும் நான் கட்டுண்டு போனவன். இலங்கையில் தமிழ் ஊடகங்களில் இந்த மகா தமிழ் புலவனை பற்றிய தகவல்கள் வரவில்லை.ஐரோப்பிய நாடுகளில் இவர் அறியப்பட்டதுபோல் தாயகத்தில் இவர் பெரிய அளவில் அறியப்படவில்லை. இவர் எழுபதுகளின் முற்பகுதியில் தாயகத்தை விட்டு ஐக்கிய ராஜ்ஜியத்துக்கு வந்துவிட்டார். ஆகவே தாயக மக்களும் புலவர் பற்றி அறிந்து கொள்ள இந்த பதிவு உதவட்டும். ஆரம்பத்தில் 'பங்கை மணாளன்' என்ற பெயரில், 'குமுறல்' கவிதைப்புத்தகம் மூலம் கவிதை எழுதத் தொடங்கினார். இளம்பிராயத்தில் காசி ஆனந்தன் தலைமையில் இவரது கவிதை ஏற்றம் கண்டது. இதைத் தொடர்ந்து, பல நூல்கள், கவிதைகள் என்பனவற்றை இவர் படைத்தார். சிவநாதனின் தகப்பன், பேரன் இருவருமே புலமை பெற்றவர்கள். 'புலவர்' என்ற பட்டம், இவருக்கு 'வாழையடி வாழை'யாகச் சேர்ந்தமையாகும். கம்பன் வீட்டுக்கட்டுத்தறியும் கவிபாடும் என்பதுபோல், புலவர் என்னும் பெரும்பெயர், பேரன், தகப்பன் இரண்டு பேருக்கு மட்டுமன்றி, இவருக்கும் கிடைத்திருப்பது, இறை கடாட்சமேயாகும். தனது இளமைக்காலத்தில் 'நம்நாடு' என்ற பத்திரிகையைத் தொடங்கி, அதன் ஆசிரியராக இருந்து பலரை அறிமுகப்படுத்தி, பலவற்றை எழுதியுள்ளார். "எண்ணும், எழுத்தும் கண்ணெனத் தகும்" என்றார் ஔவையார். புலவரின் ஒரு கண்ணாகிய 'எண்' என்பது, இவரைப் பொறியியலாளன் ஆக்கியது. அடுத்த கண்ணாகிய எழுத்தென்பது, இவரை எழுத்தாளன் ஆக்கியது. கையை இறைவன் படைத்தார் எழுதுவதற்கு. வாயை இறைவன் படைத்தார் பேசுவதற்கு. எழுத்தும், பேச்சும் இணைந்து, இவரிடம் சிலிர்ப்பை ஏற்படுத்திவிடும் என்றால், அது மிகையல்ல. கவிதையை யாத்த இவரின் வாய், அதனைப் படிக்கத் தொடங்கிவிட்டால் பல சங்கதிகளை நாம் பார்க்கலாம். அள்ளிச் சுவைக்கலாம். இவரது கவிதையில் தென்றல் வந்து வீசும்.



வாடைக்காற்றுப் போல் இவரது தனித்துவமான வாடையே வீசும். இடையிடையே இடியும் முழங்கும். அந்த இடியில், 'பொங்கு தமிழர்க்கு இன்னல் நேர்ந்தால் சங்காரம் நிசம் என்று சங்கே முழங்கு' என்ற பாரதிதாசனின் கூற்றுப்போல், இவரது கூற்றும் சீறிப்பாயும். அதுவும் தாயகத்தையும், தமிழையும் எவராதல் மாசுபடுத்திவிட்டாற்போதும். 'கவை' கொண்டாடுவார். "கொலை வாளினை எடடா, மிகுகொடியோர் செயல் அறவே" என்று புரட்சிக் கவிஞன் வசப்பட்டு, தன்னை மறப்பார். தமிழர் தலைப்பட்டு, பாடுவார், ஆடுவார். சபையோர் கரகோஷம் இவருக்கு உசுப்பை ஏற்படுத்தியே விடும். இவரின் கவியடிகள், உணர்ச்சி இல்லாதவருக்கும் ஓர் புத்துணர்ச்சியைத் தூண்டிவிடும். இவரது கவியாற்றலைப் பற்றி, பிரபல ஆய்வாளர் திருபற்றிமாகரன் கூறுகையில், "கேட்டெழுதும் பொருளல்ல பாட்டு அது இவரின் நெஞ்சத்து ஊற்று தொட்டெழுதும் மையாக, தன் இதயத்துக் கருணையைப் பாட்டெழுதப் பயன்படுத்தும் இவர் ஓர் மாமனிதர்" என்று கூறியிருக்கின்றார். லண்டனில் தனது பொறியியற்துறை பட்டப்படிப்பை மேற்கொண்ட வேளையில், பல நூல்களை இவர் எழுதித்தந்திருக்கின்றார். "காவியச் சலங்கைகள்" என்ற பெயரில், இவர் எழுதிய நாட்டிய நாடகம் கவிச்சுவையும், இலக்கியச் சுவையும் கொண்டதாகும். "பிரபஞ்ச லீலைகள்" என்ற இவரின் நாட்டிய நாடகம், தமிழ் நாட்டில் மேடையேற்றம் செய்யப்பட்டது. இவரது படைப்பாற்றலுடன், லண்டன் நர்த்தன கலாலயாவின் இயக்குனர் பத்மினி குணசீலனின் கைவண்ணமும் இணைந்ததால், தமிழ்நாட்டு இலக்கியச் சுவைஞர்கள், பேராசிரியர்கள், பத்திரிகையாளர்கள், எனப் பலரின் பாராட்டுதலை "பிரபஞ்சலீலைகள்" பெற்றுக் கொண்டது. இதனால் தமிழ்நாட்டரசின் பட்டத்தினை இவர் பெற்றார். சென்னையில் உள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இவரை அழைத்து பேச வைத்ததுடன், மதுரை உலகத் தமிழ்ச் சங்கமும் இவரை அழைத்துக் கௌரவம் செய்தது. அத்துடன் உலகத் தமிழ்ச்சங்கம் இவருக்கு "முத்தமிழ்க் கலைவித்தகர்" என்ற பட்டத்தையும் வழங்கியது. வில்லிபுத்தூர் செந்தமிழ் அறக்கட்டளையினர், "கவிப்பேரொளி" என்ற பட்டத்தை இவருக்கு அளித்தனர்.

*–கோவிலூர் செல்வராஜன் – இலண்டன்*

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI
# சிறு விளம்பரங்கள்
சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை
Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

### வேலைவாய்ப்பு

**312 வெற்றிடங்கள் தொழில் நுட்பம்**

கொழும்பில் அமைந்துள்ள பிரபல நீர்க்குழாய் துணைப் பாகங்கள் நிறுவனமான Allied Trading International (pvt) Ltd நிறுவனத்திற்கு பொதுவான Electrical வேலை மற்றும் CCTV Repairing & maintenance செய்யக் கூடிய குறைந்தபட்சம் இரு வருட அனுபவம் உடைய ஊழியர்கள் தேவை. கொழும்புக்கு அருகில் உள்ளவர்கள் மாத்திரம் அழையுங்கள். 011 7397777, 076 2129669, 011 2331670 ( இல. 301, பழைய சோனகத் தெரு, கொழும்பு -12. 064807

மின் தொழில் நுட்பவியலாளர் மற்றும் உதவியாளர்கள் கொழும்புக்கு அருகில் வேலை செய்வதற்கு - 077 9503657, 071-7215368. 064738

**317 வெற்றிடங்கள் டெயிலர்கள்/ டிரஸ்மேக்கர்கள்**

பெண் ஆடை தைப்பவர்களுக்கான வெற்றிடங்கள் உண்டு. தொடர்பு - 072-1298630 065097

**318 வெற்றிடங்கள் டிரைவர்கள்**

கொள்ளுப்பிட்டிய வீடு ஒன்றிற்கு வாகன ஓட்டுநர் (Driver) தேவை. AUTO CAR ஓட்டத்தெரிந்த காலை வந்து மாலை செல்லக் கூடியவர் தேவை வயதெல்லை 40 - 60 இடைப்பட்டவர், நாள் சம்பளம் Rs.2 000 வழங்கப்படும். நேர்முகத் தேர்வுக்கு கிழமை நாட்களில் கீழ்கண்ட முகவரிக்கு நேரில் வரவும்.இல.18, வெளியமுன வீதி, ஹேகித்த, வத்தளை தொ.பே.இல. 07 6 6200300 065973

கொழும்பை வசிப்பிடமாகக் கொண்ட முச்சக்கர வண்டியுடன் இருக்கும் வாகன சாரதிகள் தேவை. தமிழ், ஆங்கில பேச்சுத்திற ன் உடையவர்கள் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு - 076 4161518 076 4161518 kavithan 065702

வெற்றிடங்கள் டீசல் மோட்டர் மெக்கானிக், டிங்கரிங் மற்றும் பெயின்டர்வடு, இலெக்ட்ரீசியன் தேவை. (விடுதி வசதிகள் உண்டு) கிராம சேவகர்/ பொலிஸ் சான்றிதழ் (இருப்பின்) கொண்டு வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப.4.00 வரை வாருங்கள். வர்ன்ட் எக்ஸ்பிரஸ் கம்பனி 190/ C, துடெல்ல, பமுனுகம வீதி, போபிட்டிய, ஜா - எல (போபிட்டிய நகரம் அருகில்) அழையுங்கள் - 077 3 3467 68/ 0761408494/ 0712724403 065121

**319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்**

கொழும்பு தலவத்துகொட வீட்டில் தங்கி வேலை செய்வதற்கு பெண் தேவை. சம்பளம் 40, 000 அனுபவத்தின் பிரகாரம். வயது 55 இற்கு கீழ் 0777 584961, 0777 456579.065941

கொழும்பு வீட்டில் வேலை செய்வதற்கு 45 - 52 பெண் தேவை. தேசிய அடையாள அட்டை, பொலிஸ் அறி க்கை கட்டாயமானது. 0703685168. 063892

3 பேர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு வீட்டுப் பணிப்பெண் தேவை. கொழும்பு வீட்டுப் பராமரிப்பு மற்றும் 4 வயது பிள்ளையை கவனித்துக் கொள்வதற்கு' கடவுச் சீட்டு கட்டாயமானது. குடும்பத்துடன் பிரயாணம் செய்யும் ஆற்றல் இருத்தல் வேண்டும். வயது 40 - 55 இற்கிடையில் பெண் சிறந்த நல்லொழுக்கத்துடன் முன் அனுபவம். சம்பளம் 80, 000 - தொடர்புகள் பி.ப. 7 இற்கு பின்னர். தொ.பே. 037-2288047/ 071 8440995. b uddhike@johnkeellsit.com 065882

**320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்**

கொத்து சமோசா ரைஸ் பாஸ்மார் மற்றும் வெயிட்டர் தேவை. 077 - 7389219/ 071 - 6920973 065391

**321 வெற்றிடங்கள் தோட்டத்துறை**

குருநாகல் தோட்டத்தில் வேலை செய்வதற்கு 45 - 55 வயதிற்கிடைப்பட்ட குடும்பம் தேவை. தேசிய அடையாள அட்டை, திருமண சான்றி தழ், பொலிஸ் அறிக்கை, வதிவை உறுதி செய்யும் கடிதங்கள் க ட்டாயமானது. அழையுங்கள் - 0703685168. 063890

**323 வெற்றிடங்கள் தொழிலாளர்கள்**

கிருளபனையில் அமைந்துள்ள APARTMENT COMPLEXக்கு வசிக்கும் ஒரு CLEANING வேலை செய்வதற்கு ஊழியர் ஒருவர் தேவை. தொ.பே. 0777313478. 064670

புறக்கோட்டையில் அமைந்துள்ள அச்சக கடதாசி நிறுவனம் ஒன்றிற்கு PAPERCUTTER (GUILLOTINE)இல் வேலை செய்வதற்கு ஒரு அனுபவமுள்ள ஊழியர் தேவைப்படுகின்றது. தொ.பே. 0777313478. 064671

**325 தொழில்துறை பொது**

கம்பஹா மினுவங்கொட சுற்றுலா பங்களாவுடன் 12 ஏக்கர் தோட்டத்திற்கு இளம் நேர்மையான ஊழியர் தம்பதி உடன் தேவை. தொடர்புகள் - 070 1896681. 065907

புடவை உற்பத்தியில் முன்னோடியாகத் திகழும் நிறுவனத்தில் பின்வரும் வெற்றிடங்கள்1. ஜூகி இயந்திரம் இயக்குபவர்கள்/ உதவியாளர்கள் (J uki Machine Operators / Helpers)2. பொதிசெ ய்யு ம் உதவியாளர்கள் (packing Helpers)3. சாய இயந்திரம் இயக்குபவர்கள்/ உதவியாளர்கள் (D ye Machine Operators / Helpers)4. ஸ்டெண்டர் இ யந்திரம் இயக்குபவர்கள்/ உதவியாளர்கள் (Stenter Machine Operators/ Helpers)5. விடுதிக் காப்பாளர் (Hoste l Warden) (Age 45 - 50)6 . ஓட்டுநர் கனரக/ இலகுரக வாகனங்கள் (Driver)குறைந்த வி லையில் உணவு, இலவச தங்குமிட வசதி நேர்முகத் தேர்வுக்கு கிழமை நாட்களில் கீழ்கண்ட முகவரிக்கு வரவும்.Cliftex Industries (Pvt) Ltd.இல. 18 வெலியமுன வீதி, ஹேகித்த வத்தளை , 0766200300 065965

புறக்கோட்டையில் அமைந்திருக்கும் திருமண அழைப்பிதழ் மற்றும் அச்சக கடதாசி நிறுவனத்திற்கு ஆண்/ பெண் திருமண மாகாத விற்பனை உதவியாளர் தேவைப்படுகின்றது. 20 - 30 வயதுக்கு இடைப்பட்டவராக இருத்தல் நன்று. தங்கும் இடவசதிகள் இல்லை. தொ.பே 0777313478. 064672

வத்தளையில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றிற்கு 50ற்கும் - 55 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் மேற்பட்ட பாதுகாவலர்கள் (Watcher) தேவை. சம்பளம் ஒரு நாளைக்கு 1500/ - நேரில் வரவும். குறை ந்த விலையில் உணவு மற்றும் இலவச தங்குமிட வசதிதொ. பே.இல. 0766200300இல.18, வெளிஅமுன ஹேகித்த வத்தளை 065976

வெற்றிடங்கள் கனரக வாகன சாரதி மற்றும் சாரதி உதவியாளர் போக்குவரத்து நிறுவனத்திற்கு அனுபவமுள்ள கன்டைனர் பிரைம் மூவ ர், இலகு/ கனரக வா கனங்களுக்கான சாரதிகள் மற்றும் டீசல் மோட்டர் மெக்கானிக் தே வை . மாதாந்த வரு மானம் ரூ.150, 000.00 மட்டில் (விடுதி வசதிகளுடன்) கிராம சேவகர்/ பொலிஸ் சான்றிதழ் (இருப்பின்) கொண்டு வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 4.00 வரை வாருங்கள்.வர்ன்ட் எக்ஸ்பிரஸ் கம்பனி, 190/ C, துடெல்ல, பமுனுகம வீதி, போபிட்டிய, ஜா - எல (போபிட்டி ய நகரம் அருகில்) அழையுங்கள் - 077 3 3467 68/ 0761408494/ 0712724403 065125

For Sale

### காணி/தோட்டம்

**616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு**

வெள்ளவத்தை Fernado வீதியில் 10.5 p இல் 3 வீடுகளை கொண்ட காணி விற்பனைக்குண்டு. 077 9503016. 066072

**617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு**

நீர்கொழும்பு சிலாபம் பிரதான வீதிக்கு முகப்பாக கொச்சிக்கடை நகரில் 12.75 பேர்ச் உடன் முழுமையான இருமாடி வீடு விற்பனைக்கு. 076 - 6693433 065642

வத்தளை ஹுனுப்பிட்டிய நந்தன மாவத்த, தரைமாடி 3 படு க்கையறைகளுடன் தரை மாடி சமையலறை, குளியலறை வாகன நிறுத்துமிட ம். முதலாம் மாடி 5 படுக்கையறைகள் 2 குளியலறைகள், ஒய்வு அறை. தொடர்பு இல. - 076 3894455. 065953

**641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு**

மாளிகாவத்த தொடர் மாடி வீடு. வாடகைக்கு உண்டு. தொ.பே. சயிட் 0777 983432. 065866

வாரமஞ்சரி திருமண சேவைகள்

### மணமகன்

கண்டி புறநகர் பகுதியிலிருந்து சோனகப் பெற்றோர் தமது 37 5'10" தொழில்சார் தகைமையுள்ள பொறியியலாளர் இலங்கையில் பிரபலமான பல்கலைக் கழகத்தில் தமது கல்வியை முடித்த மற்றும் மத்திய கிழக்கில் தற்போது கடமையாற்றும் மகனுக்கு கல்வி கற்ற, சிறந்த தோற்றமுடைய மார்க்கப்பற்றுள்ள மற்றும் கனிவான உள்ள ம் கொண்ட 32 வய திற்குக் குறைந்த மணமகளைத் தேடுகின்றனர். ஆர்வமுள்ள தரப்பினர் ahamedam1515@gmail.com ஊடாக தொடர்பு கொள்ள முடியும். G222969

ad.lk it's what you want
The Trusted Market place for Buying & Selling

# திருச்செந்தூரில் கந்த சஷ்டி திருவிழா

## நவம்பர் 02 இல் ஆரம்பம்





தமிழ்நாடு திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் கந்த சஷ்டி திருவிழா எதிர்வரும் நவம்பர் மாதம் 02ஆம் திகதி ஆரம்பமாகும் என்று திருக்கோயில் இணை ஆணையர், செயல் அலுவலர் சு. ஞானசேகரன் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

02ஆம் திகதி முதல் 7ஆம் திகதி வரை அதிகாலை 1.00 மணிக்கு நடைதிறக்கப்பட்டு 1.30 மணியளவில் விஸ்வரூப தரிசனமும் தொடர்ந்து உதய மார்த்தாண்ட அபிஷேகமும் நடைபெற்று காலை 5.30 மணிக்கு அருள்மிகு ஜெயந்தி நாதர் யாகசாலைக்கு புறப்படுதல் காலை 9 மணிக்கு உச்சி கால அபிஷேகமும் பிற்பகல் 3.30க்கு சாயரட்சை தீப ஆராதனை என்பனவற்றுடன் வழமையாக ஆன்மிக அருளுரைகளும் தங்கரத பவனியும் சண்முக அர்ச்சனை என்பனவும் இடம்பெறும்.

சூரசம்ஹாரம் நவம்பர் 7ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு சுவாமி சுரசம்காரத்திற்கு எழுந்தருளி சுரசம்காரம் கடற்கரையில் நடைபெறும். 8ஆம் திகதி அதிகாலை 5.30க்கு அம்பாள் தபசு காட்சிக்கு புறப்படுவார். மாலை 6 மணிக்கு சுவாமிக்கும் அம்பாளுக்கும் மாலை மாற்று விழா நடைபெற்று அன்று இரவு திருக்கல்யாண வைபவம் நடைபெறும்.

பழனி அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு பழனியில் நடைபெற்ற அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில், வெளிநாட்டில் வாழும் முருக பக்தர்கள் தமிழ்நாட்டிற்கு வருகை தரும் போது அவர்களுக்கு ஆறுபடை வீடு திருக்கோயிலுக்கு செல்ல சிறப்பு ஏற்பாடுகள் செய்து தருவது என்றும் திருவிழா மற்றும் சிறப்பு காலங்களில் வழிபாட்டிற்கு உதவுவது என்னும் தீர்மானங்களுக்கு இணங்க வசதிகள் செய்ய வேண்டும் என்றும் இலங்கை வாழ் முருக பக்தர்கள் எதிர்பார்க்கின்றனர். பழனி அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டை மிக திறம்பட நடத்தியமைக்காக இலங்கை இந்து சமய கலாசார பணிப்பாளர் அனிருத்தன் மற்றும் இலங்கை வாழ் முருக பக்தர்கள் சார்பாக அமைச்சர் பி.கே. சேகர்பாபுவுக்கும் அறநிலையத்துறை ஆணையாளர் பி.என். ஸ்ரீதருக்கும் அறநிலையத்துறை உயர் அதிகாரிகளுக்கும் நன்றிகளையும்

–எச். எச். விக்கிரமசிங்க ...

துபாய் சயீடா நிதியுதவியில்...

# கொழும்பு கலைமகள் தமிழ் வித்தியாலயத்துக்கு புதிய கட்டடம்





(அஜ்வாத் பாஸி)

கொழும்பு, கலைமகள் தமிழ் வித்தியாலயத்தில் துபாய் சயீடா பௌண்டேசன் நிதியுதவியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மூன்று மாடிகளைக் கொண்ட வகுப்பறைக் கட்டடம் கடந்த வியாழக்கிழமை (26) வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினரும் சயீடா பௌண்டேசனின் இலங்கை இணைப்பாளருமான நௌஸர் பௌஸியின் வேண்டுகோளின்பேரில் மேற்படி புதிய வகுப்பறை கட்டட நிர்மாணத்திற்கு ரூ. 38 மில்லியன் நிதியுதவி வழங்கப்பட்டது.

பாடசாலை அதிபர் எம். முருகானந்தம் தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எச்.எம். பௌஸி, மனோ கணேசன் மற்றும் இணைப்பாளர் நௌஸர் பௌஸி உட்பட பாடசாலைகளின் அதிபர்கள், அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர். இலங்கையிலுள்ள அரச பாடசாலைகளில் பௌதிக வளம் குறைந்த பாடசாலைகளை இனங்காணும், மேற்படி நிறுவனம் பல்வேறு உதவிகளை மேற்கொண்டுவருகின்றமைவிசேடஅம்சமாகும்.

அதேபோல், சயீடாவின் இலங்கை இணைப்பாளர் நௌஸர் பௌஸியின் வேண்டுகோளின் பேரில், கொழும்பு மாவட்டத்திலுள்ள ஏனைய பௌதிக வளபற்றாக்குறையுள்ள பாடசாலைகளான தெமட்டகொட கைரியா, மட்டக்குளிய ஹம்சா, சேர் ராசிக் பரீட், பாத்திமா கல்லூரிகளிலும் அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இப்பாடசாலைக்கு இக்கட்டடத்தை பெற்றுக்கொடுத்து விரைவான நிர்மாணப் பணிகளுக்கு உதவிய நண்பர் நௌஸர் பௌஸிக்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் பாடசாலை சார்பில் நன்றிகளை தெரிவித்துக்கொண்டார்.

# சிட்னியில் வெளியாகும் மாத்தளை சோமுவின் 'ஒற்றைத்தோடு' சிறுகதைத் தொகுதி!

(ஐங்கரன் விக்கினேஸ்வரா)



புலம்பெயர் மண்ணில் முன்னணி ஈழத்து எழுத்தாளரான மாத்தளை சோமுவின் 30 வது நூலான "ஒற்றைத்தோடு" சிறுகதைத் தொகுதி வெளியீடும் அறிமுகமும் சிட்னியில் இன்று மாலை 15.30 க்கு, சிட்னியில் உள்ள துங்காபி புனித அந்தோனியார் தேவாலய மண்டபத்தில் (St,Anthony Church Hall, 2739, Aurelia Street, Toongabbie, NSW) நடைபெறும்.

எழுத்தாளர் மாத்தளை சோமு சிறுகதை, புதினம், பயண இலக்கியம் முதலான துறைகளில் பல நூல்களை எழுதி மலையக இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியவர். அத்துடன் மலையக இலக்கிய வளர்ச்சிக்குப் பங்காற்றிய மாத்தளை சோமுவின் பெயர் தமிழ் இலக்கிய உலகில் மிகவும் பரிச்சயமானது.

இலக்கியத் துறையில் தனக்கென தனியான ஒரு இடத்தைப் பிடித்திருப்பவர் அவர்.

அவுஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்த நிலையில் அமைதியாக தனது எழுத்துப்பணியை சமூக நோக்கோடு செய்துவருபவர். அவரது இலக்கிய முயற்சிகளின் தொடராக முப்பதாவது நூல் வெளியாகிறது.



மாத்தளை சோமுவிற்கு எழுத்தே அவரின் மூச்சாக இருக்கிறது. இந்நிகழ்வின் தொடக்க உரையை குலசேகரம் சஞ்சயனும், வரவேற்புரையை சமூக ஆர்வலர் வசந்தராஜாவும் ஆற்றுவார்கள்.

இந்நிகழ்வின் தலைமை உரையை கலாநிதி குலம் சண்முகமும், வாழ்த்துரைகளை பத்திரிகையாளர் எஸ்.சுந்தரதாஸ் மற்றும் கலாநிதி மாலினி ஆனந்தகிருஷ்ணன் ஆகியோர் ஆற்றுவர்.

இலக்கியப் படைப்புகள் அனைத்திலும் தனக்கென தனி முத்திரை பதித்துள்ள மாத்தளை சோமு பற்றிய பகிர்வை ஐங்கரன் விக்கினேஸ்வரா ஆற்றுவார்.

ஒற்றைத்தோடு சிறுகதைத் தொகுதி நூல் அறிமுக உரையினை செல்வி வி.விஜயாழ்,. இந்துமதி சிறினிவாசன், மயில்வாகனம் தனபாலசிங்கம் ஆகியோர் ஆற்றுவர்.

அத்துடன் முனைவர் இலக்குவன் சொக்கலிங்கமும் (ஆங்கில மொழி பயிற்றல் துறை, அரசு, நியூசிலாந்து) உரையாற்றுவார்.நூலாசிரியர் மாத்தளை சோமுவின் பதிலுரையை தொடர்ந்து, நிகழ்வின் நன்றியுரையை பூபாலசிங்கம் சின்னய்யா ஆற்றுவார்.

தினகரன் வாரமஞ்சரி BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067



HORANA, MUNAGAMA, DIKHENAGAMA
GURUGEWATTA ROAD A HOUSE WITH 42 PERCHES.
4 rooms, garage, square flat land. Coconut, Jack, Mango, Rambutan in the garden. Presently house given on rent, firstly inspection could be done from the road. pls do not tap to the gate.
Price 245 lakhs
0774 706 981

HORANA
MEEWANAPALANA

Attractive house with 39p. 2 bedrooms, office room, attached bathrooms, A/C + fans, 500 sq.ft. large hall, outside servants room, 2 bathrooms, Largr garage, well water & pipe borne water, Solar hot water, 2 Large entrances
345 LAKHS
PLS Contact : 0774 706 981
NEAR ANIL TIMBER DEPOT

Commercial Property for Sale @
Nugegoda, Stanley Thilakaratne Mawatha
(Shop opposite Nugegoda Super Market)
Commercial Property on 4.17 perch with ground floor and upstair floor area of 900 Sq. Ft. for sale.
18 Million Per Perch (Negotiable)
I V A Goonetilleke - 077 776 29 53




MODERN LUXURY FULLY FURNISHED VILLA IN PADUKKA
A SUPER LUXURY 8 BEDROOMS, 10 BATHROOM FULLY FURNISHED VILLA WITH ALL FACILITIES AND AMENITIES, LARGE GARDEN, SWIMMING POOL, SNOOKER ROOM
Super mountain view for all rooms. Extent 50p, One of the best bungalows near to Colombo. Just (35km) all documents available with conformity certificate.

PRICE: 140M
ONLY GENUINE BUYERS
Call : 0777 322 052







හර්නියා
රෝගීන් සඳහා
ශල්‍යකර්මවලින් තොරව ඖෂධීය ප්‍රතිකාර
ප්‍රවීණ වෛද්‍යවරයෙක් මගින්
සෙත් රෝහල
හෝමාගම
0112 748 808, 0113 031 717
0714 282 721

Advertise Here
5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,500/- +VAT
adzsuo@gmail.com




SEYA GLASS & MIRRORS

Shower Cubicles
Tempered Glass
Glass Installing
Aluminium Pantry Cupboards
Wall Cladding
Aluminium Fabricating
All Kinds of Glass Work
0777 917 148/ 0777 912 313

HOUSE FOR SALE IN
KEGALLE

2 storey house on 39.5 perches land in residential area of Kegalle town with 5 bedrooms, 2 bathrooms. 5 minutes walk from Kegalle Convent and 5 minutes drive from Kegalle Base Hospital. Two separate Survey Plans available for separate sale in 20 perches and 19.5 perches blocks with access road.
LOCATION : 500 M FROM THE KEGALLE PUBLIC GROUNDS
Please Contact on : 0755 214 576

தினகரன் வாரமஞ்சரி
சிறு விளம்பரங்கள்
சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்
முதல் 15 சொற்களுக்கு 600/- ரூபா
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

FOR RELIEVING
JOINT PAINS & DIFFICULTIES IN CLIMBING STAIRCASES UP & DOWN, WALKING AND STANDING UP.
100% Natural
MIRACLE REMEDY FOR CURING JOINT DISORDERS INTERNALLY.

DEEGAYU JOINTHEALER PLUS
COMPLETE CURE AFTER 4 WEEKS USE.
ONLY RS.2490.00 TO BE DELIVERED TO YOUR DOORSTEP.
DEEGAYU HELA OSU COMPANY
KANDY ROAD, KALAGEDIHENA
(IN FRONT OF FILLING STATION.)
0117 673 402
0710 397 399 / 0710 397 644
JOIN AILMENT CLINIC - ON EVERY SUNDAY FROM 9.30 A.M. TO 5.00 P.M.

## இஸ்ரேல் – அமெரிக்க கூட்டு

# லெபனான் மீதான தரைவழித் தாக்குதலுக்கு தயாராகின்றதா?



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

இஸ்ரேல் ஹமாஸ் போர் லெபனானை நோக்கி விரிவாக்கம் அடைந்துள்ளது. படிப்படியாக தரைவழித் தாக்குதலுக்கு இஸ்ரேலும் அமெரிக்காவும் திட்டமிடுகின்றன. அதற்கான தயாரிப்புகளை முழு அளவில் முன்னெடுக்கவும் அமெரிக்கா அதற்கு ஒத்துழைப்பு வழங்கவும் தயாரான ஒரு சூழல் ஏற்பட்டுள்ளது. ஏறக்குறைய ஹமாஸ் அமைப்பும் ஈரானும் இஸ்ரேலின் அணுகுமுறையால் இப்போரிலிருந்து தற்காலிகமாக அப்புறப்படுத்தப்பட்டுள்ள நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது ஹிஸ்புல்லாவே இஸ்ரேலினதும் அமெரிக்காவினதும் பிரதான எதிரியாகவுள்ளது. ஏனைய எதிரிகள் இஸ்ரேலிய அமெரிக்க கூட்டிடம் தோல்வி கண்டுள்ளன. இக்கட்டுரையும் லெபனான் நோக்கிய தரைவழி தாக்குதலின் முக்கியத்துவத்தை தேடுவதாக உள்ளது.

ஹிஸ்புல்லா அமைப்பை நோக்கித் தரைவழி தாக்குதலுக்கான திட்டமிடலை ஆரம்பிக்கின்ற அதேவேளை சர்வதேச சமூகத்திடம் இருந்து அல்லது மேற்கு நாடுகளின் கூட்டிடமிருந்து போர் நிறுத்த உடன்படிக்கைக்கான கோரிக்கையும் வெளியாகியுள்ளது. குறிப்பாக அமெரிக்கா 21 நாட்களுக்கான போர் நிறுத்த கோரிக்கையை முன்வைத்திருக்கின்றது. அதற்கான ஆதரவினை மேற்கு நாடுகளும் கட்டார், சவுதி அரேபியா உட்பட மேற்காசிய நாடுகளும் முன்மொழிந்துள்ளன.

இது தொடர்பான உரையாடலை அமெரிக்கா முன்வைத்திருப்பதாக அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் தெரியப்படுத்தியுள்ளார்.

இதே சந்தர்ப்பத்தில் இஸ்ரேலிய பிரதமர் 27.09.2024 ஐக்கிய நாடு சபையில் உரையாற்றியுள்ளார். அவரது உரையின் சாராம்சம் இஸ்ரேலிய மக்களை பாதுகாப்பதும் அவர்களுடைய இருப்பை உத்தரவாதப்படுத்துவதும் இஸ்ரேலின் இறைமையை முதன்மைப்படுத்துவதும் எனக் குறிப்பிட்டுள்ளார். இதே சந்தர்ப்பத்தில் அவரது உரைக்கு அதிகமான விமர்சனங்களை பல தரப்பும் முன்வைத்தாலும் உலக நாடுகள் பெரிய அளவில் அதற்கான முக்கியத்துவத்தை கொடுத்துள்ளன. இதே சந்தர்ப்பத்தில் லெபனான் பிரதமர் நஜிப் மிகாதி தெளிவாக இஸ்ரேலின் தாக்குதலை கண்டித்ததோடு இஸ்ரேலின் மிருகத்தனமான தாக்குதலால் லெபலான் மக்களின் மனித உரிமைகளும் இறையாண்மையும் அப்பட்டமாக மீறப்படுகிறது என்று வெளிப்படுத்தியுள்ளார். தாக்குதலை சர்வதேச மட்டத்தில் அனேகமான கீழைத்தேச நாடுகளின் தலைவர்கள் நிராகரித்துள்ளனர். அதேசந்தர்ப்பத்தில் மேற்கு நாடுகள் போர் நிறுத்த உடன்படிக்கை என்று தொடர்ச்சியான ஒரு உரையாடலை முன்வைத்து ஆரோக்கியமான போர்க்களத்தை தயார் செய்துவருகின்றன. இதனை அமெரிக்கா தலைமையிலான மேற்கு கூட்டு மேற்கொண்டு வருகிறது. கடந்த காலம் முழுவதும் ஹமாஸுடனான போர் நிறுத்த உடன்பாடு சாத்தியப்படுத்தாத ஒரு சூழலில் அதற்கான முயற்சிகளையும் நடவடிக்கைகளையும் மீளமீள முன்வைத்ததும் பேச்சுவார்த்தைகளை மேற்குலகம் நகர்த்தியதும் அக்காலப் பகுதிகளில் ஹமாஸ் அமைப்பின் அரசியல் தலைமைகள், இராணுவ தலைமைகள் ஹிஸ்புல்லாவின் இராணுவ தலைமைகள் என அனைத்து தரப்புக்களும் அழிக்கப்பட்டிருந்தமையும் நினைவு கொள்ளத்தக்கது.

இக்காலப் பகுதியை சரியாகவே பயன்படுத்திக் கொண்டு இஸ்ரேலியை புலனாய்வுத்துறையும் இராணுவமும் முன்னநகர்ந்து வெற்றிகரமான தாக்குதல்களை சாத்தியப்படுத்தி இருக்கிறது.



இந்த சூழலில் மீளவும் லெபனான் நோக்கிய தாக்குதல்களை விரிவாக்கி இருக்கின்றது. இதன் மூலம் மீளவும் ஒரு தரைவழிப் போரை முன்னெடுக்க வாய்ப்பு இருப்பதாக கருதப்படுகிறது.

அதற்கு ஆதாரமாக இஸ்ரேல் தாக்குதலை முன்னெடுக்கப் போவதாக இஸ்ரேலின் இராணுவ தளபதிகளும் புலனாய்வு கட்டமைப்புகளும் வெளிப்படுத்தி வருகின்றன. குறிப்பாக ஜெனரல் ஹெர்சி ஹலெவி எதிரியின் பகுதிகளுக்குள் நுழைவது அவசியம் என தனது இராணுவ பிரிவுகளுக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

கடந்த வாரம் முழுவதும் லெபனான் மீது நடத்திய தாக்குதலில் 50க்கும் மேற்பட்ட குழந்தைகள் உட்பட 700 க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனரென்றும் 3000க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனரென்றும் லெபனான் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இத்தாக்குதல்களின் மூலம் ஹிஸ்புல்லா அமைப்பின் ஆயுதக்கிடங்குகள் ஏவுகணை நிலைகள் தாக்கி அழிக்கப்பட்டதாக இஸ்ரேலிய இராணுவம் குறிப்பிடுகிறது.

அதே சந்தர்ப்பத்தில் தொடர்ச்சியாக இயக்கும் விமானங்களும் விமான தாக்குதல்களும் தங்களுடைய திட்டமிடல்களுக்குள்ளால் மேற்கொள்ளப்படுவதாக ஜெனரல் ஹலெவி வெளிபடுத்தியுள்ளார்.

இதனுடைய உள்நோக்கம் இதன் விளைவுகள் தரைவழி தாக்குதலுக்கான முனைப்பை தயார்படுத்தி இருக்கின்றது.

அமெரிக்காவின் போர் நிறுத்த கோரிக்கை என்பது தரைவழி தாக்குதலுக்கான ஆயுதங்களையும் இராணுவத்தையும் தயார் செய்வதற்கான அணுகுமுறையாகவே பார்க்கப்படுகிறது. ஒட்டுமொத்தமாக லெபனானுடைய ஹிஸ்புல்லா அமைப்புகள் அழிக்கப்படுவதும் அதனால் மேற்கொள்ளப்படுகின்ற ஏவுகணை தாக்குதல்களை தடுத்து நிறுத்துவதும் பெரும் அளவுக்கு வடக்கு இஸ்ரேலின் குடியிருப்புகளை உத்தரவாதப் படுத்துவதற்கு வழி வகுக்கும் என இஸ்ரேலிய இராணுவம் குறிப்பிடுகிறது. லெபனானின் தென்பகுதி நோக்கி தாக்குதலை மேற்கொள்ளுகின்ற செய்தியை இராணுவம் வடக்கு இஸ்ரேலில் மீள குடியமர்வை உத்திரவாதப்படுத்துவதற்கான நோக்கோடு மேற்கொள்ளுவதாக வெளிப்படுத்துகின்றது.

நிச்சயமாக தரைவழித் தாக்குதலை இஸ்ரேல் மேற்கொள்வதைத் தவிர்க்க முடியாது என்ற உணர்வை இஸ்ரேலியர்கள் உலகளாவிய ரீதியில் ஏற்படுத்தினார்கள்.

அதனை இஸ்ரேலிய பிரதமர் நெதன்யாகுவின் ஐக்கிய நாடுகள் சபையின் உரை வெளிப்படுத்துகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையில் உலகத்தின் முக்கியமான மேற்கு நாடுகள் அல்லாத தலைவர்கள் போர் நிறுத்தத்தை கூறுகின்ற போதும் அது பெருமளவுக்கு அமெரிக்கா இஸ்ரேல் கூட்டினுடைய நலன்களை நிறைவு செய்வதாகவே அமையும்.

இஸ்ரேலுடைய தாக்குதலில் தவிர்க்க முடியாத சூழலை கட்டமைப்பதில் மேற்கு நாடுகளும் இஸ்ரேலும் முனைப்புடன் செயல்படுகின்றன. ஐக்கிய நாடுகள் சபையில் இஸ்ரேலியப் பிரதமர் உரையாற்றுகின்ற போது இத்தாக்குதலின் முக்கியத்துவம் இஸ்ரேலின் இறையாண்மைக்கு அவசியமானது என்பதையும் மக்களை பாதுகாப்பது என்பதையும் முதன்மைப்படுத்தியிருந்தார்.

விமான தாக்குதல்கள், இராணுவ தளபதிகளின் அணுகுமுறைகள் மற்றும் சர்வதேச மட்டத்தில் மேற்கு நாடுகள் முன்வைக்கின்ற விவாதங்கள் என்பனவற்றை அவதானிக்கின்ற போது விரைவில் ஒரு தரைவழி தாக்குதலை மேற்கொள்வதற்கு தயாராகிறது என்பதை தெளிவாகவே கண்டுகொள்ள முடிகிறது. இதிலிருந்து மீள்வதற்கு சர்வதேசம் முன்னெடுக்கும் அனைத்து முயற்சிகளும் கடந்த காலத்தில் தோற்றது போல் இஸ்ரேலின் முன் தோற்றுப் போகும் என்பதும் தரைவழி தாக்குதல் அவசியமானதா இல்லையா என்பதை விமானத் தாக்குதல்களும் ஏவுகணை தாக்குதல்களும் ஹிஸ்புல்லாவை அழிவுக்கு உட்படுத்துகின்ற நிலைய பொறுத்து அமையும் என்பதும் குறிப்பிடப்படுகின்றது. சில சந்தர்ப்பங்களில் லெபனானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலே நிலவும் புவியியல் ரீதியான தொடர்பு இப்போரை இஸ்ரேல் பக்கம் சாத்தியப்படுத்த உதவக் கூடியது. வடக்கு இஸ்ரேலிய பகுதியும் புவியியல் ரீதியில் அதிக நெருக்கம் கொண்ட பிரதேசமாக உள்ளது.

1967 களில் இஸ்ரேலிய இராணுவ தளபதியாக பணிபுரிந்த மோஷே தயான், சிரியா மீதான தாக்குதலை தொடக்கியிருந்தார்.

அத்தகைய தொடக்கமே இஸ்ரேலின் வெற்றியை போரில் ஏற்படுத்தியது.

அவ்வாறான ஒரு சூழலுக்குள்ளேயே லெபனான் மீதான உத்தி பொருத்தும் இது ஹிஸ்புல்லாவுக்கும் பொருத்தும். இஸ்ரேலின் சில தீர்மானங்களை புவிசார் அரசியல் ரீதியில் முன்னெடுக்க திட்டமிடுகின்றனர்.

ஏற்கனவே முழுமையாக ஈரான், ஹமாஸ் போன்றன அழிவுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிற நிலையில் ஹிஸ்புல்லாக்களையும் இப்போரிலிருந்து முற்றாக முடிவுக்கு கொண்டு வர இஸ்ரேல் முயலுகிறது. எனவே தாக்குதலின் முக்கிய நோக்கம் வடக்கு இஸ்ரேல் பகுதியில் யூதர்களை குடியமர்த்துவதன் மூலம் போரை முடிவுக்கு கொண்டு வருவதாக அமைய இருக்கின்றது. அதனை நோக்கி மேற்கு நாடுகளும், இஸ்ரேலும் நகர்கின்றன.

# கட்சி தாவுகின்றவர்களுக்கு எங்கள் கட்சியில் இடமில்லை

## தேசிய மக்கள் சக்தி கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பட்டிருப்பு தொகுதியின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர் இ.தவஞானசூரியம்

**ஜனாதிபதித் தேர்தலில் 5,634,915 வாக்குகளைப் பெற்று தேசிய மக்கள் சக்தி கட்சியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார். அதில் 38,832 வாக்குகளை மட்டக்களப்பு மக்கள் அவருக்கு வழங்கியுள்ளனர்.அவர் ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டு இன்று ஞாயிற்றுக்கிழமையுடன் (29.09.2024) ஒன்பது நாட்கள் ஆகின்றன. அதற்கிடையில் இலங்கையின் அரசியலில் மாத்திரமின்றி நிருவாக ரீதியிலும் பல முன்னேற்றகரமான மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன எனலாம். பாராளுமன்றமும் கலைக்கப்பட்டு காபந்து அரசாங்கம் தற்போது நடைமுறையிலுள்ள இந்நிலையில் தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்டம் பட்டிருப்பு தேர்தல் தொகுதியில் அதிகாரமளிக்கப்பட்ட முகவரும், பிரபல சமூகசே வையாளரும், வர்த்தகருமான இளையதம்பி த வஞானசூரியம்(சூரியா) தினகரன் வாரமஞ்சரிக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வி.**



**கே : தேசிய மக்கள் கட்சியின் தற்போதைய வளர்ச்சி அபாரமானதாகக் காணப்படுவதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். இதனை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

தேசிய மக்கள் சக்தி இலங்கையில் மக்களின் உணர்வலைகளை கற்றறிந்தவர்கள், கல்விமான்கள் அனைவரின் ஒத்துழைப்புடன் அரசியல் மாற்றம் ஒன்று இந்த நாட்டிற்கு அத்தியாவசியமானது என கருதி எடுத்த முடிவுக்கமைய தற்போது தேசிய மக்கள் சக்திக்கு அதிகாரம் கிடைத்துள்ளது. அதில் அநுர குமார திசாநாயக்க சிறந்த அறிவாளி என்பதற்கு அப்பால் மதிநுட்பம் வாய்ந்தவராக கருதப்படுகின்றார். அவர் இனப் பாகுபாடுகளை களைந்து அனைவரையும் ஒரே குடையின் கீழ் ஒன்றிணைக்கப் பாடுபடுகின்றார்.

இந்த நாட்டை பொருளாதார ரீதியாக முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும், உலகத்தில் ஒரு பொருளாதார மையமாக இலங்கையை மாற்ற வேண்டும், சுற்றுலாத் துறைக்கான சிறந்த இடமாக அது மாற்ற வேண்டும், ஆழ்கடல் மீன்படி உள்ளிட்ட பல விடயங்களை கருத்தில் கொண்டு சிறந்த நாட்டை கட்டி எழுப்பும் ஒரே நோக்குடன் ஜனாதிபதி செயற்பட்டு வருகின்றார். அனைவரும் உழைத்து வாழ வேண்டும் உழைப்பாளிகளாக அனைவரும் மாற வேண்டும் என்ற கொள்கையை எமது கட்சியின் தலைவர் கடைப்பிடித்து வருகின்றார். அத்தோடு தன் நலம் கருதாது நாட்டுக்காகவும், மக்களுக்காகவும், தன்னையே அர்ப்பணித்து செயற்படுகின்ற ஒரு செயல் வீரனாகவே அவர் பார்க்கப்படுகின்றார். அவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதிலிருந்து பெறுமதி வாய்ந்த வாகனங்களையோ, ஆடம்பரங்களையோ அவர் அனுபவிக்கவில்லை. சாதாரணமாக அவருடைய சொந்த வீட்டிலேயே தங்கி வருகின்றார். நாட்டில் மாற்றம் கொண்டுவர வேண்டும் எனில் மக்கள் தங்களுடைய கடமைகளை செய்ய வேண்டும் என்ற கருத்துக்கிணங்க, தற்போது அனைத்து அரசு அலுவலர்களும், கடமையை கண்ணியமாக நிறைவேற்றுகின்றனர். இதுவொரு பாரிய வெற்றியாகும்.

தொடர்ந்து மக்கள் அனைவரும் அவருக்கு ஆதரவளித்து வரும் பட்சத்தில் இந்த நாடு உலகத்திலேயே ஒரு முதன்மையான நாடாகவும் ஒரு செழிப்பான சகல சௌபாக்கியங்களும் நிறைந்த தன்னிறைவு பெறுகின்ற நாடாக மலரும். அதற்காக எதிர்வருகின்ற பாராளுமன்றத் தேர்தலிலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையான ஆசனங்களை பெறுவதற்கு மக்கள் வாக்குகளை வழங்க வேண்டும் என நான் கருதுகிறேன். இதுதான் இந்த நாட்டு தலைவராக வந்திருக்கின்ற எனது கட்சி தலைவர் அநுர குமார திசநாயக்கவுக்கு மக்கள் வழங்குகின்ற கைங்கரியமாகும்.

**கே: சிலர் எதிர்பார்த்திராத வகையில் ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வென்றுள்ளது. ஆனாலும் இந்த வெற்றியை தமிழ் மக்கள் எவ்வாறு பார்க்கின்றார்கள் ?**

ஜனாதிபதி தேர்தலில் கிடைத்த வெற்றியை தமிழ் மக்கள் என்று மட்டும் பார்க்காமல் இந்த நாட்டு மக்கள் என்ற அடிப்படை இன, மத பேதமில்லாமல் பார்க்க வேண்டும். அனைத்து சுதந்திரங்களும் எமக்கு கிடைக்கும் போது ஏன் எமது நாட்டை வளர்ச்சி அடைய செய்ய முடியாது. கருத்து வேறுபாடுகள் இன, மத பேதங்களுக்கு அப்பால் நான் இந்த நாட்டு பிரஜை. இந்த நாட்டின் மகன் என்ற வகையில் இந்த நாட்டுக்காக அர்ப்பணித்து உள்ளோமே என்று வாழ்ந்தால் நாங்கள் நிறைவாக நல்ல ஆரோக்கியமாக வாழலாம்.

**கே : எதிர்வருகின்ற பாராளுமன்றத் தேர்தலில் உங்களுடைய கட்சி அதிக ஆசனங்களை பெறுவதற்காக எவ்வாறான வேட்பாளர்களை உள்ளீர்ப்பதற்கு திட்டமிட்டிருக்கின்றீர்கள்?**

தன்னலமற்ற, மக்களுக்காக சேவை செய்யக்கூடியவர்களும், மக்களுக்காக மக்களோடு சேர்ந்து மக்களை நன்னெறிப்படுத்திக் கொண்டு செல்லக்கூடிய ஆற்றல் உள்ளவர்களாகவும், தங்களுடைய திறமைகளை வெளிக்காட்டி மக்களுக்கு விழிப்புணர்வுகளை வழங்கி பங்களிப்புச் செய்யக் கூடியவர்களாகவும், உழைப்பாளிகளாக மக்களை மாற்றக் கூடியவர்களாகவும், குற்றங்கள் மற்றும் ஊழலற்றவர்களாகவும், மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற அடிப்படையில் மக்களுக்கு தொண்டர் அடிப்படையில் சேவை செய்யக்கூடிய நபர்களாகத் தேர்வு செய்வோம்.

**கே : கடந்த ஜனாதிபதி தேர்தலில் அதிகளவு வாக்குகளை ரணில் விக்கிரம சிங்க மற்றும் சஜித் பிரேமதாச ஆகியோருக்கு மட்டக்களப்பு மக்கள் வழங்கியிருந்தார்கள். சுமார் 38832 வாக்குகளை தேசிய மக்கள் சக்திக்கு மட்டக்களப்பு மக்கள் வழங்கி இருக்கின்றார்கள். மட்டக்களப்பு மக்கள் மத்தியிலும் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை நீங்கள் உணர்கின்றீர்களா?**

ஒரு காலத்தில் தேசிய மக்கள் சக்தி தொடர்பில் பிழையான கருத்துக்கள் மக்கள் மத்தியில் காணப்பட்டன. அது மக்கள் மனங்களில் ஒரு தவறான உணர்வை ஏற்படுத்தியிருந்தது. அந்தக் கட்சிக்கு மக்கள் ஆதரவு இல்லாமல் இருக்கின்ற ஒரு நிலையை கொண்டுவர வேண்டும் என பலர் தெரிவித்தார்கள். ஏனைய இனவாதம் பேசுகின்றவர்களும், தாங்கள் மாத்திரம் வெல்ல வேண்டும் என்று நினைத்தவர்களும், உள்ளார்கள். இது அவர்களின் குறுகிய நோக்கம் கொண்ட பார்வையாகும்.

தற்போதைய நிலையில் நாங்கள் மக்களுக்கு வழங்கிய தெளிவூட்டல்களுக்கு இணங்க அதனை மாற்றி 38 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகளையும் எனது கட்சி மட்டக்களப்பிலிருந்து பெறக்கூடிய அளவிற்கு மாற்றம் ஒன்றைக் கொண்டு வந்திருக்கின்றோம். அது எமக்கு கிடைத்த பாரிய வெற்றியாகும். இனிவரும் காலங்களில் கட்சியின் கொள்கையின்படி ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய மட்டக்களப்பு மாவட்டத்திலும் மூன்று அல்லது நான்கு பாராளுமன்ற ஆசனங்களை பெறுவதற்குரிய நோக்கோடு தான் நாங்கள் தற்போது எமது செயற்பாடுகளை முன்நகர்த்தியுள்ளோம்.

அதற்கு ஏற்றார் போல் செயற்படக்கூடிய நல்ல ஆற்றல் உள்ள மக்கள் சேவகர்களாக வருபவர்களைக் கொண்டு அதன் மூலம் அதிக அளவு வாக்குகளை பெற்று மட்டக்களப்பு மாவட்டத்திற்கு சேவை செய்வதற்கு நாம் சிந்தித்துள்ளோம். வருங்காலத்தில் மட்டக்களப்பு மாவட்டமும் இலங்கையில் சிறந்ததொரு மாவட்டமாகவும், பொருளாதாரத்திலும் சிறந்து விளங்கி செல்வம் கொழிக்கும் மாவட்டமாகவும் மாற வேண்டும் என்பதுதான் எனது எதிர்பார்ப்பு.

**கே :தற்போதைய நிலையில் ஏனைய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் உங்களுடைய கட்சிக்கு வருவதற்கு முனைந்தால் அது தொடர்பாக உங்களுடைய கட்சியின் நிலைப்பாடு என்னவாக அமையும்?**

முதலாவதாக மக்கள் சேவகன் என்பதை முன்னிறுத்த வேண்டும் என்பது கட்சியின் கோட்பாடு. ஏனைய கட்சியிலிருந்து தாவி வருபவர்களை அனேகமாக எமது கட்சி இணைத்துக் கொள்ளாது.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னரே எமது கட்சியில் இணைவதற்கு பலர் விருப்பம் தெரிவித்திருந்தனர்.

அதனை எமது கட்சி ஏற்றுக் கொள்ளவில்லை. நமது கட்சி தலைவரையும் கட்சியின் கொள்கைகளையும் உலக நாடுகள் தற்போது பாராட்டியுள்ளன. ஆகக் குறைந்த செலவிலேயே மக்கள் வரிப்பணத்தை வீண் விரயம் செய்யாமல், பெரும்பான்மையான வாக்குகளை மக்களிடமிருந்து பெற்றுக் கொண்டுள்ளது

**கே : ஊழலற்ற நாட்டை முன் கொண்டு செல்ல வேண்டும். நாட்டை சிறந்த முறையில் வழிபடுத்த வேண்டும் என்ற நோக்குடன் ஜனாதிபதி செயற்பட்டு வருகின்றார். இந்நிலையில் தமிழ் மக்களின் இனப் பிரச்சினை மற்றும் மாகாண சபை அதிகாரங்கள் தொடர்பாக நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?**

தமிழ் மக்கள் வாழ்வதற்குரிய அனைத்து வழிவகைகளையும் இந்த அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்கும். அத்தோடு மக்களுக்குரிய நல்ல செயற்திட்டங்களையும் மக்களின் நிறைவேறாத தேவைகளையும் அரசாங்கத்தோடு பேசி நாம் பெற்றுக் கொடுப்போம். அதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

இனங்களுக்கிடையே பாகுபாடு இல்லாமல், அனைத்து மக்களும் சமமான முறையில் வாழ்வதற்கு, சம உரிமையோடு வாழ்வதற்கு உரிய நாடாகத்தான் எமது நாடு மாறிக் கொண்டு வருகிறது.

**கே : நாடு கடந்த கால பொருளாதார நெருக்கடியிலிருந்து தற்போது மெல்ல மெல்ல மீண்டு வருகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்திலும் மக்கள் கடந்தகாலங்களில் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு வந்தார்கள். அவர்களை வளப்படுத்துவதற்குரிய வேலை திட்டங்கள் ஏதும் உங்களிடம் உள்ளதா?**

கிழக்கு மாகாணத்திலே ஏற்றுமதி வலையம் ஒன்று அமைக்கப்படும். இதனூடாக சிறு தொழில் முயற்சியாளருக்கு ஆளணிகளும், உற்பத்திகளுக்குரிய உள்ளீடுகளும் வழங்கப்பட்டு ஊக்குவிப்பு முன்னெடுக்கப்படும். அதுமாத்திரம் இன்றி கிழக்கு மாகாண உற்பத்திகள் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படக்கூடிய செயற்கூட்டங்கள் உள்ளன. விரைவில் கிழக்கு மாகாணம் ஒரு எழுச்சியான மாகாணமாக திகழும் என நான் நினைக்கின்றேன். அதுபோல் இலங்கை பூராகவும் முன்னெடுக்கப்படும் என நாம் கருதுகின்றோம். இதன் மூலம் வறுமை முற்றாக ஒழிக்கப்பட்டு மக்களின் கல்வி வளர்ச்சிக்கும் நாங்கள் பெரும் உந்து சக்தி அளிக்க இருக்கின்றோம். மக்களின் வருமானத்தை உயர்த்தி விட்டால் வறுமை என்ற சொல்லுக்கு இடம் இல்லாமல் போய்விடும்.

**தேசிய மக்கள் சக்தியின் மலையக தேசிய குழு உறுப்பினரும், கண்டி மாவட்ட நிறைவேற்று குழு உறுப்பினருமான கலாநிதி பி. பி. சிவப்பிரகாசத்துடனான ஒரு நேர்காணல்.**

**உணவு, கல்வி சுகாதாரம் போன்றவற்றுக்கான வற்வரி நீக்கப்படும். இதனால் அனைத்து மக்களும் நன்மை அடைவார்கள்**



## தேசிய மக்கள் சக்தியில்

# உண்மையாக செயற்படும் எவரும் தனிப்பட்ட எந்த நன்மைகளையும் எதிர்பார்ப்பவர்கள் அல்ல

**கே : இலங்கையின் 9ஆவது ஜனாதிபதியாக அநுர குமார திசாநாயக்க தெரிவு செய்யப்பட்டுள்ளார். இது குறித்து உங்கள் கருத்தை பகிர்ந்துக் கொள்வீர்களா?**

பதில் : இலங்கை வரலாற்றில் முதன் முறையாக சாதாரண விவசாய குடும்ப பின்னணியைக் கொண்ட, கல்வி கற்ற, இடதுசாரிக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட ஒரு சாதாரண குடிமகன் நாட்டின் தலைவராக மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும். தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்கவின் தெரிவானது மக்கள் ஆட்சியில் சாதாரண குடிமகனுக்கான முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது. இது இலங்கையின் மறுமலர்ச்சிக்கான ஒரு ஆரம்பமாக இருக்கின்றது.

**அரசியலை தனிநபர் நலத்திற்கோ அல்லது சுரண்டலுக்கோ இங்கு பயன்படுத்த முடியாது.**

**கே : திசைக்காட்டிய ஆட்சி பீடம் ஏற்றுவதற்காக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவை கொண்டு வருவதில் நீங்கள் மலையக மக்கள், வட, கிழக்கு மக்கள், புலம்பெயர் மக்களிடம் கூட பரப்புரை செய்தீர்கள். தமிழ் பேசும் மக்களையும் இணைத்து செல்வதற்கு முயற்சி செய்கின்றீர்கள் அல்லவா?**

பதில் : இந்த நாட்டில் ஒரு மாற்றம், ஒரு மறுமலர்ச்சி இடம்பெறுகின்றது என்றால் அதில் தமிழ் பேசும் மக்களுடைய குறிப்பாக மலையக, ஏனைய பகுதிகளைச் சேர்ந்த தமிழ் முஸ்லிம் மக்களுடைய பங்களிப்பு இன்றியமையாததாகும்.

இந்த மக்களும் இந்நாட்டின் பிரஜைகள், வாக்காளர்கள், வரி செலுத்துபவர்களாகும். எனவே அரசியல் மாற்றத்தில் அவர்களுடைய பங்கை நீக்கி விட்டு பார்க்க முடியாது. ஆனால் கடந்த பல வருடங்களாகவே, மலையக, தமிழ், முஸ்லிம் மக்களுடைய, வட, கிழக்கு தமிழ் முஸ்லிம் மக்களுடைய அரசியல் போக்கானது வித்தியாசமானதாகவே இருக்கின்றது. எனவேதான் அவர்களையும் ஒருங்கிணைத்துச் செல்ல வேண்டியிருக்கின்றது. 2022 மக்கள் போராட்டத்தில் கற்றுக்கொண்ட பாடமானது நாம் அனைவரும் ஒருங்கிணைந்து செல்லவேண்டியதன் அவசியத்தை காட்டிநிற்கின்றது. இந்த நாட்டிலே வருகின்ற எந்த அரசாங்கமும் ஒரு குறிப்பிட்ட இனத்தை சார்ந்ததாக இருக்கக் கூடாது என்ற அடிப்படையிலேயே தமிழ்பேசும் மக்களும் ஆட்சியமைப்பதில் பங்குதாரராக இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலேயே அனைவரும் இணைந்து செல்லவேண்டி ஏற்படுகின்றது. அதேவேளை தேசிய மக்கள் சக்தியில் உண்மையாக செயற்படுகின்ற எவரும் தனிப்பட்ட எந்த நன்மைகளையும் எதிர்பார்த்து வேலைசெய்து பழக்கப்பட்டவர்கள் அல்லர். ஏனைய கட்சிகள் போல் அரசியலை தனிநபர் நலத்திற்கோ அல்லது சுரண்டலுக்கே இங்கு பயன்படுத்த முடியாது.

**திசை காட்டியின் கொள்கையானது மக்களின் சொத்துக்களை வீண்விரயம் செய்யாமல் சட்ட ஆட்சியை நடத்துவதாகும்**

**கே : ஜனாதிபதி அநுர அடுத்து எவ்வாறான திட்டங்களை முன்வைக்க இருக்கின்றார்?**

பதில் : தேசிய மக்கள் சக்தியானது கொள்கை திட்டமொன்றை வெளியிட்டுள்ளது. அதன்படி நாட்டின் அபிவிருத்தி திட்டங்களில் முன்னெடுத்து செல்லப்படும் இந்த திட்டங்களும் கூட்டு முயற்சியாகவே நடைபெறும்.

குறிப்பாக உணவு, கல்வி சுகாதாரம் போன்றவற்றுக்கான வற்வரி நீக்கப்படுவதினூடாக இந்த நாட்டிலே வாழுகின்ற அனைத்து மக்களும் நன்மை அடைவார்கள் ஆரோக்கியமான உணவு, சிறந்த கல்வி, நல்ல சுகாதாரம் என்பவை உறுதிப்படுத்தப்படும் அதேவேளை நாட்டின் பொருளாதார துறையில் உற்பத்தி வருமானத்தை அதிகரிப்பதில் கவனம்செலுத்தப்படும். மேலும் இனங்களுக்கிடையிலான பாகுபாட்டினை நீக்குதல், சமத்துவத்தை உறுதிப்படுத்துதல் என்பவற்றோடு, இலஞ்சம் ஊழல் என்பவற்றை ஒழித்தல் என்பவை அடுத்து வருகின்ற முக்கிய பொறுப்புக்களாகும்.

**கே : ஜனாதிபதியின் இலஞ்ச ஊழலுக்கு எதிரான அதிரடி நடவடிக்கை குறித்து இளைஞர் யுவதிகளுக்கிடையில் அதிகமாக பேசப்படுகின்றது. இது குறித்து உங்கள் கருத்து என்ன?**

பதில் : திசை காட்டியின் கொள்கையானது நேர்மையான மக்கள் ஆட்சி மற்றும் மக்களின் சொத்துக்களை வீண்விரயம் செய்யாமல் சட்ட ஆட்சியை நடத்துவதாகும். அதன்படி தற்பொழுது குறுங்காலத்திலே எடுக்கக் கூடிய பல்வேறு அதிரடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

இலங்கை மக்களின் பொதுச் சொத்துக்களை அரசியல்வாதிகள் துஷ்பிரயோகம் செய்வதும் கொள்ளையடித்திருப்பதும் இப்பொழுது வெளிவந்து கொண்டிருக்கின்றது. உதாரணமாக ஜனாதிபதி செயலகத்துக்கு உரித்தான நூற்றுக்கணக்கான வாகனங்கள் இப்பொழுது கொண்டு வந்து நிறுத்தப்பட்டுள்ளன. பலர் தங்களை வெளிப்படுத்தாமலே வாகனங்களை நிறுத்திவிட்டு ஓடிச் சென்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆகவே இதுவரை காலமும் இந்த பொதுச் சொத்துக்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளமை இப்பொழுது வெளிச்சத்திற்கு வந்து கொண்டிருக்கின்றது.

ஊழல்வாதிகளுக்கு எதிராக நடவடிக்கைகள் ஆரம்பமாகி விட்டன.

**சிறுபான்மை மக்களை வென்றெடுப்பதற்கான வேலைத்திட்டத்தையும் ஆரம்பித்திருக்கின்றோம்.**

**கே : ஜனாதிபதி பதவியேற்பு வைபவம் மிகச் சாதாரணமாக நடத்தப்பட்டது. உண்மையிலேயே இதே நிலைமை தொடரும் என்று நம்புகின்றீர்களா?**

பதில் : இலங்கை மக்களுக்கும் மற்றைய ஆசிய நாட்டு மக்களுக்கும் இந்த முறைமை ஒரு பாடமாக அமையும். மக்களின் சொத்துக்களை வீண்விரயமாக்காமல் நியாயமான மற்றும் சாதாரணமான முறையில் பதவி ஏற்பது செலவினங்களைக் குறைப்பதற்கும் வளங்களை ஒழுங்காக பயன்படுத்துவதற்கும் ஒரு முன்னுதாரணமாகும். கடந்த காலங்களில் இவ்வாறான விழாக்களுக்கு கோடிக்கணக்கான ரூபாய்களை வீண்விரயம் செய்து இந்த நாட்டை வங்குரோத்து நிலைமைக்கு கொண்டு சென்றுள்ளனர். அது மக்கள் பணத்தில் சவாரி செய்த, செய்ய விரும்புகின்ற ஏனைய அரசியல்வாதிகளுக்கு ஒரு பாடமாகும். இனி வருகின்ற காலம் மாற்றம் நிறைந்ததாகவே இருக்கும்.

**கே : மக்கள் பொருளாதார ரீதியாக மிகவும் பின் தள்ளப்பட்ட நிலையில் வாழ்ந்து வருகின்றார்கள். நாட்டில் கடன் சுமையானது சுமக்க முடியாததாக இருக்கின்றது எப்படி மீண்டெழ போகின்றீர்கள்? திரும்பவும் வரிசை யுகம் வருமா?**

பதில் : நீங்களோ மக்களோ எந்தவிதத்திலும் அச்சப்பட வேண்டியதில்லை. மக்களின் சொத்துக்களை நாங்கள் கொள்ளையடிக்க மாட்டோம். பிரச்சினைகளை கூட்டாக ஒன்றிணைந்து எதிர்கொள்ளவே விரும்புகின்றோம். அந்த அடிப்படையில் குறுகிய காலத்திலும், நடுத்தர கால அளவிலும் விவசாய, மீன்பிடி, உற்பத்தி துறையை விருத்தி செய்ய திட்டமிட்டுள்ளோம். அதேபோல் உணவு உற்பத்தித் துறையை மேலும் விருத்தி செய்ய இருக்கின்றோம். மேலும் உல்லாசப் பிரயாணத் துறை, பெருந்தோட்ட துறை, ஆடை உற்பத்தி என்பவை குறித்து கவனம் செலுத்தப்படும். விசேடமாக சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து கடன் சுமையை மறுசீரமைப்பதற்கான பேச்சு வார்த்தை நடாத்தப்பட்டு வருகின்றது.


(17 ஆம் பக்கம் பார்க்க)

இக்பால் அலி

# நுவரெலியாவில் மட்டக்குதிரையால் தொடரும் தொல்லை!

## விபத்துகளும் தொடர்கின்றன

நுவரெலியா மாநகர சபை மற்றும் நுவரெலியா பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அண்மைக் காலமாக சுற்றித்திரியும் மட்டக் குதிரைகளினால் பல்வேறு சிரமங்களை பொதுமக்கள் எதிர்நோக்குகின்றனர். விபத்துகளும் அதிகரித்து வருகின்றன. பிரதான வீதியில் வேகமாக வரும் வாகனங்களுக்கு குறுக்கே மட்டக்குதிரைகள் திடீரென பாய்வதால் விபத்துகள் நிகழ்வது பெருகி வருகிறது. நுவரெலியாவில் தற்போது காலை மற்றும் மாலை நேரங்களில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் மட்டக்குதிரையின் சாணம் மற்றும் சிறுநீரால் சாலையின் வழுக்கும் தன்மையும் அதிகரித்து அதிக விபத்துகளும் ஏற்படுகின்றன. இவை தவிர, வீதியில் அவை திரிவதால் விபத்துகள் ஏற்பட்டு வீதியால் செல்லும் மக்கள் பல இடையூறுகளுக்கு முகம் கொடுக்க நேரிடுகின்றது.





அத்துடன் நுவரெலியாவிற்கு வரும் வெளிநாட்டு, உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளும் சுதந்திரமாக வீதிகளில் நடமாடுவதற்கு அச்சப்படுகின்றனர்.

நுவரெலியாவில் பிரதான பகுதிகளில், வீதி ஓரங்களின் பெரும்பாலான இடங்களில் மின் விளக்குகள் பழுதடைந்து ஒளிர்வதில்லை. இதனால் அதிக இருள் சூழ்ந்த பகுதிகளில் கூட்டமாக நிற்கும் மட்டக்குதிரைகள் மீது வாகனங்கள் மோதி விபத்துகள் அதிகளவில் சம்பவிக்கின்றன. விபத்தில் இறப்பு வீதம் குறைவு என்றாலும் கை, கால் முறிவு, தலையில் பலத்த காயம் ஏற்பட்டு வைத்தியசாலைக்கு செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமை வழக்கமாக உள்ளது.

குறிப்பாக பிரதான வீதிகள், பொதுச் சந்தைகள், விளையாட்டு மைதானங்கள், பாடசாலைகள் உள்ளிட்ட பொது இடங்களில் மட்டக்குதிரைகளின் நடமாட்டம் பொது மக்களுக்கு பெரும் தொல்லையாக இருக்கின்றது.

இதில் அதிகமாக நுவரெலியா மாநகரசபை (சினிசிட்டா) பொது மைதானத்தில் தினந்தோறும் நூறுக்கும் மேற்பட்ட மட்டக் குதிரைகள் மேய்ச்சலுக்கு விடப்படுகின்றன. அவை அங்கு விளையாடும் பாடசாலை மாணவர்கள் உட்பட அனைவரையும் மிரட்டி விரட்டுகின்றன. அதனால், மாணவர்கள் அச்சத்துடன் விளையாடாமலேயே மன உளைச்சலுடன் திரும்புகின்றனர்.

அதிகமானவர்கள் தினமும் காலை மற்றும் மாலை நேரங்களில் மைதானத்தை சுற்றி நடைப்பயிற்சி மேற்கொள்கின்றன. இதனால் நடைப் பயிற்சி செல்லும் அனைவரும் அச்சத்துடன் செல்கின்றனர். எனவே குறித்த மைதானத்துக்குள் மட்டக்குதிரைகள் மாடுகள், நாய்கள் நுழையாத வண்ணம் பாதுகாப்பை ஏற்படுத்த வேண்டும் என்று தெரிவிக்கின்றனர். அத்துடன் இரவு நேரங்களில் நுவரெலியா பிரதான நகரில் வர்த்தக நிலையங்களை மூடியவுடன் பொது மக்களின் நடமாட்டம் குறைவாகவே காணப்படும். அவ்வாறான நேரங்களில் பெரும் எண்ணிக்கையிலான மட்டக்குதிரைகள் கூட்டம் கூட்டமாக முழு நகரையும் ஆக்கிரமித்து அசுத்தப் படுத்தி வருவதும், துர்வாடை வீசுவதும் வர்த்தகர்களுக்கு பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்துகின்றது.

நுவரெலியா – கண்டி, நுவரெலியா – உடப்புசல்லாவ, நுவரெலியா – பதுளை போன்ற வீதிகள் பிரதான போக்குவரத்து வீதியாக இருந்து வருகிறது. இந்த வீதிகளில் பகல் நேரம் மட்டுமன்றி, இரவு நேரங்களிலும் தினமும் நூற்றுக்கணக்கான வாகனங்கள் சென்று வருகின்றன. அரசு மற்றும் தனியார் பேருந்துக்கள், பாடசாலை வாகனங்கள், அரசுதுறை சார்ந்த வாகனங்கள், கனரக வாகனங்கள் முதல் சிறிய ரக வாகனங்கள் வரை இந்த வீதியில் செல்கின்றன. போக்குவரத்து மிகுந்த இந்த வீதியில் 30க்கும் மேற்பட்ட மட்டக்குதிரைகள் தினமும் சுற்றித்திரிகின்றன. போக்குவரத்துக்கு இடையூறாக வீதியில் ஆங்காங்கே படுத்து ஓய்வெடுக்கின்றன. இதனால் வாகன சாரதிகள், குறிப்பாக இருசக்கர, முச்சக்கரவண்டிகள் மட்டக்குதிரை நகரும் திசையை கணிக்க முடியாமல் மோதி விபத்தில் சிக்குகின்றன.

இதனால் அவ்வழியாக வாகனங்கள் செல்ல முடியாமல் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதுடன், அடிக்கடி வாகன விபத்து ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்படுவதும், காயமடைவதும் தொடர் கதையாகி வருகிறது.

மேலும் மட்டக்குதிரை வளர்க்கும் உரிமையாளருக்கு பலதடவைகள் உரிய தரப்பினரால் தெளிவுபடுத்தப்பட்டும் உரிய நடவடிக்கைகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை.

அதிகமாக கிராமப்புறங்களில், மேய்ச்சலுக்கு பிறகு மட்டக்குதிரைகளை மாலை நேரங்களில் தொழுவத்தில் கட்டும் பழக்கம் அதிகமாக உள்ளது. இதனால் கிராமங்களில் இரவு நேரங்களில் மட்டக்குதிரைகள் நடமாட்டத்தை வீதிகளிலோ பிற பிரதான இடங்களிலோ காண இயலாது. ஆனால் மாறாக நகர்ப்புறங்களில் உள்ளவர்கள், தாங்கள் வளர்க்கும் மட்டக்குதிரை மீது பொறுப்பும் அக்கறையும் காட்டாமல் அவற்றைத் தொழுவத்தில் கட்டாததால் விபத்துகள் பெருமளவில் நடைபெறுகின்றன,

எனவே, நகர்ப்புறங்களில் மட்டக் குதிரையால் ஏற்படும் விபத்துகளைக் குறைக்கும் வகையில், நகரின் முக்கிய பகுதிகளில் மேய்ச்சல் நிலங்கள் உருவாக்கப்பட்டு, அவற்றில் கால்நடைகள் மேய்வதற்கு உரிய ஏற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் எனவும், விபத்து ஏற்படும் முன்பு பிரதான வீதிகளில் சுற்றித்திரியும் மட்டக்குதிரைகளை அப்புறப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், இப்பிரச்சினையின் தீவிரத்தை உணர்ந்து மட்டக் குதிரை வளர்ப்போருக்கு உரிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, அதையும் மீறும் பட்சத்தில் மட்டக்குதிரையை பறிமுதல் செய்து அதிகரித்த தண்டப் பணத்தை விதிக்க வேண்டும் என பொது மக்களும், வாகன சாரதிகளும் கோரிக்கை விடுக்கின்றனர்.

செ.திவாகரன்
நானுஓயா.

### குளவித் தாக்குதலில் இருந்து பாதுகாக்க

# தொழிலாளர்களுக்கு பொருத்தமான ஆடைகள் அவசியம்!



தோட்ட நிர்வாகங்களும் பெருந்தோட்ட கம்பெனிகளும் தோட்டங்களை சரியாக பராமரிக்காது லாபத்தை மாத்திரம் நோக்காக கொண்டு செயற்படுவதனால் தேயிலை தோட்டங்கள் பெரும் பகுதி காடாகி வருகின்றன.

இதன் காரணமாக வேலைத்தளங்களில் தொழிலாளர்களுக்கு உயிர் அச்சுறுத்தல்கள் ஏற்படுவதோடு தேசிய வருமானத்தில் பெரும் பகுதியினை இழப்பதற்கு வழிவகுக்கிறது என்று செங்கொடிச் சங்கத்தின் தலைவர் எஸ். சிவசுந்தரம் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் தோட்ட நிர்வாகங்கள் இலாபத்தை மாத்திரம் கருத்திக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. உதாரணமாக தேயிலை கொழுந்து பறிக்கும் பணிக்கு முக்கியத்துவம் கொடுப்பதோடு ஏனைய தோட்ட பராமரிப்பு வேலைகளுக்கும் எவ்விதமான பங்களிப்பும் வழங்குவதில்லை.

ஆரம்ப காலங்களில் ஆண் தொழிலாளர்கள் தோட்டப் பராமரிப்பு வேலைகளிலும் பெண் தொழிலாளர்கள் கொழுந்து பறிக்கும் வேலைகளிலும் ஈடுபட்டனர்.

தற்போது மத்திய மலைநாட்டில் உள்ள பல தோட்டங்கள் பராமரிக்கப்படாததால் காடாகி வருகின்றது. இதனால் பெருந்தோட்ட பகுதிகளில் காட்டு மிருகங்கள் குறிப்பாக சிறுத்தை, பன்றி போன்றன அதிகளவில் உலவுவதோடு விஷ ஜந்துக்கள், விஷ அட்டைகள், குளவிக் கூடுகள் அதிகளவில் காணப்படுகின்றன.

நாளாந்தம் பெருந்தோட்ட தொழிலாளர்கள் குளவிக் கொட்டுக்கு இலக்காகி வருவதுடன் அட்டைக்கடிக்கும் ஏனைய காட்டு மிருகங்களின் தாக்குதலுக்கும் உள்ளாகி வருவதால் பலர் உயிரிழந்தும் வருகின்றனர்.

இவ்வாறு குளவி கொட்டுக்கு இலக்காகும் தொழிலாளர்களுக்கு தோட்ட நிர்வாகம் எவ்விதமான கொடுப்பனவுகளையோ நாளாந்த வேதனத்தையோ நட்ட ஈட்டையோ வழங்குவதில்லை. அதேபோல் வன விலங்குகளால் தாக்குதலுக்கு உள்ளானவர்கள், காயமடைந்தவர்கள் மரணித்தவர்களுக்கு இதுவரைகாலமும் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை.

இதன் காரணமாகவும் பெருந்தோட்டங்களில் தற்போது பெருகியுள்ள விஷ அட்டைகள் காரணமாகவும் பணிக்குச் செல்ல முடியாது மக்கள் தோட்டப் பணிகளில் இருந்து விலகி செல்வதை காணக் கூடியதாக உள்ளது.

தற்போது மத்திய மலைநாட்டில் உள்ள அனைத்து தேயிலை தோட்டங்களிலும் விஷ அட்டைகள் பெருகி விட்டதால் அட்டை கடிக்கு உள்ளான தொழிலாளர்கள் சரும நோயால் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளனர்.

ஆகவே இது விடயத்தில் தோட்ட நிர்வாகங்கள் துரித நடவடிக்கை எடுத்து காடாகிக் கிடக்கும் தேயிலைத் தோட்டங்களை மீள் சுத்திகரிப்பதோடு தொழிலாளர்களின் உயிர் பாதுகாப்பையும் உறுதி செய்ய வேண்டும் என்று செல்லையா சிவசுந்தரம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த வாரம் மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள புரவுன்சீக் தோட்ட புரவுன்சீக் பிரிவில் 40 பெண் தொழிலாளர்கள் குளவி கொட்டுக்கு இலக்காகிய நிலையில் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தனர். கடந்த 20 நாட்களாக குளவி கொட்டுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும், அவர் தெரிவிக்கின்றார்.

தொடர்ந்து குளவி தாக்குதலுக்கு உள்ளாகும் பிரதேசங்களிலுள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கு பொருத்தமான பாதுகாப்பு ஆடைகளை வடிவமைத்து வழங்குவதற்கு பொறுப்பான திணைக்களங்கள் நடவடிக்கை எடுத்தால் அது அப்பாவி தோட்டத் தொழிலாளர்களுக்கு பெரும் ஆறுதலாக அமையும் என தோட்டத் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

செ.தி.பெருமாள்




# ஆலமரச் சந்தி



அடையாறு ஆலமரம் போல்
சந்தி ஆலமரம்
எங்கள் தோட்ட
அடையாளம்
ஆலமரம் அடைகாத்த
நோர்த் மாத்தளை
சந்தி இது
நல்ல பல சகவாசம் தந்த
சாதனை புரி சந்தி
பட்டாணி விற்பதும்
பஸ் தரிப்பாய் நிற்பதும்
எங்கள் திருமணத்தில்
ஊர் கோலம் தொடங்கி
மறு வீடு அனுப்பி வைக்கும்
மங்களத் திருச் சந்தி
பள்ளிக்கு பஸ் ஏற்றி
கல்விக்கு வழி காட்டும்
தார்ச் சந்தி
பிரட்டு கலைந்து
மலைக்கு போவோர்க்கு
தாம்பூலம்
தந்து வாய் சிவக்க
வழியனுப்பும் சந்தி
அரிசி, பருப்பு, சர்க்கரை
ஆக வேண்டிய
அனைத்தையும்
பற்றெழுதி விற்கும்
அங்காடிச் சந்தி
காமன் திருக் கூத்தில்
சங்கரனார் மருகனுக்காய்
தூதன் ஓலை தொடும் சந்தி
கேசவன் தாத்தாவின்
திருத்தேர் உலா வந்து
அடியவர்க்காய்
அருள்புரியும்
அருட் சந்தி
சந்திக் கடை பாலாவின்
சண்முகத்தின் இஞ்சிட்ட
தேநீரை பருகிக் களித்த சந்தி
ஆல மரப் பறவைகளை
'கெட்டப்' போல் வில்லால்
சிறுகல் அம்பேத்தி
சிதைக்க அசைவச் சந்தி
யுவதிகள் கூடி
ஊர் வம்பு பேசாத
உத்தமச் சந்தி
சில்லறையாய் கல்லோயா
மது விற்கும் கறுப்புக்
கடைச் சந்தி
சண்டையில்
சந்தி சிரிக்கும் சந்தி
மரண ஊர்வலத்தில்
பாடை மாற்றும் முச்சந்தி
கால்மாக்சும் ஏங்கல்சும்
தாமரையும் மல்லிகையும்
செ.க.வையும்
எஸ்.பொ.வையும்
மேடை யிட்டு ஆய்வு செய்த
இலக்கியச் சந்தி

**எஸ்.கிரிஷ்ணன்**
கேகாலை

# திசையறிகருவி...

ஏறிவிடுங்கள் கப்பலில்...
சரி திசை சென்று
கரை சேரலாம்...

வந்த திசை அறியாது..
போகும் திசையுமறியாது..
நடுக்கடலில் நங்கூரமாய்
நின்றிருந்த நம் நாட்டை
திசையறிகருவி உதவியுடன்
சரி திசையில் கூட்டிச்செல்ல
திசையறிந்த மாலுமி
வந்துவிட்டார்...

ஏறிவிடுங்கள் கப்பலில்...
சரி திசை சென்று
கரை சேரலாம்...

அடக்குமுறையும்
அவலட்சண அவலங்களும்
ஆட்சியின் உச்சம் தொட்ட
வரலாறு அநுரவின் வெற்றி..
அது அழகிய வெற்றி..
அமைதியான வெற்றி...

அநுர...
அவர்
அடங்கியிருக்கவில்லை...
அறிவோடு திசைதேடினார்..
சரிதிசை வரும்வரை
சாமர்த்தியமாய்
சாதுவாய் இருந்தார்..

குடும்ப அரசியலை
குழிதோண்டிப் புதைத்தார்...
வரட்டு கௌரவத்தை
விரட்டியடித்தார்..

அரசியல்...
அது அடுத்தநொடி மாறலாம்..
ஆட்சிக் கதிரை...
அடுத்தவர் கை மாறலாம்...

அதனால்...
அநுர வருவது அலாவுதீனின்
அற்புத விளக்கோடல்ல..
அடக்கம் செய்த
அருமை நாட்டை....
அழகியநாடாய் மீண்டும்
ஆக்கிவிட
அநுரவாய் நானும்
அநுரவாய் நீயும்
மாறிடனும்....

ஏறிவிடுங்கள் கப்பலில்...
சரி திசை சென்று
கரை சேரலாம்...

**நுஸ்ரத் மஹ்ரூப்**
மாதம்பை



# துயரவளை நாடி வந்திடாது என்றும்

பெண்டிர் வந்து
போட்ட சண்டை
முடிந்து போன
ஆட்சிகள் காணீரோ?

தலைவர்கள் பலர்
தரணி சாய்ந்திட
நீர் சொல்லும்
மங்கையர் காரணம்.

அன்னையும் அவள்
தந்த அரவணைப்பும்
அவளின்றி வேறேது.
பரிதவித்த குழவிகளிடை.

காமத்தில் பெண்
காணும் சுகம்
வேறொன்றுக்கு நிகர்
இதுவரை இல்லை.

ஆற்றலும் அவளே
ஆர்ப்பரிப்பும் கூடவே
அவளுக்கு நிகர்
அவளன்றி வேறில்லை.

இருந்தும் பாருங்கள்
பாவம் அவள் வாழ்வு.
பழான போதுமது
அழுகிப் போகின் வீண்.

சமூகம் வளர்ந்தேக
துணையாக வருவாள்.
கேட்டபடி வாழும் அந்த
பெண்ணிங்கே தெய்வம்.

அது விடுத்து
நடு வீதிக்கு வந்திட
வழி தந்திடும்
பெண் ஏதோ?

நேர்மறை வாதம்
பேச்சுக்கு பொருந்தும்
இருந்தும் பொருந்தாது
மனிதர் வாழ்வுக்கு.

நெறி சொன்ன மதம்
வழி மாறிப் போக
பலவுயிர் போகிறது
உடல் விட்டு பிரிந்து.

கேட்டால் சொல்லும்
காரணம் பாரும்
அது மதக் கலவரம்.
அமைதி எங்கே?

கோவிலுக்கு போக
அமைதி வரும்.
அந்த கோவிலை
தந்ததுமந்த மதம் தானே!

மாந்தர் வாழ்வை
கலவரம் ஆக்கி
சிதைத்து தந்தது
துயரம் பல.

பிறகெதற்கு அதன்
போதனைகள் நமக்கு.
அது தவறென
தெரிந்த பின்னும்.

அது போலிங்கு
வாழும் வகையில்
மங்கையர் பெறுவர்
போற்றும் வண்ணம்.

வளரும் பருவத்தில்
இடறும் பலருண்டு.
களைதல் விடுத்து
குறைகள் எதற்கு?

பல்லாயிரம் ஆண்டு
உருண்டோடி போகினும்
மண்ணின் மகவு
தமிழரிடை பெண்ணே!

மாற்றிட ஒரு
வேந்தன் வந்தாலும்
மாறிடாத உண்மை.
மங்கை மலராவாள்.

துயரவளை நாடி
வந்திடாது என்றும்.
அவளாக அதை தேடி
போகாத வரை.

**அன்புடன் நதுநசி**

# நீ எங்கே?



அன்பே நீ எங்கே
காத்திருந்தே தேய்கிறதடா!
நோயைப்போல நானாகி
உன் வரவே மருந்தென
விழிமேல் வழிப்பார்க்கிறேனடா!
நிமிடங்கள் விரைய நேரங்கள் ஓட
நாட்கள் மறைந்தே விட
வயதேறி விட வருடமும் மாறிடுதே

நீ வருவாயென இப்போதும்
அப்போதுமாய்
காத்திருந்தே
ஏமாற்றமே பிறப்பாகிடுதடா !

ஏனிந்த தாமதமோ
பொறுமையோடு நகர்கிறதடா.
வருவாயென்றும்
வாழ்வும் மாறிடுமென
நான் உன்னை நினைத்தடா!

**கவித்தாரகை**
கற்பிட்டி

# மனிதம் எங்கே...?

காலக்கணக்கிலிருந்து
தப்பிக்க இயலாது
அன்றெல்லாம் முன் செய்த
வினைக்குப்
பலன் பின்னென்பர்
இன்று உடனடித் தீர்ப்பால்
உழலுது மானிடம்

எத்தனை சூழ்ச்சிகள்
எத்தனை பொய்கள்
எத்தனை அகங்காரங்கள்
எத்தனை நாடகங்கள்

பொய்யும் போலியும்
மெய்தனை மறைத்து
வாழையடி வாழையான
உறவுகளையும் தொலைத்து
நவீனம் என்றதற்கு
நாற்றப் பெயருமாம்....
நவீனத்திற்கு ஏன் இந்தப்பழி
நாற்ற மனமென்று
ஏற்றப் பெயர் சூட்டு
எடுப்பாயிருக்கும் அது

கால மாற்றமென்று ஏன்
வீண்பழி காலத்திற்கு ?
மனிதனின் மாற்றமென்றே
கூறலாம் தெளிவாய்
ஆசை மாலைகளுக்குள்
மாட்டிய தலைகளுக்கு
மாலைகளே கழுத்தை
நெரிக்குமென்று
அறியவிடாத விதியும்

ஆயுள் குறையுதென்று
உளறல்கள் எதற்கு
மகிழ்வாய் வாழ்ந்தால்
ஆயுளும் கூடுமாம்
அழிவும் இல்லையாம்
பிறர் மகிழ்ச்சி சிதைத்து
வாழ்ந்திட இயலுமோ
இனம்புரியா வலியாய்
இதயமும் கருகும்

துரோகத்தின் சாயல்கள்
தூக்கில் தானின்று
மறவாதே மானிடா

**குகதா**
கிளிநொச்சி

# விஷம் விழுந்த மனிதன் !

இயற்கையிலிருந்து இறங்கி
செயற்கைக்குச் சென்று
இரசாயனங்களை உண்டதில்
விஷமாகிப் போனான் மனிதன் இன்று

எதில் விழுந்தாலும் அதில்
பூரணமாய் பரவி
அழிவைத் தரும் விஷம் போல்
மனிதனில் விழுந்த விஷத்தால்
பாவம் புண்ணியம் பகுத்தறியும்
பக்குவம் இழந்தான்

பூவும் மொட்டும் புரியாமல்
மொட்டுகளில் கூட
தேன் உண்ண துணிந்தான்

தன் உயிர் போலவே
பிற உயிர் என்பதை
உணர மறந்து அடுத்த உயிரை
திணற வைத்து பார்க்கவும்
அழிக்கும் நிலைக்கும்
ஆளாகிப் போனான்

வருத்தம் வந்தால் சுகம் பெற
மருத்துவம் செய்ய கற்ற மனிதன்
வாழும் காலத்திற்கு வாழும்
வழிவகைகளும் வகுத்து
வாழ்ந்தபோது
மதங்களை மனதிற்கு
மருத்துவமாக்கிக் கொண்டான்
ஆனால் இன்று
அதன் மதிப்பு உணராமல்
வாழ முற்பட்டதில் இங்கு
பேரிழப்புகள் நெடுந்தொடராய் ...

மதம் கலாச்சாரம் இவைகளை
இழக்கும் மனிதன்
தான் மனிதன் என்ற தகுதியையும்
இழக்கின்றான்

அதன்பின் அவன் தன்னை
மனிதன் என
சொல்லிக் கொள்வதில்
எந்த மகிமையும் இல்லை.... !

**சி. எம். சங்கர்**
பண்டாரவளை

# ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு



கூடி வாழ்ந்தால் கோடி நன்மை....
தேடி வரும் வெற்றியின் வாசல்....
ஓடிப் போகும் துன்பமும் துயரமும்....
வாடும் இதயங்களும் ஏன்
ஊனமும் கூட
எழுந்து நிற்கும்.....

இல்லறத்தில் ஒன்று பட்டால்
இமயத்தை தொட்டு விடலாம்.....

சகோதரர்கள் ஒன்றுபட்டால்
சரித்திரங்கள் படைத்து விடலாம்....
நண்பர்கள் ஒன்று பட்டால்
நாட்டைக் கட்டிடலாம்...
காகக் கூட்டங்களின்
ஒற்றுமையைக் கண்டு
மானிடப் பிறவிகள்
மருந்தாக்கிக் கொள்வோம்.....

கறை படிந்த இதயங்களின்
சிறை பிடித்த எண்ணங்களால்
பறை சாற்றும் வேற்றுமைகள்
திரை போட்டு நில்லாமல்
கலைந்தோடும் மேகங்கள் போல
விலகிச் செல்க....,.

கவிதாயினி
**மாஜிதா தவ்பீக்**
மருதமுனை

# விடியலாய் வா

அணுவையும் துளைத்திடும்
அறிவியலும் உயர்ந்திட்டு
அண்டங்கள் கடந்தின்று
ஆகாயம் சேர்ந்திடுச்சு
ஆனாலுமின்னும் பெண்மைக்கு
தீர்வில்லாப் பாதைகளே !

புரையோடிப் போயிருக்கும்
புன்னழிவுச் சாக்கடையாம்
திரைபோட்டு முடக்கிவிடும்
திறமைதனை அடுக்களையில்
நிலைமாறவே எழுபெண்ணே !
நித்திலத்தில் ஜெயித்திடவே !

சித்தம் நிறைத்து
சிறகை விரித்திடும்
வித்தகப் பாதைக்கு
விலங்கிட்டு தடுத்திடும்
பித்தம் பிடித்தோரின்
பிதற்றலை அடக்கியெழு

அரியணை அலங்கரித்து
ஆட்சிபீடம் ஏற்றுவதில்
பிரிவினை காட்டிடும்
பதரானவர் வீழ்ந்திடவே !
பாரினை வென்றிடலாம்
தீயினை ஏற்றிட வா !

பெண்மையில் தீட்டொன்று
பார்த்திடும் வீணர்களின்
தொன்மையான
கொள்கையினை
தொடர்கின்ற அறிவிலிகளுக்கு
உண்மையோ தெரியட்டும்
உலகறிய உதித்துவா !

பாவையென சிரிக்கட்டும்
பேதையென நோக்கட்டும்
வேடிக்கை மனிதர்களின்
வாடிக்கை செயலிதுவே !
நாழிகையும் முடங்கிடாது
நங்கையே ! விடியலாய் வா !

**ஏரூர் றமீஸ்**
ஏறாவூர்



# ஏனிந்த நெருக்கடி

வரவின் வருகை
வதைக்கும்
செலவின்
செல்கை உதைக்கும்
தொடரும்
பல நூறு போராட்டம்
தொலையும்
நிம்மதி தினம் தினம்

விடியலில்
கவ்விடும் சோகம்
முடிவு காண
ஏனிந்த தாமதம்
மீட்சிக்காய்
மனது ஏங்கும்
கிடைத்தால்
அதுவே அபூர்வம்

யார் மீது
கொள்வது கோபம்
இது வாழ்க்கை
தந்த சாபம்
வியர்வை பெருக்கெடுக்க
உழைத்தும்
உயர்வு கண்டிடா தாகம்

படபடப்பை
அதிகரிக்கும்
விலையேற்றம்
பதுங்கி நின்றபடி
பல் இளிக்கும்
கடன் பட்டியலின்
முன்னேற்றம்
கச்சிதமாய் வந்து
கைதட்டும்

இத்தினசரி
வேதனை குறையட்டும்
அதற்காய்
மனங்கள் இரங்கட்டும்
நெருக்கடி
தொலைந்தே போகட்டும்
அதுவன்றி
வேறேது பயன்கிட்டும்

**ஷப்ரா இல்முத்தீன்**
அட்டாளைச்சேனை

# வலிகள் பேசும் வரிகள்

வலிகளைக்
கொண்டு
எழுதிய வாழ்க்கை
இது என்பதால்
என்னோடு சேர்ந்து
என் உலகமும்
கறுப்பானது.

கனத்த இதயம்
இருந்தாலும் பலத்த
காயங்கள் இருக்கிறது,
ஏனோ தெரியாது
இந்த வலிகளை
தாங்கிக் கொண்டு
இதயம் துடித்துக்
கொண்டுதான் இருக்கிறது.


பரிதாபம் கொண்ட
உறவுகள் பறித்தெடுக்க
நினைக்கின்றார்கள்
மீதமிருக்கும் புன்னகையினை.

அழ நினைத்திருக்கும்
கண்களுக்கு தெரியாது
இது போலி
விம்பங்களென, இருந்தும்
பாசமாய் பார்த்துக்
கொண்டதற்கு பிறகு
ஏனோ தெரியவில்லை
இதுவரை.

வழியினை
முடிவுக்கு
கொண்டு வந்த
இவர் வாழ்க்கை
இந்த வலிகளுக்கு
என்றுதான் முடிவு
தர போகிறதோ
என தெரியவில்லை,
முடிவில்லாத பயணம்
காத்திருக்கின்றது என்பதை
உணர்த்தி போகிறது
இந்த காலம்
இன்றுவரை.

இருந்தும் வாழ்ந்திட
நினைத்திருந்தேன்
வாழ்ந்து கொண்டிருக்கிறேன்
எனக்கான வாழ்வினை.

**பொத்துவில் அஜ்மல்கான்**



# நிலையான எதிர்காலத்திற்கான திட்டமிடலில் பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம்

இலங்கை பெருந்தோட்டட முதலாளிமார் சம்மேளனம் (Planters' Association of Ceylon) தனது 170வது வருடாந்த பொதுக்கூட்டத்தை செப்டம்பர் 14, 2024 அன்று கொழும்பு கலதாரி ஹோட்டலில் நடத்தியது. இந்த நிகழ்விற்கு பிரதம அதிதியாக, ஹேலிஸ் குழுமத்தின் தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மொஹான் பண்டித்தகே கலந்து கொண்டார். இது நாட்டின் பெருந்தோட்டத் தொழிலுக்கான ஒரு முக்கியமான தருணமாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தின் (Planters' Association of Ceylon) தலைவர் பதவி மாற்றம் சிறப்புமிக்க இந்த வருடாந்த பொதுக் கூட்டத்தில் நடைபெற்றது. வெளியேறும் தலைவர் சேனக அலவத்தேகமவிடமிருந்து, சுனில் போலியத்த தலைவர் பதவியை ஏற்றுக்கொண்டார். பெருந்தோட்டத் தொழில்துறை குறிப்பிடத்தக்க சவால்கள் மற்றும் வாய்ப்புகளை எதிர்கொண்டு வருகின்ற சந்தர்ப்பத்தில் இந்த மாற்றம், பெருந்தோட்டத் தொழிலுக்கான முக்கியமான தருணமாக அமைந்துள்ளது.

இலங்கை பெருந் தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தின் (Planters' Association of Ceylon) வெளியேறும் தலைவர் சேனக அலவத்தேகம தனது இறுதி உரையில், தனது பதவிக் காலத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டதைக் குறிப்பிட்டார். குறிப்பாக, நீண்டகாலமாக நிலுவையில் இருந்த ஊதிய பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முடிவுக்கு கொண்டுவரப்பட்டதைக் குறிப்பிட்டார். அவர், ஒரு நாளைக்கு 1,350 ரூபாய் என்ற குறைந்தபட்ச ஊதியம் மற்றும் ஒரு கிலோகிராமுக்கு 50 ரூபாய் என்ற உற்பத்திசார்ந்த கூறு ஆகியவற்றை உள்ளடக்கிய புதிய ஊதிய கட்டமைப்பை அறிமுகப்படுத்தியதைக் குறிப்பிட்டார். இந்த சாதனை, குறிப்பிடத்தக்க சவால்கள் மற்றும் அழுத்தங்கள் இருந்தபோதிலும், தொழிலாளர்கள் மற்றும் பிராந்திய தோட்ட நிறுவனங்கள் (RPCs) இரண்டிற்கும் ஒரு குறிப்பிடத்தக்க வெற்றியைக் குறிக்கிறது என்று அவர் கூறினார்.

"நாங்கள் முன்னோக்கிச் செல்லும்போது, ஊதியங்கள் மற்றும் கொள்கைகள் தொடர்பான முடிவுகள், தொழிலாளர்கள் உட்பட முழுத்தொழில்துறையினரின் நலன்களைக் கருத்தில் கொண்டு எடுக்கப்பட வேண்டும்," என அலவத்தேகம கூறினார். "எமது தொழில் எதிர்கால தலைமுறைகளுக்கும் வளர்ச்சியடைய முடியும் என்பதை உறுதி செய்ய, நம் தொழில் மலிவானதாகவும் நிலையானதாகவும் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்" என்றும் அவர் கூறினார்.



புதிய தலைவராக பொறுப்பேற்ற சுனில் போலியத்த, தனது எதிர்கால தூரநோக்குப் பார்வையை விவரிக்கும் ஒரு தீர்க்கமான உரையை நிகழ்த்தினார். அவர், தொழில்துறைக்கு ஒரு இருப்பு சார்ந்த அச்சுறுத்தலாக கருதப்பட்டிருந்த சமீபத்திய ஊதிய நெருக்கடியை வெற்றிகரமாக கடந்து வந்த தொழில்துறையின் கூட்டு செயற்பாடுகள் குறித்தும் பாராட்டினார்."2024 மே 1 அன்று, ரூபாய் 1,700 என்ற ஊதிய உயர்வு, அதாவது 70% உயர்வு, எங்கள் தொழிலை முடக்கியது" என்று போலியத்த குறிப்பிட்டார். "சூழலின் தீவிரத்தை உணர்ந்து, பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம், உச்ச நீதிமன்றம் வரை சட்ட நடவடிக்கை உட்பட முன்னெப்போதும் இல்லாத நடவடிக்கைகளை எடுத்தது. எங்கள் தொடர்ச்சியான முயற்சிகள் நிலையான ஊதிய ஒப்பந்தத்தை ஏற்படுத்தியது. இது நாங்கள் ஒன்று சேரும்போது நாம் என்ன சாதிக்க முடியும் என்பதற்கு சான்றாகும்" என்றும் அவர் கூறினார்."

# HFC நன்கொடை கடனட்டையை அறிமுகம் செய்தது NDB

NDB வங்கியின் சிரேஷ்ட முகாமைத்துவத்தினர் , HFC PPA உறுப்பினர்களுக்கு HFC நன்கொடை கடனட்டையை சம்பிரதாயபூர்வமாக வழங்குகின்றனர்.

பம்பலப்பிட்டி திருக்குடும்ப கன்னியர் மட (HFC) சமூகத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இக்குறிப்பிடத்தக்க பங்குடமையில் NDB வங்கியானது பிரத்தியேக HFC நன்கொடை கடனட்டையை அறிமுகப்படுத்தியுள்ளது. செப்டெம்பர் மாதம் 3 ஆம் திகதி HFC பாடசாலை பசுமை மண்டபத்தில் வெளியிடப்பட்ட இந்த அட்டையானது, NDB வங்கிக்கும் இலங்கையின் மதிப்புமிக்க பாடசாலைகளில் ஒன்றிற்கும் இடையிலான உறவினை மேலும் ஸ்திரப்படுத்தி பம்பலப்பிட்டி HFC பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் (PPA) உறுப்பினர்களுக்கு பிரத்தியேகமான பல பலன்களை வழங்குகிறது.

அட்டை வெளியீட்டு விழாவின் ஒரு பகுதியாக, HFC PPA இன் ஐந்து புகழ்பெற்ற உறுப்பினர்களுக்கு அவர்களின் புதிய நன்கொடை அட்டைகள் சம்பிரதாயபூர்வமாக வழங்கப்பட்டன, இது நிதி வசதி மற்றும் சமூக ஆதரவில் ஒரு புதிய அத்தியாயத்தின் தொடக்கத்தைக் குறிப்பதாக அமைந்திருந்தது . திருக்குடும்ப கன்னியர் மடத்தின் இலட்சினையை கொண்ட இந்த அட்டை, நிதிப் பலன்களை வழங்குவதற்கென சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், வருமானத்தின் ஒரு பகுதி பாடசாலையின் பல்வேறு திட்டங்கள் மற்றும் துவக்கங்களிற்கு நேரடியாக வழங்கப்படவுள்ளதால் பாடசாலையின் தற்போதைய வளர்ச்சி மற்றும் வெற்றிக்கும் பங்களிப்பினை வழங்குகிறது,

இந்த ஒத்துழைப்பின் மூலம், NDB அட்டைதாரர்களுக்கு முதல் ஆண்டுக்கான வருடாந்த கட்டண விலக்கு, பாடசாலைக் கட்டணங்களுக்கான தவணைக் கட்டணத் திட்டங்கள் மற்றும் பங்குடைமை வர்த்தக நிறுவனங்களிடமிருந்து சிறப்பு சலுகைகள் உட்பட பல்வேறு பிரத்தியேக நன்மைகளை வழங்குகிறது.

# 39ஆவது மெர்கன்டைல் தடகள சம்பியன்ஷிப்; செலான் வங்கி சாதனை

ஆகஸ்ட் 9 முதல் 11 வரை சுகததாச மைதா னத்தில் நடைபெற்ற 39ஆவது மெர்க்கன்டைல் தடகள சம்பியன் ஷிப்பில் செலான் வங்கி தனது சிறப்புத் திறமைகளை பெருமையுடன் வெளிப்படுத்தியது.

செலான் வங்கி 10 தங்கம், 8 வெள்ளி மற்றும் 5 வெண்கலப் பதக்கங்களுடன் ஒட்டுமொத்தமாக 6ஆவது இடத்தையும் வங்கிகள் மத்தியில் 2ஆவது இடத்தையும் சுவீகரித்தமை குறிப்பிடத்தக்கது.

இச் சாதனை செலான் வங்கியின் விளையாட்டு வீரர்களின் அர்ப்பணிப்பு மற்றும் திறமையை எடுத்துக்காட்டுகிறது. இவ்வாண்டின் நிகழ்வில் மொத்தம் 30 விளையாட்டு வீரர்கள் செலான் வங்கியைப் பிரதிநிதித்துவப்படுத்தி போட்டிகளில் பங்குபற்றியிருந்தனர்.

சாரங்கி சில்வா 2024 சம்பியன்ஷிப்பின் ஒட்டுமொத்த சிறந்த தடகள வீராங்கனையாகவும், பெண்களுக்கான சாம்பியன்ஷிப் பிரிவில் சிறந்த தடகள வீராங்கனையாகவும் தெரிவு செய்யப்பட்ட அதே வேளை கமலீன் மில்ஸ் 30 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் பிரிவில் சிறந்த தடகள வீராங்கனையாக அங்கீகரிக்கப்பட்டமையும் முக்கிய சிறப்பம்சங்கள் ஆகும்.

பதக்கம் வென்றவர்களில் சாமிக்க வீரவர்தன 400m, 400m தடை தாண்டல் ஓட்டம், 4x400m அஞ்சல் ஓட்டம் மற்றும் 4x100m அஞ்சல் ஓட்டம் ஆகியவற்றில் 4 தங்கங்களையும், 800m ஓட்டத்தில் ஒரு வெள்ளியையும் வென்று கவனத்தை ஈர்த்தார்.

சாரங்கி சில்வா நீளம் பாய்தல் மற்றும் முப்பாய்ச்சல் ஆகியவற்றில் 2 தங்கங்களை வென்றதோடு கமலீன் மில்ஸ் உயரம் பாய்தல் (புதிய சாதனை) மற்றும் ஈட்டி எறிதல் ஆகியவற்றில் 2 தங்கங்களையும், 200m ஓட்டத்தில் ஒரு வெள்ளியையும் வென்றார்.


# பாங்கசூரன்ஸ் செயற்பாட்டாளர்களை கௌரவித்தது யூனியன் அஷ்யூரன்ஸ்



இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகளை வழங்கும் யூனியன் அஷ்யூரன்ஸ், அதன் பிரத்தியேக பாங்கசூரன்ஸ் பங்காளரான நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சி உடன் இணைந்து, வங்கியின் பாங்கசூரன்ஸ் அணி மற்றும் கிளை வலையமைப்பின் ஊழிய அங்கத்தவர்களின் சிறந்த செயற்பாடுகளை கௌரவிக்கும் விசேட அபிவிருத்தி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தது. இந்த நிகழ்வுகளில், யூனியன் அஷ்யூரன்ஸ் மற்றும் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி ஆகியவற்றின் சிரேஷ்ட முகாமைத்துவத்தைச் சேர்ந்தவர்கள் பங்கேற்றதுடன், பிரதான வியாபார பங்காளர்களுடன் தனது உறவை வலிமைப்படுத்துவதற்கான யூனியன் அஷ்யூரன்ஸின் அர்ப்பணிப்புக்கான எடுத்துக்காட்டாக இது அமைந்திருந்தது.

இந்த அபிவிருத்தி மற்றும் அணி கட்டியெழுப்பும் நிகழ்வுகளில் 200க்கு அதிகமான சிறப்பாக செயலாற்றியிருந்த வங்கியின் ஊழியர்கள் பங்கேற்றிருந்தனர். Weligama Bay Marriott Resort & Spa மற்றும் Hikka Tranz by Cinnamon ஆகியவற்றில் நடைபெற்ற இந்த நிகழ்வுகளினூடாக, ஈடுபாட்டுடன் கூடிய அறிவூட்டும் அமர்வுகளில் பங்கேற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது. யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம பங்காண்மை விநியோக அதிகாரி வத்சலா அளுத்கெதர இந்த நிகழ்ச்சி தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில், "நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியுடன் நாம் நீண்ட காலமாக பேணி வரும் பங்காண்மையினூடாக, நாடு முழுவதையும் சேர்ந்த வாடிக்கையாளர்களுக்கு பரிபூரண நிதிப் பாதுகாப்பைப் பெற்றுக் கொடுப்பதில் யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்துக்கு பக்கபலமாக அமைந்துள்ளதுடன், தேசத்தில் முன்னணி பாங்கசூரன்ஸ் சேவை வழங்குநர் எனும் எமது நிலையை உறுதியாக பேணவும் பங்களிப்பு வழங்கியிருந்தது." என்றார்.

# SLT–MOBITEL புத்தாக்கம் மற்றும் அறிவு பகிர்வுக்கு ஆதரவு தரும் LKNOG மாநாடு



Lanka Network Operators Group (LKNOG) மாநாடு மற்றும் பயிற்சிப் பட்டறைகளின் வெள்ளி அனுசரணையாளராக SLTMOBITEL இணைந்திருந்தது. கொழும்பு கோல் பேஸ் ஹோட்டலில் அண்மையில் நடைபெற்ற இந்த நிகழ்வு, பிராந்தியத்தின் வலையமைப்பு செயற்பாட்டாளர்கள் மற்றும் நிபுணர்களின் ஒன்றிணைவாக அமைந்திருந்தது.

இந்நிகழ்வுக்கு வெள்ளி அனுசரணையை வழங்கியிருந்ததமையினூடாக, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையில் புத்தாக்கம் மற்றும் அறிவு பகிர்வை கட்டியெழுப்புவதில் SLTMOBITEL கொண்டுள்ள அர்ப்பணிப்பை மேலும் உறுதி செய்திருந்தது. LKNOG உடன் ஈடுபாட்டை பேணி, வலையமைப்பு செயற்பாடுகளின் சிறந்த செயற்பாட்டாளர்களை ஒன்றிணைப்பதில் SLTMOBITEL பங்களிப்பு வழங்கியிருந்தது.

நிகழ்வின் வெற்றிகரமான செயற்பாட்டில் SLTMOBITEL இன் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாக அமைந்திருந்ததுடன், பிராந்தியத்தின் முழு வலையமைப்பு சமூகத்துக்கும் அனுகூலமளிப்பதாகவும் அமைந்திருந்தது. LKNOG நிகழ்வில் ஐந்து நாள் நிகழ்வுகள் அடங்கியிருந்தன. இதில் ஒரு நாள் மாநாடு உள்ளடங்கியிருந்ததுடன், பல்வேறு விளக்கங்கள் வழங்கப்பட்டிருந்தன. மேலும் நான்கு நாட்களுக்கு பயிற்சிப்பட்டறைகள் மூன்று கட்டமைப்புகளில் முன்னெடுக்கப்பட்டிருந்தன. முன்னைய LKNOG நிகழ்வுகளின் வெற்றியைத் தொடர்ந்து, நேரடி நிகழ்வாக, வலையமைப்பு நிபுணர்கள் பெருமளவானோரை இந்நிகழ்வு கவர்ந்திருந்தது.

# 'சுற்றுலாத்துறையில் பெண்கள்' பயிற்சி அமர்வு



உலக சுற்றுலா தினத்தை கொண்டாடும் வகையில், Intrepid கொழும்பு அண்மையில் முதலாவது "சுற்றுலாத் துறையில் பெண்கள்" பயிற்சி அமர்வை வெற்றிகரமாக முன்னெடுத்திருந்ததாக அறிவித்துள்ளது.

இந்நிகழ்வு கண்டியில் செப்டெம்பர் 14ஆம் திகதி நடைபெற்றது. நிலைபேறான பொருளாதார அபிவிருத்தியை பரந்தளவு துறைகளில் ஊக்குவிக்கும் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் நிதியுதவியில் முன்னெடுக்கப்படும் சந்தை அபிவிருத்தி வசதி (MDF) நிகழ்ச்சித் திட்டம் மற்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை (SLTDA) ஆகியவற்றுடன் இணைந்து Intrepid முன்னெடுத்திருந்தது. இலங்கையின் சுற்றுலாத் துறையில் பாலின சமத்துவம் மற்றும் பெண்களுக்கு வலுவூட்டல் ஆகியவற்றை ஊக்குவிக்கும் வகையில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

45 விண்ணப்பதாரிகளில் மத்திய மாகாணத்தைச் சேர்ந்த பல்வேறு பின்புலங்களைக் கொண்ட சுற்றுலா வழிகாட்டிகளாக திகழ எதிர்பார்க்கும் 11 பெண்கள் முதல் அமர்வில் பங்கேற்றனர். இந்தப் பயிற்சிப்பட்டறையினூடாக சுற்றுலாத் துறையில் பிரவேசித்து இயங்குவதற்கு அவர்களுக்கு அவசியமான திறன்கள், அறிவு மற்றும் தன்னம்பிக்கை போன்றன வழங்கப்பட்டிருந்தன. பங்குபற்றுநர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், "இந்த நிகழ்ச்சித் திட்டம் உண்மையில் வாழ்க்கையை மாற்றியமைப்பதாக அமைந்துள்ளது. ஒரே விதமான ஈடுபாடு மற்றும் ஆர்வம் மிக்க சக பெண் தலைமையாளர்களை சந்திப்பதற்கான வாய்ப்பை Intrepid ஏற்படுத்தியிருந்தமைக்கு நன்றி. சுற்றுலா வழிகாட்டியாக திகழ்வதற்கான அம்சங்களை மட்டும் பயில்வது என்பதல்லாமல், எமது தன்னம்பிக்கையை கட்டியெழுப்புவது மற்றும் சமூக தடைகளிலிருந்து மீள்வதற்கு அவசியமான தன்னம்பிக்கையை கட்டியெழுப்புவதாகவும் அமைந்துள்ளது. எனது சமூகத்திலுள்ள ஏனைய பெண்களுக்கு நான் முன்மாதிரியானவளாக திகழலாம் என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளேன்." என்றார்.

# ஆர்வமுள்ள குழந்தைகளுக்கு ஆதரவளிக்கும் சியபத பினான்ஸ் பிஎல்சி

குழந்தைகள் சமுதாயத்தின் மிகவும் மதிப்புமிக்க வளம். இந்த சிந்தனையுடன், சியபத பினான்ஸ் பிஎல்சி நாவலப்பிட்டி மாபகந்த வித்தியாலயத்திற்கு மேற்கத்திய பாண்ட் வாத்தியக்குழுவுக்கான சீருடைகளை அன்பளிப்பு செய்துள்ளது. அண்மையில் நாவலப்பிட்டியில் தனது கிளையை திறந்து வைத்ததைத் தொடர்ந்து இந்த அன்பளிப்பு இடம்பெற்றுள்ளது. சியபத பினான்ஸ் பிஎல்சியின் முகாமைத்துவ பணிப்பாளர் ஆனந்த செனவிரத்ன மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ அங்கத்தவர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் புதிய சீருடை அணிந்த வாத்தியக் குழுவினரால் சம்பிரதாயபூர்வமாக வரவேற்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து, நாடு முழுவதும் உள்ள குழந்தைகளின் கல்விக்கு ஆதரவளிக்கும் அவர்களின் முயற்சிகளை மேலும் மேம்படுத்துவதற்காக, சியபத நிதி முகாமைத்துவப் பணிப்பாளர், பாடசாலையின் இளம் திறமைசாலிகளை ஊக்கப்படுத்துவதற்காக ஒலி அமைப்பு ஒன்றையும் வழங்கினார்.



# ரூ 55 மில். பெறுமதியான புலமைப்பரிசில்களை வழங்க ESOFT Metro கம்பஸ், LEAP மையம் ஆகியன கைகோர்ப்பு

இலங்கையின் திறமைசாலிகளுக்கு சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தகைமைகளை வழங்கி பங்களிப்பு வழங்கும் முயற்சிகளின் அங்கமாக, இலங்கையின் முன்னணி தனியார் துறை உயர் கல்வி வலையமைப்பாக திகழும் ESOFT Metro கம்பஸ், LEAP மையத்துடன் இணைந்து, நாடு முழுவதையும் சேர்ந்த 50 மாணவர்களுக்கு ரூ. 55 மில்லியன் பெறுமதியான புலமைப்பரிசில்களை வழங்க முன்வந்துள்ளது.

வியாபார முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், சட்டம், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் சேவைகள் மற்றும் நிலஅளவையியல் போன்ற பிரிவுகளில் முழுமையான மற்றும் அரைப்பகுதி கற்கைகள் கட்டணத்தை ஈடு செய்யக்கூடிய



வகையில் இந்தப் புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டிருந்தன. தமது கற்கை காலப்பகுதியில் தமது கட்டணத்தில் முழுமையான விலக்கழிப்பை இந்த மாணவர்கள் அனுபவிப்பதுடன், அரைப்பங்கு புலமைப்பரிசிலை பெற்றவர்களுக்கு, தமது மொத்த கற்கைச் செலவில் 50 சதவீதத்தை மாத்திரம் செலுத்த வேண்டியிருக்கும்.

மாணவர்களுக்கு தமக்கான தகைமைகளை பெற்றுக் கொள்ள வாய்ப்பளிப்பதுடன், வழங்கப்பட்ட தொகையை வட்டியின்றி மீளச் செலுத்தும் வகையில் இந்தத் திட்டம் அமைந்துள்ளது. தமது கற்கையை பூர்த்தி செய்து ஒரு வருடத்தின் பின்னர் மீளச் செலுத்தலை ஆரம்பிக்கும் நெகிழ்ச்சித்தன்மையை மாணவர் கொண்டிருப்பர். முழுத்தொகையும் மூன்று முதல் ஐந்து வருட காலப்பகுதியினுள் மீளச் செலுத்தப்பட வேண்டும்.

# மஞ்சரி - சிறுகதை

# இடமாற்றம்

அந்த கடிதம் கையில் கிடைத்த வேளை யிலிருந்து ஆசிரியர் விமலனுக்கு ஒரு படபடப்பு. அவர் செய்யவேண்டிய வேலை யாவும் ஸ்தம்பிதம் ஆகியது. அன்று பாடசா லைக்கு எடுத்து வந்த பகல் சாப்பாட் டைக் கூட பிரித்து பகிர்ந்து சாப்பிட மனம் இல்லாமல் இருந்தது விமல னுக்கு.

சக ஊழியர்கள் கேள்வியுற்று வந்து ஏதோ நடக்கக் கூடாதது நடந்து விட்டது போல் துக்கம் விசாரித்தனர். இருப்பினும், அரச சேவையில் இருப் பவர்களுக்கு இப்படியான இடமாற் றங்கள் வருவது சகஜம்.

தமக்கென தனியான பாடவேளைக் குரிய நேர சூசி இல்லாதவர்கள், ஒரே பாடசாலையில் நீண்ட காலம் சேவை யாற்றியவர்கள் இப்படி சில அடிப்ப டையில் இடமாற்றங்கள் வழங்கப் படுவது விமலனும் அறிந்ததுதான். விமலனுக்கு இதில் இரண்டாவது காரணத்தின் அடிப்படையில் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டிருந்தது.

கணித பாட ஆசிரியரான விமலன் திறமைசாலி, இந்த பாடசாலைக்கும் நல்ல பெறுபேறுகள் கிடைக்கப் பாடு பட்டவர்.

விமலனுக்கு என்ன நடவடிக்கை எடுப்பது என்று விளங்காமல் இருந் தது. இது அவரது முதல் அனுப வம் என்பதால், ஒருபுறம் பழகிய பாடசாலை, அதன் நினைவுகள், பரிச்சயமான ஆசிரியர் குழாம், மாண வர்கள் என்று பலவாறான எண்ணங் கள் இதை விட்டுப்போவதும் ஒரு வேதனை கலந்த உணர்வை உள் ளத்தில் உண்டாக்கியது. மறுபுறம் மனைவி பிள்ளைகள்... எப்படியும் இந்த இடமாற்றத்தை ஏற்றால் வீட்டி லிருந்து சற்று தூரம் போக வேண்டிய நிர்ப்பந்தம்.

உண்மையிலேயே இன்றைய இந்த நிலைமை வாழ்விலொரு புதிய அனு பவமாக தெரிகிற அதேவேளை, பாரிய குழப்பமாகவும் இருந்தது அவ ருக்கு. தன்னை சுதாகரித்துக்கொள்ள முடியாமல் வெளியிலும் தெரிவித்துக் கொள்ளாதவராக பாடசாலைக்குள் நடமாடிய விமலனை, அதிபர் காரி யாலயத்துக்கு வரும்படி அழைப்பு வந்தது. என்ன சொல்லப்போகிறார் என்ற சிந்தனையுடன் காரியாலயத்துக் குப் போனார்.

சார்...

ஆ... வாங்க விமலன் உட்காருங்க!

நன்றி சார். என்றவாறு அவரின் முன்னால் இருந்த ஆசனத்தில் அமர்ந்து கொண்டார் விமலன்.

என்ன இப்ப நீங்கள் மாறுதலானா லும் எங்களுக்கும் பிரச்சினைதான். எதற்கும் இன்று பாடசாலை விட்டு கல்வி காரியாலயத்துக்கு சென்று பணிப்பாளருடன் இது பற்றி கதைத்து பார்ப்போம்.

சரி. சார்....

அதற்கு முன் நீங்க ஒரு அப்பீல் கடிதத்தை அந்த சுமனா டீச்சரிடம் சொல்லி சிங்களத்தில் எழுதுங்க!

சரி. சார்....

எப்பீல் கடிதம், விஷயம் நடக்குற மாதிரி இருக்கனும்

சரி. சர்....

சரி நீங்க இதை ஏற்பாடு செய்ங்க! நாங்க கொஞ்சம் நேரத்துடன் ஸ்கூலி லிருந்து போவோம் என்றார் அதிபர்.

சரி. சர்... என்றபடி விமலன் அதிபர் குறிப்பிட்ட ஆசிரியையைத் தேடிப் போனார். அவருடன் கதைத்து அதிபர் கூறியபடி எப்பீல் கடிதம் தயாரானது.

பாடசாலைக்குள் என்ன நடக்கிறது என்பதே விமலனுக்கு மனதில் படுவ தாய் இல்லை.

சக ஆசிரியர்கள் எப்படியாவது இட மாற்றத்தை இரத்து செய்து கொண்டு இங்கேயே வந்துவிடுங்கள் என்கின் றனர். ஆனால் எப்படி செய்வது? யாரைக்கொண்டு கதைப்பது? என்பது குழப்பமாக இருந்தது விமல னுக்கு

கருத்துக்களுக்கு குறைவில்லை. அங்க போங்க! இங்க போங்க! மாகாண காரியாலயம் போங்க! இப்படி எண்ணில்லா ஆலோசனை கள் இதுபோல் ஆயிரம் ஆலோச னைகள் வந்தாலும் தானே தனித்து ஒரு தீர்மானத்துக்கு வரனும் என்பதே விமலனுக்கு பட்டது. ஏனெனில் அரச உத்தியோகம் இடமாற்றம் என்பதெல் லாம் சொந்த உறவுகளை தேடிப்போ



கும் பயணமல்ல. நாம் நினைத்தால் போக அல்லது போகாமல் விட எப் படியும் தொழிலை சரியாக செய் கின்றோமோ இல்லையோ தொழில் சட்டங்களுக்கு உட்பட்டே ஆக வேண்டியதே அரச பணி.

அரச உத்தியோகம், மாதம் முடிய சம்பளம், ஓய்வு பெற்றால் ஓய்வூதி யம் இதெல்லாம் வெளியில் பளிங்கு மாதிரி மின்னினாலும் இந்த பய ணத்தை கடக்க வேண்டிய சரத்துக் கள் இலகுவானதல்ல. கோடிக்கணக் கில் துஷ்பிரயோகங்கள் நடக்கலாம். ஆனாலும் சின்ன சம்பளம் வாங்குப வர்கள் படுகின்ற கஷ்டம் அதில் உள் ளவர்களுக்கே புரியும்.

ஆனால் இந்த ஆசிரியர் சேவையை சரியாக செய்தால் வேறு எந்த தான, தர்மங்களும் செய்ய தேவையில்லை. ஆசிரிய பணியில் பிள்ளைகளுக்கு எழுத்தறிவித்தல், அவர்களை நல்வ ழிப்படுத்தல் இது எத்தனையோ புண் ணியமான காரியம். இப்படியெல் லாம் எண்ணித்தான் தன் சேவையை சரியாக செய்தார் விமலன்.

பாடசாலை கடைசி மணி ஒலித் தது. காரியாலயம் வந்து கையொப்பம் இட்டுவிட்டு அதிபருடன் கல்விக் காரியாலயம் போக ஆயத்தமானார்.

அந்த எப்பீல் கடிதத்தை எடுத்து விட்டீர்களா என்றார் அதிபர்

ஆமா. சார்....

சரி போவோம்; என்று இருவரும் புறப்பட்டனர். விமலனின் மனதுக் குள் ஒரு படபடப்பு. ஏதோ அதிபர் பாடசாலை விடயமாக பேசிக் கொண்டு வந்தார். அது இவர் காதில் வெறும் ஓசையாகவே பட்டுக்கொண் டிருந்தது.

இன்றெல்லாம் அரச சேவையுடன் அரசியலும் கலந்து விட்டதால் இது போன்ற விடயங்களுக்கு அரசியல் செல்வாக்கும் அவசியம் தேவை. ஆனால் விமலனுக்கு அது இல்லை. தான் உண்டு, தன் கடமை உண்டு என்று கடமையை சரிவர செய்ததை தவிர வேறு எதையும் தேடிக்கொள்ள வில்லை. நேர சூசி இல்லாமல் மட்டு மல்ல முதல் நியமனத்தில் இருந்தே ஒரே பாடசாலையில் பல வருடங்கள் சேவை செய்பவர்களும் இருக்கிறார் கள். சிலர் செல்வாக்கை பயன்படுத் திக்கொண்டிருந்தாலும் விமலன் அவர்களுடன் தன்னை வைத்துப் பார்க்க விரும்பவில்லை.

இருவரும் காரியாலயத்தை வந்த டைந்தனர். அன்று காரியாலய நாள் என்பதால் சன்றுக் கூட்டமாக இருந் தது. ஆனாலும் பணிப்பாளர் தன் அறையில் இருந்தார். அது பெரிய ஆறுதலாக இருந்தது, இருவருக்கும். இருவரும் உள்ளே போகக் காத்து நின்றனர். என்ன நடக்குமோ என்ற யோசனை விமலனுக்கு. சரி அதிபர் தானே பேசுவதாக கூறினார். ஒரு தரம் முயல்வோம் என்று எண்ணினார்.

உள்ளே பணிப்பாளர் வருபவர்க ளுக்கு ஏதேனும் பதிலை சொல்லு வதும், கடிதங்களுக்கு கையொப் பம் இடுவதுமாக தன் கடமையை செய்துகொண்டிருந்தார். உள்ளே போக வேண்டிய தருணம் வந்ததும் இருவரும் உள்ளே சென்றார்கள். வணக்கத்தைக் கூறி அதிபர் அமர்ந்து கொண்டார். விமலன் அருகில் நின்று கொண்டார்.

விடயத்தை அதிபர் அமைதியாக எடுத்துக் கூறினார். எப்பீல் கடிதமும் காட்டப்பட்டது. அதனைப் பார்த்தப் படி தலையை அசைத்தவாறு மூக்கு கண்ணாடிக்கு மேலாக விமலனை பார்த்தார் பணிப்பாளர்.

ம்... என்றொரு பெருமூச்சுடன் கதைக்க தொடங்கினார். எப்போ துமே இது போன்ற அதிகாரிகளி டம் சில தரவுகள் இருப்பது வழமை அதன்படி தனிப்பட்ட பிரச்சினை களை உங்கள் தொழிலுடன் தொடர்பு படுத்த வேண்டாம்.

இவர் சேவைக்காலம் அதிகம் அதனால் இடமாற்ற காலம் சரி. ஏன் ஒரே இடத்தில் இருந்து பழைமை யாகி போகிறீர்கள்.

அத்துடன் நீங்கள் நகரங்களில் நடமாட உள்ளே இருப்பவர்கள் உள்ளேயே இருக்க இடமளிக்க முடியாது. அவர்களின் பக்கமும் நாங்கள் பார்க்கவேண்டும். அதன் படி நீங்கள் மாற்றலாகிப் போவது நல்லது.

நாங்கள் தூர இடத்தில் இருக்கும் ஒருவரை உங்கள் பாடசாலைக்கு நியமிப்போம் என்று கடிதத்தை மேசைமேல் வைத்துவிட்டு வாசல் பக்கம் பார்த்தார்.

அதிபர் திரும்பி விமலனை பார்த் தார். என்ன நேரமோ பணிப்பாள ரின் தொலைபேசி மணி ஒலித்தது. அதனை எடுத்தவர் ஏதோ பிரச்சினை பட்டவராய் யாரையோ அதட்டி கடுமையான சிங்களத்தில் கதைத் தார். அதில் சில வார்த்தைகள் இவர் களுக்கும் பொருந்துவது போல் இருந்தது. இருவரும் இடத்தை காலி செய்து வெளியில் வந்தனர். அதிபர் மௌனமாக வந்தார்.

உங்களுக்கு யாராவது அரசியல்வா திகள் அறிமுகம் இருந்தால் கொஞ்சம் முயன்று பாருங்கள் என்றார்.

விமலன் எதுவுமே பேசவில்லை. இருவரும் விடை பெற்றனர். கடி தத்தின் படி பதின்நான்கு நாட்கள் இடைவெளி இருந்தது. விமலன் அதே சிந்தனையுடன் வீடு வந்து சேர்ந்தார். சற்று நேரம் இருந்து ஓய்வு எடுத்துக்கொண்டு தன் மனைவியு டன் இது பற்றி கதைக்க தொடங்கி னார்.

உடனே மனைவி... ஓ... நீங்கதானே பெரிய சேவை செய்யபோய் என்ன கிடைத்தது பார்த்தீர்களா? வேலை வேலை என்று இருந்ததுக்கு இதுதான் பலனா? சரி இப்ப என்ன செய்யபோ கிறீர்கள் என்றாள் மனைவி.

விமலன் மௌனமாக இருந்தார். காரணம் தொழில் ரீதியான சில விடங் களை மனைவிக்கு விளங்கப்படுத்த முடியாது என்பது அவருக்கு தெரியும்.

இடமாற்றத்தை ஏற்றுக்கொள் ளதான் வரும் என்றார் விமலன். மனைவி உடனே எழும்பி உள்ளே போய்விட்டாள்.

ஒரு பிரச்சினை என்றால் எத்தனை கருத்துக்கள் முரண்பாடுகள் வரு கின்றன?. என்றாலும் எல்லாம் போட்டு நம்மை நாம் குழப்பிக் கொள்ளமுடியாது என்பது விமலனின் எண்ணம். ஒவ்வொருவருடைய ஒவ்வொரு கருத்துக்கும் நாம் முடி வெடுக்கவும் இயலாது.

தீவிர சிந்தனையின் பின் விமலன் ஒரு தீர்மானத்துக்கு வந்தார். இதை இடமாற்றமாக பாராமல் முதல் நியம னம் பெற்று செல்வதாக அந்த பாடசா லைக்கு செல்ல ஆயத்தமானார். அதி பருடன் இது பற்றி கதைத்து விட்டு தான் பாடசாலைக்கு கொடுக்க வேண்டியவைகளை ஒப்படைத்து விட்டு ஆசிரியர்களுடனும் மாணவர் களுடனும் பேசிவிட்டு விடைபெற் றார்.

புதிய இடத்தில் கணித பாடத்துக் கென பயிற்றப்பட்ட கணித ஆசிரியர் இன்மையால் இவருக்கு பெரும் வர வேற்பும் கிடைத்தது. படிப்படியாக பயண அசௌகரியங்கள் பழகிப் போயின.பாடசாலையும்பழக்கப்பட்; டுக்கொண்டே வந்தது.

மீண்டும் ஒரு முறை பழைய பாட சாலைக்கு வந்த சமயம் அங்கு எதுவும் இயங்காமல் இருக்கவில்லை. வழ மையான நடைமுறையே தென்பட் டது. உண்மையிலேயே இவர்தான் இந்த இடத்துக்கு உரியவர். இவர் இல்லையெனில் எதுவும் இல்லை என்ற எந்த கதாபாத்திரமும் மனித ரும் உலகில் இல்லை என்பது அவ ருக்கு ஞாபகம் வந்தது.

அது போல் எந்த பிரச்சினைகளுக் கும் தன் சுய சிந்தனையில் முடிவு களை எடுப்பதும் அவசியம் எனப்பட் டது விமலனுக்கு.

யாரோ சொல்லி எங்கோ கேட்டது விமலனுக்கு ஞாபகம் வந்தது. நீரினில் கையை அழுத்தி இருக்கும் பொழுது தென்படும் சுழி கையை வெளியே எடுத்தவுடன் மாறிவிடும் என்று. இது இந்த விடயத்துக்கும் பொருந்தும் எனப்பட்டது அவருக்கு.

**சி. முத்து சங்கரன்**
**பண்டாரவளை**

# நற்றமிழ் இலக்கியத்துக்கு அழகு சேர்க்கும் மொழிநடையில் ஒரு இனிய இதிகாசம்

## ஓர் அறிமுகம்

நற்றமிழ் இலக்கியத்துக்கு அழகு சேர்க்கும் மொழிநடையில் ஒரு இனிய இதிகாசம் எழுதப்பட்டி ருக்கிறது.

"மாநபி பேசாத மௌன மொழி தமிழ்" என்ற தலைப்போடு தன் மௌனத்தைக் கலைத்து சாந்த நபியின் சரிதையை சத்திய எழுத்தா ளரின் பேனா பேசியிருக்கிறது.

ஆறு தசாப்தங்களுக்கு மேல் தமிழ் எழுத்துத் துறையை ஆட்சிசெய்யும் ஒரு ஜாம்பவான் கலாபூஷணம் எஸ். ஐ. நாகூர்கனி.

இலங்கை இலக்கியத் துறையின் மூத்த படைப்பாளியாக அனுபவ மிக்க பத்திரிகையாளராக இருந்தா லும் அவரது எழுத்துக்கள் என்றும் இளமையானவையே. வாசிப்ப வரை வசீகரிக்கும் வல்லமை அவரது மொழிநடைக்குண்டு.

சாந்த நபியின்
சரிதையை எழுதியதால்
சரிதையை சார்ந்து நான்
வாழ விரும்புகிறேன்;
சாந்த நபியின்
சரிதையில் சாய்ந்து நின்று
வாசிக்கும் இதயங்களை
ஆள விரும்புகிறேன்!

என்று முத்து நபிமீது அவர் கொண்டிருக்கும் அன்பை முன்னி ருத்தி தனது வரிகளை எழுத ஆரம் பித்திருக்கிறார். தொடர்ந்து வாசிக் கும் போது வாசகர்களை வசியம் செய்யும் அவரது வரிகளில் நானும் வசப்பட்டுப் போனதை என்னால் உணர முடிந்தது.

நபிகளாரைப் பற்றிய ஏராளமான நூல்களைப் பலரும் பல மொழி களிலும் எழுதியிருக்கிறார்கள். இதுவரை நான் வாசித்த நூல்களில் இந்நூல் வித்தியாசமாக எழுதப் பட்டிருக்கிறது. "மாநபி பேசாத மௌன மொழி தமிழ்" என்ற தலைப்பிலேயே அதை உணர்த்தியி ருக்கிறார் நூலாசிரியர். ஒரு தரமான




படைப்பை தமிழ் இலக்கிய உலகம் பெற்றிருக்கிறது.

இந்நூலின் அணிந்துரை மற்றும் விதந்துரைகளை முறையே பேராசிரி யர் வ. மகேஸ்வரன், விரிவுரையாளர் க. இரகுபரன் மற்றும் தமிழ் நாட்டின் தமிழ்ப்புலவரும் முதுநிலைக் கல்வி மானுமாகி அ. நீலாவதி ஆகியோர் எழுதியிருப்பதில் இருந்து நூலின் பார்வை இன்னும் வித்தியாசமாக இருக்கிறது.

"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்தகுடி தமிழ்" எனச் சான்றோர் போற்றும் தொன்மை மொழி தமிழோடு அரபு மொழியைத் தாய் மொழியாகப் பேசிய அண்ணல் நபிகளாரையும் இணைத்து இதுவரை எவரும் சிந் திக்காத ஒரு கோணத்தில் இந்நூலை உருவாக்கியிருக்கிறார்.

"அஸ்ஸலாமு அலைக்கும்" என முகமன் கூறி முதல் தலைப்பை



ஆரம்பித்து "தாஹா நபியும் தமிழ் மொழியும்" என்ற இறுதித் தலைப் போடு அறுபத்தி மூன்று தலைப்பு களுடன் நூலுக்கு முற்றுப் புள்ளி வைத்திருக்கிறார். மொத்தம் ஐநூறு பக்கங்கள்.

"இறுதி நபியின் கருத்துணர்வு கள் கன்னித் தமிழின் இலக்கியச்



செல்வங்களுடன் முரண்படாமல் பயணிப்பதை எண்ணிப் பார்க்கும் போது மாநபியின் மனத்தில் மௌன மொழியாக தமிழ் இருந்தே வந்துள் ளது என்பதை ஏற்றுக் கொள்வதே பண்புடைமையாகும்" எனத் தங்கத் தமிழோடு தாஹா நபியைத் தொடர்பு படுத்தி எழுதியிருப்பதை நூலின் ஆரம்பம் முதல் முடிவு வரை காணமுடிகிறது.

"அரபிகள் அஜமிகளைவிட மேலானவர்களும் அல்லர் அஜ மிகள் அரபிகளைவிட மேலான வர்களும் அல்லர்.... எல்லோரும் ஆதமின் மக்களே..."

இப்போது சமுதாய தெருக்களில் 'நிறுத்து' சொல்லுங்கள் "மாநபி பேசாத மௌன மொழி தமிழ் தான்" என்ற வரிகளில் நூலாசிரிய ரின் கருத்து மிகவும் துல்லியமாக சொல்லப்பட்டிருப்பதை உணர லாம்.

இந்நூலை வாசிக்கும் போது ஏற் கனவே நபிகளாரைப் பற்றி எழுதப் பட்ட பல எழுத்தாளர்கள் கவிஞர் கள் புலவர்கள் அறிஞர்கள் ஞானிக ளின் கருத்துக்களையும் தத்துவங்க ளையும் குறள்களையும் நபிகளாரின் வாழ்க்கையோடும் பழக்கவழக்கங்க ளோடும் நூலாசிரியர் ஒப்பீடு செய்து எழுதியிருப்பது நூலின் தலைப்புக்கு சிறப்பைச் சேர்க்கிறது.

அதிலும் செம்மொழி தமிழின் செழுமை மாறாது செதுக்கிய வரிகளை வாசிக்கும் போது செந்தமி ழோடு விளையாடியிருக்கும் நூலாசி ரியரின் வசீகரத் தமிழ் வாசிப்போரை அடிமையாக்கி விடுகிறது.


யாகாவ ராயினும் நா காக்க...என்ற தலைப்பில்

"தீயினால் சுட்டவடு உள்ஆறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு"
மற்றும்
யாகாவ ராயினும் நாகாக்க காவாக் கால்

(19 ஆம் பக்கம் பார்க்க)

**கல்ஹின்னை :பஹ்மி ஹலீம்தீன்**

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 140




திரு/திருமதி.செல்வி ..............................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி ..............................
..............................
..............................
திகதி ..............................
கையொப்பம் ..............................

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 140
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 140

### இடமிருந்து வலம்

01. பாராட்டு அல்லது கௌரவப்படுத்தும் வகையில் வழங்கப்படு வது
04. ஒருவருக்குக் கிடைக்க வேண்டிய பணத்தொகை
08. பரீட்சையில் வெற்றி (குழம்பியுள்ளது)
09. புகையிலையிலிருந்து தயாரிக்கப்படுவது
11. முகத்தில் கன்னத்துடன் சார்ந்த பகுதி
12. பொருட்களை ஓரிடத்தில் ஒன்றாகச் சேர்ப்பது (திரும்பியுள்ளது)
14. ஒருவருக்குச் செய்யும் நன்மை அல்லது உதவி
18. செல்வம்
19. சிரசு திரும்பி விட்டது.
20. கணிதத்தில் வரும் பெருக்கல் அடையாளக் குறி ( திரும்பி யுள்ளது)
21. முன்னர் நடைமுறையில் இருந்த தூரத்தைக் கணக்கிடும் அளவு முறை
22. மகிழ்ச்சி குழம்பிவிட்டது
23. ஒரு வாத்தியக் கருவி (குழம்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

01. விதை
02. சுவை
03. வழிபாடு, பிரார்த்தனை
04. தழும்பு
05. அத்தாட்சி
06. பெண்கள் இதனை அரைத்து கைகளில் பூசுவார்கள்
07. சிறு மேடு
10. பயனற்ற வீண் செலவு (குழம்பியுள்ளது)
13. மங்களகரமான நிகழ்வுகளின் போது இதனையும் காணலாம் (குழம்பியுள்ளது)
14. ரத்தம்
15. இராமாயணக் கதையில் வரும் ஒரு பாத்திரம்
16. இதுவும் ஒரு நிறம்
17. மகள்
19. முதன்மைப் பொறுப்பு (குழம்பியுள்ளது)

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 139

### விடைகள்

**இடமிருந்துவலம்**

1. மகாவலி
4. வைகாசி
7. காக்கி
9. வில்
10. கீதம்
11. புலம்பல்
15. பட்சி
17. ஆமை
18. ஊனம்
19. வளி
20. பதி
21. சிங்கம்
22. காரம்

**மேலிருந்து கீழ்**

1. மருதம்
2. வக்கீல்
3. லிகிதம்
5. கால்
6. சிவிகை
8. காம்பு
12. பலம்
13. பசி
14, சுமை
16. பட்டம்
17. ஆச்சி
18. வனம்
19. களி
20. ரதி

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 139

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ 500.00 | இரண்டாம் பரிசு ரூ 350.00 | மூன்றாம் பரிசு ரூ 150.00 |
|---|---|---|
| **எம்.எம்.எம். மிஸ்பாஹ்,** 2/3 ரொட்ணி வீதி, பொரளை | **வசந்தா பாலேந்திரன்** 15/2 தயா வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06 | **கே.எப். மில்காணி,** புளியடி குறுக்கு வீதி, ஏறாவூர் |

### பாராட்டு பெறுவோர்

1. **எம்.எம் சசாத்** மருதமுனை
2. **பி. பேரின்பராஜா** மட்டக்களப்பு
3. **எஸ். பாக்கியநாதன்** காரைதீவு
4. **எம்.ஐ.ஏ. லத்தீப்** **அக்கரைப்பற்று**
5. **கே.வீ.ஜீ.எச்.ஏ ஷக்கூர்** மடவள பஸார்
6. **எம். மைதிலி** புவக்பிட்டிய
7. **என்.கே. வேணி** பலாங்கொடை
8. **எம்.எம்.எம் நிஸாம்** காலி
9. **ரதி சிவசீலன்** யாழ்ப்பாணம்
10. **எம்.ஏ. முனீத்** அட்டாளைச்சேனை

# பறந்து சென்ற வானொலி குயில் ஆயிஷா ஜுனைதீன்



வானொலி குயிலொன்று வானளவில் பறந்து சென்றுவிட்டது என்ற செய்தி வானொலிப் பிரியர்களை மட்டுமல்ல நம் எல்லோரையுமே அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இலங்கை வானொலி முஸ்லிம் சேவையின் முத்தான சொத்தாக திகழ்ந்த கலாபூசணம் ஆயிஷா ஜுனைதீன் கடந்த 22.09.2024 அன்று எம்மை விட்டும் இவ்வுலகை விட்டும் நிரந்தமாக விடைபெற்றுச் சென்று விட்டார் என்ற செய்தி எம்மை நிலைகுலையச் செய்து விட்டது.

1976 ஆம் ஆண்டு முதல் வானொலியில் கொடிகட்டி பறந்தவர்தான் சகோதரி ஆயிஷா ஜுனைதீன். மாதர் மஜ்லிஸ் நிகழ்ச்சி உட்பட மேலும் பல்வேறு பிரபலமான நிகழ்ச்சிகளைத் தயாரித்தளித்த பெருமை இவருக்குண்டு. வானொலிக்கு ஏற்ற வளமான குரலுக்கு சொந்தக்காரி. தமிழ் மட்டுமன்றி சிங்கள ஆங்கில மொழிகளிலும் தேர்ச்சி பெற்ற பல்கலைக்கழக வணிகவியல் பட்டதாரி. இவ்வளவு ஆளுமைகளையும் தன்னகத்தே கொண்ட சகோதரி ஆயிஷா ஜுனைதீனின் மறைவு எனக்கு பெரும் அதிர்ச்சியைத் தந்தது.

நான் ஆரம்ப காலத்தில் தமிழ் சேவையில் ஒலிபரப்பாகும் பூவும் பொட்டும் மங்கையர் மஞ்சரி நிகழ்ச்சிக்குத்தான் அடிக்கடி ஆக்கங்களை அனுப்புவது வழக்கம். இதன் மூலமே என்னை இனம் கண்ட சகோதரி ஆயிஷா ஜுனைதீன் தனது மாதர் மஜ்லிஸ் நெஞ்சோடு நெஞ்சம் நிகழ்ச்சியோடு என்னையும் இணைத்துக் கொண்டதை இங்கு நன்றியுடன் நினைவூட்ட விரும்புகிறேன். பல வருடங்கள் பிரதி மூலம் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட எனக்கு, வானொலியில் முதன்முதலாக நேரில் கலந்து கொண்டு குரல் கொடுக்கும் வாய்ப்பை அளித்த பெருமையும் இவரையே சாரும்

பல வருட காலமாக மாதர் மஜ்லிஸ் நிகழ்ச்சிக்கு எழுதும் வரம் பெற்ற எனக்கு, என் எழுத்துகளுக்கும் ஊக்கமளித்து, உரமிட்ட உத்தமர்களில் சகோதரி ஆயிஷாவும் குறிப்பிடத்தக்கவராவார்.

மாதர் மஜ்லிஸ் நிகழ்ச்சியை திங்கள் மலர், செவ்வாய் மலர், புதன் மலர் என பெயரிட்டு மலரச் செய்து மணம் பரப்பியவர்.

இவர் வானொலியில் இருந்த காலம் வசந்த காலம் என்றே சொல்ல வேண்டும்.எனவே இலங்கை வானொலியை பொறுத்தவரை ஆயிஷா ஜுனைதீன் மறக்க முடியாத ஓர் ஆளுமை.

முஸ்லிம் சேவையில் முதல் பெண் தயாரிப்பாளர் என்ற பெருமையும் சகோதரி ஆயிஷா ஜுனைதீனுக்கு உண்டு. இவர் நிகழ்ச்சி தயாரிப்பாளராக மட்டுமின்றி நிகழ்ச்சித் தொகுப்பாளராக, அறிவிப்பாளராக என தனது பங்களிப்பினை நல்கியுள்ளார். மாதம்பையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சகோதரி ஆயிஷா ஜுனைதீன் 1976 ஆம் ஆண்டிலேயே மாதர் மஜிலிஸ் நிகழ்ச்சியின் முதல் பெண் தயாரிப்பாளராக இணைந்து கொண்டார். இவர் முஸ்லிம் மாதர்கள் கல்வியில் விழிப்புணர்ச்சி பெற வேண்டும் என்பதை தனது நிகழ்ச்சிகளில் அடிக்கடி வலியுறுத்தி வந்தார். இது தவிர பிஞ்சு மனம், முதுசம், இலக்கிய மஞ்சரி, முத்தாரம், அருட்சுனை ஆகிய பல இலக்கிய நிகழ்ச்சிகளையும் கலந்துரையாடல்களையும் இவர் தயாரித்துள்ளார் வானொலி,தொலைக் காட்சி அறிவிப்பாளராகவும் செய்தி வாசிப்பாளராகவும் கூட இவர் செயல்பட்டுள்ளார். இலங்கை வானொலியில் செய்தி வாசித்த முதல் முஸ்லிம் பெண்ணும், அது போன்றே இலங்கை ரூபவாஹினி தொலைக் காட்சியில் செய்தி வாசித்த முதல் முஸ்லிம் பெண்ணும் இவரே. சுயாதீன தொலைக்காட்சி சேவை இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டபோது இந்த தொலைக்காட்சியிலே முதன் முதலில் தோன்றிய முஸ்லிம் பெண் அறிவிப்பாளரும் இவரேதான். நொயலின் ஹொண்டர் ஆங்கிலத்திலும், ஆயிஷா ஜுனைதீன் தமிழ் மொழியிலும், இந்துநில் திசாநாயக்க சிங்கள மொழியிலும் அறிவிப்புச் செய்தே சுயாதீன தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ஆரம்பம் செய்து வைப்பர். நிகழ்ச்சிகளை நிறைவு செய்யும்போதும் இந்த மூன்று பெண் அறிவிப்பாளர்களே அறிவிப்பு செய்தனர் . அந்த அளவுக்கு சகோதரி ஆயிஷாவின் குரலுக்கு நல்ல மவுசு இருந்தது. இவர் வானொலிவுடன் தனது நீண்ட நாள் உறவைத் துண்டித்துக் கொண்டாலும், தொலைக்காட்சியில் பல நிகழ்ச்சிகளுக்கு மொழி பெயர்ப்பு மூலம் பங்களிப்புச் செய்து வந்தார். இவரது கலை இலக்கியச் சேவையைப் பாராட்டி ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் இவருக்கு விருது வழங்கி கௌரவித்தது. கலாசார அமைச்சும் இவருக்கு கலாபூஷணம் அரச விருது வழங்கி கௌரவித்தது

சகோதரி ஆயிஷா ஜுனைதீன் ஆரம்பித்து வைத்த எனது வானொலி பயணம் தான் இன்றும் தொடர்கிறது. சகோதரி ஆயிஷாவுக்கும் எனக்குமிடையிலான தூய நட்பும் அன்று முதல் தொடர்ந்தே வந்தது. அவருக்கு சிறிது சுகயீனம் என்று கேள்விப்பட்டதும் அவரை நேரில் சென்று சுகம் விசாரிக்க பல முறை முயன்றேன். "இப்போது வர வேண்டாம். நான் சொன்ன பிறகு வாருங்களேன்" என்று நாட்களை கடத்தி விட்டு சொல்லாமலேயே சென்று விட்டார் என்பதை நினைக்கும் போது நெஞ்சம் வலிக்கிறது. கண்கள் குளமாகின்றன. நான் அவரை நேசித்தேன். அதுபோலவே அவரும் என்னை அளவு கடந்து நேசித்தார். என்மீது அளவற்ற அன்பைச் சொரிந்தார். எனது முன்னேற்றங்களைக் கண்டு பெருமிதம் கொள்வார். இன்று அவர் நிரந்தமாக எம்மை விட்டும் சென்று விட்டாரே என்பதை என்னால் ஜீரணிக்க முடியாமல் உள்ளது. அந்த சோகத்தை வார்த்தைகளால் வடிக்க முடியவில்லை. நெஞ்சோடு நெஞ்சமாய் என்னோடு இணைந்திருந்த சகோதரி ஆயிஷா ஜுனைதீன் எம்மை விட்டு பிரிந்தாலும் அவரது நினைவுகள் எமது "நெஞ்சோடு நெஞ்சமாய்" என்றும் இணைந்திருக்கும். அவரின் சாயலிலேயே இருக்கும் அவரது ஒரே மகள் ஸிமாராவைப் பார்த்து நாம் மன ஆறுதலடைவோம்.

எல்லாம் வல்ல அல்லாஹ் என் அன்புச் சோதரி ஆயிஷாவுக்கு மேலான சொர்க்கத்தை வழங்க பிரார்த்திப்போமாக! ஆமீன்.

கலாபூசணம்
நூருல் அயின் நஜ்முல் ஹுசைன்


## வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சிற்றுண்டிச்சாலையை நடத்துவதற்கு விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளது.

இது குறித்த நிபந்தனைகளையும், பதிவிற்கான விண்ணப்பப் படிவத்தையும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் www.mfa.gov.lk எனும் இணைதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும். விலைமனுக்கள் 2024.10.15 ஆந் திகதி அன்று பி.ப. 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 011-7711109 என்ற தொ.பே. இலக்கத்தைத் தொடர்பு கொள்ளவும்.


## உண்மையாக செயற்படும் எவரும்... (13ஆம் பக்க தொடர்ச்சி)

**கே : எதிர்வருகின்ற பாராளுமன்ற தேர்தலில் உங்கள் கட்சி வெற்றி பெற்றால் தானே இவற்றையெல்லாவற்றையும் நீங்கள் நடைமுறைப்படுத்துவீர்கள். அது சாத்தியமாகுமா?**

பதில் : சாத்தியப்படும். பாராளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெறும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது. அதற்காக மக்கள் எம்மோடு இணைந்து வேலை செய்யத் தொடங்கியுள்ளனர். அந்த அடிப்படையில் ஜனாதிபதி தேர்தலில் பெற்ற வாக்குகளை விட அதிகமான வாக்குகளை பெறக் கூடிய வாய்ப்பு இருக்கின்றது என்று நம்புகின்றோம்.

**கே : ஜனாதிபதி தேர்தலில் சிறுபான்மையின மக்கள் உங்கள் கட்சிக்கு அளித்த வாக்குகள் குறைவாகவே இருக்கின்றது. அவ்வாறாயின் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பான உங்களது நிலைப்பாடு எவ்வாறு காணப்படுகின்றது?**

பதில் : உங்களுடைய கூற்றில் ஓரளவு உண்மை இருக்கின்றது. சிறுபான்மை மக்களை வென்றெடுப்பதற்கான வேலைத் திட்டத்தையும் ஆரம்பித்திருக்கின்றோம்.

அந்த அடிப்படையில் நான் போட்டியிடுவது குறித்து சிந்திக்கும் முன்பே மலையக மக்கள் குறிப்பாக புத்துஜீவிகள், ஆசிரியர்கள், வர்த்தக பிரமுகர்கள், தோட்ட தொழிலாளர்கள், பெண்கள் அமைப்புகள், பல்கலைகழக மாணவர்கள், புலம் பெயர் தமிழர்கள் போன்றோர் தலைமைத்துவத்தை ஏற்குமாறு கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். எனவே கட்சியின் நிலைப்பாட்டையும் மக்களின் வேண்டுகோளையும் கருத்திற் கொண்டு பயணம் செய்ய காத்திருக்கின்றோம்.





## சுகாதார அமைச்சு

**விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை சீதுவ**
**வைத்தியசாலை உணவகத்தை நடத்திச் செல்லல் – 2025**

விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையில் 2025ம் ஆண்டிற்காக உணவகத்தை நடத்திச் செல்லும் கேள்விக்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

கேள்வி ஆவணங்கள் விநியோகித்தல் ஆரம்பிக்கும் திகதி 2024.09.30
கேள்வி ஆவணங்கள் விநியோகித்தல் முடிவுறுத்தும் திகதி 2024.10.18
கேள்வி ஆவணங்கள் திறக்கப்படும் திகதி 2024.10.21 மு.ப. 10.30

இது பற்றிய மேலதிக விபரங்களுக்கு சுகாதார அமைச்சின் இணைய தளமான https://www.health.gov.lk இற்கு பிரவேசித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை,**
**சீதுவ.**



## மக்கள் வங்கி

### விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**முன்மொழியப்பட்ட பதுரலிய மக்கள் வங்கி கிளைக் கட்டிடத்தை நிர்மாணித்தல்**

**ஒப்பந்த இல. 031/2024**

கொழும்பு-02, இல. 75, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, மக்கள் வங்கி தலைமை அலுவலகம், பொறியியல் சேவைகள் திணைக்களம், கட்டிட பொறியியல் சேவைகள் தலைவர் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள பதுரலியவில் மக்கள் வங்கி கிளைக் கட்டிடத்தை நிர்மாணித்தல் எனும் பணிக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

இதற்கான மதிப்பீட்டுத் தொகை சுமார் 98 மில்லியன் ரூபாவாகும். (பெறுமதி சேர் வரியின்றி)

இந்த வேலைகள் மண் வேலைகள், மண் பிடிமான வேலைகள், அத்திவாரம், தரைத் தளம் மற்றும் கூரைக்கான சிவில் வேலைகள், பகுதிபிரிப்பு வேலைகள் மற்றும் முடிவுறுத்தல்கள், நீர்க்குழாய் வேலைகள், மின்சாரம், தொலைபேசி மற்றும் தரவுகளுக்கான குறைந்த அழுத்தமுடைய வயரிங், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு, மின்பிறப்பாக்கியை வழங்குதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல், சூரிய சக்தி முறைமை என்பனவாகும் என்பதுடன் வளிச்சீராக்க முறைமை இந்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாகும்.

இந்த வேலைத்தளம் களுத்துறை மாவட்டத்தில் பதுரலிய பஸ் நிலையத்திற்கு அண்மையில் அமைந்துள்ளது.

02. நிர்மாணக் காலம் 450 நாட்காட்டி நாட்களாகும்.

03. தேசிய போட்டி ரீதியான விலைமனு முறையின் கீழ் விலைக்கோரல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

04. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு, தகைமை வாய்ந்த விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) C4 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் கட்டிட நிர்மாணத் துறைக்காக பதிவைக் கொண்டவராகவிருத்தல் வேண்டும்.

05. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகைமைத் தேவைப்பாடுகளில் உள்ளடங்குபவைகள்:

அ. கடந்த ஐந்து (5) வருடங்களில் ஆகக்குறைந்தது நூற்றி இருபத்தியெட்டு மில்லியன் (128 மில்லியன் ரூபா) ரூபா பெறுமதியான சராசரி வருடாந்த புரள்வைக் கொண்ட நிர்மாண வேலை செய்திருத்தல்.

ஆ. கடந்த 5 வருட காலத்தினுள் ஆகக் குறைந்தது 100 மில்லியன் ரூபா பெறுமதியுடையதும் மற்றும் 450 நாட்களுக்குள் இதனையொத்த சிக்கல் தன்மையுடைய கட்டிட நிர்மாணத் திட்டமொன்றை வெற்றிகரமாக நிறைவு செய்த அனுபவம் அல்லது அதிக பெறுமதியுடைய திட்டமொன்றை நிர்ணயிக்கப்பட்ட காலம் மற்றும் நேரத்தில் நிறைவு செய்துள்ளமை.

இ. இந்த ஒப்பந்தத்தின் கீழ் பெறப்பட்ட முற்பணங்கள் மற்றும் ஏனைய கடப்பாடுகள் நீங்கலாக தேறிய திரவச் சொத்துக்கள் மற்றும் / அல்லது அனுமதிக்கப்பட்டுள்ள கடன் வசதிகளின் ஆகக் குறைந்த தொகை இருபத்தியிரண்டு மில்லியன் (22 மில்லியன்) ரூபாவிற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

05. இது தொடர்பாக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு-02, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, இல. 75, தலைமையகக் கட்டிடம், மக்கள் வங்கி, 6ஆம் மாடியில் பொறியியல் சேவைகள் திணைக்களத்தின் கட்டிட பொறியியல் சேவைகள் தலைவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 011 2473206, தொலைநகல் 011 2341591) மற்றும் 2024 ஒக்டோபர் 02ஆம் திகதி முதல் 2024 ஒக்டோபர் 22ஆம் திகதி வரையில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான சாதாரண வேலை நேரங்களில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

06. மீளளிக்கப்படாத 20,000.00 ரூபா (சகல வரிகளும் உட்பட) கட்டணத்தை ரொக்கப் பணமாக செலுத்திய பின் 2024 ஒக்டோபர் 02ஆம் திகதி முதல் 2024 ஒக்டோபர் 22ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணி இடையே மேற்கூறப்பட்ட கொழும்பு-02, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, இல. 75, தலைமையகக் கட்டிடம், மக்கள் வங்கி, 6ஆம் மாடியில் பொறியியல் சேவைகள் திணைக்களத்தின் கட்டிட பொறியியல் சேவைகள் தலைவருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றினைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விமைனுதாரர்கள் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றினை கொள்வனவு செய்யலாம்.

07. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட இரு பிரதிகளிலான விலைமனுக்களை உறையின் இடது பக்க மேல் மூலையில் ''முன்மொழியப்பட்ட பதுரலிய மக்கள் வங்கி கிளைக் கட்டிடத்தை நிர்மாணித்தல்'' எனக் குறிப்பிட்டு 2024 ஒக்டோபர் 23ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு அல்லது அதன் முன் கொழும்பு-02, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, இல. 75, மக்கள் வங்கி தலைமையகக் கட்டிடம், 6ஆம் மாடியில் பொறியியல் சேவைகள் திணைக்களத்தின் கட்டிட பொறியியல் சேவைகள் தலைவரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு அல்லது மேற்கூறப்பட்ட முகவரியில் பொறியியல் சேவைகள் திணைக்களத்தின் கட்டிட பொறியியல் சேவைகள் தலைவருக்கு பதிவுத் தபால் மூலம் கிடைக்கச் செய்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிந்தவுடன், அத்தருணத்தில் சமுகந்தர தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

08. விலைமனுக்கள் 2025 ஜனவரி 22ஆம் திகதி வரை செல்லுபடியாகும் தன்மையில் இருத்தல் வேண்டும்.

09. அனைத்து விலைமனுக்களுடனும் மக்கள் வங்கியைத் தவிர்ந்த இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற இலங்கையில் இயங்கும் கீர்த்தி வாய்ந்த வங்கியொன்றிலிருந்து பெறப்பட்ட பத்து இலட்சம் (இல. ரூ. 1,000,000.00) பெறுமதியான விலைமனுப் பிணையொன்றை இணைத்து அனுப்புதல் வேண்டும். விலைமனுப் பிணை 2025 பெப்ரவரி 19ஆம் திகதி வரை செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

10. முன்னோடி விலைமனுக் கூட்டமொன்று 2024 ஒக்டோபர் 14ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு கொழும்பு-02, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, தலைமையகம், மக்கள் வங்கி, 6ஆம் மாடி, பொறியியல் சேவைகள் திணைக்களத்தில் இடம்பெறும்.

**கட்டிட பொறியியல் சேவைகள் தலைவர்,**
**பொறியியல் சேவைகள் திணைக்களம்,**
**6ஆம் மாடி, மக்கள் வங்கி தலைமையகக் கட்டிடம்,**
**இல. 75, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு-02.**

PEOPLE'S BANK
Pride of the Nation



## மக்கள் வங்கி

### விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**முன்மொழியப்பட்ட மாங்குளம் மக்கள் வங்கி கிளைக் கட்டிடத்தை நிர்மாணித்தல்**

**ஒப்பந்த இல. 030/2024**

கொழும்பு-02, இல. 75, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, மக்கள் வங்கி தலைமை அலுவலகம், பொறியியல் சேவைகள் திணைக்களம், கட்டிட பொறியியல் சேவைகள் தலைவர் மக்கள் வங்கியின் சார்பில் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள மாங்குளத்தில் மக்கள் வங்கி கிளைக் கட்டிடத்தை நிர்மாணித்தல் எனும் பணிக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். இதற்கான பொறியியல் மதிப்பீட்டுத் தொகை சுமார் 119 மில்லியன் ரூபாவாகும்.

உத்தேசக் கட்டிடம் மாங்குளத்தில் மக்கள் வங்கிக் கிளை அலுவலகத்திற்கான அலுவலகக் கட்டிடமாகும், இது ஒற்றை மாடிக் கட்டிடம் என்பதுடன் ஏறத்தாழ 550.00 சதுர மீற்றர் மொத்த தரைப் பரப்பளவைக் கொண்டது. பொறிமுறை, மின்சாரம் மற்றும் குழாய் வேலைகள் மற்றும் சிவில் வேலைகள் சார்ந்த நிர்மாண வேலைகள் இதில் உள்ளடங்குகின்றன.

உத்தேசக் கட்டிடத்திற்கான அமைவிடம் மாங்குளம் நகரத்தின் மத்தியில் அமைந்துள்ளது.

இந்தக் கட்டிடம் பின்வரும் பசுமை கட்டிட தரத்தின் பிரகாரம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

- வலுசக்தி வினைத்திறன்
- நிலையான காணி முகாமைத்துவம் மற்றும் திட்டமிடல்
- கட்டிடப் பொருட்கள் மற்றும் வளங்கள்
- கட்டிடத்தின் உள்ளக சூழலின் தரம்
- நீர் வினைத்திறன்
- பசுமை புத்தாக்கம்
- சமூக - கலாசார இணக்கப்பாடு

நிர்மாணக் காலம் 365 நாட்காட்டி நாட்களாகும்.

02. தேசிய போட்டி ரீதியான விலைமனு முறையின் கீழ் விலைக்கோரல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

03. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராகவும், பின்வரும் தேவைப்பாடுகளைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) C4 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் கட்டிட நிர்மாணத் துறைக்காக செல்லுபடியாகும் பதிவைக் கொண்டவராகவிருத்தல் வேண்டும்.

04. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகைமைத் தேவைப்பாடுகளில் உள்ளடங்குபவைகள்:

- கடந்த ஐந்து (5) வருடங்களில் ஆகக்குறைந்தது 178 மில்லியன் ரூபா பெறுமதியான சராசரி வருடாந்த புரள்வைக் கொண்ட நிர்மாண வேலை செய்திருத்தல்.
- கடந்த 5 வருட காலத்தினுள் பிரதான ஒப்பந்தக்காரராக ஆகக் குறைந்தது 120 மில்லியன் ரூபா பெறுமதியுடையதும் மற்றும் 12 மாத காலத்திற்குள் இதனையொத்த சிக்கல் தன்மையுடைய கட்டிட நிர்மாணத் திட்டமொன்றை வெற்றிகரமாக நிறைவு செய்த அனுபவம் அல்லது அதிக பெறுமதியுடைய திட்டமொன்றை நிர்ணயிக்கப்பட்ட காலம் மற்றும் நேரத்தில் நிறைவு செய்துள்ளமை.
- இந்த ஒப்பந்தத்தின் கீழ் பெறப்பட்ட முற்பணங்கள் மற்றும் ஏனைய கடப்பாடுகள் நீங்கலாக தேறிய திரவச் சொத்துக்கள் மற்றும் / அல்லது அனுமதிக்கப்பட்டுள்ள கடன் வசதிகளின் ஆகக் குறைந்த தொகை 30 மில்லியன் ரூபாவாவிற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

05. இது தொடர்பாக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு-02, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, இல. 75, தலைமையகக் கட்டிடம், மக்கள் வங்கி, 6ஆம் மாடியில் பொறியியல் சேவைகள் திணைக்களத்தின் கட்டிட பொறியியல் சேவைகள் தலைவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 011 2473206/ தொலைநகல் 011 2341591/ மின்னஞ்சல்: yasasr@peoplesbank.lk) மற்றும் 2024 ஒக்டோபர் 02ஆம் திகதி முதல் 2024 ஒக்டோபர் 22ஆம் திகதி வரையில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான சாதாரண வேலை நேரங்களில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

06. ஆர்வமுள்ள விமைனுதாரர்கள் மீளளிக்கப்படாத 25,000.00 ரூபா கட்டணத்தை ரொக்கப் பணமாக செலுத்திய பின் 2024 ஒக்டோபர் 02ஆம் திகதி முதல் 2024 ஒக்டோபர் 22ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணி இடையே மேற்கூறப்பட்ட முகவரியிலுள்ள கட்டிட பொறியியல் சேவைகள் தலைவருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றினைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றினை கொள்வனவு செய்யலாம்.

07. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட இரு பிரதிகளிலான விலைமனுக்களை உறையின் இடது பக்க மேல் மூலையில் ''முன்மொழியப்பட்ட மாங்குளம் மக்கள் வங்கி கிளைக் கட்டிடத்தை நிர்மாணித்தல்'' எனக் குறிப்பிட்டு 2024 ஒக்டோபர் 23ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு அல்லது அதன் முன் கொழும்பு-02, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, இல. 75, மக்கள் வங்கி தலைமையகக் கட்டிடம், 6ஆம் மாடியில் பொறியியல் சேவைகள் திணைக்களத்தின் கட்டிட பொறியியல் சேவைகள் தலைவரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு அல்லது மேற்கூறப்பட்ட முகவரியில் பொறியியல் சேவைகள் திணைக்களத்தின் கட்டிட பொறியியல் சேவைகள் தலைவருக்கு பதிவுத் தபால் மூலம் கிடைக்கச் செய்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிந்தவுடன், அத்தருணத்தில் சமுகந்தர தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

08. விலைமனுக்கள் 2025 ஜனவரி 22ஆம் திகதி வரை செல்லுபடியாகும் தன்மையில் இருத்தல் வேண்டும்.

09. அனைத்து விலைமனுக்களுடனும் மக்கள் வங்கியைத் தவிர்ந்த இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற இலங்கையில் இயங்கும் கீர்த்தி வாய்ந்த வங்கியொன்றிலிருந்து பெறப்பட்ட பன்னிரண்டு இலட்சம் இல. ரூபா (இல. ரூ. 1,200,000.00) பெறுமதியான விலைமனுப் பிணையொன்றை இணைத்து அனுப்புதல் வேண்டும். விலைமனுப் பிணை 2025 பெப்ரவரி 19ஆம் திகதி வரை செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

10. முன்னோடி விலைமனுக் கூட்டமொன்று 2024 ஒக்டோபர் 14ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு கொழும்பு-02, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, தலைமையகம், மக்கள் வங்கி, 6ஆம் மாடி, பொறியியல் சேவைகள் திணைக்களத்தில் இடம்பெறும்.

**கட்டிட பொறியியல் சேவைகள் தலைவர்,**
**பொறியியல் சேவைகள் திணைக்களம்,**
**6ஆம் மாடி, மக்கள் வங்கி தலைமையகக் கட்டிடம்,**
**இல. 75, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு-02.**

PEOPLE'S BANK
Pride of the Nation

## இளமையில் கல்வி சிலையில் எழுத்து

# பட்டம் பெற்ற முன்பள்ளி ஆசிரியர்களை உருவாக்கல்



நாம் அனைவரும் இலங்கையில் பிறந்து வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கின்ற, தமிழ் மக்கள். எமது கடந்தகால இலங்கை வாழ்க்கையில், நாம் அனுபவித்த பல விடயங்களை இன்றைய தலைமுறையினர், இழந்து விட்டது மட்டுமல்லாமல், அந்த இழப்பினை ஈடு செய்ய முடியாதவர்களாக, மயக்க நிலையில், அதற்கு தங்களை வலுக்கட்டாயமாகப் பழக்கப் படுத்திக் கொள்கிறார்கள். இது எமது இனம் முற்றாக அழிந்து, அடையாளம் அற்றுப் போகப் போகின்றது என்பதற்கான இன்றைய கள யதார்த்தமாகும்.

ஈழத் தமிழர்களின் இன்றைய பரிதாப நிலையில் இருந்து, மீட்சி பெறுவதற்கு என்ன தான் வழி ?.

இப்போதைய தலைமுறையினர் தீர்க்கமானதும், சிந்தனைத் திறனுள்ள தூரநோக்குடன், நடைமுறைச் சாத்தியமான முடிவுகளுக்கு செயல் வடிவம் கொடுத்து, புதிய தலைமுறையினரை உருவாக்க, நிறைவேற்ற வேண்டிய வேலைத் திட்டங்களும், செயற்பாடுகளும் எமது தலையாய கடமைப்பாடாக எம் எல்லோர் முன்னும் உள்ளது.

அப்படியான ஒரு தலைமுறையினரை உருவாக்க வேண்டிய கடப்பாடு, நம் எல்லோரினதும் ஆகும். இதுவரை ஒன்றுமே நடக்கவில்லை என்பதல்ல, சரியான புள்ளியில் முழுக்கவனம் செலுத்தப்படவில்லை. பல வேலைத்திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும், உடைந்த சுவருக்கு மாறிமாறி வர்ணம் பூசுகின்ற நிகழ்வுகளாகத்தான் கருதப்படுகின்றது. நிலையான உறுதியான மாற்றத்தின் மூலம் புதிய தலைமுறையினர் உருவாக்கபட வேண்டும்.

அது தாய், தந்தை, ஆசிரியர் என்ற மூன்று பேரினதும் ஒருமித்த பங்களிப்பினூடாக முக்கூட்டு முயற்சியாக உருவாக்கப்பட வேண்டும். பொறுப்புள்ள இளம் தாய் தந்தையர்களின் மனதில் மாற்றம் ஏற்பட வேண்டும். அவர்கள் மத்தியில் இருந்து, பயிற்றப் பட்ட ஆசிரிய ஆசிரியைகள் உருவாக்கப்பட வேண்டும். அவர்கள் மூலம் இளம் பெற்றோர்கள் தமது குழந்தைகளுக்கு தூர நோக்குள்ள அடிப்படை ஆரம்பக் கல்வியைப் புகட்டுவதில் பெரும் பங்கு வகிப்பதனை உறுதி செய்ய முடியும். இதன் மூலமாகத் தான் புதிய, வலுவான, சிந்தனைத்திறன் மிக்க ஒரு தலை முறையினரை உருவாக்க முடியும். முன்பள்ளிகளே முதற்பள்ளிகள், இதில் நாம் அனைவரும் பங்காளிகள். எமது பங்களிப்புக்கள் அவசரமாகவும், அத்தியாவசியமாகவும் தேவைப்படுகின்றது.

இலங்கை சுதந்திரம் அடைந்து கடந்த 75 வருடங்களாக இலங்கை அரசாங்கம், இலங்கையில் முன்பள்ளிகள் சம்பந்தமாகவோ, அல்லது அங்கே கடமையாற்றுகின்ற ஆசிரியர்கள், மற்றும் இளம் குழந்தைகள் சம்பந்தமாகவோ எந்தவிதமாகவும் கரிசனையும் கொண்டிருக்கவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக ''மொன்டெசூரி'' என்ற பெயரில் தனியார் பாலர் பாடசாலைகள் இயங்கி வந்திருக்கின்றன. எந்தவிதமான சட்டங்களுக்கும் உட்படாத, கட்டுப்பாடுகள், வரையறைகள் இல்லாத, இலாப நோக்கத்தை மட்டுமே மையப்படுத்தி இயங்கி வந்திருக்கின்றன. இங்கு, சமூகத்தில் வசதிபடைத்தவர்களின் குழந்தைகளுக்கு மட்டுமே, அந்த வாய்ப்புகள் கிடைக்கப் பெற்றது. சமூகத்தில் வசதி குறைந்த பெரும்பான்மையான குடும்பங்களினால், அவ்வசதியை பெற்றுக் கொள்ள முடியவில்லை. ஆனால் தொடர்ந்து வந்த, உள்நாட்டுப் போரின் காரணமாக, ஒட்டுமொத்தமாக சகல மட்டத்திலும் மாணவர்களின் கல்வி சீர்குலைந்து, முன்னர் அதி உச்சத்தில் இருந்த கல்வித்தகமை, இப்பொழுது அடிமட்டத்திற்கு தள்ளப்பட்டு, கடைநிலையில் இருக்கின்றது.

இலங்கையில் இலவசக் கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னரான காலப்பகுதியில், தரப்படுத்தல் கெடுபிடிகள் இருந்தபோதும், ஏதோ ஒரு வகையில் பிழைத்துக் கொள்ள வழிவகைகள் இருந்தன. ஆனால் போருக்குப் பின்னர், நிலைமை மிகவும் மோசமடைந்து போவதைத் தடுக்கு முகமாக, சமூகத்தில், ஆங்காங்கே நல்ல உள்ளங் கொண்டவர்களால், பல முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன என்பதனால், எல்லாம் சரியாகிவிட்டது என்று அர்த்தமல்ல. எனவேதான்,

இதன் அடுத்த கட்டமாக, பல நல்ல சமுதாய நலன் விரும்பும் முன்னோடிகளினால் கல்வி சம்பந்தமாக காத்திரமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதன் ஒரு அங்கமாக வட மாகாணத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்ற தனியார் முன்பள்ளிகளின் தரத்தை, தற்கால நவீன சூழ்நிலைக்கு ஏற்றவகையிலும், இளம் சிறார்களின் மனவளர்ச்சி, மூளை விரித்தி, உடல்நல சுகாதார தேவைகளை கருத்தில் கொண்டு, முன்பள்ளிகளில் பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்கு சரியான புரிதலை ஏற்படுத்தி, உயரிய பயிற்சியினை உள்ளடக்கிய அதிசிறந்த தராதரத்தை, அவர்களுக்கு வழங்கும் முகமாகவும், அவர்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்தும் முகமாகவும், புதிய இரண்டு வருட ''டிப்புளோமா'' தராதர படிப்பை மேற்கொள்வதற்கு, இலங்கையில் கல்வி அபிவிருத்திக் குழுமமும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும், இலங்கை கல்வி அமைச்சும், குறிப்பாக வட மாகாண கல்வித் திணைக்களமும் இணைந்து, இவ்வருடம் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்து இட்டுள்ளன. இந்த உடன்படிக்கையின் பிரகாரம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம் சார்ந்த கல்வி அதிகாரிகள் டிப்புளோமா பரீட்சைக்குரிய பயிற்சிகள் உள்ளடங்கிய பாடத்திட்டத்தினை தயாரித்து வகுப்புக்களையும், பரீட்சைகளையும், பட்டமளிப்பையும் நடத்தவும், கல்வித்திணைக்கள அதிகாரிகள் தகுதி வாய்ந்த விரிவுரையாளர்களை தெரிவு செய்து பணியில் அமர்த்தவும், தேவையான நிதியினை, இலங்கை கல்வி அபிவிருத்திக்கான குழுமம், வசதிபடைத்த புலம் பெயர் தமிழ் மக்கள் ஆளுக்கு ஒரு ஆசிரியருக்காவது உதவி என்ற அடிப்படையில், அவர்களது பங்களிப்பினைப் பெற்று, இத்திட்டத்தினை நிறைவேற்றத் தேவையான நிதியினை திரட்ட தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இரண்டு வருட டிப்புளோமா பட்டப்படிப்பினை முடிப்பதற்கு மொத்தமாக அறுபது ஆயிரம் இலங்கை ரூபாக்கள் (60,000) தேவைப்படுகின்றது, இக்கற்கை நெறியின் மூலம் 2026 ஆண்டில், யாழ்ப்பாணப் பல்கலைகழக வளாகத்தில் 60 மாணவ ஆசிரியர்களும், கிளிநொச்சி வளாகத்தில் 60 மாணவ ஆசிரியர்களுமாக மொத்தமாக 120 ஆசிரியர்களும், வவுனியா பல்கலைகழகத்தில் ஐம்பது மாணவ ஆசிரியர்களுமாக, அவர்களது இரண்டாம் வருட முடிவில், பட்டம் பெற்று, தகுதி பெற்ற ஆசிரியர்களாக வெளியேறுவார்கள். முதற்கட்டமாக அவர்களது தகைமை அடிப்படையில் வடமாகாணத்தின் இரண்டு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மூன்று வளாகங்களில் மொத்தமாக நூற்றி நாற்பத்து மூன்று மாணவ ஆசிரியர்கள் இரண்டு வருட பட்டப்படிப்பை இரண்டு குழுக்களாக, ஆடி, புரட்டாதி மாதங்களில் ஆரம்பித்துள்ளார்கள்.

வடமாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்கள் அடங்கலாக 1566 முன்பள்ளிகள் இயங்குகின்றன. அங்கு 32994 முன்பள்ளிச் சிறார்கள் இணைக்கப்பட்டுள்ளார்கள். இம் முன்பள்ளிகளில் பணி புரிகின்றவர்களில், மாதாந்த வேதனமாக ரூபா 6000 பெறுகின்றவர்களும், தொண்டர் அடிப்படையில் உள்ள இளம் பெற்றோர்களுமாக 2987 பேர் சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

ஆசிரியரகளின் கற்றல், கற்பித்தல் ஆற்றலினைச் சர்வதேச தரத்திற்கு உயர்த்துவதன் மூலம், இரண்டு தொடக்கம் ஐந்து வயதான பாலர்களின் எதிர்காலத்தை, கட்டுக்கோப்பான சீரிய பழக்க வழக்கங்கள், பண்பாட்டுடன் கூடிய, நவீன முன்னேற்றங்களையும் உள்வாங்கி, ஆரம்பக் கல்வியை, தாய்மை அன்புடன் வழங்கி, புதிய தலைமுறையினரை உருவாக்குவது மட்டுமல்லாமல், எம் முன்னோர் எமக்கு விட்டுச் சென்ற, இன, மொழி, சமய, கலைகலாசார, பண்பாட்டு விழுமியங்களையும், சொந்த மண்ணின் மாட்சியையும் பேணிப் பாதுகாப்பதற்கும், அடைக்கப்பட்ட கதவுகளை திறந்து எதிர்காலம் ஒளிமயமானதாகவும், நம்பிக்கை நிரம்பியதாகவும் அமைய, இனி வருகின்ற தலைமுறையினர் வழி வகுக்க, இன்றைய தலை முறையினராகிய நாம், உளமுவந்து எமது பங்களிப்பினை செய்ய முன்வர வேண்டும். இந்த தூரநோக்குள்ள சிந்தனையை நாம் அனைவரும், சகல வேறுபாடுகளையும் கடந்து, எமது பங்களிப்பினைச் செய்வதன் மூலம், தலை சிறந்த ஆரம்பக் கல்விக்கூடமான முன்பள்ளிகளை சிறப்பாக மாற்றியமைத்து, இங்கு இணைகின்ற பாலர்களுக்கு கல்வியின் தொடக்கப் புள்ளியை பசுமரத்தாணியாக பதிய வைப்பதற்கு, எமது மூதாதையரை நினைவு கூர்ந்து, நாம் அவர்களுக்கு செய்யும் நன்றிக் கடனாக, நாம் ஒவ்வொருவரும் குறைந்தது, ஒரு முன்பள்ளி ஆசிரியரையாவது உருவாக்குவதற்கு, பல்கலைகழக பட்டப் படிப்பான டிப்புளோமா கல்வி தராதரத்தைப் பெறுவதற்கு ஒரு முன்பள்ளி ஆசிரியருக்கு தேவையான, இலங்கை ரூபா 60,000 கொடுத்து உதவுவதன் மூலம், ஒரு ஆசிரியரை உருவாக்குவதுடன் அந்தந்தக் குடும்பங்களையும் கை கொடுத்து உயர்த்துவதன் மூலம், ஒட்டுமொத்த சமுதாயத்தையும் உயர்த்தியவர்களாக நிறைவு பெறுவோம். நாம் முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம், முன்பள்ளி ஆசிரியர்கள் அனைவருமே, வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்களே. எனவே எமது பங்களிப்பின் மூலம், எம்மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தி அவர்களும் தலை நிமிர்ந்து தன்மானத்துடன் வாழ வழி சமைப்போம். மனமுண்டானால் நிச்சயமாக இடமுண்டு. " நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோர்க்கும் பெய்யும் மழை ".

,இம்முயற்சி வெற்றி பெறவும், எம்மினம் மீண்டெழுவதற்கு வழி சமைப்போமாக. மறைந்த எமது உறவுகளை நினைவுகூர்ந்து அவர்களின் ஞாபகார்த்தமாக அவர்கள் பெயரில், ஒருவரையோ அல்லது இருவரையோ பட்டம் பெற்ற முன்பள்ளி ஆசிரியர்களாக உருவாக்கி அடிப்படை சமுதாய மாற்றத்திற்கு வழி சமைப்போம்.

உங்கள் பங்களிப்பை நேரடியாக, உங்கள் விருப்பம் உள்ளடங்கலான விபரத்துடன், இலங்கை கல்வி அபிவிருத்தி குழுமத்தின் வங்கிக் கணக்கிற்கு அனுப்பிவைக்கலாம். உங்களுக்கு தேவையான சகல விபரங்களுக்கும் 0771 035 780, 0773 568 032 எனும் தொலைபேசிகள் ஊடாகவோ அல்லது lankaedc@gmail.com எனும் மின்னஞ்சல் மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம்.

சிவசம்பு பரிமேலழகர். ...

**இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை**

**கைத்தொழில் அமைச்சு**

## 2025ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2025ஆம் வருடத்தில் பின்வரும் வழங்கல் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையில் தம்மைப் பதிவு செய்து கொள்ள விரும்புகின்ற கீர்த்தி வாய்ந்த உற்பத்தியாளர்கள், ஏக முகவர்கள், விநியோகஸ்தர்கள், இறக்குமதியாளர்கள், அங்கீகார விற்பனையாளர்கள், மொத்த விற்பனை நிறுவனங்கள், வழங்குநர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் சேவை வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**உற்பத்தி / சேவைகளுக்கான வகுதி**

| | |
|---|---|
| 01. | அலுவலக உபகரணங்கள் மற்றும் சேவைகள் |
| 1.1 | அலுவலக் காகிதாதிகள் (பேனைகள், பென்சில்கள், கடித உறைகள், ஸ்டெப்ளர்கள், தட்டச்சுத் தாள்கள், புகைப்படப் பிரதி தாள்கள், துடைப்பான்கள் மற்றும் பல) |
| 1.2 | அலுவலக சாதனங்கள் (கல்குலேட்டர்கள், தொலைநகல் இயந்திரங்கள், புகைப்படப் பிரதி இயந்திரங்கள், முகம்/விரல் அகப்பட வரவு பதிவு செய்யும் இயந்திரம், ஏனைய உபகரணங்கள்) |
| 1.3 | கணனி மற்றும் கணனி சம்பந்தமான துணையுறுப்புகள் (UPS, மௌஸ், கீபோர்டுகள் இன்னும் பல) கணனி பாவனைப்பொருட்கள் (அச்சுப்பொறி துணைப்பாகங்கள், டோனர்கள், கார்ட்ரிஜ்கள், ரிபன்கள், பென் டிரைவ்கள், மீள்பதிவு செய்யக்கூடிய CD, DVD, மை, காகிதங்கள்) |
| 1.4 | அலுவலகத் தளபாடங்கள் - மரம் / உருக்கு (மேசைகள், கதிரைகள், கப்போர்டுகள், அலுமாரிகள், ராக்கைகள் போன்றன) |
| 1.5 | மின்சார சாதனங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் (குளிர்சாதனப்பெட்டி, மின் விசிறிகள், காற்றுச்சீராக்கிகள் இன்னும் பல) |
| 1.6 | கட்புல – செவிப்புல சாதனங்கள் மற்றும் தொலைத்தொடர்பு சாதனங்கள் (கமராக்கள், வீடியோ கமராக்கள், புரஜெக்டர்கள் மற்றும் படம் கழுவும் இயந்திரங்கள், தொலைபேசி முறைமைகள், தொலைபேசி உபகரணங்கள் இன்னும் பல) - CCTV |
| 1.7 | திகதி முத்திரைகள், இறப்பர் முத்திரைகள் மற்றும் பெயர்ப் பலகைகள் (அலுமினியம், பிளாஸ்டிக் மற்றும் பித்தளை இன்னும் பல) |
| 1.8 | அடையாள அட்டைகளைத் தயாரித்தல் |
| 1.9 | சகல வகையான சீருடைத் துணிகள், சப்பாத்துகள், பாதுகாப்புச் சாதனங்கள் (சேர்ட் மற்றும் காற்சட்டைத் துணிகள், சப்பாத்துகள், காலுறைகள், தலைக் கவசங்கள், இடை வார்கள், பாதுகாப்பு சப்பாத்துகள், தீயணைப்பு உபகரணங்கள் மற்றும் ஏனைய பாதுகாப்பு உபகரணங்கள்) |
| 2.0 | அலுவலக உபகரணங்களின் பராமரிப்பு மற்றும் திருத்தவேலைகள் |
| 2.1 | அலுவலக உபகரணங்களின் பராமரிப்பு மற்றும் திருத்தவேலைகள் (தொலைநகல் இயந்திரம், புகைப்படப் பிரதி இயந்திரம், முகம்/விரல் அகப்பட வரவு பதியும் இயந்திரம், ஏனைய உபகரணங்கள், இன்னும் பல) |
| 2.2 | வளிச்சீராக்கிகளை திருத்துதல், பராமரித்தல் மற்றும் சேர்விஸ் செய்தல் |
| 2.3 | கணனி அச்சுப்பொறிகளின், கணனிகள் மற்றும் விரல் ரேகை பதிவு இயந்திர திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்புகள் - CCTV |
| 2.4 | அலுவலகத் தளபாடங்களின் திருத்தவேலைகள் (மரம்/உருக்கு) |
| 2.5 | சாவிகளை வெட்டுதல் மற்றும் பூட்டுகளின் திருத்தவேலைகள் |
| 3.0 | வாகனத் திருத்தவேலைகள் மற்றும் உதிரிப்பாகங்களை வழங்குதல் |
| 3.1 | இலகுரக வாகனங்களுக்கான டயர்கள், டியூப்கள் மற்றும் பெட்டறிகள் |
| 3.2 | இலகுரக வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்கான உதிரிப்பாகங்கள் |
| 3.3 | ரேடியேட்டர், இன்ஜெக்டர் பம்பிகள், சைலன்சர்களின் திருத்தவேலைகள் |
| 3.4 | வாகனங்களின் மேற்புற வேலைகள் (வாகன இருக்கைக்கு குஷனிடுதல், இருக்கை மேலுறைகள், இறப்பர் கார்பட்கள் மற்றும் கென்வஸ் கவர்கள்) |
| 3.5 | வாகனங்களுக்கான சேர்விஸ்கள் மற்றும் திருத்தவேலைகள் (உராய்வுநீக்கிகள்) |
| 3.6 | வாகன சக்கரங்களை சமப்படுத்தல் மற்றும் சீராக்கம் செய்தல் |
| 3.7 | டயர்களை மீள்நிரப்புதல் |
| 3.8 | வாகனங்களுக்கான தகர வேலைகள் மற்றும் நிறப்பூச்சு வேலைகள் |
| 3.9 | வாகனங்களின் மின்னியல் திருத்தவேலைகள் மற்றும் வளிச்சீராக்க திருத்தவேலைகள் |
| 4.0 | அச்சு வேலைகள் மற்றும் விளம்பரங்கள் |
| 4.1 | வரைதல் வேலைகள் (Art work), வடிவமைப்புகள் மற்றும் விளம்பரப்படுத்தல்கள் |
| 4.2 | பற்றுச்சீட்டுப் புத்தகங்கள், பதாகைகள், மற்றும் அலுவலக ஆவணங்களை அச்சிடல் |
| 4.3 | சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள், அழைப்பிதழ்கள் / வாழ்த்து அட்டைகள் என்பவற்றை வடிவமைத்தல் மற்றும் அச்சிடல் (உள்நாட்டு / வெளிநாட்டு) |
| 4.4 | அச்சடித்த புத்தகங்களை கட்டுதல், நூலகப் புத்தகங்களைக் கட்டுதல் (Binding) (துண்டுப் பிரசுரங்கள், பதாகைகள் மற்றும் சுவரொட்டிகள் இன்னும் பல) |
| 5.0 | ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் இரசாயனங்கள் |
| 5.1 | ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் துணைப்பொருட்கள் |
| 5.2 | இறப்பர் உற்பத்தி மற்றும் இலக்ட்ரோபிளேடிங் உற்பத்திக்கான இரசாயனங்கள் |
| 5.3 | அனைத்து வகையான இரசாயனங்கள் - கைத்தொழில் மற்றும் Aralar தரம், இறப்பர், உணவு மற்றும் Foundry Meteor logical) |
| 5.4 | இறப்பர் கைத்தொழிலுக்கான மூலப்பொருட்கள் - Nitrile (Synthetic) Rubber Letex, RSS, Crepe இறப்பர் இன்னும் பல |
| 6.0 | பொறியியல் உபகரணங்கள் மற்றும் கருவிகள் |
| 6.1 | பொறியியல் உபகரணங்கள் மற்றும் கருவிகள் (கடைசல் இயந்திரம், காற்றமுத்திகள், உருக்கியொட்டும் மின்மாற்றிகள் மற்றும் மின்சார கருவிகள் இன்னும் பல) |
| 6.2 | மின்சாரக் கருவிகள் மற்றும் உதிரிப்பாகங்கள், வளிச்சீராக்கி உபகரணங்கள் மற்றும் திருத்தவேலை துணைப்பாகங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் இயந்திர உபகரணங்கள், சிறு கருவிகள் மற்றும் உபகரணங்கள் |
| 6.3 | வளிச்சீராக்கி துணைப்பாகங்கள் |
| 6.4 | விவசாய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் மற்றும் வழங்குநர்கள் |
| 6.5 | உணவு உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் இயந்திராதிகள் மற்றும் உபகரணங்களின் வழங்குநர்கள் |
| 6.6 | கொதிகலன் மற்றும் பீடன இயந்திர உற்பத்தியாளர்கள் |
| 6.7 | சாயம் மற்றும் அச்சு (MOLD) உற்பத்தியாளர்கள் |
| 6.8 | வாசனைத்திரவிய உற்பத்தி இயந்திர உற்பத்தியாளர்கள் |
| 7.0 | பொறியியல் மூலப்பொருட்கள் |
| 7.1 | பொறியியல் மூலப் பொருட்கள் (MS உருக்குகள், சகல வகையான உருக்குகள், குழாய்கள், H இரும்புகள், Channel இரும்பு போன்றன) |
| 8.0 | தோற்பொருள் கைத்தொழில் |
| 8.1 | காலணிகள் மற்றும் தோற்பொருள் உற்பத்திக்குத் தேவையான பொருட்கள் மற்றும் இயந்திராதிகள் |
| 8.2 | மூலப்பொருட்கள், இரசாயனங்கள், ஒட்டும் பசைகள், ரெக்சின், PVC/PU, சப்பாத்து செய்வதற்கான கருவிகள் |
| 8.3 | EVA சீட்கள் Fiber சீட்கள் போன்றன |
| 9.0 | வார்ப்பாலை தேவைப்பாடுகள் |
| 9.1 | வார்ப்பாலை கைத்தொழிலுக்கான மூலப் பொருட்கள்<br>Coke, Pig Iron, Dolomite, Furnace oil HC 800, Graphite lumps, Graphite powder, Inoculation, Ferro –Silicon (Fe-Si), Ferro – Manganese (Fe-mn) , Sili – Magnesium (Si –Mg), Carbon powder, Kaolin |
| 9.2 | கழிவுகள் வார்ப்பு இரும்புக் கழிவுகள், அலுமினியக் கழிவுகள், சீனச்சட்டி கழிவுகள், உருக்குக் கழிவுகள், பித்தளைக் கழிவுகள் |
| 9.3 | வார்ப்பாலை அச்சுகளுக்கான மூலப் பொருட்கள்<br>சிலிக்கா மணல், லின்சீட் எண்ணெய், சோடியம் சிலிக்கேட், டெக்ஸ்ட்ரின், சோடியம் பெட்டோனைட் |
| 9.4 | வார்ப்பாலை சூளையைக் கட்டியெழுப்பும் பொருட்கள், சூளை களிமண், சுட்ட செங்கல், படிகக்கல் உடைக்கும் பொருட்கள் |
| 9.5 | அரிந்த மரங்கள், ஒட்டுப்பலகை சீட்கள், வார்ப்பாலை இரசாயனங்கள் |
| 10.0 | அனைத்து வகையான கட்டிடப் பொருட்கள் |
| 10.1 | மணல், செங்கல், சிறு கற்கள், சீமெந்து, பீவீசீ குழாய் இன்னும் பலவற்றை வழங்குதல் |
| 11.0 | சேவைகள் |
| 11.1 | பாதுகாப்பு சேவைகள் |
| 11.2 | மின்சாரம் மற்றும் தொலைபேசி முறைமை கம்பியிணைப்பு |
| 11.3 | தொலைத்தொடர்பாடல் உபகரணங்கள், கணனி வலையமைப்பு கம்பியிணைப்பு மற்றும் பராமரிப்பு, திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ்கள், கணனி மென்பொருள்கள் |
| 11.4 | கணனி மென்பொருள் உருவாக்கம் / இணையதள உருவாக்கம் மற்றும் மென்பொருள் தீர்வு வழங்குநர்கள் |
| 11.5 | கட்புல / செவிப்புல ஆவணப்பட தயாரிப்புகள் |
| 11.6 | கண்காட்சிகள்/கருத்தரங்குகள்/செயலமர்வுகளுக்கான ஒலியமைப்புகள் |
| 11.7 | கட்டிடங்கள் மற்றும் கண்காட்சி மண்டபத்திற்கான ஒளியமைப்புகள், மலர் அலங்காரங்கள் |
| 11.8 | போக்குவரத்துச் சேவைகள் மோட்டார் வாகனங்களை குத்தகை/வாடகைக்கமர்த்துதல் (கார்கள், வேன்கள், பஸ்கள், லொறிகள் (5 தொன்) இன்னும் பல) |
| 11.9 | உள்நாட்டு / வெளிநாட்டு வர்த்தகக் கண்காட்சிகளுக்கான நிகழ்வு முகாமைத்துவம் / ஒழுங்கு செய்தல் |
| 11.10 | சரக்குகளை அனுப்புபவர்கள் - வான் மார்க்கம், கடல் மார்க்கம் மற்றும் தூதஞ்சல் சேவை |
| 11.11 | மொழிபெயர்ப்புகள் (ஆங்கிலத்திலிருந்து தமிழ், ஜப்பான், சீன மற்றும் ஏனைய வெளிநாட்டு மொழிகள்) |
| 11.12 | தரைவிரிப்புகள் மற்றும் கதிரைகளை ஷம்பு விட்டு கழுவுதல் மற்றும் தளபாட திருத்தவேலைகள் |
| 11.13 | பீடைக் கட்டுப்பாடு |
| 11.14 | வளிமண்டலவியல் வார்ப்பாலை சேவைகள், ஸ்பெக்ட்ரோமீட்டர்களின் திருத்தவேலைகள், இன்டக்ஷன் சூளை PLC இன்னும் பல |
| 11.15 | ஸ்பெக்ட்ரோமீட்டர்கள், இன்டக்ஷன் சூளை, PLC, சேர்விஸ், ஆய்வுகூட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு |
| 11.16 | சுங்கப் பொருட்களை அனுப்புதல் மற்றும் அப்புறப்படுத்தல் |
| 11.17 | வேலைத்தள இயந்திரங்கள் (உப ஒப்பந்தம்) – கடைசல், மில்லிங், ஷாப்பிங், போரிங், வேல்டிங் |
| 11.18 | ஹைட்ரோலிக் ஹோஸ் மற்றும் கேபள்களைப் பராமரித்தல் மற்றும் திருத்தவேலைகள் |
| 11.19 | சுத்திகரிப்புச் சேவைகள் மற்றும் துப்புரவேற்பாட்டுச் சேவைகள் |
| 11.20 | Steel trusses கட்டமைத்தல், நிறப்பூச்சு பூசுதல் மற்றும் பொருத்துதல் |
| 11.21 | அலுவலகக் கட்டிடங்கள், வேலைத்தளக் கட்டிடங்கள் மற்றும் இயந்திரோபகரணங்களைப் பராமரித்தல் மற்றும் நிறப்பூச்சு பூசுதல் |
| 11.22 | அனைத்து வகையான இயந்திரோபகரணங்களின் திருத்தவேலைகள் (கடைசல் இயந்திரங்கள், பெண்டிங், ஷெயாரிங் இயந்திரங்கள்) |
| 11.23 | வளிச்சீராக்கிகளை சேர்விஸ் செய்தல் மற்றும் பராமரித்தல், இறப்பர் உற்பத்தி இயந்திரோபகரணங்கள், மின்சார உபகரணங்களை சேர்விஸ் செய்தல், மோட்டர் வைண்டிங் செய்தல் |
| 11.24 | நாரிழை அச்சுகள் மற்றும் இறப்பர் உற்பத்தி அச்சுகள் வழங்குதல் மற்றும் வார்ப்பு வேலைகள் |
| 11.25 | மணல் வார்ப்பு வேலைகள் |
| 11.26 | இறப்பர் கைத்தொழிலுக்குத் தேவையான இறப்பர் உற்பத்திக்கான உப ஒப்பந்தக்காரர்கள் |
| 11.27 | தொழிற்சாலைத் துறையின் மின்சாரம் மற்றும் பராமரிப்பு, இறப்பர், அச்சு வேலை, கட்டிடங்கள் மற்றும் தொழில்நுட்ப சேவைக்கான தொழிலாளர்களை வழங்குதல் |
| 11.28 | பொறியியல் துறையின் இயந்திரோபகரணங்களைப் பராமரித்தல் மற்றும் சேர்விஸ் துறைக்கு இயைபான சேவைகளை வழங்குதல் (Compressor இயந்திரம், மின்பிறப்பாக்கிகள் மற்றும் ஏனைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்) |
| 11.29 | சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் |
| 11.30 | CNC மோல்டிங் இயந்திரம் மற்றும் கடைசல் இயந்திர பராமரிப்புகள் |
| 11.31 | ஜன்னல் திரைச்சீலை வடிவமைப்புகள் மற்றும் அலுவலக உள்ளக வேலைகள் |
| 12.0 | மாவட்ட மட்டத்திலான ஒப்பந்தக்காரர்கள் (**CIDA** பதிவு கட்டாயமாகும்) **CS2 ,CS1, C1-C9,EM1-EM5, SP1-SP5, GP-P, GP-B1-GP-B4** |
| 12.1 | கட்டிடங்கள், வீதிகள் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைகள் |
| 12.2 | பொறிமுறை, மின்சாரம் மற்றும் நீர்க்குழாய் வேலை வழங்கல்களுக்கு இயைபான நிர்மாணம் மற்றும் சேர்விஸ் செய்தல் |
| 12.3 | கட்டிட முகாமைத்துவ முறைமை வேலைகள் (BMS) (கழிவுப்பொருள் சுத்திகரிப்பு ஒப்பந்தக்காரர்கள்) |
| 12.4 | கட்டிட உள்ளக அலங்காரங்கள் மற்றும் பகுதி பிரிப்பு வேலைகள் |
| 12.5 | சிவில் பராமரிப்பு ஒப்பந்தக்காரர்கள் |
| 12.6 | தொழிலாளர் வழங்குநர்கள் (தேர்ச்சி பெற்ற மற்றும் தேர்ச்சியற்றவர்கள்) |
| 13.0 | ஆலோசனை சேவைகள் **(Design & Supervision Services)** |
| 13.1 | சிவில் பொறியியல் வேலைகள் (Architectural, Structural QS Services & Project Management) |
| 13.2 | மின்சார பொறியியல் வேலைகள் |
| 13.3 | கட்டிட பராமரிப்பு வேலைகள் (Building management Systems) |
| 13.4 | இயந்திராதிகளின் செயற்பாடுகள் மற்றும் உற்பத்தி வசதிகள் |

**விண்ணப்பிக்க வேண்டிய நடைமுறை**

2025ஆம் வருடத்திற்கான ஒவ்வொரு பொருளுக்கும் பதிவுக் கட்டணமாக மீளளிக்கப்படாத 1000.00 ரூபா செலுத்துதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பதாரர் இந்தக் கட்டணத்தை இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் காசாளருக்கு ரொக்கப் பணமாக அல்லது கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பெயரில் எழுதப்பட்ட காசோலை மூலம் செலுத்தலாம்.

விண்ணப்பப் படிவங்களை கொடுப்பனவுப் பற்றுச்சீட்டு / காசுக்கட்டளையுடன் 2024-12-11ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், கைத்தொழில் அபிவிருத்திச் சபை, இல. 615, காலி வீதி, கட்டுபெத்த, மொரட்டுவ எனும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் கையளிப்பதன் மூலம் கிடைக்கச் செய்தல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''2025ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்'' எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

கட்டிட நிர்மாணம் மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக பதிவு செய்து கொள்ள விரும்பும் விண்ணப்பதாரிகள் நிர்மாண ஒப்பந்தக்காரர்கள் சங்கத்தின் அங்கத்துவத்துடன் கட்டிட நிர்மாணத் துறையின் கீழ் CIDA யின் தேசிய பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும். தங்கள் விண்ணப்பத்துடன் இந்த ஆவணங்களின் புகைப்படப் பிரதிகளையும் இணைத்துச் சமர்ப்பிக்குமாறு விண்ணப்பதாரர்கள் வேண்டப்படுகிறார்கள்.

ஒன்றுக்கு மேற்பட்ட பொருள் மற்றும் சேவைகளுக்காக பதிவு செய்ய உத்தேசிப்பதாயின் ஒவ்வொரு உருப்படிக்கும் ஒரே தடவையில் பணத்தைச் செலுத்தி ஒரே விண்ணப்பத்தின் மூலம் விண்ணப்பிக்கலாம், முழுமையற்ற மற்றும் தாமதமான விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

மாதிரி விண்ணப்பப் படிவங்களை www.idbgov.lk எனும் இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பொதுவாக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தே வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்கான விலைகள் கோரப்படும். எவ்வாறாயினும் பதிவு செய்யப்படாத வழங்குநர்கள் / சேவை வழங்குநர்களிடமிருந்து பொருட்களைக் கொள்வனவு செய்யும் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் உரிமையை கைத்தொழில் அபிவிருத்திச் சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

மேலதிக தெளிவுபடுத்தல்களுக்கு தயவு செய்து பிரதிப் பணிப்பாளர் (வழங்கல்கள்) அவர்களை 011-2607004 எனும் தொலைபேசி இலக்கத்தில் தொடர்புகொள்ளவும்.

**தலைவர்,**
**இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை,**
**இல. 615, காலி வீதி, கட்டுபெத்த, மொரட்டுவை.**
**தொலைபேசி: 011-2607004, தொலைநகல்: 011-2607004**
**இணையதளம்: www.idbgov.lk**

### வடக்கு மற்றும் கிழக்கு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களுக்கு

# இனியும் முஸ்லிம் கட்சிகள் தேவையா?

வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் முஸ்லிம்கள் பெரும்பான்மை சமூகத்தோடு ஒற்றுமையாக சகல விதத்திலும் வாழ்ந்து வருகிறார்கள்.

இந்த ஒற்றுமையை சீர்குலைக்கும் ஒரு அரசியல் கட்சியாக இன்றைய இலங்கை அரசியலில் முஸ்லிம் கட்சிகள் இருந்து வந்ததும் வரலாறு, ஆகவே வடக்கு, கிழக்கு தவிர்ந்து விசேடமாக கண்டி, களுத்துறை, கொழும்பு, குருணாகல் அநுராதபுரம், கம்பஹா, புத்தளம், கேகாலை உட்பட ஏனைய மாவட்ட முஸ்லிம்கள் இந்த தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

வடக்கு, கிழக்கு தவிர்ந்த பிற மாவட்டங்களில் முஸ்லிம்கள் பல பாதிப்புக்கும், அழிவுகளுக்கும் உள்ளாக இந்த முஸ்லிம் கட்சிகளின் அரசியலும் ஒரு முக்கிய காரணமாகும்.

மேலும் 2022 இல் நாட்டில் ஏற்பட்ட அரகல மற்றும் இன்றைய அரசியலில் ஏற்பட்ட மாற்றத்தின் பின்னர் வடக்கு, கிழக்கு தவிர்ந்து ஏனைய மாவட்டங்களில் வாழக் கூடிய முஸ்லிம்கள் புறக்கணிப்பது காலத்தின் தேவையாகவும் இருந்து வருகிறது.

ஆகவே இவ்விடயங்களை கருத்தில் கொண்டு நாம் அரசியல் ரீதியாக பெரும்பான்மை சமூகம் சார்ந்த கட்சிகளோடு இணைந்து, எமது அரசியலை முன்னெடுப்பது காலத்தின் தேவையாக இருந்து வருகிறது.

நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் முஸ்லிம் மக்களிடையே ஏற்பட்ட இந்த அரசியல் மாற்றம் அதன் ஆரம்பமாக இருக்கட்டும்.

*மொஹமட் முஷர்ரப்*
துந்துவ

# இரு நூல்களின் வெளியீட்டு விழா



புத்தளம் மரிக்காரின் 'ரகசியங்கள்' மற்றும் 'மைத்துளிகள் மரணிப்பதில்லை' நூல்களின் வெளியீட்டு விழா புத்தளம் இல்ஹாலிய்யா மகளிர் கல்லூரியில் ஒக்டோபர் மாதம் 5ஆம் திகதி மாலை 6.15க்கு நடைபெறும்.

சிரேஷ்ட ஊடகவியலாளர்) அஷ்ரஃப் சிஹாப்தீன். பிரதம அதிதியாகவும், M.S அலா அஹமத். (உதவிப் பணிப்பாளர் முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்.) விசேட அதிதியாகவும் கலந்து கொள்வர்.

கவிமணி N. நஜ்முல் ஹுசைன் (தலைவர் வலம்புரி கவிதா வட்டம்), Z. A. சன்ஹிர் (ஓய்வு நிலை உதவிக்கல்விப் பணிப்பாளர்), தமிழ்த் தென்றல் அலி அக்பர்(கவிஞர், பன்னூலாசிரியர்), ரஷீத் M. இம்தியாஸ் (கவிஞர் சிரேஷ்ட சட்டத்தரணி) , இளநெஞ்சன் முர்ஷிதீன் (செயலாளர் வலம்புரி கவிதா வட்டம்) அஷ்ஷெய்க். H.M மின்ஹாஜ் (இஸ்லாஹி) (சிரேஷ்ட விரிவுரையாளர் இஸ்லாஹிய்யா மகளிர் கல்லூரி) ஆகியோர் கௌரவ அதிகளாகவும் கலந்து கொள்வர்.



# அரச வாகனங்களை கொழும்பில் ஆங்காங்கே இரகசியமாக விட்டுச் சென்றதன் பின்னணி....

அரசு வாகனங்களைத் முறைகேடாகப் பயன்படுத்துவது கடுமையான குற்றச் செயலாகும். முன்னாள் அமைச்சரான ஏ.எச்.எம்.பௌசிக்கு இரண்டு வருட சிறைத்தண்டனை (ஒத்திவைக்கப்பட்ட தண்டனை) விதிக்கப்பட்டது. அரசாங்க வாகனத்தை தவறாகப் பயன்படுத்திய குற்றத்திற்காகும். மக்கள் பணத்தில் கொள்வனவு செய்யப்படும் வாகனங்களை மக்களுக்குச் சேவை செய்யவே பயன்படுத்த வேண்டும். எனினும் அவ்வாறு மக்களுக்கு சேவை செய்யும் போர்வையில் காலாகாலமாக அரச வாகனங்கள் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டிருப்பது நாட்டு மக்களுக்கு பிரதான சேவைகளை வழங்கும் ஜனாதிபதி செயலகத்தின் ஊடாகவே என்பது மிகவும் வருத்தமளிக்கும் செயலாகும். இதில் நீண்டகாலமாக மோசடிகளும் முறைகேடுகளும் இடம்பெற்று வருவது நாட்டின் துரதிர்ஷ்டமாகும். அமைச்சர் ஒருவருக்கு, அமைச்சின் செயலாளருக்கு அல்லது மேலதிகச் செயலாளர் ஒருவருக்கு, வேறு அனுமதிக்கப்பட்ட அதிகாரிக்கும் வாகனங்களை வழங்குவது சட்டபூர்வமானதாகும். இதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. அமைச்சரோ அல்லது செயலாளரோ பஸ்ஸிலோ அல்லது முச்சக்கர வண்டியிலோ வந்து பொது மக்களுக்கான சேவைகளை செய்ய முடியாது.

என்றாலும் அனுமதிக்கப்பட்ட பணிக் குழுவைத் தவிர வெளியாட்களுக்கு வாகனங்கள் வழங்கப்படுமானால் அது கண்டிப்பாக துஷ்பியோகமேயாகும்.

எனினும் அனுமதிக்கப்பட்ட பணியாளர் குழுவிற்கு அப்பால் சென்று வேறு பணிக் குழு ஆலோசகர் பதவிகளை உருவாக்கி அவர்களுக்காக வாகனங்கள், எரிபொருள் மற்றும் அரச சம்பளம் வழங்கப்படுமாயின் அவ்விடத்தில் இருப்பதும் துஷ்பிரயோகத்தைப் போன்று ஊழல் மோசடிகளுமேயாகும்.



அதேபோன்று, அரசு வாகனங்கள் அல்லது தனியார் நிறுவனங்களிடம் அதிக பணம் செலுத்தி, வாடகை அடிப்படையில் பெற்று, அவ்வாகனங்களைத் தமது நண்பர்கள் நெருக்கமானவர்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்படுமாயின் அவ்விடத்தில் இடம்பெறுவது தெளிவான மோசடியும், திருட்டுமே அன்றி துஷ்பிரயோகம் அல்ல.

உயர் மட்டத்தில் இடம்பெறும் திருட்டை நிறுத்தாமல் கீழ் மட்டங்களில் இடம்பெறும் திருட்டுக்களை நிறுத்த முடியாது.

2012ம் ஆண்டு முதல் ஜனாதிபதி செயலகத்தின் ஊடாக இந்த முறைகேடுகள் மற்றும் ஊழல் மோசடிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளமை தற்போது தெளிவாகியுள்ளது.

அரசு அமைச்சர் ஒருவரோ, செயலாளரோ அல்லது வேறு அதிகாரியோ பயன்படுத்தும் வாகனமாக இருந்தால், அவ்வாகனங்கள் அவர்களது பதவிக் காலம் முடிந்ததும், போக்குவரத்துத் துறை அதிகாரி அல்லது செயலாளர் அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் முறையாகத் திருப்பி ஒப்படைக்கப்பட வேண்டும்.

அப்படிச் செய்யாமல், அவ்வாகனங்களை ஆங்காங்கே நிறுத்திவிட்டுச் சென்றாலோ அல்லது சாரதிகள் மூலம் அவ்வாகனங்களை திருப்பி அனுப்பினாலோ கண்டிப்பாக அங்கு நாம் மேலே குறிப்பிட்ட முறைகேடுகள் அல்லது ஊழல் மோசடிகள் இருக்கும்.

ஜனாதிபதி செயலகத்திற்கு சொந்தமான வாகனங்கள் ஜனாதிபதி அலுவலகத்திற்கு அருகில் உள்ள வீதியில் அமைந்துள்ள வாகனத் தரிப்பிடத்திலும் மற்றும் இலங்கை மன்றக் கல்லூரிக்கு அருகிலும், லக்சலவிற்கு அருகிலும், ஸ்ரவஸ்தி ஆகிய இடங்களிலும் விட்டுச் செல்லப்பட்டுள்ளன.

சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் உள்ள வாகன தரிப்பிடத்திற்கு விஜயம் செய்த தேசிய மக்கள் சக்தியின் தேசிய செயற்குழு உறுப்பினர் வசந்த சமரசிங்க, வாகனங்களை விட்டு சென்றவர்கள் தொடர்பில் எதிர்காலத்தில் விசாரணைகள் நடத்தப்படும் என தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்திற்கு சொந்தமான 833 வாகனங்கள் பற்றிய தகவல்கள் ஆவணங்களில் உள்ளதாக அவர் தினகரனிடம் தெரிவித்தார்

“அந்த 833 வாகனங்களில் 29 வாகனங்கள் 2022ல் காணாமல் போயுள்ளன. அந்த வாகனங்களை பயன்படுத்தியவர்கள் யார், அவற்றிற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வோம். இவையனைத்தும் நாட்டின் சட்டங்களுக்கு அமைவாகவே இடம்பெறும். அதனடிப்படையில், விசாரணை அதிகாரிகள் காலி முகத்திடல் உள்ளிட்ட வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்த இடங்களுக்குச் சென்று இது தொடர்பான விசாரணைகளை வெள்ளிக்கிழமை ஆரம்பித்துள்ளனர்.

அனைத்து அதிகாரிகளினதும் பதவிக் காலம் அல்லது உத்தியோகபூர்வ காலம் முடிவடையும் போது வாகனங்களை முறையாக ஒப்படைக்கும் பொறுப்பு அவர்களுக்கு உள்ளது. அந்த வாகனங்கள் யாரிடம், எப்படி ஒப்படைக்கப்பட்டன என்பது குறித்து விசாரித்து வருகிறோம், அது தொடர்பான சட்ட நடவடிக்கை எடுப்போம்” என்றார்.

*தாரக விக்ரமசேகர*
தமிழில் *எம். எஸ். முஸப்பிர்*

## நற்றமிழ் இலக்கியத்துக்கு அழகு... (16 ஆம் பக்க தொடர்ச்சி)

சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு" என்ற திருக்குறள்களை "தன் நாவையும், வெட்கத்தலத்தையும் பாதுகாத்துக் கொள்வதாக ஒருவர் பொறுப் பேற்றுக் கொண்டால், அவருக்கு சுவர்க்கம் கிடைத்திட நான் பொறுப்பேற்பேன்" என்ற நபிகளாரின் பொன்மொழியோடு ஒப்பிட்டுப் பேசுகிறது அவரது பேனா.

அது போலவே....

நான் நாத்திகனாக மாறிவிடுவேன் என்ற தலைப்பில்

உப்புக்கும் புளிக்கும் என்னை அலைய விடாதே;

அப்படி அலையவிட்டால், நான் நாத்திகனாய்

மாறிவிடுவேன்" என்ற மகாகவி பாரதியின் வரிகளோடு

"வறுமை மனிதனை குஃப்று வரை கொண்டு சேர்த்து விடும்..." என்ற நபிமொழியை ஒப்பிட்டிருக்கிறார்.

மனமொரு குரங்கு ... என்ற தலைப்பில்

"மனை(யாளி)யின் கற்பை காத்திடும்

பூட்டுக்கும் சில

கள்ளச் சாவிகள் உண்டு!" என

இன்னுமொரு புதுக்கவிதையோடு "அந்நிய ஆணும், அந்நியப் பெண்ணும் தனிமையில் இருக்க வேண்டாம்.

மஹ்ரமான ஆணுடனின்றி எந்தப் பெண்ணும் பிரயாணம் செய்ய வேண்டாம்." என்ற நபி மொழியை ஒப்பீடு செய்து எழுதியிருக்கிறார்.

இவ்வாறு நூலிலுள்ள ஒவ்வொரு தலைப்பின் கீழும் ஏராளமான பிறர் எழுதிய கூற்றுக்களையும் குறள்களையும் தத்துவங்களையும் நபிமொழிகளோடும் நபிகளாரின் வாழ்க்கையோடும் இணைத்துப் பார்த்திருக்கிறார் நூலாசிரியர். இந்த நூலின் சிறப்பம்சமும் அதுதான்.

ஏந்தல் நபியவர்களைப் பற்றி எழுதப்பட்ட ஏறத்தாழ இருபது நூல்களை ஆய்வுசெய்து அவற்றைத் துணையாகக் கொண்டு நூலாசிரியரின் அழகு மொழியில் இந்நூல் உருவாக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

காருண்ய நபிகளாரின் நடை உடை பாவனையிலும், பேச்சிலும் மூச்சிலும் பண்பிலும் நறுமணமாய் வீசிக் கொண்டே இருப்பது நற்குணம் தானே.

அதைத் தான் நூலாசிரியர் அவருக்கே உரிய பாணியில் அறுபத்திமூன்று தலைப்புகளில் இலக்கண இலக்கியங்கள் சேர்த்து சந்தம் குறையாத செந்தமிழில் நூலாக்கித் தந்திருக்கிறார்.

கண்மணிகளாரின் சரிதையை அழகு தமிழ்க் காவியமாக்கித் தந்த உமறுப் புலவரின் சீறாப் புராணம், திருவள்ளுவரின் திருக்குறள் முதற் கொண்டு எண்ணற்ற மொழிகளில் எழுதப்பட்ட ஏராளமான நூல்களையும் அவற்றில் எழுதப்பட்டிருக்கும் கருத்துக்களையும் அலசி ஆராய்ந்து இந்நூலுக்கு சுவை சேர்த்திருக்கிறார்.

தலைப்புகள் ஒவ்வொன்றிலும் அதில் எழுதப்பட்டிருக்கும் கருத்துகளிலும் தமிழ் இலக்கியத்தின் நறுமணம் நன்றாகவே வீசுகிறது.

மாநபி மீது கொண்ட அளவற்ற அன்பு திருக்குர்ஆன் மீது கொண்ட தீராக் காதல் தாய்மொழி மீது கொண்ட தெவிட்டாத நேசம் இவையனைத்தும் ஒன்றாய் கலந்து உருவான ஒரு படைப்பு இந்த நூல்.

சங்கத் தமிழ் இலக்கியத்தோடு சத்திய எழுத்தாளரின் மொழிநடை சங்கமமாகி சாந்த நபியின் சரிதையாக நம் கைகளில் இன்று தவழ்கிறது.

கண்மணிகளார் இவ்வுலகில் ஜனனித்து மறைந்த ரபீஉல் அவ்வல் மாதம் பிறக்க பத்து தினங்களுக்கு முன் (26.08. 2024) அன்று ஜே.ஆர். ஜயவர்தன மண்டபத்தில் ஏராளமான எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள், தமிழ் நேசர்கள் கலந்து சிறப்பித்து அண்ணலாரது சரிதை நூல் வெளியீடு செய்யப்பட்டது மிக மிகப் பொருத்தம்.

தாஹா நபியையும் தமிழ் மொழியையும் நேசிப்பவர்கள் இந்நூலை வாசிக்கத் தயங்கமாட்டார்கள் என்பது திண்ணம்.

தேவையானவர்களுக்கு இப்புத்தகத்தை கொழும்பு 10 இல் அமைந்துள்ள இஸ்லாமிய புத்தக நிலையம் ( Islamic Book House) அல்லது 0773486018 என்ற தொலைபேசியைத் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும்.


## விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**
**நீர்ப்பாசன அமைச்சு**
**நீர்ப்பாசனத் திணைக்களம்**

## தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல்

### பொறியியல் பொருட்கள் பிரிவிற்கான பொருட்கள் மற்றும் உபகரணங்களின் பெறுகை

2024 செப்டெம்பர் 06ஆம் திகதிய ‘‘தினகரன்’’ பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பெறுகை அறிவித்தலில் பின்வரும் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| விலைக் கோரல் இல. | லொட் இல.. | பெறுகையின் விபரங்கள் | அளவு (எண்ணிக்கை) | விலைக்கோரல் செல்லுபடியாக வேண்டிய காலம் | விலைக் கோரல் பிணை முறித் தொகை (ரூபா) | பிணை முறி செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|---|
| | Procurement of Goods & Equipment for Engineering Materials Division | | | | | |
| | 01 | Procurement of Fully Automated Compression Testing Machine | 02 | 2024 டிசம்பர் 22ஆம் திகதி வரை | 150,000.00 | 2025 ஜனவரி 19ஆம் திகதி வரை |
| | 02 | Procurement of Soil Core Cutters | 25 | | 15,000.00 | |
| | 03 | Procurement of Electric Oven | 01 | | 12,000.00 | |
| | 04 | Procurement of Coarse Aggregate Sieve Set with Shaker | 02 | | 60,000.00 | |
| | 05 | Procurement of Auger Set | 15 | | 30,000.00 | |
| | 06 | Procurement of Sample Splitters | 10 | | 15,000.00 | |
| | 07 | Procurement of Fine Aggregate Sieve Set with Shaker | 02 | | 20,000.00 | |

விலைமனுக்கள் 2024 ஒக்டோபர் 04ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை வழங்கப்படும் என்பதுடன் 2024 ஒக்டோபர் 07ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும் என்பதை தயவு செய்து கவனத்திற் கொள்ளவும்.

2024 செப்டெம்பர் 06ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் உள்ள மேற்கூறியவைகள் தவிர்ந்த ஏனைய விபரங்கள் எவ்வித மாற்றமுமின்றி அவ்வாறேயிருக்கும்.

**பொறி. அஜித் குணசேக்கர,**
**நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்,**
**நீர்ப்பாசனத் திணைக்களம்,**
**இல. 230, பௌத்தாலோக்க மாவத்தை,**
**கொழும்பு-07**

2024-09-29ஆம் திகதி.



**இலங்கை துறைமுக அதிகார சபை**

## 2025ஆம் வருடத்தின் பொருட்டு உள்ளூர் வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2025ஆம் வருடத்தின் பொருட்டு பின்வரும் பொருட்களை வழங்குவதற்காக இலங்கை துறைமுக அதிகார சபையில் பதிவு செய்து கொள்ள விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், முகவர்கள், கூட்டுத்தாபனம், கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட அரச நிறுவனங்கள், தனியார் மற்றும் கூட்டு நிறுவனங்கள் மற்றும் ஏனைய நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| 01 | பெட்டறி, ஈயம், அமிலம் மற்றும் அவ்வாறான பொருட்கள் |
| 02. | இயந்திராதிகளுக்குத் தேவையான சகல பெயாரிங் வகைகள் |
| 03. | கட்டிடப் பொருட்கள் (செங்கல், கல், மணல், இரும்பு, PVC குழாய்கள் மற்றும் உருப்படிகள், கூரைத் தகடுகள் மற்றும் சீலிங் சீட்டுகள்), சீமெந்து, முன்கலவை கொங்கிறீட் (Ready mixed Concrete ) |
| 04. | இரசாயனப் பொருட்கள், கைத்தொழில், விவசாய இரசாயனங்கள், களைக் கொல்லிகள், அனைத்து வகையான சவர்க்காரங்கள், சுத்திகரிப்புப் பொருட்கள், கிருமிநாசினி வகைகள் |
| 05 | சீருடைகள் மற்றும் துணி வகைகள் |
| 06 | கணனி, தொலைநகல் இயந்திரம், புகைப்படப் பிரதி இயந்திரம், கணனி அச்சுப் பொறிகள், மென்பொருள்கள் மற்றும் உதிரிப்பாகங்கள், டோனர் வகைகள், UPS |
| 07 | மின் உபகரணங்கள் (சகல வகையான வீட்டு மின் உபகரணங்கள்) மற்றும் கட்புல செவிப்புல உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் |
| 08 | மின்சார கேபள்கள் மற்றும் தொலைத்தொடர்பு கேபள்கள், மின்சார கட்டுப்பாட்டு முறைமை மற்றும் துணைப்பாகங்கள், மின் குமிழ்கள் மற்றும் துணைப்பாகங்கள், வாகன ஹோர்ன் |
| 09 | VHF, கையடக்கத் தொலைபேசிகள், நிலையான தொலைபேசிகள் மற்றும் துணைப்பாகங்களுக்கான தொலைத்தொடர்பு உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள் உட்பட இலத்திரனியல் உபகரணங்கள். |
| 10 | பொறியியலாளர் கருவிகள் மற்றும் உபகரணங்கள், மின்சாரக் கருவிகள் உட்பட பம்பிகள், எரிவாயு மற்றும் சமையலறை உபகரணங்கள், உருக்கியொட்டும் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் பாவனைப் பொருட்கள் |
| 11 | காலணிகள் - கன்வஸ் மற்றும் தோற் சப்பாத்துகள், பூட்ஸ், பாதுகாப்பு காலணிகள் போன்றன |
| 12 | ஆணிகள் மற்றும் சுரைகள், பித்தளை உபகரணங்கள், உலோகக் குழாய்கள் மற்றும் குழாய் பொருத்தும் பகுதிகள், உலோகத் தகடு, உலோக பொதுவான பல்வேறு வடிவங்கள் மற்றும் கம்பி வலை வகைகள், தும்புத்தடி, ஈர்க்கிள், தும்புக் கயிறு மற்றும் ஏனைய தும்பு உற்பத்திகள் (கம்பித் தூரிகை மற்றும் அனைத்து வகையான நிறப்பூச்சுகள் பூசும் தூரிகை வகைகள்) கண்ணாடி, நாரிழை பொருட்கள் உட்பட பொதுவான கனரகப் பொருட்கள் (GRP பொருட்கள்) மற்றும் உற்பத்திகள், ஒட்டுப் பலகைகள், MDF மற்றும் வேல்வுகள். |
| 13 | தகரங்களைச் சுத்தம் செய்யும் கிறிட் பிளாஸ்டிங் செயற்பாடுகளுக்குத் தேவையான பொருட்கள் மற்றும் வார்ப்பு மண் |
| 14 | உயர் அழுத்த ஹோஸ் குழாய்கள் (ஹைட்ரோலிக், அதியழுத்த வாயு, தீயணைப்பு போன்றவைகளுக்கானது) |
| 15 | உராய்வுநீக்கி எண்ணெய்கள் |
| 16 | மெனிலா, புரோலிபொப்லின் மற்றும் நைலோன் கயிறுகள் |
| 17 | அலுவலக காகிதாதிகள் மற்றும் அச்சடிக்கப்பட்ட காகிதாதிகள் |
| 18 | நிறப்பூச்சுகள் -இனாமல் மற்றும் இமல்ஷன், பொலிஷ், முத்திரையிடும் கொம்பவுன்டுகள், விசிறியடிக்கும் நிறப்பூச்சு வகைகள், பிளர் பேஸ்ட் மற்றும் விசிறியடிக்கும் நிறப்பூச்சுகளுக்கான தினர், மெரைன் தரம் மற்றும் அவ்வாறான நிறப்பூச்சுக்கான தினர் வகைகள் |
| 19 | போர்சலின் பொருட்கள், துப்புரவேற்பாட்டு உபகரணங்கள் |
| 20 | வீதிகளுக்கான தார் வகைகள் மற்றும் தயாரிக்கப்பட்ட தார் கலவை, (உலோகம், அஸ்போல்ட் மற்றும் அஸ்போல்ட் கொங்கிறீட்) ILB மற்றும் ஏனைய சீமெந்து உற்பத்திகள், ABC, பிட்டுமன் உற்பத்திகள் |
| 21 | இறப்பர் மற்றும் வெல்கனைசிங் உற்பத்திகள், டயர்கள் மற்றும் டியூப்கள் |
| 22 | பாதுகாப்புப் பொருட்கள் மற்றும் தீயணைப்பு உபகரணங்கள், சுழியோடும் உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள் |
| 23 | வாகன உதிரிப்பாகங்கள், ரேடியேட்டர் மற்றும் ரேடியேட்டர் கோர்கள் |
| 24 | கிரேன், போக் லிப்ட், டொப் லிப்ட் போன்றவற்றுக்கான உதிரிப்பாகங்கள், கடல்சார் சாதனங்களுக்கான உதிரிப்பாகங்கள், பிரைம் மூவர்கள் மற்றும் யாட் டிராக்டர்களுக்கான உதிரிப்பாகங்கள் |
| 25 | உருக்குத் தளபாடங்கள், பிளாஸ்டிக், மரத் தளபாடங்கள் மற்றும் ஏனைய அலுவலகத் தளபாடங்கள் |
| 26 | அரியப்பட்ட பலகைகள் |
| 27 | வளிச்சீராக்கி இயந்திரங்கள், குளிரூட்டிகள், வளிச்சீராக்கி குளிரூட்டி கட்டுப்பாட்டு துணைப்பாகங்கள், குளிரூட்டி வாயுக்கள், துணைப்பாகங்கள் மற்றும் பாவனைப் பொருட்கள் |
| 28 | வயர் ரோப் வகைகள் |
| 29 | மேற்கத்திய மற்றும் உள்நாட்டு மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்து வகைகள் |
| 30 | புகைப்படங்கள் தயாரித்தல், அச்சிடல் மற்றும் அது சார்ந்த சகல சேவைகளும் உள்ளடங்கலாக |
| 31 | நாய் உணவு |
| 32 | புகைப்படப் பிரதி மற்றும் ஸ்கேனர் மற்றும் ஏனைய அலுவலக உபகரணங்களை வாடகைக்கு வழங்கும் சேவைகள் |

**நிபந்தனைகள்:**

01. வழங்குநராக பதிவு செய்து கொள்ள விரும்பும் தனியார் நிறுவனங்கள் மற்றும் ஏனையவர்கள் தமது வியாபாரப் பதிவுச் சான்றிதழை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

02. மேற்குறிப்பிடப்பட்டுள்ள 01 தொடக்கம் 32 வரையான பொருட்களுக்காக பதிவு செய்து கொள்வதற்கு அலுவலக நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 03.30 மணி வரை 2024-10-30ஆம் திகதி வரையில் தேவையான விண்ணப்பப் படிவங்களை ஒவ்வொரு பொருளுக்காகவும் 1000.00 ரூபா மற்றும் வெட் வரியைச் செலுத்தியதன் பின் இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01இல் அமைந்துள்ள வழங்கல் பிரிவின் பிரதான வழங்கல் முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

03. குழுவினால் பரீட்சித்துப் பார்த்து வழங்கல் இயலுமை தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்டு அந்தக் குழுவினால் சிபாரிசு செய்யப்படும் நிறுவனங்களை மட்டும் பதிவு செய்து கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

04. வழங்கலின் பொருட்டு பொதுவாக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தே விலைகள் கோரப்படும் என்பதுடன் பதிவு செய்து கொள்ளாத ஏனைய வழங்குநர்களிடம் இருந்து விலைகளைக் கோரவும் கொள்வனவு செய்வதற்கான உரிமையை துறைமுக அதிகார சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

05. முறையாக விலைமனுக்களைச் சமர்ப்பிக்காத மற்றும் நேர காலத்திற்கு பொருட்களை வழங்கத் தவறுபவர்கள், துறைமுக அதிகார சபையினால் வழங்கப்படும் கட்டளைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் மற்றும் மாதிரிகளுக்கு ஒவ்வாத தன்மையிலுள்ள பொருட்கள் மற்றும் சிறந்த தரத்துடனான பொருட்களை வழங்கத் தவறும் வழங்குநர்களின் பெயர்கள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களின் பெயர்ப் பட்டியலிலிருந்து நீக்கப்படும்.

06. அனைத்து விண்ணப்பங்களும் ‘‘2025ஆம் வருடத்திற்கான உள்ளூர் வழங்குநர்களைப் பதிவு செய்தல்’’ எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் பிரதான முகாமையாளர் (வழங்கல் மற்றும் பொருள்வள முகாமைத்துவம்), வழங்கல் பிரிவு, இலங்கை துறைமுக அதிகார சபை, இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01 எனும் முகவரிக்கு 2024-10-30ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட முகவரியிலுள்ள பிரதான வழங்கல் முகாமையாளர் அலுவலகத்தில் இந்த விண்ணப்பங்களை நேரில் கொண்டுவந்து ஒப்படைக்கலாம். இதன் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

07. மேலதிக விபரங்களை 2323102, 2432866, 2482259, 2320250, 2483553, 2482499, 2328342 எனும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல் மற்றும் பொருள்வள முகாமைத்துவம்),**
**வழங்கல் பிரிவு, இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு-01**

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

### வழங்கல் பிரிவு – மத்திய சமையலறைக்கு

## 2025ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2025ஆம் வருடத்தில் பின்வரும் பொருட்களை வழங்கும் பொருட்டு இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையுடன் தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், முகவர்கள், கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட அரச நிறுவனங்கள், தனிநபர்கள் மற்றும் பங்குதாரர் நிறுவனங்கள் மற்றும் ஏனைய நபர்களிடமிருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| 01. | அரிசி (முழுமையாக கல் மற்றும் மணல் நீக்கப்பட்டவை) |
| 02. | கருவாடு வகைகள் |
| 03. | மரக்கறிகள் மற்றும் கிழங்கு வகைகள், கஜு விதைகள் மற்றும் கஜு துண்டுகள் |
| 04. | தேங்காய்கள், தேங்காய் பால்/கிறீம் |
| 05. | முட்டைகள் |
| 06. | பலசரக்குப் பொருட்கள் மற்றும் தானியங்கள் |
| 07. | வாழைப்பழம் |
| 08. | வெள்ளைச் சீனி |
| 09. | தேயிலை/கோப்பித் தூள் |
| 10. | சூழலுக்கிசைவான உணவு சுற்றும் பொலித்தீன் தாள்கள் (17"x 17") மற்றும் (குறோசறி பைகள் - 7" x 10" மற்றும் 9" x 12") |
| 11. | தேங்காய் எண்ணெய் |
| 12. | கோழியிறைச்சி |
| 13. | பிஸ்கட்கள் |
| 14. | பால்மா / கட்டிப்பால் |
| 15. | ஜேம் / மாஜரின் |
| 16. | எரி வாயு (L.P. Gas) |
| 17 | உணவு பெட்டிகள் (காட்போட்) / உணவு பொதிசெய்யும் காகிதங்கள் |
| 18 | மீன் |
| 19 | குடி நீர் (போத்தலில் அடைக்கப்பட்டவை) |
| 20 | இடியப்பம், பிட்டு போன்றன |

**நிபந்தனைகள்:**

01. வழங்குநர்களாகப் பதிவு செய்துகொள்ள விரும்பும் தனியார் நிறுவனங்கள் மற்றும் ஏனையவர்கள் தமது வியாபாரப் பதிவுச் சான்றிதழை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

02. மேற்படி 01 முதல் 20 வரையான பொருட்களுக்காக பதிவு செய்துகொள்வதற்குத் தேவையான விண்ணப்பப் படிவங்களை ஒவ்வொரு பொருளுக்கும் ரூபா 1000.00 மற்றும் வெட் வரி என்பவற்றைச் செலுத்தியதன் பின் 2024-11-08ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 03.00 மணி வரையில் கொழும்பு-01, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தையில் அமைந்துள்ள வழங்கல் பிரிவு, பிரதான முகாமையாளர் (வழங்கல் மற்றும் பொருள்வள முகாமைத்துவம்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

03. வழங்கல்களுக்காக பொதுவாக பதிவு செய்துகொண்ட வழங்குநர்களிடமிருந்தே விலைகள் கோரப்படும் என்பதுடன் பதிவு செய்து கொள்ளாத ஏனைய வழங்குநர்களிடமிருந்தும் விலைகளைக் கோரி பொருட்களைக் கொள்வனவு செய்யும் உரிமையை துறைமுக அதிகாரசபை தன்னகத்தே கொண்டுள்ளது.

04. முறையாக விலைகளைச் சமர்ப்பிப்பதற்கு மற்றும் நேர காலத்திற்கு பொருட்களை வழங்கத் தவறுபவர்கள் மற்றும் துறைமுக அதிகாரசபையினால் வழங்கப்படும் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் மற்றும் மாதிரிகளின் பிரகாரம் சிறந்த தரத்துடனான பொருட்களை வழங்கத் தவறும் வழங்குநர்களின் பெயர் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் பெயர் பட்டியலிலிருந்து அகற்றப்படும்.

05. சகல விண்ணப்பப் படிவங்களும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''2025ஆம் வருடத்திற்கான உள்ளூர் வழங்குநர்களைப் பதிவு செய்தல்'' எனக் குறிப்பிட்டு, பிரதான முகாமையாளர் (வழங்கல்), வழங்கல் பிரிவு, இலங்கைத் துறைமுக அதிகாரசபை, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, கொழும்பு 01 எனும் முகவரிக்கு 2024-11-18ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் அனுப்புதல் வேண்டும். தேவைப்படும் ஆதார ஆவணங்கள் இல்லாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மேலும் மேற்படி முகவரியில் உள்ள பிரதான பொறியியலாளர் அலுவலகத்திற்கு இந்த விண்ணப்பங்களை நேரடியாக ஒப்படைக்கலாம். இதன் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

06. மேலதிக விபரங்களை **2323102, 2432866, 2482259, 2320250, 2483553, 2482499, 2482259, 2328342** எனும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல் மற்றும் பொருள்வள முகாமைத்துவம்),**
**வழங்கல் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகாரசபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை,**
**கொழும்பு 01.**

## சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத் தொகுதி அதிகார சபை

# கேள்விக்கான அழைப்பு

| தொ. இல. | பெறுகை கோவை இலக்கம் | விபரம் | கேள்வி ஆவணங்கள் விநியோகிக் கப்படும் இறுதித் திகதி | கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் தினம் மற்றும் நேரம் மற்றும் இடம் | மீளளிக் கப்படாத கேள்வி ஆவணக் கட்டணம் | கேள்விப் பிணை |
|---|---|---|---|---|---|---|
| 01. | QTN63/2025 | சுகததாச அதிகார சபையின் உள்ளக, வெளியக விளையாட்டரங்கு நிர்வாக கட்டிடம், விளையாட்டு ஹோட்டல், பெலிஅத்த நீச்சல் தடாகத்திற்கு 2025ம் ஆண்டிற்கு சுத்திகரிப்பு சேவையைப் பெற்றுக் கொள்ளல் | 2024.10.21 பி.ப.2.30 வரை | 2024.10.22 மு.ப. 11.00 இற்கு கொழும்பு அலுவலகம் | ரூ. 3,000.00 | ரூ. 120,000.00 செல்லுபடிக் காலம் 107 நாட்கள் (2025.02.06 வரை) |
| 02 | QTN264/2025 | சுகததாச அதிகார சபைக்குச் சொந்தமான போகம்பர விளையாட்டரங்கிற்கு 2025ம் ஆண்டிற்கு சுத்திகரிப்பு சேவையைப் பெற்றுக் கொள்ளல் | 2024.10.21 பி.ப.2.30 வரை | 2024.10.23 மு.ப. 11.00 மணிக்கு கொழும்பு அலுவலகம் | ரூ. 2,000.00 | ரூ. 50,000.00 செல்லுபடிக் காலம் 90 நாட்கள் (2025.01.20 வரை) |

✶ கேள்வி கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக கடிதத் தலைப்புடன் (Letter Head) எழுத்துமூல விண்ணப்பத்தின் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

✶ கேள்வி ஆவணங்களில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கேள்விகளை பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது கீழ்க்காணும் முகவரியில் கொழும்பு அலுவலகத்தில் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

✶ கேள்வி கோரும் முறை - தேசிய போட்டி முறைமை (NCB)

✶ மேற்படி விடயத்திற்கான கேள்விப் பத்திரத்தில் தரப்பட்டுள்ளவாறு மீளளிக்கப்படாத கட்டணத்தை காசாக சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகார சபைக்குச் செலுத்தி கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்வதுடன், தேவைப்படுபவர்களுக்கு கேள்வி ஆவணங்களை அலுவலக நாட்களில் 2024.10.01 முதல் 2024.10.21 வரை 09.00 மணி முதல் 14.30 மணி வரை வாரத்தின் வேலை நாட்களில் விநியோகிக்கப்படும்.

**போகம்பர விளையாட்டரங்கு சுத்திகரிப்பிற்கான** கேள்வி ஆவணங்களை மேற்படி தினங்களில் போகம்பர விளையாட்டரங்கு மற்றும் கொழும்பு தலைமையகம் ஆகிய இரு இடங்களில் பெற்றுக்கொள்வதற்கு வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. போகம்பர வளாக முகாமையாளரை சந்தித்து பரீட்சித்துப் பார்க்கலாம்.

✶ கேள்விப் பத்திரத்துடன் இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்துள்ள எந்த வர்த்தக வங்கியிலிருந்தும் விநியோகிக்கப்படும் மேற்படி நாட்களுக்காக செல்லுபடியாகக்கூடிய மேற்படி பெறுமதியுடைய கேள்விப் பிணையொன்றை கேள்விதாரரால் சமர்ப்பித்தல் வேண்டும்.

✶ இதுபற்றிய மேலதிக விபரங்களை சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகார சபையின் கொழும்பு அலுவலகத்தின் கொள்வனவு செய்யும் பிரிவில் மற்றும் போகம்பர முகாமையாளரை அழைத்துப் பெற்றுக்கொள்ள முடிவதுடன், தேவைப்படுவோருக்கு அக்கேள்வி ஆவணங்களை குறித்த இடத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

✶ **QTN63/2025 இற்கான கேள்விக்கு முன்னரான கூட்டம் 2024.10.11 மு.ப. 10.30 இற்கு கொழும்பு உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறும்.**

✶ தொலைபேசி 0112384385/ 0706130199, பெக்ஸ் 0112445675 (கொழும்பு அலுவலகம்)

✶ தொலைபேசி 081-2235395, பெக்ஸ் 081-2054970 (போகம்பர அலுவலகம்)

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகார சபை,**
**த.பெ. எண் 2211, ஆதர் டி சில்வா மாவத்தை, கொழும்பு-13.**

## சுற்றாடல், வனஜீவராசிகள், வன வளங்கள், நீர் வழங்கல், பெருந்தோட்டங்கள் மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு

## "தேசிய பசுமை அறிக்கையிடல் முறைமையின்" கீழ் உற்பத்தி மற்றும் சேவைகளை வழங்கும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்

பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் கூறுகளின் நிலைபேண் செயற்றிறனை மேம்படுத்துவதனூடாக இலங்கையின் உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக 2012-01-20ஆம் திகதி முன்வைக்கப்பட்ட 12-0153-527-006 இலக்கமுடைய அமைச்சரவைப் பத்திரத்திரத்திற்காக 2012-02-09ஆம் திகதி வழங்கப்பட்ட அமைச்சரவையின் அனுமதிக்கேற்ப "தேசிய பசுமை அறிக்கையிடல் முறைமையை" நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சர்வதேச நிலைபேண் அறிக்கையிடல் சட்டகமான GRIஇன் வழிகாட்டல் மற்றும் சமூக பொறுப்பிற்கான ISO26000 தரங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள இம் முறைமையினூடாக இந் நாட்டு தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகள் மற்றும் சேவைகளின் தரம் தொடர்பாக தேசிய ரீதியில் மதிப்பிடுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

பசுமை அறிக்கையிடல் முறைமை நிலைபேண் செயற்றிறன் தொடர்பான தகவல்களை வழங்கும் பயன்மிக்க தொடர்பாடல் கருவியாவதோடு, அது 24 சுற்றாடல் தொடர்பான நியதிகளும், 20 சமூக நியதிகளும், 06 பொருளாதார நியதிகளும் உள்ளடக்கப்பட்டதாக 50 நியதிகளைக் கொண்டுள்ளது. இம் முறைமைக்கேற்ப அறிக்கையிடும் மட்டங்கள் 05 காணப்படுவதோடு சேவைப் பெறுனர்கள் தமது விருப்பம் மற்றும் ஆற்றலுக்கேற்ப தெரிவுசெய்யும் அறிக்கை மட்டத்திற்காகப் பதிவு செய்ய முடியும்.

https://env.gov.lk/ web/index.php/en/divisions/ environment-planningeconomicsdivision/ publications#national-green-reporting-system



**பணிப்பாளர்,**
**சுற்றாடல் திட்டமிடல் மற்றும் பொருளாதாரப் பிரிவு,**
**சுற்றாடல், வனஜீவராசிகள், வன வளங்கள், நீர் வழங்கல்,**
**பெருந்தோட்டங்கள் மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு**
**தொலைபேசி இலக்கம்: 011 2034149**
**மின்னஞ்சல்: ngrssrilanka@gmail.com**

**செயலாளர்**
**சுற்றாடல், வனஜீவராசிகள், வன வளங்கள், நீர் வழங்கல்,**
**பெருந்தோட்டங்கள் மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு**

## இராஜதந்திர தூதரக உத்தியோகபூர்வ இல்லத்தின் ஊழியர் வெற்றிடம்

### வீட்டுப்பணியாளர் / சலவையாளர் [ஆண் / பெண்]

இந்த பதவியை வகிப்பவர் ஊழியர் மற்றும் வீட்டின் தேவைகளுக்கு ஏற்ற வகையில் உயர் தொழிற்துறைசார்ந்ததாகவும் உரிய ஒழுங்கமைப்புடனும் சேவைகளை வழங்குவதுடன் விசேடமிக்க தரத்திற்கமைய அனைத்து சாதாரண வீட்டுப் பராமரிப்பு மற்றும் ஆடைகளைச் சலவை செய்யும் பணிகளை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் ஊழியர் அல்லது ஊழியர்களினால் நியமிக்கப்படும் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியின் மேற்பார்வையின் கீழ் ஏனைய வீட்டுத் தேவைகளுக்கென தேவையானவை ஒத்துழைப்புகளை வழங்குதல் வேண்டும்.

**பதவி நிலைக்கான வேலை நேரம் - முழு நேரம் - வாரத்திற்கு 50 மணித்தியாலங்கள்**
**பதவி நிலைக்கான மாதாந்த மொத்த சம்பளம் 361.25 அமெரிக்க டொலர்கள்**

காரியாலய குழுவின் ஊதியம் அமெரிக்க டொலர் நாணய பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் ஊதியம் வழங்கப்படும் காலவரையறையில் காணப்படும் நாணய மாற்று விகிதத்திற்கமைய இலங்கை ரூபாவில் ஊதிய கொடுப்பனவுகள் செலுத்தப்படும். 2024 ஆகஸ்ட் 20 அளவில் நாணய மாற்று விகிதம் அமெரிக்க டொலர் 1 = ரூபா. 299.40 ஆகும். இது தூதரக காரியாலயத்தின் தற்காலிக மறுசீரமைப்பு என்பதுடன் கட்டாய உரிமையாக கருதப்படமாட்டாது.

**தேவைப்படும் தகுதிகள்:**

- க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் தோற்றியிருத்தல் அல்லது அதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருத்தல்.
- இதனை ஒத்த பதவி நிலையில் குறைந்தபட்சம் இரண்டு வருடகால தொழில் அனுபவம். (விருந்தோம்பல் துறையின் அனுபவம் விரும்பத்தக்கது.)
- சிறிய விடயங்கள் தொடர்பிலும் சிறந்த அவதானம் செலுத்துதல், பல்துறைசார்ந்த திறன்கள், பணிகளை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கென நெகிழ்வுத்தன்மையுடனும் பொருத்தமான முறையிலும் செயற்படுதல்.
- தொழில்சார் பெறுமதிகள், ஒழுக்க விழுமியங்கள் மற்றும் ஒருமைப்பாடு என்பவற்றுடன் எப்பொழுதும் செயற்படுதல்.
- சலவை தூள்கள், சுத்தப்படுத்தல் உபகரணங்கள் மற்றும் சலவை உபகரணங்களை பயன்படுத்துவதில் அனுபவத்தைக் கொண்டிருத்தல்.
- செல்லப்பிராணிகளுடன் (நாய்கள், பூனைகள் போன்றவை) அசௌகரியமின்றி செயற்படும் திறன்.
- ஆங்கில மொழி உட்பட சிங்களம் மற்றும்/அல்லது தமிழ் மொழியில் சரளமாக தொடர்பாடும் ஆற்றல்.

**(உத்தியோகபூர்வ இல்லத்தின் காரியாலய குழுக்களில் ஒருவராக கடமையாற்றும் வீட்டுப் பணியாளர்கள் தூதரக காரியாலயத்தின் சேவையாளராக கருதப்படமாட்டார்கள் என்பதுடன், அவர்கள் சேவையாற்றும் வீட்டின் உரிமையாளரின் சேவையாளர்கள் என்பதை கவனத்திற்கொள்ளுங்கள்.)**

இந்த பதவி நிலைக்கு ஆர்வமுள்ள நபர்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கட்டாய தகவல்களுடன் கூடிய உங்கள் சுயவிபரக் கோவையை மின்னஞ்சல் செய்ய வேண்டும்.

1. முழுப்பெயர்
2. தற்போதைய முகவரி மற்றும் தொடர்பு இலக்கம்
3. உங்கள் வயது 18 க்கும் 60க்கும் இடைப்பட்டதா? (ஆம் / இல்லை)
4. க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் தோற்றியுள்ளீர்களா? ஆம் எனின், விபரங்கள்.
5. இதனை ஒத்த பதவி நிலையில் குறைந்தபட்சம் இரண்டு வருடகால தொழில் அனுபவம் உள்ளதா? ஆம் எனின், சேவை நிலையத்தின் பெயர், சேவைக் காலம், பணிகள், பொறுப்புகள் தொடர்பான விபரங்களை முன்வையுங்கள்.
6. உங்கள் தற்போதைய / இறுதியாக எடுத்த மாதாந்த மொத்த சம்பளம்?

இதற்கென ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் அவர்களின் விண்ணப்பங்களை அண்மையில் தயாரிக்கப்பட்ட தமது சுயவிபரக்கோவையுடன் "ColomboERA@state.gov" என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். மின்னஞ்சலின் விடயதானத்தில் வீட்டுப்பணியாளர் / சலவையாளர் என குறிப்பிடப்படுதல் வேண்டும்.

**உங்களின் விண்ணப்பங்கள் 2024 ஒக்டோபர் 13ற்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கப்பெறுதல் வேண்டும்.**

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் மாத்திரம் தொடர்புகொள்ளப்படுவார்கள்.

To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT, WE HAVE IT
Sunday Observer adz Auto Focus



Magazine Issued with Sunday Observer
THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
Sunday Observer adz it's what you want



- Auto Focus
Hot Line 011 2 429 369 011 2 429 368
E-mail adzsuo@gmail.com

# வாரபலன்

29.9.2024 — 05.10.2024



கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

(அஷ்விணி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)

முயற்சிகள் வெற்றி பெறும். மனம் மகிழும் சம்பவங்கள் நடக்கும். திட்டமிட்டபடி செல்ல முடியாமல் பயணத்தில் தடங்கல் ஏற்படலாம். தொழில் வியாபாரத்தில் கூடுதல் இலாபம் கிடைக்கும் என்ற தன்னம்பிக்கை ஏற்படும். சரக்குகளை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பும் போது கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி வரும். அலுவலக வேலைகள் உடனே முடியாமல் இழுபறியாக இருக்கும். குடும்பத்தில் வெளிநபர்களால் ஏதாவது குழப்பம் ஏற்படலாம். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் மனம் விட்டு பேசுவதன் மூலம் இடைவெளி குறையும். பெண்கள் எதிலும் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. கலைத்துறையினருக்கு எல்லா வகையிலும் நன்மை உண்டாகும். மாணவர்களுக்கு கல்வியில் மேன்மை அடைய கூடுதல் கவனத்துடன் படிப்பது அவசியம்.

## ரிஷபம்

(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம் )

நல்ல யோகமான பலன்கள் கிடைக்கும். பணவரத்து அதிகரிக்கும். மனதில் ஏதாவது ஒரு கவலை உண்டாகும். சொத்துக்கள் சம்பந்தமான காரிய அனுகூலம் ஏற்படும். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கக் கூடும். புதிய நபர்களின் நட்பு கிடைக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் சாதகமாக நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கவனமாக செயல்படுவது நல்லது. குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் நீங்கும். கணவன், மனைவிக்கிடையே உறவு பலப்படும். பிள்ளைகள் மகிழ்ச்சியடையத் தேவையானவற்றை செய்வீர்கள். பெண்களுக்கு காரிய அனுகூலம் உண்டாகும். விருந்தினர் வருகை உண்டு. கலைத்துறையினர் தேவையற்ற அலைச்சலை குறைத்துக் கொள்வது நல்லது. மாணவர்கள் வெளிநாடு சம்பந்தமான படிப்புகளுக்கு உரிய முயற்சிகளை மேற்கொள்வது நல்லது.

## மிதுனம்

(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)

சாதகமான பலன்கள் கிடைக்கும். மனத்திருப்தியுடன் செயலாற்றுவீர்கள். புத்திசாதுரியம் மூலம் காரிய வெற்றி கிடைக்கும். கொடுத்த வாக்கை நிறைவேற்றுவதன் மூலம் மற்றவர்களிடம் மதிப்பு கூடும். பாராட்டு கிடைக்கும். உடற்சோர்வு உண்டாகும். தொழில் வியாபாரம் முன்னேற்றம் காண புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் உற்சாகமாக செயல்பட்டு வேலைகளை உடனுக்குடன் செய்து முடிப்பார்கள். புதிய பதவி அல்லது பொறுப்புகள் கிடைக்கும். கணவன், மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குழந்தைகள் உற்சாகமாக காணப்படுவார்கள். பெண்கள் மனத் திருப்தியுடன் காரியங்களை செய்து சாதகமான பலன் பெறுவார்கள். கலைத்துறையினருக்கு எதிர்பார்த்த ஒப்பந்தம் கையெழுத்தாகும். மாணவர்கள் பாடங்களை கவனமாக படித்து கூடுதல் மதிப்பெண் பெறுவீர்கள். பொறுப்புகள் அதிகரிக்கும்.

## கடகம்

( புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)

சுபச் செலவுகள் ஏற்படும். வேலை காரணமாக வீட்டை விட்டு வெளியில் தங்க நேரலாம். பெரியோர் நேசம் கிடைக்கும். வாகன யோகம் உண்டாகும். தொழில் வியாபாரம் வாக்கு வன்மையால் சிறப்பாக நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகலாம். புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பார்கள். உத்தியோகம் தொடர்பான பயணங்கள் செல்ல நேரலாம். உத்தியோகத்தர்கள் புத்தி சாதுரியத்தால் மேலதிகாரிகள் கொடுத்த வேலையை சிறப்பாக செய்து முடிப்பார்கள். குடும்பத்தில் இருந்த குழப்பம் நீங்கும். கணவன், மனைவிக்கிடையே இருந்த மனவருத்தம் நீங்கும். பிள்ளைகளுக்கு தேவையான பொருட்களை வாங்கி கொடுப்பீர்கள். பெண்களுக்கு காரியங்களில் இருந்த பின்னடைவு நீங்கும். எதிர்பார்த்த பணவரவு இருக்கும். கலைத்துறையினர் யதார்த்தமான படைப்புகளால் அனைவரின் கவனத்தையும் ஈர்ப்பார்கள். மாணவர்களுக்கு புத்திசாதூரியம் வெளிப்படும். கல்வியில் இருந்த தொய்வு நீங்கும்.

## சிம்மம்

(மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)

எல்லாவகையிலும் நன்மை உண்டாகும். அடுத்தவர்களுக்கு உதவுவதில் ஆர்வம் காட்டுவீர்கள். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். எதிர்பாலினத்தாரால் செலவு ஏற்படும். கோபத்தால் சில்லறைச் சண்டைகள் ஏற்படலாம். பணவரத்து கூடும். காரிய அனுகூலம் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறும். விற்பனை அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் புத்தி சாதுரியத்தால் வேலைகளை திறமையாக செய்து முடித்து பாராட்டு பெறுவீர்கள். பதவி உயர்வு கிடைக்கலாம். குடும்பத்தில் நிம்மதி காணப்படும். கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். குழந்தைகளின் செயல்களால் பெருமை அடைவீர்கள். உதவி கேட்டு உங்களை நாடி வருபவர்களுக்கு தேவையான உதவிகளை செய்வீர்கள். கலைத்துறையினரின் மதிப்பு, மரியாதை கூடும். மாணவர்கள் சகமாணவர்களுடன் கவனமாக பழகுவது நல்லது.

## கன்னி

(உத்தரம் 2 ஆம் 3 ஆம் 4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1 ஆம் 2 ஆம் பாதம்)

தேவையான உதவிகள் கிடைக்கும். எதிர்பார்த்த தகவல்கள் நல்ல தகவலாக வரும். விருப்பங்கள் கைகூடும். நண்பர்கள் மத்தியில் மரியாதையும், அந்தஸ்தும் உயரும். மற்றவர்களிடம் பேசும்போது கோபத்தை குறைத்து பேசுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் சாதகமான நிலை காணப்படும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு வெற்றி பெறுவார்கள். குடும்பத்தில் குதூகலமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவிக்கிடையே மகிழ்ச்சி கூடும். உங்கள் சொற்படி பிள்ளைகள் நடந்து கொள்வது மனதுக்கு இதமளிக்கும். பிரிந்து சென்றவர்கள் மீண்டும் உங்களை நாடி வருவார்கள். பெண்கள் நிதானமாக பேசுவது நன்மை தரும். கலைத்துறையினர் ஆதாயமடைவர். மாணவர்களுக்கு சக மாணவர்களுடன் பழகும் போது கவனம் தேவை.

## துலாம்

(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1 ஆம் 2 ஆம் 3ஆம் பாதம்)

நல்ல திருப்பம் ஏற்படும். விரய ஸ்தானத்தில் இருக்கும் கேதுவால் பயணங்கள் மூலம் லாபம் கிடைக்க செய்யும். மனதில் மகிழ்ச்சி ஏற்படும் படியான காரியங்கள் நடக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் உண்டாகும். மனோ தைரியம் அதிகரிக்கும். புத்தி தெளிவு உண்டாகும். தொழில் வியாபாரம் திருப்திகரமாக நடக்கும். தொழில் தொடர்பான விஷயங்கள் அனுகூலமாக நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். குடும்பத்தில் சந்தோஷமான நிலை காணப்படும். கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். அக்கம் பக்கத்தினருடன் அனுசரித்து செல்வது நன்மை தரும். பெண்களுக்கு மனம் மகிழும்படியான காரியங்கள் நடக்கும். கலைத்துறையினர் புதிய வாய்ப்புகளில் வெற்றி அடைவர். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பர். நண்பர்கள் மத்தியில் மதிப்பு கூடும்.

## விருச்சிகம்

(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)

காரியத் தடை தாமதம் விலகும். எதிர்பார்த்தபடி எதுவும் நடக்காமல் இழுபறியாக இருக்கும். தொழில் வியாபாரம் நன்றாக இருக்கும். பழைய பாக்கிகள் வசூலாவதில் வேகம் இருக்கும். கொடுக்கல், வாங்கலில் இருந்த சுணக்க நிலை மாறும். பணவரத்து இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அலுவலகம் தொடர்பான பயணம் செல்ல வேண்டி இருக்கலாம். அனைத்து விஷயங்களிலும் நீங்கள் அனுசரித்து செல்வது நல்லது. கணவன் மனைவிக்கிடையே எதிர்பாராத மனவருத்தம் ஏற்பட்டு நீங்கும். நிதானமாக செய்யும் செயல்கள் வெற்றியை தரும். பெண்கள் எடுத்த காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பர். பிரச்சினைகளில் இருந்து ஒதுங்கி இருப்பது நல்லது. செல்வாக்கு உயரும். கலைத்துறையினர் சில போராட்டங்களை சந்திக்க வேண்டி இருக்கும். மாணவர்களுக்கு கல்வி பற்றிய கவலை குறையும்.

## தனுசு

(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)

பேச்சின் இனிமையால் காரியம் கைகூடும். பஞ்சம விரயாதிபதி செவ்வாயின் சஞ்சாரம் சுப பலன்களை தரும். எதிலும் கூடுதல் கவனத்துடன் செயல்படுவது நல்லது. தொழில் வியாபாரம் திருப்தியாக நடக்கும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலக வேலையாக அலைய வேண்டி இருக்கும். புதிய பொறுப்புகள் சிலருக்கு கிடைக்கலாம். வெளிநாடு செல்ல முயற்சிப்பவர்களுக்கு அனுகூலம் கிடைக்கும். குடும்பத்தில் சகஜநிலை காணப்படும். உறவினர்கள் மூலம் நல்ல தகவல் வந்து சேரும். கணவன் மனைவிக்கிடையே இருந்த இடைவெளி குறையும். பெண்களுக்கு எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். கலைத்துறையினருக்கு வெளிநாட்டு புது நிறுவனங்கள் உங்களுக்கு வாய்ப்பளிக்கும். மாணவர்களுக்கு மற்றவர்களை அனுசரித்து செல்வது நல்லது. கல்வியில் திருப்தி உண்டாகும்.

## மகரம்

(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)

எல்லாவகையிலும் நல்லதே நடக்கும். சுக்கிரன் சஞ்சாரம் அனுகூலமான பலன் தரும். எதிர்ப்புகள் விலகும். விரும்பிய காரியங்களை செய்து சாதகமான பலன் கிடைக்க பெறுவீர்கள். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். வியாபார போட்டிகள் குறையும். பழைய பாக்கிகள் வசூலாகும். தொழில் விரிவாக்கத்திற்கு தேவையான பண உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்க பெறுவார்கள். பணி நிமித்தமாக வெளிநாடு செல்ல வேண்டி வரும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். கணவன், மனைவிக்கிடையே அன்பு அதிகரிக்கும். பிள்ளைகள் உங்கள் சொல்படி நடப்பது மனதுக்கு திருப்தி தரும். பெண்களுக்கு உறவினர்கள், நண்பர்கள் மூலம் நன்மை நடக்கும். கலைத்துறையினரின் படைப்புத்திறன் வளரும். மாணவர்களுக்கு கல்வியில் எதிர்பார்த்த உயர்வு கிடைக்கும்.

## கும்பம்

(அவிட்டம் 3 ஆம் 4 ஆம் பாதம், சதயம் , பூரட்டாதி 1 ஆம் 2 ஆம் 3 ஆம் பாதம்)

எவ்வளவு திறமையுடன் செயல்பட்டாலும் காரிய தடங்கல்கள் வரலாம். அடுத்தவருக்கு உதவிகள் செய்யும் போது கவனம் தேவை. பயணத்தினால் வீண் செலவும், அலைச்சலும் உண்டாகும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இழுபறியான நிலை காணப்படும். புதிய ஆர்டர்கள் தொடர்பாக அலையும்படி இருந்தாலும் சாதகமாக முடியும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலகம் தொடர்பான பணிகளில் முழுமூச்சுடன் செயல்பட்டு முன்னேற்றம் காண்பர். குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் நீங்கும். கணவன், மனைவிக்கிடையே இருந்த மன வருத்தம் நீங்கும். குழந்தைகளின் எதிர்காலத்திற்கான திட்டங்களை செயல்படுத்துவீர்கள். புதிதாக வீடு, மனை வாங்குவதற்கான வேலைகளை தொடங்குவீர்கள். பெண்கள் புதிய பொறுப்புகளை ஏற்பதை தவிர்ப்பது நல்லது. கலைத்துறையினருக்கு பணவரத்து இருக்கும். மாணவர்கள் பாடங்களை கவனமாக படிப்பது அவசியம்.

## மீனம்

(புரட்டாதி 4 ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)

எல்லாவற்றிலும் இருந்து வந்த மனகவலையை நீக்கும். வாகனத்தில் செல்லும் போது எச்சரிக்கை தேவை. தாயின் உடல்நிலையில் கவனம் அவசியம். திட்டமிட்டபடி காரியங்களை செய்ய முடியாமல் தடங்கல்கள் ஏற்படலாம். எனவே எந்த ஒரு வேலையை செய்வதாக இருந்தாலும் தகுந்த முன்னேற்பாடுகள் தேவை. தொழில் வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும். உறவினர்கள் வருகை இருக்கும். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. பெண்களுக்கு திடீர் செலவு உண்டாகலாம். கலைத்துறையினரின் படைப்புகளுக்கு மதிப்பு, மரியாதை கூடும். மாணவர்கள் மிகவும் கவனமாக பாடங்களை படிப்பது முன்னேற்றத்திற்கு உதவும்.

---

# இந்திய பெருங்கடலின் சொர்க்கத் தீவு

## மொரீசியஸ் முதல் ரீயூனியன் வரை...

மாத்தளை சோமு 07





இந்தியப் பெருங்கடலின் ஆபரணம் எனவும், சொர்க்க தீவு எனவும் புகழாரம் சூட்டப்பட்ட ரியூனியன், தீக்குழம்பைக் கக்கிக் கொண்டிருக்கும் எரிமலைகளும், அழகான கடலும் அதையொட்டிய கரைகளும், மலைகளும், இயற்கை வனப்புப் போர்த்திய நிலமும் கொண்ட சின்னத் தீவாகும். அது தென் மேற்குத் திசையில் மொரீசியசுக்கு 180 கிலோ மீட்டர் தூரத்திலும், கிழக்குத் திசையில் மடகஸ்கார் நாட்டிலிருந்து 680 கிலோ மீட்டர் தூரத்தில் 970 சதுர மைல் பரப்பளவு கொண்டது. இதன் நீளம் 63 கிலோ மீட்டர்; அகலம் 45 கிலோ மீட்டர்.

மத்திய கிழக்கு, ஐரோப்பிய நாடுகளுக்குப் போகிற கடல்பாதையில் இந்தியப் பெருங்கடலில் பல நூற்றாண்டுகளாக ஆதிக்குடி மக்கள் இல்லாமல் தனித்துக் கிடந்த தீவை முதன் முதலில் கால்வைத்துப் பார்த்தவர்கள் அரபு வணிகர்கள் அவர்கள் இத்தீவை டீனா மொர்காபின் (DENA MORGABIN) என்று அழைத்தனர். கி.பி. 1153இல் அல் சரிபு எல் திரிசி என்பவர் வரைந்த உலக வரைபடத்தில் இத்தீவு இருந்திருக்கலாம். மேலும் சுவாகிலி அல்லது மலாய் மாலுமிகளும் (ஜாவா மாலுமிகளைத் தான் அப்படி அழைப்பதாகச் சொல்லப்படுகிறது) வந்திருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. ஆனால் இந்த அராபியரோ மற்றவர்களோ இங்கு மக்கள் குடியேற்றம் எதையும் செய்யவில்லை. 1507ஆம் ஆண்டில் போர்த்துகேய கப்பல் பயணிகளே இத்தீவை ஐரோப்பியர்களுக்கு அறிமுகம் செய்தார்கள். ஆனாலும் இது குறித்து குறிப்பான தகவல் எதுவும் கிடைக்கவில்லை. குடிமக்களற்ற இத்தீவை முதன் முதலில் போர்த்துகேயரான பெதுரோ மஸ்கரானசு என்பவரே முதலில் கண்டார். அவர் ரியூனியன் அடங்கிய தீவுக் கூட்டத்திற்கு மஸ்கரானே தீவு எனப் பெயரிட்டார். இங்கு எவரையும் குடியேற்றவில்லை. சில காலம் தீவில் இருந்த போர்த்துகேயர் போன பின்னர் புயல், மழையால் 1642இல் பிரான்ஸை சேர்ந்த ஜக்குயஸ் புரோனிஸ் மடகஸ்காரிலிருந்த பிரெஞ்ச் கலகக்காரர்களை தீவிற்குக் குடியேற்றி தீவை பிரெஞ்சுக்குச் சொந்தமாக்கினார். தீவிற்கு பிரெஞ்சு அரச மாளிகையான BOURBON என்ற பெயரையே ILE BOURBON என்று சூட்டினார். 1665இல் பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பனி கிழக்கு ஆப்பிரிகாவிலிருந்து அடிமைகளை



கோப்பி பயிர் செய்கைக்காகக் கொண்டு வந்தது.

1793ஆம் ஆண்டு மார்ச் 19ஆம் திகதி, பிரெஞ்சு புரட்சி காரணமாக தீவின் பெயரை 'ரியூனியன் தீவு' என்று மாற்றினார்கள். 1806இல் நெப்போலியன் போனபார்ட்டால் தீவின் பெயர் போனபார்ட் என மாற்றப்பட்டது.

இந்தியப் பெருங்கடலை கட்டுப்பாட்டுக்குள் வைக்கும் போட்டியில் பிரான்சுக்கும் பிரிட்டனுக்கும் நடந்த யுத்தத்தில் 1810 ஜுலை 9ஆம் திகதி பிரிட்டனின் கைக்குள் தீவு சென்றது. ஆனால் 1814இல் பாரிசில் நடந்த உடன்படிக்கையில் பிரெஞ்சுக்கே தீவு சொந்தமாகியது.

ரியூனியன் தீவில் புயலும் வெள்ளமும் அடிக்கடி வந்து கோப்பிப் பயிர் செய்கை பாதிக்கப்பட்டதால் கரும்புப் பயிர் செய்கையை பிரான்ஸ் 1806 1807க்குப் பின்னர் தொடங்கியது. அதனோடு ஐஸ்கிரீமுக்குப் போடும் வெனிலாவுக்கான மலர்களும் உற்பத்தியாகின. இரண்டுமே புயலால் பாதிப்படையவில்லை. 1848ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ஆம் திகதி அடிமை முறை ஒழிக்கப்பட்டது.

பிரெஞ்ச் ரியூனியனை ஆண்ட காலத்தில் பிரெஞ்ச் காலணித்துவ முறையில் ஆப்பிரிக்க, சீன, இந்தியர் ஆகியோர் அடிமைகளாகக் கொண்டு வரப்பட்டனர்.

1869இல் சுயஸ் கால்வாய் திறக்கப்பட்டதால் கிழக்கிந்திய கம்பனிகளின் கப்பல்கள் ரியூனியன் தீவில் தங்கிச் செல்வதைக் குறைத்தன. இரண்டாம் உலக யுத்தத்தின் போது தீவினை பிரெஞ்ச் படையினர் 1942 நவம்பர் 30 வரை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

தீவின் பெயரும் அதன் உரிமையும் மாறி மாறி வந்த போதும் தீவில் ஐரோப்பியர்கள் அல்லாத மக்களே இருந்தார்கள். நிர்வாகம் பிரெஞ்சுகாரர்கள் கையில் இருந்தன. 1860க்கும் 1930க்கும் இடைப்பட்ட காலங்களில் இந்தியா (குறிப்பாக தமிழர்கள்) மடகஸ்கார், மொசாம்பிக், சீனா, ஜாவா ஆகிய நாடுகளிலிருந்து நூறாயிரம் ஒப்பந்த தொழிலாளர்கள் தீவிற்கு வந்தார்கள்.

1946 மார்ச் 19ஆம் திகதி ரியூனியன் பிரான்ஸின் வெளிநாட்டு நிர்வாக அமைப்பில் வந்தது. 1963க்கும் 1982க்கும் இடைப்பட்டக் காலத்தில் ரீயூனியனிலிருந்து 1630 சிறுவர்கள் கல்வி, வேலைவாய்ப்பு என்ற பெயரில் பிரான்ஸின் நகர்ப்புறங்களில் குடியமர்த்தப்பட்டார்கள். இக் குடியமர்வு சிறுவர்களினதும், அவர்களது பெற்றோர்களினதும் விருப்பம் இல்லாமலே நடந்தது. இதனை முன்னெடுத்தவர் அப்போதைய ரியூனியன் நாடாளுமன்ற உறுப்பினர் மைக்கல் குரூஸ் என்பவர். இவ்வாறு குடியேற்றப்பட்ட சிறுவர்கள் அவர்கள் தங்க வைக்கப்பட்ட குடும்பங்களால் துன்புறுத்தப்பட்டார்கள். இவற்றுக்கு எதிராக சமூக ஆர்வலரால் தொடங்கப்பட்ட வழக்கு பிரான்ஸ் நீதிமன்றத்தாலும், ஐரோப்பிய மனித உரிமை நீதி மன்றத்தாலும் (2011) தள்ளுபடி செய்யப்பட்டது.

2005க்கும் 2006க்கும் இடைப்பட்ட காலத்தில் சிக்கன் குனியா நோயினால் 2,25,000 மக்கள் ரியூனியனில் பாதிக்கப்பட்டதாக இலண்டன் பி.பி.சி. தெரிவித்தது. சிக்கன் குனியா நோயை ஒழிக்க கொசு ஒழிப்புக்காக 500 இராணுவத்தினரை பிரான்ஸ் தீவுக்கு அனுப்பியது. இதற்காக 36 மில்லியன் ஈரோ செலவிடப்பட்டது.

சிறிய தீவானாலும் மொரீசியஸ், பிஜி, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளைப் போல் கரும்புத் தோட்டங்கள் கொண்டதாகும். கரும்புத் தோட்ட வேலைக்காக பிரெஞ்ச் நிர்வாகத்தில் பாண்டிச்சேரி இருந்ததால் அங்கிருந்தும் தமிழகத்தில் இருந்தும் தமிழர்களை பிரெஞ்சு அரசு கொண்டு வந்தது. அவர்களில் மூன்று தலைமுறை கரும்போடு தம் வாழ்க்கையை நடத்தியது. இன்று கரும்புத் தோட்டங்களின் எண்ணிக்கை குறைந்து போயிற்று.

ரியூனியனுக்கு 17ஆம் நூற்றாண்டில் முதலில் ஜாவாவிலிருந்தும் பின்னர் மடகஸ்காரிலிருந்தும் கரும்பு கொண்டு வரப்பட்டது. தொடக்கத்தில் சர்க்கரை, சீனி என்பன கரும்பில் உற்பத்தி செய்யப்பட்டது. 1815இல் மதுபானமும் தயாரிக்கப்பட்டது. ரியூனியனின் ஏற்றுமதி வருமானத்தில் இரண்டாவது இடத்தில் இருக்கும் கரும்பு உற்பத்தி 15000 குடும்பங்களுக்கான வாழ்வாதாரமாக இருக்கிறது. இன்று ஒரு ஹெக்டேர் நிலத்தில் கரும்பு பயிர்ச் செய்கை மூலம் எட்டு தொன் சீனி உற்பத்தி செய்யப்படுகின்றது. கரும்புச் சக்கை மாடுகளுக்கான தீவனமாகவும் உள்ளது. இன்று இரண்டே இரண்டு கரும்புத் தொழிற்சாலைகள் மட்டுமே ரியூனியனில் உள்ளன.

கரும்பு தமிழரின் வாழ்வோடு தொடர்புடைய பயிர். சங்க இலக்கிய நூல்களின்படி பழந்தமிழர் கரும்பு பயிர் செய்கையில் முன்னோடிகளாக இருந்திருக்கின்றனர்.

கரும்பு தமிழரின் பண்பாட்டுச் சின்னங்களில் ஒன்று. திருவிழாக் காலங்களில் வீடுகளை வாழை மரத்தாலும் தோகையோடு கூடிய கரும்பாலும் அலங்காரம் செய்தார்கள். தமிழ் நாடெங்கும் நெல்லுக்கு அடுத்த நிலையில் கரும்பு உற்பத்தியானது. கரும்பைச் சாறு பிழியும் எந்திரங்களும் கருப்பஞ் சாற்றை வெல்லங் காய்ச்சும் ஆலைகளும் ஊர்கள் தோறும் இருந்தன என்பதை சங்க இலக்கிய நூல்கள் சொல்கின்றன. 'ஐங்குறுநூறு' என்ற சங்க இலக்கிய நூலில்,

'கரும்பின் எந்திரம் களிற்றெதிர் பிளிற்றும்
தேர்வன் கோமான் தேனுள்'
(ஐங்குறுநூறு மருதம் 55)

என்ற வரியிலும்,

'எந்திரமும் சிலைக்கும் துஞ்சாக் கம்பலை
விசயம் அடூஉம் புகைசூழ் ஆலை தொறும்
கரும்பின் தீஞ்சாறு விரும்பினார் மீசையின்'
(பெரும்பாணாற்றுப்படை 260 262)

என்ற வரியிலும் அவற்றைக் காணலாம். இவ்வாறு கரும்புத் தொழில் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னே முன்னோடியாக இருந்த தமிழர்கள் காலப் போக்கில் நடந்த மாற்றங்களால் ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர் (பாண்டிச்சேரி) ஆட்சியில் பிஜித்தீவு, ஆபிரிக்கா, மொரீசியஸ், ரியூனியன் ஆகிய நிலங்களில் கரும்புத் தோட்டங்களில் தொழிலாளர்களானார்கள். அவர்கள் மொரீசியஸ், ரியூனியன், பிஜித்தீவு ஆகியவற்றில் கரும்புத் தொழிலுக்காக தம் உயிரையே கொடுத்தார்கள். கரும்பு இனிப்பைத் தரும். ஆனால் கரும்புத் தொழிலில் இருந்தவர்கள் வாழ்க்கைக் கசப்பைத் தந்த வரலாறே பதிவாகியுள்ளது. இன்று கரும்புத் தோட்டங்களின் எண்ணிக்கை குறைந்த போதும் அதன் அடையாளமாக கரும்பு ஆலை, புகைபோக்கிகள் இருக்கின்றன.

ரியூனியனில் எங்காவது புகைபோக்கி தெரிந்தால் அதன் பக்கத்தில் கோயில் நிச்சயமாய் இருக்கும். பிரெஞ்சு நிர்வாகத்தில் தமிழர்கள், தெலுங்கர்கள், வங்காளிகள், இந்திக்காரர்கள், இஸ்லாமியர்கள் ஆகியோருக்கு பிரெஞ்சுக்காரரின் மதத்தால், நெருக்குதல் கொடுக்கப்பட்டது. சொந்தப் பெயரோடு கிறிஸ்தவ பெயர் வைக்கும் உத்தரவு இருந்ததால் சிலர் கிறிஸ்தவர்களாக மாறியிருக்கிறார்கள்.


பெரும்பான்மையான இந்துக்கள் வெளியே கிறிஸ்தவர்களாக வாழ்ந்தார்கள். பெயர்கள் விஷயத்தில் எந்த சமரசமும் செய்ய முடியவில்லை. கிறிஸ்தவப் பெயர் வைத்துக் கொள்ள வேண்டி வந்தது. இது இன்றைய முதிய தலைமுறை வரை நீடித்தது. இந்நிலையில் தமிழர்களுக்கு பிரெஞ்சு நிர்வாக அழுத்தங்களுக்கு ஆறுதல் தரும் இடமாக கோயில்கள் இருந்தன. ஆண்டு தோறும் தீ மிதிப்பு, காவடி கரகம் என்பன நடத்தப்படுகின்றன.

தைப்பூசம், ஆடி மாதம் என்பன முக்கிய திருவிழாவாக இருக்கின்றன. முனியாண்டி, ஐயனார், மாடசாமி, காத்தவராயன், மதுரை வீரன், கருப்பண்ணசாமி போன்ற தெய்வ வழிபாடும் குலதெய்வ வழிபாடும், காளி பூஜையும் மிக முக்கியமானவை. நேர்த்திக்கடன் என்ற பெயரில் ஆடு, கோழிகள் பலி கொடுக்கப்படுகின்றன. பிரெஞ்சு கலாசாரமும், பிரெஞ்ச், கிரியோல் மொழிகளும் கலந்த வாழ்க்கையில் ரியூனியனில் வாழ்கிற தமிழர்களை அடையாளம் காட்டும் இடமாக இருப்பது அங்குள்ள கோயில்கள் தான்.

(தொடரும்)



# படித்ததும் பகர்வதும் 210



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## பாராட்டுகிறோம்! வாழ்த்துகிறோம்!!

### இலங்கையின் புதிய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க



இலங்கையின் 9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க பதவியேற்றுள்ளார். இது இலங்கையில் ஒரு வரலாற்று மாற்றமாகவும் அமைந்து விட்டது. இலங்கை சுதந்திரம் அடைந்ததிலிருந்து தொடர்ந்து 76 ஆண்டுகள் குறித்த இரு சாரார்களிடையே மாறி மாறி வந்த இலங்கையின் அரசாட்சி, இம்முறை முற்றிலும் மாறி, மூன்றாவது தரப்பினரிடம் சென்றிருக்கிறது. இவ்வெற்றிக்கு காரணமான ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, இலங்கையில் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதிகளிலேயே வயதில் குறைந்த ஜனாதிபதியாக இருக்கிறார்.

தனது 56ஆவது வயதில் இப்பெரும் பதவியை ஏற்றிருக்கும் இவர் மாற்றத்தை விரும்புகின்ற பெரும்பாலான மக்களின் தெரிவாக வெற்றி பெற்றுள்ளார். அவர்களது அபிலாஷைகளை புதிய ஜனாதிபதி நிச்சயம் நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை, அவருக்கு வாக்களித்த இந்நாட்டின் பிரஜைகளிடம் மட்டுமன்றி, ஏனையோர்களிடமும் உறுதியாக இருப்பது இவரது ஆற்றல் மீது அவர்கள் வைத்திருக்கும் நம்பிக்கைக்கு சான்றாக உள்ளது எனலாம்.

அநுராதபுர மாவட்டத்தின், தபுத்தேகம கிராமத்தில், 1968 நவம்பர் 24ஆம் திகதி பிறந்து, களனி பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று, பல்வேறுபட்ட போராட்டங்களின் பின்னர், இலங்கையின் அதி உயர் பதவியான நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி பதவியை வென்றிருக்கிறார் அநுர குமார திசாநாயக்க.

இவர் பதவியேற்றுள்ள இப்போதைய காலகட்டம் சவால்கள் நிறைந்ததாக இருப்பது யாவரும் அறிந்ததே. மக்கள் பொருளாதார, சமூக, அரசியல் ரீதியாக மட்டுமன்றி உளவியல் ரீதியாகவும் மிகவும் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கின்றனர். இக்கட்டான இந்த காலகட்டத்தில் மக்களது வாழ்வில் பெரும் மாற்றமொன்றைக் கொண்டு வருவார் என்று மக்கள் இவர் மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அந்த நம்பிக்கையை நிறைவேற்றும் வகையில், சுயநல அரசியலை விட்டும் விலகி, புதிய அரசியல் கலாசாரமொன்றை கட்டியெழுப்பி, சுபிட்சமான, ஒளிமயமான திசையை நோக்கி நாட்டை இவர் கொண்டு செல்வார் என்று எல்லோரும் நம்புகின்றனர்.

நம் நாட்டை நாசமாக்கிக் கொண்டிருக்கும் இனவாத செயற்பாடுகளை முற்றாக ஒழித்து, நாட்டை பொருளாதார ரீதியாக கட்டியெழுப்புவதற்கும், அரசியல் சுதந்திரத்தையும், சட்டத்தையும், ஒழுங்கையும் நிலை நாட்டுவதற்கும், சர்வதேச ரீதியாக எமது நாடு பற்றிய நற்பெயரைக் கட்டி எழுப்புவதற்கும் புதிய ஜனாதிபதியின் தலைமைத்துவத்தின் கீழ் பெரு முயற்சிகள் எடுக்கப்படுமென்றும் மக்கள் பெரிதும் எதிர்பார்த்துள்ளனர்.

நமது நாட்டில் வழிவழியாக நடைமுறையில் இருந்து வருகின்ற ஒழுக்க விழுமியங்கள், மத, கலாசார தனித்துவங்கள் என்பவற்றைப் பாதுகாத்து, சமூகத்தின் கட்டுக்கோப்பை சீராக கட்டிக்காக்கும் வகையில் திட்டங்களை வகுத்து, சட்ட ஆட்சியை நிலை நிறுத்தி, இலங்கைத் தாயின் பிரஜைகள் அனைவரும் சம உரிமைகளோடும், மகிழ்ச்சியோடும் வாழும் இலங்கையை புதிய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க கட்டியெழுப்ப வேண்டும் என்பதே மக்கள் மனதிலுள்ள பெரும் நம்பிக்கையாகும். இவ்வாறு நாட்டு மக்களின் நம்பிக்கைகளோடு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள இலங்கையின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவை உளமார பாராட்டுகிறோம். நாட்டு நலனுக்கான அவரது முயற்சிகள் முழு வெற்றி பெறவும், நம் நாடு அபிவிருத்திப் பாதையில் வீறு நடை போட்டு முன்னேறி செல்லவும் வாழ்த்துகிறோம்.

## பாராட்டுகிறோம்! வாழ்த்துகிறோம்!!

### புதிய பெண் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய



இலங்கையின் பதினாறாவது பிரதமராக, நம் நாட்டின் மூன்றாவது பெண் பிரதமராக கலாநிதி ஹரிணி அமரசூரிய பதவி ஏற்றுள்ளார். இதற்கு முன்னர் உலகின் முதல் பெண் பிரதமரான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மற்றும் சந்திரிக்கா பண்டாரநாயக்க ஆகியோர் இலங்கையின் பெண் பிரதமர்களாக பதவி வகித்துள்ளனர்.

1970ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6 ஆம் திகதி பிறந்த பிரதமர் ஹரிணி அமரசூரிய, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர்கல்வி கற்றவர். எடின்பர்க் பல்கலைக்கழகத்தில் சமூக மானுடவியலில் கலாநிதி பட்டம் பெற்றவர். 2011 ஆம் ஆண்டு பல்கலைக்கழக பேராசிரியர் சங்கத்தில் உறுப்பினராக இணைந்த பின்னர், இலவசக் கல்விக்கான போராட்டங்களில் கலந்து கொண்ட சமூக ஆர்வலராக பிரசித்தி பெற்றார்.

எடின்பரோ பல்கலைக்கழகத்திலும், சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்திலும் மானுடவியல் துறையின் மானுடவியல், மனித உரிமைகள் மற்றும் நெறிமுறைகளின் மானுடவியல் திட்டத்தில் இவர் பணியாற்றினார்.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சமூக விஞ்ஞான துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராக இணைந்து கொண்ட ஹரிணி அமரசூரிய, 2019 ஆம் ஆண்டு தேசிய புத்திஜீவிகள் அமைப்பில் இணைந்தார். அதே வருடம் ஜனாதிபதி தேர்தலின் போது தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்கவுக்காக பிரசாரம் செய்தார். 2020ஆம் ஆண்டு இலங்கை பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர், தேசிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் மூலம் 16ஆவது நாடாளுமன்ற உறுப்பினரானார்.

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் புதிய பிரதமராக, நம் நாட்டின் மூன்றாவது பெண் பிரதமராக பதவி ஏற்றுள்ள கலாநிதி ஹரிணி அமரசூரியவை பாராட்டுகிறோம். இலங்கை நாட்டுக்கு நிறைவான சேவைகள் செய்து சிறப்புற வாழ்த்துகிறோம்.

## தகவல் களஞ்சியம்

### இலங்கையின் ஜனாதிபதி தேர்தல்கள்



இலங்கையின் 9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அநுர குமார திசாநாயக்க வெற்றிபெற்றார். இவருக்கு 42.31% வாக்குகள் கிடைத்தன. இலங்கையின் ஜனாதிபதி தேர்தல் வரலாற்றில், வெற்றிபெற தேவையான 50%க்கும் கூடுதலான வாக்குகளை எந்தவொரு வேட்பாளரும் பெற்றுக்கொள்ளாத முதல் ஜனாதிபதி தேர்தலாக இவ்வருடத் தேர்தல் சரித்திரத்தில் இடம் பிடித்துள்ளது. இரண்டாம் கட்ட விருப்பு வாக்குகளை கணக்கெடுத்ததன் பின்னரேயே அநுர குமார திசாநாயக்கவின் வெற்றி உறுதி செய்யப்பட்டது.

இலங்கையின் முதலாவது ஜனாதிபதி தேர்தல் 1982 ஆம் ஆண்டு நடைபெற்றது. அதில் ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்ட ஜே. ஆர். ஜயவர்தன தன்னை எதிர்த்து போட்டியிட்ட ஹெக்டர் கொப்பேகடுவவை தோற்கடித்து 52.91% வாக்குகளை பெற்று வெற்றிபெற்றார்.

இரண்டாவது ஜனாதிபதி தேர்தல் 1988 ஆம் ஆண்டு நடைபெற்றது, அதில் சிறிமாவோ பண்டாரநாயக்கவை தோற்கடித்து ரணசிங்க பிரமதாச 50.43% வாக்குகளை பெற்று வெற்றி பெற்றார்.

1993இல் தமிழீழ விடுதலைப் புலிகளின் தற்கொலை தாக்குதலில் அப்போதைய ஜனாதிபதி ரணசிங்க பிரமதாச உயிரிழந்த நிலையில், அவரது மீதியான பதவிக் காலத்துக்கு அப்போது பிரதமராக இருந்தத டீ. பீ. விஜேதுங்க ஜனாதிபதியாக தெரிவானார்.

1994 ஆம் ஆண்டு நடைபெற்ற மூன்றாவது ஜனாதிபதி தேர்தலில் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க 62.26% வாக்குகளை பெற்று வெற்றி பெற்றார். இந்த தேர்தலில் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட காமினி திசாநாயக்க கொலை செய்யப்பட்டதனால் அவர் சார்பில் அவரது மனைவி ஸ்ரீமா திசாநாயக்க போட்டியில் சேர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

1999இல் நடைபெற்ற நான்காவது ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்கவை தோற்கடித்து 51.12% வாக்குகளை பெற்று சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க மீண்டும் இலங்கையின் ஜனாதிபதியானார்.

2005 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐந்தாவது ஜனாதிபதி தேர்தலில் 50.02% வாக்குகளை பெற்ற மஹிந்த ராஜபக்ஷ தன்னை எதிர்த்து போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்கவை தோற்கடித்து வெற்றி பெற்றார்.

2010 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆறாவது ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ, அவரை எதிர்த்த சரத் பொன்சேக்காவை 57.88% வாக்குகளை பெற்று மீண்டும் ஜனாதிபதியானார்.

ஏழாவது ஜனாதிபதி தேர்தல் 2015 ஆம் ஆண்டு நடைபெற்றது. அதில் மைத்திரிபால சிறிசேன 51.28% வாக்குகளை பெற்று வெற்றிப்பெற்றார். இத்தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ 47.58% வாக்குகளை மட்டுமே பெற்றார்.

2019இல் நடைபெற்ற எட்டாவது ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ 52.25% வாக்குகளை பெற்று வெற்றி பெற்றார். இந்த தேர்தலில் அவரை எதிர்த்து சஜித் பிரேமதாச மற்றும் அநுர குமார திசாநாயக்க இருவரும் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது.

## செந்தமிழ் அது தேன் தமிழ்

### தமிழ் மொழிக்கு எத்தனை புகழ் மொழிகள் !

தமிழ் மொழியைப் பல அடைமொழிகள் சேர்த்துப் புகழ்ந்து பேசுவார்கள். அந்தப் புகழ்ச்சிகள் மிகவும் பொருள் பொதிந்தவை. தமிழை எவ்வாறெல்லாம் புகழ்ந்து பேசுகிறார்கள். அவற்றின் ஆழ்ந்த பொருள் விளக்கம் எவை என்று பாருங்கள்.

செந்தமிழ்: செம்மையான தமிழ் தமிழ் மொழியானது பன்னெடுங்காலப் பழக்கத்தில் நன்கு செம்மைப்பட்டு விட்டது. ஒவ்வொரு சொல்லையும் எவ்வகைத் திரிபும், மருவலுமின்றிச் செம்மையாக வழங்க வல்லது. அந்தத் தன்மையால் அது செந்தமிழ்!

முத்தமிழ்: இயல், இசை, நாடகம் என்னும் மூவகையாலும் வெளிப்பட வல்லது. அதனால், அது முத்தமிழ்.

தனித்தமிழ்: தமிழைப் பிறமொழிக் கலப்பின்றிப் பயன்படுத்த முடியும். புதிது புதிதாகச் சொற்களை ஆக்கிக் கொள்ள முடியும். தனித்து இயங்கவல்ல ஆற்றலுடையது




என்பதால் தமிழ் தனித்தமிழ்.

வண்டமிழ்: வளமான தமிழ். தமிழில் இல்லாத வளங்களே இல்லை. இலக்கண இலக்கிய வளங்களுக்கும் அளவேயில்லை. எதனையும் வாரி வழங்கவல்லது.

நற்றமிழ்: நல்ல தமிழ். நல்ல நல்ல சொற்களால் ஆனது இம்மொழி. கடுமையான செய்யுள் வழக்கில் மட்டுமன்றி, எளிமையாகவும் பயன்படுத்தப்படுகிறது.

தண்டமிழ்: தண்மை மிக்கது. குளிர்ச்சியுடையது. தமிழால் அகங்குளிரும்.

சங்கத் தமிழ்: சங்க காலத்தில் வழங்கப்பட்ட மொழி எனும் சிறப்பை உடையது.

சந்தத் தமிழ்: பாவினங்களுக்குரிய அனைத்துச் சந்தங்களையும் தன்னகத்தே கொண்டது.

மாத்தமிழ்: உயர்ந்த தமிழுக்கு ஈடு இணையில்லையே என்பார் பாவேந்தர். தமிழ் அத்தகைய மாண்பு மிக்கது.

யாப்புத் தமிழ்: தனக்கென்று உயர்தனிச் சிறப்புடைய யாப்பிலக்கணத்தைக் கொண்ட மொழி.

கொடுந்தமிழ்: இது புகழ்ச்சித் தொடரன்று. ஆனால், தமிழில் உள்ள சீர்படாத சொற்களையும் கணக்கில் கொண்டு வழங்கும் தன்மையை உணர்த்துவது.

கொச்சைத் தமிழ்: பேச்சு வழக்கில் திரிபுற்றும் மருவியும் விகாரப்பட்டது. கொச்சை அடைந்த வழக்கு மொழியையும் பயன்பாட்டில் கொண்டது.

இப்படி இன்னும் பலவாறு, பல்வேறு பெயர்களில் செம்மொழியாம் நம் தமிழ் மொழி புகழப்படுகிறது.

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207




# பொல்லா மனதில் ஆசை புகுந்தால் பொழுதும் பகையாகும் புல்லாங்குழலில் காற்று நுழைந்தால் புதுப்புது இசையாகும்

மை இருட்டு

அந்தப் பகுதியையே சுருட்டிக் கொண்டிருந்தது.

பகல் நேரத்தில் பார்த்தால்

பச்சைப் பசேல் என்றிருக்கும் அந்தப் பகுதியை

இப்போது பார்த்தால்

என்னவோ போல் இருந்தது.

ஆனாலும்

இதையெல்லாம் இரசிக்கும் நிலையில் அவன் இல்லை!

அவன்...?

ஆமாம்...

அதோ அந்த பைக்கில் விரைவாக போய்க்கொண்டிருக்கிறானே அவன் தான்.

அவன் பெயர்,

சுரங்க!

சுரங்கவா?

சுரங்கதான்

அவன் பேசுகின்ற மொழியும் சிங்களம் தான்.

சுரங்க,

தேயிலைச் செடிகளுக்கு நடுவிலிருந்த,

அந்த சிறிய பாதையூடாக விரைவாக பைக்கை ஓட்டிக்கொண்டிருந்தான்.

தேயிலைச் செடிகள் என்று சொன்னதும்,

அது மலையகத்தில் தேயிலைச்செடிகள் என்று நீங்கள் புரிந்துகொண்டிருப்பீர்கள்.

பைக்கின் விளக்கொளி மட்டும் தான் அவனுக்கு பாதையை காட்டிக் கொண்டிருந்தது.

இவளவு அவசரமாக

அதுவும் இந்த இருட்டு நேரத்தில்

அவன் எங்கே போகிறான்

காரணம் இருக்கிறது.

சுரங்கவின் மச்சான் ஆனந்த,

இராணுவத்தில் வேலை செய்கிறான்.

அவன் இருந்த அந்த கேம்பை

இரண்டு தினங்களுக்கு முன்பு பயங்கரவாத இயக்கமொன்று தாக்கிவிட்டதாக ஒரு தகவல்

இதைக் கேள்விப்பட்டதும்

பயந்து போனாள் சுரங்கவின் அக்கா லீலா!

உடனே கொழும்புக்குப் போய் தகவல் அறிந்து வரும்படி அவருக்குச் சொன்னாள்;.

இதனால்தான்

இந்த நேரத்தில்

கொழும்பை நோக்கி சுரங்க போய்க்கொண்டிருந்தான்.

நேரம் செல்லச் செல்ல பைக்கின் விரைவை கொஞ்சம் அதிகரித்தான் சுரங்க.

எதிரில் ஒரு திருப்பம்

வந்த வேகத்திலேயே பைக்கை திருப்பினான் சுரங்க

அதே நேரம்

எதிர்ப்பக்கத்தில் இருந்தும் ஒரு பைக் வந்தது.

ஆ!

இதை அவன் எதிர்பார்க்கவே இல்லை.

அதனால்,

மோதலைத் தவிர்த்துக்கொள்வதற்காக,

மோட்டார் பைக்கை படார் என்று பக்கவாட்டில் திருப்பி,

ஒரு வெட்டு வெட்டினான்.

அடுத்து

ஐயோ!

பக்கத்தில் இருந்த பள்ளத்தில் பாய்ந்தது பைக்.

பைக் ஒருபக்கம் போக

சுரங்க ஒரு பக்கம் வீசுப்பட்டுப் போனான்.

பார்கவி,

பருவமங்கை

அந்த மலையகத்தின் பசுமையான பகுதிகளில்,

ஓடித்திரிந்து வளர்ந்தவள்.

இதனால்

மலைநாட்டின் பசுமை

அவள் மேனியெங்கும் படர்ந்திருந்தது.

மலையகத்திலுள்ள மற்றைய கன்னிப்பெண்களை விட

பார்கவி கொஞ்சம் வித்தியாசமானவளாகவே இருந்தாள்.

நல்ல சிகப்பு, நல்ல உயரம்.

அவள்

சிற்பி செதுக்கியதைப்போல்

ஒவ்வொரு அங்கமும் கவர்ச்சியாக வேயிருந்தன.

ஒருவேளை


அது அவள் அம்மாவின் பரம்பரை காரணமாக இருக்குமோ?

பார்வதியின் அம்மா மரகதம் இந்தியாவில் பிறந்தவர்.

அப்பா மகேஸ்வரன் யாழ்ப்பாணத்தில் பிறந்தவர்.

இந்தியாவில் மெட்ராஸ் பல்கலைக் கழகத்தில் படிக்கும்போது

இருவருக்கும் காதல் மலர்ந்து



விட்டது.

முடிவு

பெற்றோர்களின் எதிர்ப்புக்கு மத்தியில் திருமணம் நடந்தது.

பிறகு,

உறவினர்கள் எல்லோரும் இவர்களை ஒதுக்கிவைத்தார்கள்.

இதனால்

இருவரும் அநாதையானார்கள்.

எல்லோர் வாழ்விலும் விளையாடும் விதி

இவர்கள் வாழ்விலும் விளையாடியது.

எவரிடமும் சொல்லிக்கொள்ளாமல்

மலையகத்துக்கு ஓடிவந்துவிட்டார்கள்.

அறிமுகமே இல்லாதவர்கள் மத்தியில் அவர்களின் வாழ்வு ஆரம்பமாகியது.

வாழ விரும்புகிறவர்களுக்குத்தான் வாழ்க்கை அவசியமாகிறது.

மரகதத்திற்கும்,

அந்த மனிதர்களின் மத்தியில் வாழத்தான் ஆசையாக இருந்தது.

ஆனால்

வாழ விட்டார்களா?

அந்த ஆடிக்கலவரம்,

அவர்களின் வாழ்வை எப்படியெல்லாம் திசைதிருப்பி விட்டது.

எறும்புக்குக் கூட தீங்குசெய்ய நினைக்காத தன் கணவர்

தமிழன் என்ற ஒரே காரணத்துக்காக,

தன் கண்முன்னாலே எரித்து கொலைசெய்யப்பட்டாரே!

ஐயோ!

அதை நினைத்து அவள் அழுதிருக்கிறாள்.

அப்போது பார்கவி வயிற்றில் இருந்ததால்தான் அவளை கொலைசெய்யாமல் விட்டுவிட்டார்கள் அந்த சண்டாளர்கள்.

மரகதத்தின் இப்போதைய எதிர்பார்ப்பு எல்லாம் ஒன்றேயொன்று தான்

அது,

தான் கண்களை மூடுவதற்குள் பார்கவிக்கு நல்லதொரு வாழ்க்கையை அமைத்துக்கொடுத்துவிட வேண்டுமென்பதுதான்.

அதற்காக

இறைவனை வேண்டுவதற்காகத் தான் தினமும் இரவானதும்

மலைமேட்டிலிருக்கும் அந்த முருகன் கோவிலுக்கு வருவாள்.

அவள் வரும்போது,

பார்கவியும் அவளுடனே வருவாள்.

அன்றும் அப்படித்தான்

அம்மா சாமி கும்பிட்டு வரும்வரையில் அவள் வெளியே காத்திருந்தாள்.

சற்று தொலைவிலிருந்த பங்களாவில் எரிந்துகொண்டிருந்த விளக்கு வெளிச்சம்,

அந்த நேரத்தில் மிக அழகாக இருந்தது.

தினமும் பார்க்கும் காட்சி தான்.

ஒரே மாதிரியான வாழ்க்கை அவளுக்கு இப்போது போரடித்துப்போயிருந்தது.

தனது அப்பாவை கொலை செய்திருந்தார்கள் என்பதை கேள்விப்பட்ட நாளிலிருந்து,

கொன்றவர்கள் மீது அவளுக்கு ஒரு வெறி ஏற்பட்டிருந்தது.

என்றாவது

அவர்களையும் பழிவாங்க வேண்டும் என்றுதான் முடிவுசெய்திருந்தாள்.

இதனால்

அந்த சமூகத்தவர்கள் யாருடனும் அவள் பழகுவதில்லை.

இன்னும் சொன்னால்

இந்த நாட்டில் வாழவே அவள் விரும்பவில்லை.

கனடாவைப் போன்ற ஒரு நாட்டில் வாழத்தான் அவள் விரும்பினாள்.

ஆனாலும் அவளுடைய அம்மா அதை விரும்பவில்லை. என்னதான் எதிர்பார்ப்புக்கள் இருந்தாலும்

அவர்கள் மத்தியில் வாழவே அவள் விரும்பினாள்.

அம்மா தேவாரம் சொல்லிக்கொண்டிருப்பது பார்கவியின் காதிலும் விழுந்தது.

அதேநேரம்

பயங்கர ஓசையோடு வாகனமொன்று பள்ளத்தில் உருண்டுசெல்லும் ஓசையும் அவள் காதில் விழுந்தது.

"அம்மா யாரோ பள்ளத்தில விழுந்திட்டாங்க" கத்தியபடியே,

டோர்ச் லைட்டை எடுத்துக் கொண்டு ஓடினாள் பார்கவி.

சுரங்கவுக்கு நினைவு வந்தபோது

அவன் உடல் வேதனையும் அவனுக்குத் தெரிந்தது.

யாரோவெல்லாம் பேசிக்கொண்டிருப்பதும் அவனது காதுகளில் விழுந்தது.

அந்தக் குரல்களைக் கேட்டதும்

அவனுக்கு கொஞ்சம் பயமாகவே இருந்தது.

அவசர அவசரமாய் பேசிக்கொண்ட அவர்கள்

இறுதியில்

தன்னை தூக்கிச்செல்வதை உணர்ந்துகொண்டான்.

அன்று இரவுபூராவும்

அவர்கள் ஏதேதோ மருந்துகளையெல்லாம் அவனுக்குக் கொடுத்தார்கள்.

ஆனாலும்

அவனால் வலியை தாங்கிக்கொள்ள முடியவில்லை.

மரகதம் விடியும் வரையிலேயே அவன் அருகிலேயே அமர்ந்திருந்தாள்.

பொழுது விடிந்ததும்

தான் ஒரு சிறிய அறைக்குள்

ஒரு பாயில் கிடத்தப்பட்டிருப்பதை உணர்ந்துகொண்டான் சுரங்க

சுற்றிலும் ஒருமுறை நோட்டம் விட்டான்

ஒரு சிறிய மேசையின்மேல் ஏதோ புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

சுவற்றில் மாட்டப்பட்டிருந்த ஒரு படத்தில்

அழகான ஒரு பெண் சிரித்துக் கொண்டிருந்தாள்.

அவள் தன்னையே பார்த்துக்கொண்டிருப்பதைப்போல்

அவனுக்குள் ஓர் உணர்வு.

கேரள நாட்டு நடிகையைப்போல் அவள் காட்சியளித்தாள்.

சிறிதுநேரம் சென்றதும்

மரகதம்தான் உள்ளே வந்தாள்

"ம் தம்பி இப்போ எப்படி இருக்கு?"

"ஐயோ என்னோட கையும் காலும் உடஞ்சிருக்கு! வேதனையுடன் சொன்னான் சுரங்க.

அரைகுறைத் தமிழில் அவன் பேசியதும்,

அவன் தமிழன் இல்லை என்பதை அவர்கள் புரிந்துகொண்டனர்.

"இந்த அளவிலாவது நீங்க தப்பியது பெரிய பெரிய புண்ணியம்தான். நாங்க நெனச்சோம்".

"என்ன காப்பாற்றியதற்கு ஒங்களுக்கு ரொம்ப நன்றி அம்மா!"

"நீங்க விழுந்து கெடந்ததை முதலில் பார்த்தது என்னோட மகள் தான் தம்பி!"

"ஓ அப்படியா... அம்மா தயவு செய்து என்னய ஆஸ்பத்திரிக்கு கொண்டு போங்க... என்னால முடியல்ல.."

"கொஞ்சம் பொறுங்க தம்பி நான் போய் வாடகைக் கார் ஏதாச்சும் கெடைக்குதா எண்டு பாத்துட்டு வாறேன்!"

சொல்லியபடியே அவள் வெளியே வந்தாள்.

வாசலில்

பார்கவி

"அம்மா எங்கே போறீங்க?" கொஞ்சம் அதட்டலுடனேயே கேட்டாள்.

"அந்தத் தம்பிய ஆஸ்பத்திரிக்கு கொண்டு போறதுக்கு வாடகைக் கார் ஏதாச்சும் கிடைக்குமாண்ணு பாக்கப் போறேன்."

"வேண்டாம்!" கடுமையான குரலில் சொன்னாள் பார்க்கவி.

அவளை வியப்புடன் பார்த்தாள் மரகதம்!.

தொடரும்

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 133

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | | 05 |
| 06 | 07 | | 08 | 09 | 10 |
| 11 | | 12 | | 13 | 14 |
| 15 | 16 | 17 | | 18 | |
| | | | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | | 26 |

பெயர் ..............................
வகுப்பு ..............................
தொலைபேசி இல ..............................
பாடசாலை பெயர் ..............................
வதிவிட முகவரி ..............................
..............................
.............................. ..............................
மாணவரின் பெயர்
வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) வேட்டையாடி இரைபிடித்து உண்ணும் பறவை இது. வானத்தில் உயரத்தில் பறந்தவாறே தரையில் உலவும் சிறுபிராணியைக் கண்டுகொண்டு, வேகமாகக் கீழிறங்கி வந்து பிடித்துச் செல்லும் பறவை.
(6) சிங்கம் போன்ற பல மிருகங்களின் உறைவிடம் இது. கற்பாறைகள் மற்றும் மலைகளின் கீழ்ப்பகுதியில் உள்ள மறைவிடம். (தலைகீழான சொல்)
(8) எமது நாட்டில் எங்குமே காணக்கூடிய கருமைநிறப் பறவை இது. ஒற்றுமையான வாழ்வுமுறைக்கு முன்னுதாரணமாகக் கூறக்கூடிய பறவை.
(13) கடலோரம் கரையை நோக்கியவாறு எப்போதும் ஓயாமல் அடித்துக் கொண்டேயிருக்கும். (தலைகீழான சொல்)
(15) யானையைப் பராமரிப்பவனை மாத்திரமன்றி, தேர் செலுத்துபவனையும் குறிக்கும் சொல். (தலைகீழான சொல்)
(19) மாடு, மா, பலா, வேம்பு போன்ற பலவற்றின் இளமைப்பருவ மரபுச்சொல்.
(22) நிலைக்கண்ணாடியின் முன்னால் நின்று பாருங்கள். கண்ணாடிக்குள் தெரிகின்ற உங்கள் உருவம் இது. (தலைகீழான சொல்)

**மேலிருந்து கீழ்**

(1) இவன் நண்பன் அல்லன். பகைமை கொண்டவன்.
(2) மாணவர்களுக்கு அறிவு ஊட்டுபவர். (தலைகீழான சொல்)
(4) கேட்டல் புலனங்கம். (தலைகீழான சொல்)
(5) அன்றைய காலத்தில் யுத்தம் புரியவும், வேட்டையாடவும் பயன்படுத்தப்பட்ட ஆயுதம். வில் இருந்தால்தான் இதனைப் பயன்படுத்தலாம். (தலைகீழான சொல்)
(9) கலைகளில் வல்லவன் இவன்.
(12) பாலூட்டி விலங்குகள் தமது இளந்தைகளுக்கு ஊட்டுகின்ற ஆரோக்கிய பானம் இது. (தலைகீழான சொல்)
(19) கவிதையையும், கவிதை புனைபவனையும் குறிக்கும் சொல்.
(21) நதி, கங்கை என்றெல்லாம் இச்சொல்லை ஒத்தபொருள் சொற்களாகக் கூறலாம்.(தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 132

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. தேர்தல் 08. இலை 10. பகைவன்
14. சனம் 17. மின்னல் 21. உடை

**மேலிருந்து கீழ்**

01. தேரை 03, தங்கை 05. பாலை
08. இன்னல் 12, வசனம் 17. உமி

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 131

### பாராட்டு பெறுவோர்

**1. எம்.ஏ.எப். அஸ்மா**
தரம் 10B, க/ பதிஉதீன் ம. வித்தியாலயம்,
இல. 98/A, சுஜாதா லேன், மடிகே, கலகெதர.

**2. எம்.எம். மாஹில்**
தரம் 04, ஒக்ஸ்போட் கல்லூரி,
இல. 366, நாங்கல்ல, துல்ஹிரிய.

**3. லீனா மர்யம் முஜாஹித்**
தரம் 06, தாருல் உலூம் மு. வித்தியாலயம்,
இல. 63,2, ஹுரிமலுவ, ரம்புக்கனை

**4. எம்.என். அப்லல் அஹமத்**
தரம் 06, நாங்கல்ல, மு.ம. வித்தியாலயம்,
இல. 337, மங்கெதர, துல்ஹிரிய.

**5. எம்.ஆர். சுமையா ஸெய்னப்**
தரம் 05, தங்காலை, மு. வித்தியாலயம்,
இல. 21, முஸ்லிம் வீதி, தங்காலை.

**6. த. அபிஜித்**
தரம் 06, விபுலானந்த மத்திய கல்லூரி,
இல. 100, உடையார் வீதி, காரைதீவு

**5. சாஹிட் நூரி**
தரம் 06E, அல் அஸ்ஹர் மத்திய கல்லூரி,
திஹாரிய.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 133
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



**அருளுடைமை: மன்னுயி ரோம்பி அருளாள்வாற் கில்
லென்ப தன்னுயி ரஞ்சும் வினை**

***தெளிவுரை :***
*தன் உயிரின் பொருட்டு அஞ்சி வாழ்கின்ற தீவினை, உலகில் நிலைபெற்றுள்ள மற்ற உயிர்களைப் போற்றி அருளுடையவனாக இருப்பவனுக்கு இல்லை.*

# இயற்பியலின் மேதை ஐன்ஸ்டீன்



எல்பர்ட் ஐன்ஸ்டீன் வரலாற்றில் மிகவும் பிரபலமான மற்றும் செல்வாக்கு மிக்க விஞ்ஞானிகளில் ஒருவர். ஜெர்மனியில் 1879 இல் பிறந்த இவர், நேரம், இடம் மற்றும் ஈர்ப்பு ஆகியவற்றைப் புரிந்துகொள்ளும் விதத்தை மாற்றிய சார்பியல் கோட்பாட்டிற்காக மிகவும் பிரபலமானவர். அவரது சமன்பாடு, $E=mc^2$, நவீன இயற்பியலுக்கான அடித்தளமாக மாறியது, ஆற்றலும் நிறையும் ஒன்றுக்கொன்று மாற்றத்தக்கவை என்பதைக் காட்டியது. ஐன்ஸ்டீனின் ஆர்வமும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கான திறனும் மற்றவர்கள் அவரை சந்தேகித்தாலும் கூட அற்புதமான யோசனைகளை உருவாக்க வழிவகுத்தது. 1921 ஆம் ஆண்டில், குவாண்டம் கோட்பாட்டிற்கு அடித்தளமிட்ட ஒளிமின் விளைவு குறித்த அவரது பணிக்கு இயற்பியலுக்கான நோபல் பரிசை வென்றார். அறிவியலுக்கு அப்பால், ஐன்ஸ்டீன் அமைதி, மனித உரிமைகளுக்கான வலுவான வக்கீலாகவும் இருந்தார்.

அவர் போர், ஒடுக்குமுறைக்கு எதிராகப் பேசினார். அனைவருக்கும் கல்வி மற்றும் சுதந்திரத்தை ஊக்குவிக்கும் முயற்சிகளை ஆதரித்தார். அவரது குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்புகள், அறிவுக்கான அர்ப்பணிப்பு எண்ணற்ற விஞ்ஞானிகளுக்கு ஊக்கமளித்தது. அதுமட்டுமல்லாது அவை இன்று நவீன அறிவியலின் மூலக்கல்லாக உள்ளது.

சிந்து...

# இவ்வார மழலை



சகிலேஷ்

தோமஸ் யோகதாஸ் – மல்லிகா

# வாசிப்பின் மகிமை

## கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சி



“நூலளவு ஆகுமாம் நுண்ணறிவு” என்ற ஔவையாரின் வரிகள் இந்த உலகில் ஒரு மனிதன் எந்த அளவுக்கு நூல்களை வாசிக்கிறானோ, அந்த அளவுக்கு அவன் அறிவினை பெற்றுக்கொள்கிறான் என கூறுகின்றது.

மேலும் வாசிப்பதன் மூலம் வெறும் புத்தக அறிவினை மாத்திரம் பெற்றுக் கொள்ளாமல், எம்மை சூழ உள்ள சமூகம் பற்றியும், உலகத்தின் நிலை பற்றியும் பொது அறிவினையும் பெற்றுக் கொள்ள முடியும்.

அதாவது "வாசிப்பு ஒரு மனிதனை பூரணப்படுத்துகின்றது" என்ற வாசகம் இதனாலே சொல்லப்படுகின்றது.

ஒரு மனிதனை முழுமையாக்கும் கருவியாகவே வாசிப்பு காணப்படுகின்றது. எனவே, நாம் ஒவ்வொருவரும் சிறுவயதிலிருந்தே வீணான பொழுதுபோக்குகளில் நேரத்தை கழிப்பதற்கு பதிலாக நல்ல புத்தகங்களை வாசிக்கும் பழக்கத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

வாசிப்பு ஒரு மனிதனை பூரணப்படுத்துவதோடு, சிறந்த அறிவுத்திறனையும், நுண்ணறிவினையும் வழங்குகிறது.

பரந்துபட்ட உலக அறிவினைப் பெற்றுக் கொள்ளவும், புதிய புதிய தகவல்களை அறிந்து கொள்ளவும் இந்த வாசிப்பு எமக்கு உதவுவதாகவே காணப்படுகின்றது. எனவே மனித வாழ்வில் வாசிப்பு இன்றியமையாததாகும்.

இன்றைய நவீன கண்டுபிடிப்புகளும் நகரமயமாக்கலும் இயந்திரமயமான வாழ்க்கை சிறுவர்களையும் கவர்ந்திழுத்து வாசிப்பின் மகிமையறியாமலாக்கியுள்ளது. அத்தோடு கையடக்க தொலைபேசிகளும் தொடுதிரை கணனிகளும் வாசிப்பை மறக்கடிக்கும் கருவிகளாக மாறிவிட்டன. வாசிப்பின் தாற்பரியங்களை தெளிவூட்டவே புத்தக கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. இவ்வாறான கண்காட்சிகளுக்கு நாம் எமது குழந்தைகளை அழைத்துச் சென்று புத்தகங்களை பரிசளிப்பதன் மூலமே வாசிப்பை ஊக்குவிக்க முடியும்.

இந்த ஆண்டு (2024) இலங்கை புத்தக வெளியீட்டாளர்கள் சங்கம் கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சியை நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்தனர். இக் கண்காட்சி ஒக்டோபர் 6 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் (BMICH) காலை 9.00 மணி முதல் இரவு 9.00 வரை புத்தகக் கண்காட்சி நடைபெறும். இவ்வருடம் இப் புத்தகக் கண்காட்சி 25ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடுகின்றது.







**ச.மிதுர்ஷினி**
தரம் 7, க/இந்து தேசிய கல்லூரி



**ஹரிஹர சுதன்**
தரம் 08, கேம்பிரிஜ் பாடசாலை, கொழும்பு - 15

# எரிமலை வெடிப்பின் விளைவுகள்

எரிமலைகள் நமது கிரகத்தின் மிக சக்திவாய்ந்த,கவர்ச்சிகரமான அம்சங்களில் சில.

மாக்மா எனப்படும் உருகிய பாறை பூமியின் உள்ளே ஆழத்திலிருந்து எழுந்து மேற்பரப்பை உடைத்து வெடிப்பை ஏற்படுத்தும் போது அவை உருவாகின்றன. இது நிகழும்போது, மாக்மா எரிமலைக் குழம்பாக மாறும். இது எரிமலையின் பக்கங்களில் பாயக்கூடும். சில நேரங்களில் அதன் பாதையில் உள்ள அனைத்தையும் அழிக்கும்.

எரிமலைக்குழம்புடன், எரிமலைகள் சாம்பல், வாயுக்கள் மற்றும் பாறைகளை வளிமண்டலத்தில் வெளியிடலாம். இது பாரிய மேகங்களை உருவாக்கும் மற்றும் சில நேரங்களில் உலகளாவிய தாக்கங்களை ஏற்படுத்தும். எல்லா எரிமலைகளும் வெடித்துச் சிதறுவதில்லை. சில ஹவாயின் கிலாவா போன்ற நிலையான எரிமலைக்குழம்பு ஓட்டங்களைக் கொண்டுள்ளன. எரிமலைகள் அழிக்கும் திறன் கொண்டவை என்றாலும், புதிய நிலத்தை உருவாக்குவதிலும் மண்ணை வளப்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

லாவா, குளிர்ந்து உடைந்த பிறகு, வளமான மண்ணாக மாறும். இது தாவரங்கள் வளர உதவுகிறது. ஐஸ்லாந்து, இத்தாலி போன்ற நாடுகள் எரிமலை வெப்பத்தை புவிவெப்ப ஆற்றலுக்குப் பயன்படுத்துகின்றன. இது இயற்கையின் உமிழும் சக்தியை சக்தியின் ஆதாரமாக மாற்றுகிறது. எரிமலைகள் பூமியின் மாறும் தன்மையை நமக்கு நினைவூட்டுகின்றன.

# சாக்ரடீஸின் கடைசி கணங்கள்

*சிறையில் அடைபட்டு மரண தண்டனையை எதிர்நோக்கி இருந்தார், தத்துவஞானி சாக்ரடீஸ்.*

*ஒருநாள், பக்கத்து அறையில் இருந்த கைதி ஒருவர், இசைக்கருவி ஒன்றை வாசித்துக் கொண்டிருந்தார்.*

*அந்த இசையை வெகுவாக இரசித்தவர், 'இந்த வாத்தியத்தை எப்படி இசைப்பது? எனக்கும் சொல்லிக் கொடுங்கள்...' என்று அந்த கைதியிடம் கேட்டார், சாக்ரடீஸ்.*

*அந்த கைதிக்கு பயங்கர வியப்பு.*

*'நீங்களோ மரண தண்டனை பெற்றவர். விரைவில் உயிரிழக்கப் போகும் நீங்கள் இதைக் கற்றுக் கொள்வதால் என்ன பயன்?' என்றார்.*

*'புதிதாக ஒன்றை கற்றுக்கொண்டேன் என்ற திருப்தியுடன் சாகலாம் அல்லவா, அதனால் தான்...' என்றார், சாக்ரடீஸ்.*

# பறவைகளின் அரசன் கழுகு



அக்சிபிட்ரிடே குடும்பத்தைச் சேர்ந்த வலுவான பெரிய ஊனுண்ணியான கழுகு, "பறவைகளின் அரசன்" என போற்றப்படுகிறது. அதிகாரம், சுதந்திரம் மற்றும் மேன்மையின் அடையாளமாக கருதப்படும் கழுகுகள், உலகம் முழுவதும் பரவலாகக் காணப்பட்டாலும், ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் ஐரோப்பாவில் அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்றன.

கழுகுகள் 74 வகைகள் கொண்டவை. இவற்றில் 60 வகைகள் மேற்கூறிய மூன்று பகுதிகளில் வாழ்கின்றன. பொதுவாகக் கடல் கழுகுகள், கால் வரை ரோமம் உள்ள கழுகுகள், பாம்பு உண்ணும் கழுகுகள் மற்றும் இராட்சத கழுகுகள் என நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்.

பறவை இனங்களில், கழுகு மட்டும் 70 ஆண்டுகள் வரை உயிர் வாழும் திறன் கொண்டது. அதிக உயரம், பறக்கும் திறனும் கழுகுக்கு உண்டு. பெண் கழுகு ஆண் கழுகை விட சற்றுப் பெரியது. பெண் கழுகு ஆண் கழுகை பரிசோதித்து பார்த்த பின்னரே அதன் மீது நம்பிக்கை வைக்கும்.

மற்ற உயிரினங்கள் எளிதில் நெருங்க முடியாத மிக உயரமான மரக்கிளைகள் அல்லது மலைச்சரிவுகளில் கூடு கட்டும். ஆண் கழுகு முள், குச்சி, புல், வேர்கள், சிறு கற்கள் மற்றும் வைக்கோல் கொண்டு கூடு கட்டும். பெண் கழுகு இதில் முட்டையிட்டு அடைகாத்து குஞ்சு பொரிக்கும்.

எலி, கோழி, மீன்கள், முயல், பாம்பு போன்றவற்றை உண்ணும் கழுகு மிக அபாரமான பார்வைத் திறன் கொண்டது. இக் கழுகு 1,000 அடி உயரத்தில் பறந்தாலும் தரையில் ஓடும் ஒரு முயலைக் கண்டு வேட்டையாட முடியும்.

புயல், காற்றின் மூலம் மேகங்களுக்கு மேலாக எளிதில் பறக்க முடியும். மணிக்கு 32 கி.மீ வேகத்தில் பறக்கும் திறன் கொண்டது. சுற்றுச்சூழல் மாசடைதலை தடுப்பதில் கழுகுகளுக்கு முக்கிய பங்கு உண்டு. ஆனால், விவசாயிகள் பயன்படுத்தும் இரசாயனப் பொருட்கள் மற்றும் மின் கம்பிகள் காரணமாக கழுகுகள் அழிந்து வருகின்றன.

இதனால் கழுகுகள் அழிந்து வரும் உயிரினங்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. செப்டெம்பர் மாதம், முதல் சனிக்கிழமை சர்வதேச கழுகுகள் விழிப்புணர்வு தினமாகக் கொண்டாடப்படுகிறது. நாமும் கழுகுகளைப் பாதுகாக்க வேண்டும்.

# உலகின் விலை உயர்ந்த மரம்



சந்தனம், செம்மரம், தேக்கு போன்ற மரங்களை விட உலகின் விலை மதிப்புமிக்கது அகர் மரம்.

'அக்குலேரியா' என்ற மரத்தின் ஒரு வகை, இது. 'மரங்களின் கடவுள்' மற்றும் 'பசுமைத்தங்கம்' என்றும், புகழப்படுகிறது.

இந்த மரங்கள், இந்தியா, ஜப்பான், அரேபியா, சீனா, மலேஷியா மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில், பெருமளவு காணப்படுகின்றன.

உலகிலேயே மிக அரிதான, விலைமதிப்பு மிக்க மரம், அகர். ஒரு கிலோ அகர் மரக்கட்டையின் விலை, 73 இலட்சம் ரூபாய்.

கட்டைகள் மட்டுமின்றி, இம்மரம் சிதைந்த பின்பும், அதன் எச்சங்களை, நறுமண பொருட்கள் உற்பத்திக்கு பயன்படுத்தலாம் என்பதால், அவற்றிற்கும் மதிப்பு அதிகம். வாசனை திரவியங்கள் மற்றும் பிற நறுமணப் பொருட்கள் தயாரிப்பில் பெரும் பங்கு வகிக்கின்றன அகர் மரங்கள்.

இந்த மரத்திலிருந்து கிடைக்கும் பிசினிலிருந்து, ஒரு வகை எண்ணெய் தயாரிக்கப்படுகிறது. வாசனை திரவியங்களின் தயாரிப்பில், இந்த எண்ணெய், அத்தியாவசியப் பொருளாக உள்ளது. இதன் தற்போதைய நிலவரப்படி, ஒரு கிலோ எண்ணெய் விலை, 25 இலட்சம் ரூபாய்.

மேற்கத்திய நாடுகள் மற்றும் வளைகுடா நாடுகளில் அதிக விலைக்கு விற்கப்படுவது அகர் எண்ணெய் தான்.

சித்த மருத்துவம் மற்றும் அரோமா எனும் வாசனை மருத்துவத்தில், உயரிய இடத்தில் உள்ளது. அதுமட்டுமின்றி, உலகிலேயே செயற்கை முறையில் தயாரிக்க இயலாத திரவியமாக இது திகழ்கிறது.

ஓரளவு ஈரப்பதம் மிக்க இடங்களில் மிகவும் வேகமாகவும், உயரமாகவும் வளர்ந்து, குறைந்தபட்சம் ஆறாவது ஆண்டுகளிலிருந்து பலன்களைத் தரும்.

இந்தியாவில், அதிக மழைப்பொழிவை சந்திக்கும் மாநிலங்களில் ஒன்றான அசாமில், அதிக அளவில் அகர் மரங்கள் வளர்க்கப்படுகின்றன. வறண்ட பகுதிகளில், இந்த மரம், வளராது.

சீனா, ஜப்பான் மற்றும் ஹொங்கொங் போன்ற நாடுகளில் அகர் மரங்கள் வளர்க்கப்படுகின்றன என்றாலும், கூடுதல் விலை காரணமாக, பல நாடுகளில் மிகப்பெரிய கடத்தல் தொழில்களும் நடைபெறுகின்றன.

அதிக அளவு கடத்தலால், இந்த மர வகைகளை சில நாடுகள் அழித்தும் வருகின்றன. சட்ட விரோதமாகவும் சிலர் இந்த மரத்தை வளர்க்கின்றனர்.

# மஞ்சரி விளையாட்டு

## இன்னிங்ஸ் வெற்றியுடன் தொடரை கைப்பற்ற இலங்கைக்கு இன்னும் ஐந்து விக்கெட்டுகள் தேவை



நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி இன்னிங்ஸ் வெற்றியைப் பெற்று தொடரை கைப்பற்றுவதற்கு இன்னும் ஐந்து விக்கெட்டுகளே தேவையாக இருப்பதோடு தோல்வி ஒன்றை தவிர்ப்பதென்றால் நியூசிலாந்து அணி எஞ்சிய இரண்டு நாட்களில் அசாதாரண ஆட்டம் ஒன்றை வெளிப்படுத்த வேண்டிய நெருக்கடிக்கு முகம்கொடுத்துள்ளது.

காலியில் நடைபெற்றுவரும் இந்த டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகளை இழந்து 602 என்ற இமாலய ஓட்டங்களைப் பெற்றது. இந்நிலையில் ஆட்டத்தின் மூன்றாவது நாளான நேற்று (28) தனது முதல் இன்னிங்ஸை தொடர்ந்த நியூசிலாந்து அணி 39.5 ஓவர்களில் 88 ஓட்டங்களுக்கே சுருண்டது.

கடைசி வரிசையில் மிட்சல் சான்ட்னர் பெற்ற 29 ஓட்டங்களே அதிகம் என்பதோடு மேலும் இருவர் மத்திரமே இரட்டை இலக்க ஓட்டங்களைப் பெற்றனர்.



இதன்போது காலியில் தொடர்ந்து தனது அபார பந்துவீச்சை வெளிப்படுத்தி வரும் பிரபாத் ஜயசூரிய 18 ஓவர்களில் 42 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளைப் பதம்பார்த்தார். இது அவர் ஒன்பதாவது முறையாக ஐந்து விக்கேட்டுகளை வீழ்த்துவதாக இருந்தது.

ஒருவேளை பிரபாத் ஜயசூரிய இரண்டாவது இன்னிங்ஸிலும் ஆறு விக்கெட்டுகளை வீழ்த்த முடியுமானால் அதிவேகமாக 100 டெஸ்ட் விக்கெட்டுகளை வீழ்த்திய ஒரு நூற்றாண்டுக்கு மேல் நீடிக்கும் சாதனையை சமன் செய்ய முடியும்.

இங்கிலாந்தின் ஜோர்ஜ் லோமன் 1896 ஆம் ஆண்டு 16 டெஸ்ட் போட்டிகளில் 100 விக்கெட்டுகளை அடைந்ததே இன்று வரை சாதனையாக உள்ளது.

அதேபோன்று நியூசிலாந்து அணி 88 ஓட்டங்களுக்கு சுருண்டது இலங்கைக்கு எதிரான அந்த அணி பெற்ற மிகக் குறைந்த ஓட்டங்களாகவும் சாதனை படைத்தது. இதற்கு முன்னர் 1992 இல் 102 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்ததே குறையாக இருந்தது.

அதேபோன்று இந்த இன்னிங்ஸில் இலங்கை அணித் தலைவர் தனஞ்சய டி சில்வா முதல் சிலிப்பில் இருந்து ஐந்து பிடியெடுப்புகளைப் பெற்றார். அதாவது விக்கெட் காப்பாளர் அன்றி இன்னிங்ஸ் ஒன்றில் அதிக பிடியெடுப்புகளைப் பெற்ற வீரர்கள் வரிசையில் தனஞ்சய முதல் இடத்தைப் பகிர்ந்து கொண்டார்.

இந்த மைல்கல்லை அவர் 15 வீரர்களுடன் பகிர்ந்துகொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நியூசிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் இலங்கையை விடவும் 514 ஓட்டங்களால் பின்தங்கிய நிலையில் நேற்று பகல்போசன இடைவேளைக்கு முன்னரே நியூசிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸுக்காக பலோ ஒன் செய்ய வேண்டி ஏற்பட்டது.

இரண்டாவது இன்னிங்ஸிலும் நியூசிலாந்து அணி ஓட்டங்களைப் பெறுவதற்கு முன்னரே விக்கெட்டை பறிகொடுத்தது. டொம் லதம் டக் அவுட் ஆனதன் பின்னர் இரண்டாவது விக்கெட்டுக்கு டெவோன் கொன்வோய் (61) மற்றும் கே வில்லியம்சன் (46) 97 ஓட்டங்களைப் பகிர்ந்துகொண்டனர்.

எவ்வாறாயினும் மேலும் 24 ஓட்டங்களைப் பெறுவதற்குள் 4 விக்கெட்டுகளைப் பறிகொடுத்து நியூசிலாந்து அணி தடுமாற்றம் கண்டுள்ளது. சீரற்ற காலநிலை காரணமாக நேற்றைய ஆட்ட சற்று முன்கூட்டியே நிறுத்தப்படும்போது நியூசிலாந்து அணி 41 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 199 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

டொம் பிளன்டல் 47 ஓட்டங்களுடனும் கிளன் பிலிப்ஸ் 32 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர்.

இலங்கை சார்பில் தனது கன்னி டெஸ்ட் போட்டியில் ஆடும் நிஷான் பீரிஸ் 3 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு பிரபாத் ஜயசூரிய மற்றும் தனஞ்சய டி சில்வா தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தியுள்ளனர்.

இதன்படி நியூசிலாந்து அணி இன்னிங்ஸ் தோல்வி ஒன்றை தவிர்ப்பதற்கு ஐந்து விக்கெட்டுகள் மாத்திரமே கைவசம் இருக்க இன்னும் 315 ஓட்டங்களைப் பெற வேண்டி உள்ளது. இலங்கைக்கு அந்த ஐந்து விக்கெட்டுகளையும் வீழ்த்தினால் போதுமானது. இன்று போட்டியின் நான்காவது நாளாகும்.

## எங்கே செல்கிறது இலங்கை கால்பந்து?





உலக கால்பந்து சம்மேளன (பிஃபா) தரைவரிசையில் இலங்கை அடிமட்டத்தில் இருக்கும் ஓர் அணி. அதனால் கடந்த ஒரு தசாப்தத்தில் 200 இடங்களுக்குள் முன்னேறுவது குதிரைக் கொம்பு. என்றாலும் உலக மட்டத்தில் கால்பந்துக்கு இருக்கும் செல்வாக்குக்கு மத்தியில் அதில் ஆதிக்கம் செலுத்துவது என்பது இலங்கை போன்ற ஒரு நாட்டுக்கு சாதாரணப்பட்டதல்ல.

என்றாலும், இலங்கை கால்பந்து அணி அண்மையில் வெளியிட்ட பிஃபா உலகத் தரவரிசையில் 200 ஆவது இடத்திற்கு முன்னேறியது பெருத்த சாதனையாகக் கொண்டாடப்படுகிறது.

அதாவது நீண்ட காலமாக தரவரிசையில் 205 ஆவது இடத்தில் ஆடாது அசையாது இருந்த இலங்கை கால்பந்து அணி கிட்டத்தட்ட எட்டு ஆண்டுகளுக்குப் பின்னரே 200 ஆவது இடத்திற்கு ஏற்றம் கண்டிருக்கிறது என்றால் சாதாரணப்பட்டதல்ல.

பிஃபா தரவரிசையில் இலங்கை அணி 2023 ஏப்ரலில் 207 ஆவது இடத்திற்கு சரிந்திருந்தது. அதாவது பிஃபா தரவரிசையில் இருக்கும் மொத்த நாடுகளின் எண்ணிக்கையே 210 என்ற நிலையில் பின்பக்கத்தில் இருந்து பார்த்தால் நான்காவது இடம். பின்னர் 2023 நவம்பரில் 204 ஆவது இடத்தை அடைந்த இலங்கை கடந்த ஜூனில் 205 ஆவது இடத்திற்கு சரிந்து தற்போது 200ஆவது இடத்தைத் தொட்டிருக்கிறது.

இலங்கையை பொறுத்துவரை இதுவும் மிகப்பெரிய முன்னேற்றம் தான். அதாவது அரசியல் தலையீடுகள் காரணமாக அண்மையில் பிஃபா தடைக்கு உள்ளாகி அதனால் ஏற்பட்ட நிர்வாகப் பிரச்சினைகள் மற்றும் போதிய சர்வதேச போட்டிகள் இன்மை என்று ஏகப்பட்ட சிக்கல்களைச் சந்தித்த பின்னர் இந்த ஏற்றம் குறிப்பிடத்தக்கது.

அண்மையில் நடந்த கம்போடியாவுக்கு எதிரான ஆசிய கிண்ண தகுதிகாண் போட்டிகளில் இலங்கை பெற்ற வெற்றிகள் உலகக் கால்பந்தில் இலங்கை அணி ஏணிப்படி ஏற காரணமானது.

கம்போடியாவுக்கு எதிராக அண்மையில் நடந்த இரண்டு சுற்று தகுதிகாண் போட்டியின் முதல் சுற்றுப் போட்டி கொழும்பில் நடந்த போது ஆட்டத்தை கோலின்றி சமன் செய்த இலங்கை அணி இரண்டாம் சுற்றுப் போட்டி கம்போடியாவில் நடந்த போது அதனை பெனால்டி சூட் அவுட் முறையில் வென்றது.

இதன்மூலம் இலங்கை கால்பந்து அணியால் 2025 ஆசிய கிண்ண தகுதிகாண் தொடரின் அடுத்த சுற்றுக்கு முன்னேற முடிந்தது. இதன்போது இலங்கை அணி உள்நாடு மற்றும் வெளிநாடு என்று ஆறு போட்டிகளில் ஆடும்.

முன்னதாக கடந்த மார்ச்சில் இடம்பெற்ற பூட்டானுக்கு எதிரான போட்டியை 2–0 என வென்ற இலங்கை அணி பப்புவா நியூகினியுடனான ஆட்டத்தை கோலின்றி சமன் செய்தது. முன்னதாக கடந்த ஒக்டோபரில் கொழும்பில் நடந்த யெமன் அணிக்கு எதிரான பிஃபா உலகக் கிண்ணத் தகுதிகாண் போட்டியையும் 1–1 என்ற கோல் கணக்கில் இலங்கை அணி சமன் செய்தது. இதன்படி பார்த்தால் இலங்கை கால்பந்து அணி கிட்டத்தட்ட கடந்த ஓர் ஆண்டில் சர்வதேச கால்பந்துப் போட்டிகளில் தோற்றதே இல்லை. இதற்கு ஏற்ப இலங்கை கால்பந்து அணிக்கு இடைக்கால பயிற்சியாளராக நியமிக்கப்பட்டிருக்கும் குவைட் நாட்டின் அப்துல்லா அல் முத்தைரியின் வருகையும் சாதகமாகவே இருக்கிறது.



கம்போடியாவுக்கு எதிரான போட்டியில் இலங்கை வெல்வதற்கு இவரின் பங்கு முக்கியமானது. இந்த நிலையில் அவரின் பதவிக் காலமும் நீடிக்கப்பட்டிருக்கிறது. இந்த வெற்றிகளுக்கு மத்தியில் இலங்கை கால்பந்து அணிக்கு மேலும் சர்வதேச போட்டிகளை வழங்குவதில் இலங்கை கால்பந்து சம்மேளனம் அதிக ஆர்வம் காட்ட ஆரம்பித்திருக்கிறது.

இதன்படி ஒக்டோபர் மாதத்தில் இலங்கை அணி மியன்மாருக்கு எதிராக உள்நாடு மற்றும் வெளிநாட்டில் தலா ஒரு போட்டியில் ஆடப்போகிறது. இதன் முதல் போட்டி ஒக்டோபர் 10 இலும் அடுத்த போட்டி ஒக்டோபர் 13 இலும் நடத்த ஏற்பாடாகி இருக்கிறது.

இலங்கையுடன் போட்டிகளில் ஆடுவதற்கு சிங்கப்பூர், பங்களாதேஷ் மற்றும் மாலை தீவை இலங்கை கால்பந்து நாடியபோதும் அது வெற்றி அளிக்காத நிலையிலேயே தற்போது மியன்மாருடன் பலப்பரீட்சை நடத்தப்போகிறது. எனினும் பிஃபா தரவரிசையில் 167 ஆவது இடத்தில் இருக்கும் மியன்மார் என்பது இலங்கைக்கு பெரும் சவாலான அணி தான்.

அதேபோன்று எதிர்வரும் நவம்பரில் திஜிகிஸ்தான் மற்றும் நேபாள அணிகளுடன் முக்கோண கால்பந்து தொடர் ஒன்றிலும் ஆட இலங்கை திட்டமிட்டு வருகிறது. ஆனால் இந்த முயற்சி இன்னும் பேச்சுவார்த்தை மட்டத்திலேயே இருப்பதோடு முடிவாகவில்லை.

இதுவெல்லாம் இலங்கை கால்பந்து அணியின் முன்னேற்றத்திற்கு உதவும் என்பது பலத்த எதிர்பார்ப்பு. ஆனால் அண்மைக் காலத்தில் இலங்கை கால்பந்தில் ஏற்பட்டிருக்கும் அதிரடி முன்னேற்றங்கள் என்பது உண்மையில் இயற்கையான வளர்ச்சியா அல்லது செயற்கையாக நிகழ்ந்ததா என்ற சந்தேகங்கள் இல்லாமல் இல்லை.

இலங்கை தேசிய கால்பந்து அணி என்பது இப்போது முழுக்க முழுக்க உள்நாட்டில் கால்பந்து ஆடி அதில் இருந்து தேசிய அணி வரை முன்னேறி இலங்கைக்கு வெற்றி தேடித்தந்த வீரர்களைக் கொண்டதல்ல. அதாவது உள்நாட்டு வீரர்களுக்கு அப்பால் இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட வெளிநாட்டு வீரர்கள் மீதே இலங்கை கால்பந்து சம்மேளனம் அதிக நாட்டம் காட்டி வருகிறது.

இப்போது இருக்கும் இலங்கை தேசிய அணியை எடுத்துக் கொண்டால் கிட்டத்தட்ட பாதிப் பேர் இரட்டை பிரஜா உரிமை பெற்ற வெளிநாட்டில் கழகமட்டப் போட்டிகளில் ஆடுபவர்கள். இவர்கள் இலங்கை கால்பந்து கட்டமைப்பில் இருந்து தோன்றியவர்கள் அல்ல.

இங்கிலாந்தில் பிறந்து வளர்ந்த ஜன் ஹிங்கர்ட், ஜெர்மனியில் பிறந்து வளர்ந்த ஜேனச் தயாபரன், சுவீடனில் பிறந்து வளர்ந்த ஆதவன் ராஜமோஹன் என்று இந்தப் பட்டியல் நீண்டது. குறிப்பாக இந்த ஆண்டில் இலங்கை அணி சர்வதேச கால்பந்தில் போட்ட அனைத்து கோல்களையும் பெற்றவர்கள் இரட்டைப் பிரஜா உரிமையை வைத்திருப்பவர்கள் தான். இதன் உச்ச கட்டம் கம்போடியாவுக்கு எதிரான இரண்டாம் சுற்றுப் போட்டியில் களமிறங்கிய முதல் பதினொருவரில் கோல் காப்பாளரான அணித் தலைவர் சுஜான் பெரேரா மாத்திரம் தான் உள்ளூர் மட்ட கால்பந்து போட்டிகளில் ஆடுபவராக இருந்தார்.

உண்மையில் இது ஆரோக்கியமானதல்ல. இலங்கை கால்பந்து முன்னேற்றப் பாதையில் செல்வதான மாயையை தந்தாலும் நீண்ட காலத்திற்கு இது நிலைக்காது. ஒரு கட்டத்தில் இருந்ததை விடவும் தேசிய அணி அதல பாதாளத்தில் விழும் ஆபத்து அதிகம்.

இது இலங்கை கால்பந்து சந்திக்கும் அரசியல், நிர்வாகப் பிரச்சினைக்கு அப்பால் மைதானத்திலும் மோசமான பாதிப்பைச் செலுத்தக் கூடியதாக இருக்கும். உள்ளூர் திறமைகளைக் கொண்ட முழுமையான அணி ஒன்றை உருவாக்கினாலேயே நீண்ட காலத்திற்கு பயணிக்க முடியும். அதற்கு அடிமட்டத்தில் கால்பந்து விளையாட்டின் வளர்ச்சியில் இன்னும் அக்கறை காட்டுவது அவசியம்.

குறிப்பாக உள்ளூர் மட்டக் கால்பந்து போட்டிகள் காணாமல்போயிருப்பது கலவைக்குரியது. வழக்கமான கால்பந்து தொடர்களை நடத்தாமல் இருப்பது புதிய திறமைகளை உருவாக்குவது மற்றும் அவ்வாறான திறமைகளை இனங்காண்பதற்கு முடியாமல்போவதோடு அது எதிர்கால கால்பந்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

இலங்கை கால்பந்து சம்மேளனம் அடிமட்ட கால்பந்துக்கு முன்னுரிமை அளிக்காதது நாடெங்கும் உள்ள பல கால்பந்து லீக்குகளுக்கு நிச்சயமற்ற சூழலை ஏற்படுத்தியிருக்கிறது.

போதுமான நிதி இல்லாததால் இளம் திறமைகளை தேடும் மாவட்ட கால்பந்து லீக்குகளை நடத்துவதில் சிக்கல் உள்ளது. பிஃபா மற்றும் ஆசிய கால்பந்து சம்மேளனம் போன்ற சர்வதேச நிறுவனங்களிடம் இருந்து கணிசமான நிதி கிடைத்தபோதும் உள்ளூர் கால்பந்து லீக்குகளுக்கு போதுமான நிதி கிடைத்ததாக தெரியவில்லை.

உறுதி அளிக்கப்பட்ட நிதியிலும் பகுதி அளவு மாத்திரமே வழங்கப்பட்ட சூழலில், மாவட்ட லீக்குகள் மேலும் சிக்கலை எதிர்கொண்டுள்ளன. இது முறையான கால்பந்து போட்டிகளை நடத்துவதை தடுப்பதோடு இறுதியில் புதிய தலைமுறை திறமைகளை அடையாளம் காண்பதையும் தடுத்துவிடும். அதாவது அடிமட்டத்தில் கால்பந்து சாரியாக இல்லை என்றால் புதிய கால்பந்து வீரர்களை தேர்வு செய்வதற்கான சங்கிலி ஒரு கட்டத்தில் அறுந்து போய்விடும்.

நாட்டில் பாடசாலை கால்பந்து ஓரளவு வலுவாக இருந்தாலும் அங்கிருந்து உருவாகும் வீரர்கள் தேசிய அணி வரை முன்னேறுவதற்கு உள்ளூர் கால்பந்து கட்டமைப்பு இன்னும் பலப்படுத்தப்பட வேண்டும். இல்லாவிட்டால் இந்த வெற்றிகள் நீண்ட காலத்திற்கு நிலைக்காது.

எஸ்.பிர்தௌஸ்...

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 செப்டெம்பர் மாதம் 29ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.


Senthooram
செந்தூரம்
2024 செப்டெம்பர் 29 ஞாயிற்றுக்கிழமை

# 154 ஆண்டுகள் நீடித்த சாதனை



ஹொங்கொங்கில் இருந்து நியூயோர்க் வரை 'சீ விட்ச்' என்ற கப்பல் 1849 ஆம் ஆண்டு பயணித்தபோது அந்த பயணத்திற்கு எடுத்துக் கொண்ட காலம் 74 நாட்கள். அப்போது அது மிக வேகமான பயணமாக இருந்ததில் ஆச்சரியம் இல்லை. ஆனால் ஹொங்கொங் மற்றும் நியூயோர்க் நகருக்கு இடையிலான வேகமான கப்பல் பயணமாக இது 154 ஆண்டுகள் சாதனையை தக்கவைத்துக் கொண்டது உண்மையில் ஆச்சரியமானது. கடைசியில் 2003 ஆம் ஆண்டு இரண்டு நாட்களில் அந்த பயணத்தை மேற்கொண்டு சாதனை முறியடிக்கப்பட்டது.

# தெருவை கூட்டிய பேரரசர்

சீனாவின் கடைசி பேரரசர் புயி கம்யூனிச அரசில் தனது கடைசி நாட்களில் ஒரு பொது மகனாகவே வாழ்ந்தார். ஆடம்பர வாழ்க்கைக்கும். சராசரி வாழ்வுக்கும் இடையிலான வித்தியாசம் பற்றி தெரிந்து கொள்ள புயி இன் கடைசி நாட்களை தெரிந்து கொண்டால் போதும். தனது சொந்த பாதணியின் பட்டியை கட்டத் தெரியாது, பற்களை தீட்டத் தெரியாது என்று எத்தனையோ சிரமங்கள். வீதி சுத்தம் செய்பவராக அவர் முதல் நாள் வேலைக்குச் சென்றபோது பாதையை தவறவிட்டார். பாதையில் போகின்ற வருகின்றவர்களிடம் வழி கேட்ட விதமே பரிதாபம், 'நான் புயி, குயிங் வம்சத்தின் கடைசி பேரரசர். உறவினர் வீட்டில் தான் தங்கி இருக்கிறேன். வீட்டுக்குப் போக வழி தெரியவில்லை.'



# தண்ணீருக்குமா காலாவதி திகதி!

தண்ணீர் போத்தல்களிலும் காலாவதியாகும் திகதி போடப்பட்டிருக்கும். உண்மையில் அது தண்ணீர் காலாவதியாகும் திகதியல்ல பிளாஸ்டிக் போத்தல்கள் காலாவதியாகும் திகதியாகும். ஆனால் இதனையும் விட மேலும் சில காரணங்கள் இருக்கின்றன.

தண்ணீர் விற்பனைக்கு வந்த பின் அது நுகர்வு உணவுப் பொருள். எனவே, அவ்வாறான பொருளுக்கு காலாவதி திகதி கொடுக்கப்படுவது சட்டவிதிகளின்படி கட்டாயமாகிறது.

இதுமட்டுமல்ல காலாவதி திகதி குறிப்பது உற்பத்தி நிறுவனங்களின் விற்பனைக்கு அவசியமானது.

அப்போது தான் மேலும் மேலும் விற்பனையை கூட்ட முடியும். மற்றபடி தண்ணீர் ஒன்றும் பழசாகாது.



# பயங்கர நொடி!

இந்த புகைப்படத்தில் இருப்பவர் பிலிப்பைன்ஸ் அரசியல்வாதியான ரெய்னால்டோ டக்ஸா. புத்தாண்டு தினத்தில் தனது வீட்டுக்கு வெளியில் குடும்பத்தினருடன் இருக்கிறார். இந்த புகைப்படம் எடுக்கப்பட்டு அடுத்த நொடியே அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். புகைப்படத்தில் அவரை சுட்டுக் கொன்ற நபரும் துப்பாக்கியை இலக்குவைத்து இருப்பது தெளிவாகத் தெரிகிறது.

எனவே, கொலையாளியை பொலிஸார் இலகுவாக பிடித்து விட்டனர்.





பூகோள சஞ்சாரம்

பிர்தெளஸ்

# மருத்துவர்களின் ஆபத்தான கையெழுத்து

மருத்துவர்களின் கையெழுத்து என்பது உலக மகா பிரச்சினை. கல்வெட்டு எழுத்துகளைக் கூட முயன்றால் வாசிக்கலாம், ஆனால் மருத்துவர்கள் எழுதித் தரும் குறிப்புகளை எந்த கோணத்தில் பார்த்தாலும் புரியாது. உண்மை என்னவென்றால் மருத்துவர்களின் தெளிவு இல்லாத எழுத்துகளால் சராசரியாக வருடத்திற்கு 7,000 பேர் உயிரிழப்பதாக அமெரிக்காவின் மருத்துவ நிறுவனம் கூறுகிறது. இதனால் தெளிவாக மருந்து சீட்டை எழுத வேண்டும் என்று பல நாடுகளும் மருத்துவர்களுக்கு சட்டம் போடும் அளவுக்கு நிலைமை மோசமாகி இருக்கிறது.

# மூச்சு விடாது 25 நிமிடம்!

ஒரு மனிதனால் சராசரியாக 30 தொடக்கம் 90 விநாடிகள் மூச்சைப் பிடித்திருக்க முடியும். ஆனால் பயிற்சி செய்தால் இந்த நேரத்தை அதிகரிக்கலாம்.
எவ்வாறாயினும் குரோசியாவைச் சேர்ந்த புடிமிர் சொபட் அளவுக்கு யாராலும் மூச்சைப் பிடித்து வைக்க முடியாது.

நீருக்கு அடியில் அதிக நேரம் மூச்சைப் பிடித்து வைத்திருந்த உலக சாதனை சொபட் இடமே உள்ளது. அவர் எவ்வளவு நேரம் மூச்சைப் பிடித்து வைத்திருந்தார் தெரியுமா. கிட்டத்தட்ட 25 நிமிடங்கள்.

2021 மார்ச் 27 ஆம் திகதி அவர் நீருக்கு அடியில் 24 நிமிடம் மற்றும் 37 விநாடிகள் மூச்சைப் பிடித்து வைத்து கின்னஸ் உலக சாதனையைப் படைத்தார்.

அதற்கு முன்னர் 34 விநாடிகள் நீருக்கடியில் மூச்சை பிடித்ததே சாதனையாக இருந்தது.







“தரகரே நீங்க ஒரு பெரிய விஷயத்தை மறைச்சிட்டீங்க.”
“என்ன சொல்றீங்க?”
“பெண் அஞ்சடி உயரம்னு சொன்ன நீங்க, மூணு அடி அகலம் இருப்பாள்னு சொல்லவே இல்லையே”



மனைவி: ஏங்க.. அந்த லேடி அழகா இருந்தாங்களா?
கணவன் (மைண்ட் வாய்ஸ்): ஆமான்னு சொன்னாலும் அடி விழும்.. இல்லன்னு சொன்னாலும் மரண அடி விழுமே.
மனைவி: என்ன யோசிக்கிறீங்க?
கணவன்: அன்னைக்கு ஒரு புடவை வாங்க கேட்டியே.. அதே மாதிரி ஒரு டிசைன வர வழியில பார்த்தேன். யாராவது வாங்கிட போறாங்க. இப்பவே போலாமா..
மனைவி: அப்படியா சரி வாங்க போகலாம்.
கணவன் (மைண்ட் வாய்ஸ்): அப்பாடா! அடி வாங்குறதுக்கு, ஆயிரம் ரூபாய் புடவை வாங்கி கொடுத்துரலாம்.

பாடம் எல்லாம் முடிஞ்சிப் போச்சு.. ஏதாவது சந்தேகம் இருந்தா கேளுங்க.. எதுவா இருந்தாலும் தயங்காமக் கேளுங்க..”
“சார் உங்க பொண்ணு பேரு என்ன சார்?”





போடா, நீ முட்டாள் !
குமாஸ்தா : போடா, நீ முட்டாள் !
டைப்பிஸ்ட்: போடா, நீ தான் முட்டாள் !
மேனேஜர்: என்ன அங்கே கூச்சல்? நான் ஒருத்தன் இங்கே இருப்பது உங்களுக்கு தெரியலையா ?

ஐந்து வயது மகன்: அம்மா, ஐ லவ் யூ!
அம்மா: ஐ லவ் யூ டூ!
இருபது வயது மகன்: அம்மா, ஐ லவ் யூ!
அம்மா: என் கிட்ட காசு இல்லை. ஒழுங்கா கிளம்பு.

பையன்: அப்பா ராமு என்னை அடிச்சுட்டான்பா
அப்பா: வாத்தியார் கிட்ட புகார் கொடுக்க வேண்டியதுதானே?
பையன்: வாத்தியார் பெயர் தான் ராமு.



இப்ப யாராவது காசு இல்லாம சாப்பிட வந்தா தேவலை!
ஏன் முதலாளி, அப்படிச் சொல்றீங்க?
தொடர் பவர்கட் காரணமா மாவு ஆட்ட ஆள் வேண்டியிருக்கே!





“தலை வரால சட்டசபையே அதிர்ந்திடுச்சாம்”
“அடேங்கப்பா அப்படி என்ன பேசினாரு?”
“பேசலைய்யா குறட்டை விட்டாரு!”



“உங்க நாயை அடக்கி வையுங்க. என் பெண் பாட ஆரம்பித்ததும் அது குறைக்க தொடங்கிவிடுகிறது.”
“அதற்கு நான் என்ன செய்ய முடியும்? உங்கள் பெண்தானே முதலில் ஆரம்பிக்கிறாள்?”



நபர் – 1: இங்க பாத்தீங்களா ஹெல்மெட், லைசன்ஸ், வண்டி இன்ஷ்யூரன்ஸ் இதெல்லாம் மறக்காம எடுத்துட்டு வந்துட்டேன்
நபர் – 2:அது சரி ஏன் நடந்து வர்றீங்க.
நபர் – 1: ஐய்யைய்யோ.! இன்னிக்கு வண்டிய எடுத்துட்டு வர மறந்துட்டேன் சார்.



ஏன்டா 20 நாள் காலேஜுக்கு வரல?”
“சார் எங்கப்பா எப்பவும் சொல்லுவார் ஒரு இடத்துக்கு அடிக்கடி போனா மரியாதையா இருக்காதுனு”

டாக்டர்: “நீங்க உடம்பைக் குறைக்கணும்; இனிப்பைக் குறைக்கணும்; காரத்தைக் குறைக்கணும்”
நோயாளி: “டாக்டர், நீங்க ஃபீசை குறைக்கணும்”



ஒருவர்: “தாமஸ் ஆல்வா எடிசன் பல புதிய கண்டுபிடிப்புக்களைக் கண்டுபிடிக்காமலிருந்தால் என்னவாயிருக்கும்?”
மற்றவர்: “வேற ஒருத்தர் கண்டுபிடிச்சிருப்பார்”





# டுபாய் அமைதி, காலநிலை மகாநாட்டில் வழக்கறிஞர் ஹனீக்கா ராகில்



அமைதி மற்றும் காலநிலை மகாநாட்டில் வழக்கறிஞர் ஹனீக்கா ராகில் கலந்து கொண்டார். இவர், ரோட்டரி இன்டர் நேஷனலைப் பிரதிநிதித்து வப்படுத்தத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ரோட்டரி இன்டர் நேஷனல் (3220 ) ஸ்ரீ லங்கா, மாலைதீவைச் சேர்ந்த ரோட்டரிக் கழகம் சார்பில் பிஎச் எப் ஹனீக்கா ராகில் ஐக்கிய எமிரேட்ஸ் டுபாயில் காலநிலை மாற்றம் குறித்த ஐக்கிய நாடுகள் 28 வது மாநாடு

ரோட்டரி இன்டர்நேஷனலைப் பிரதிநிதித் துவப்படுத்த ஹனீக்கா ராகில் தேர்ந்தெடுக்கப் பட்டு கலந்து கொண்டு சிறப்பித் திருந்தார்

பெறப்பட்ட 67 விண்ணப்பங்களில் உலகம் முழுவதிலும் இருந்து தேர்ந்தெடுக் கப்பட்ட 12 பிரதிநிதிக ளில் இவரும் ஒருவர். ஹனீக்கா கொழும்பு வடக்கு ரோட்டரி கழகத் தின் தற்போதைய தலைவ ராகவும் உள்ளார். ரோட்டரி சர்வதேச ரீதியாக முதன்மு றையாக சமீபத்தில் முடிவ டைந்த காலநிலை மாற்றம் குறித்த ஐக்கிய நாடுகளின் மாநாட்டில் ரோட்டரி பெவி லியனை அமைத்தது



எமது மண்டலத்தில் கொள்கை வகுப்பாளர்க ளிடையே முக்கிய பெவி லியனை ரோட்டரி உறுதி செய்தது. 2 வார ஈடுபாட் டின் போது ரோட்டரி சர்வதேசத்தின் 20 க்கும் மேற்பட்ட அதிகாரபூர்வ பிரதிநிதிகள் ஐக்கிய எமி ரேட்ஸ்க்கு விஜயம் செய் தனர். அவர்களில் ரோட்டரி சர்வ தேச தலைவர் கோ ர்டன் மெக்கினலி, பிரதம நிறைவேற் றுப் பணிப்பாளர் ஜான் ஹெவ்கோ, தலைவர் பேரி ராசின், சர்வதேச ரோட்டரிக் கழகத் தலைவர் மரியோ சீசர் ஆகியோர் கலந்து கொண் டனர். ஹனீக்கா ராகிலும் டுபாயில் நடைபெற்ற கொமன் வெல்த்தின் உயர் மட்ட வரவேற்பில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டி ருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ஏனெனில் அவர் கொமன்வெல்த் இளைஞர் அமைதி தூதர்கள் வலையமைப்பில் இளை ஞர்கள், அமைதி மற்றும் காலநிலை மகாநாடு உறுப்பினர் மற்றும் ஈடு பாட்டிற்கான தலைவராக வும் இருக்கிறார். கொமன் வெல்த் பொதுச் செயலாளர் பாட்ரிசியா ஸ்காட்லாந்து, டுபாய் மற்றும் வடக்கு எமி ரேட்ஸிற்கான இலங்கைத் தூதுவர் அலெக்ஸி குணசே கர ஆகியோர் பங்கு கொண் டனர்.



ஆண்டின் தொடக் கத்தில் இளைஞர்கள், அமைதி மற்றும் காலநிலை மகாநாட்டை பிரதிநிதித் துவப்படுத்தும் 10வது கொமன்வெல்த் இளைஞர் அமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்க ஹனீக்காவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. கொமன்வெல்த் செயலகம் பாகிஸ்தானின் இஸ்லாமி யக் குடியரசின் அரசாங்கத் துடன் இணைந்து 10வது சர் வதேச காலநிலை மாற்றம் குறித்த மகாநாட்டினை ஐக்கிய இராச்சியத்தின் லண் டனில் 11ஆம் திகதி (செப் டம்பர் 2023 இல்)

கூட்டியது.

ஹனீக்கா ராகில் ஐக்கிய நாடுகள் சபை ஏற்பாட்டில் கடந்த வருடம் லண்டனில் இடம் பெற்ற 56 நாடுகள் கலந்து கொண்ட பொதுந லவாய மகா நாட்டில் பத்து நாட்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்



ஹனீக்கா ராகில் கார்டிஃப் மெட்ரோபொலிட்டன் பல் கலைக்கழகத்தில் (யுகே) சட்டத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவர் (எல்.எல். எம்). சட்ட இளங்கலை (எல்.எல்.பி) பட்டங்கள் பெற்றவர் ஆவார். ஸ்டாஃ போர்ட்ஷையர் பல்கலைக்க ழகத்தில் (யுகே) பட்டதாரி. அவர் தனது ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியை மாலைதீவு குடியரசில் பயின்றார். சீசெல்ஸ் குடி யரசில் தனது இரண்டாம் நிலைக் கல்வியை முடித் தார். அவர் கடந்த 8 ஆண் டுகளாக இளைஞர் தேசிய மற்றும் சர்வதேச அளவில் அமைதி மற்றும் மோதல் தீர்வு, கல்வி, காலநிலை, நீதி ஆகியவற்றை ஊக்கு விப்பதற்காக வாதிட்டும் செயற்படுத்தியும் வருகி றார்.

அவர் பொருளாதாரம் மற்றும் அமைதி நிறுவனத் தின் (IEP) உலகளாவிய அமைதி தூதராக நியமிக் கப்பட்டார். அவர் உலக அமைப்பின் கல்விக்கான உலகளாவிய இளைஞர் தூதராகவும் உள்ளார். அவர் 1967 ஆம் ஆண்டு பட்ட யப் படிக்கப்பட்ட ரோட்டரி சர்வதேச மாவட்ட, (3220) ஸ்ரீலங்கா, மாலைதீவுக ளின் ரோட்டரி கிளப்பின் கொழும்பு வடக்கின் 57 வது தலைவராகத் தேர்ந்தெ டுக்கப்பட்டார். 28 வது சர் வதேச காலநிலை மகாநாடு முடிவுக்கு வந்துள்ளதால் நிலையான எதிர்காலத்தை நோக்கி பாடுபடுவதன் முக் கியத்துவத்தை அவர் நம் புகிறார். ஹனீக்கா ராகில் தொழில் அதிபரும், கல்வி மானுமாகிய அம்ஜத் யூசுப் பின் துணைவி ஆவார்

நமது கிரகத்தில் ஒத்து ழைக்கவும், புதுமைப்ப டுத்தவும், நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தவும் ஹனீக்கா ராகில் செயற் பட்டு வருகிறார்.









# காவியங்களை ஓவியமாக வரையும் ஆற்றல் படைத்த ஓவியர் அந்தோனி கிஷாந்



கண்களையும் காணுதலையும் அடிப்படையாகக் கொண்ட கலைகள் "காண்பியக்கலைகள்" என அழைக்கப்படுகின்றன. இவை பார்வையாளர்கள், இரசிகர்கள் மனதில் ஆழ்ந்து வேரூன்றக் கூடிய தன்மையுடையன. அதனடிப்படையில் காண்பியக் கலைகளுள் ஓவியக்கலைக்கு தனியிடமுண்டு என்பதை தனது திறன்களால் மெய்ப்பித்தவர்கள் வரிசையில் இளம் ஓவியரான



அந்தோனி கிஷாந் இடம்பிடிக்கிறார்.

மன்னார் மாவட்டத்தில் பள்ளிமுனைக் கிராமத்தைச் சேர்ந்த 26 வயதுடைய இவர்; யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலை மற்றும் வடிவமைப்புத் துறையில், ஓவியக்கலையில் சிறப்புப் பட்டத்திற்கான படிப்பினை தொடர்ந்துகொண்டிருப்பவர். சமூக ஊடகங்கள் மூலமாக வரைதல், வர்ணம் தீட்டுதல் போன்றவற்றிற்காக பெரும்பாலானோரால் பாராட்டப்பட்டவர்.


கிஷாந்தின் தயாரும் ஓவியம் வரைவதில் அதிக ஆர்வமுடையவர். சிறுவயதில் பாடசாலையில் வழங்கப்படுகின்ற வரைதல் சார்ந்த வீட்டுவேலைகளை அவரது தயார் வரைந்து கொடுத்து உதவிசெய்வார். அவரைப் பார்த்து வளர்ந்த கிஷாந்துக்கும் அப்பழக்கம் தொற்றிக்கொண்டது. அதனைத் தொடர்ந்து வீட்டில் படிக்கச் சொல்லும்போதெல்லாம் சித்திரக் கொப்பியுடன் அமர்ந்துவிடுவதே வழக்கமாகியும் போனது.காலப் போக்கில் தரம் 11 இல் கல்வி கற்கும் போது தனது நண்பர்களின் பிறந்தநாளுக்கு வித்தியாசமாக பரிசளிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் அவர்களது புகைப்படங்களை வரைவதோடு விளையாட்டாக இவரது கலைப்பயணத்திற்கு முதற்புள்ளியிடப்பட்டது.



பின்னர் உயர்தரத்தில் சித்திரத்தை ஒரு பாடமாக பயில ஆரம்பித்ததும் காயத்திரி, அன்ரனி என்ற ஆசிரியர்களின் வழிகாட்டுதலினால் வரைதல் கலைமேல் அதீத ஆர்வம் இவருக்கு தோன்றியது. இந்த ஆர்வமே பல்கலைக்கழகத்திலும் அதே துறையை தெரிவுசெய்ய இவரைத் தூண்டியது. பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட மாணவர்களும், விரிவுரையாளர்களும் இவரது திறன் விருத்திக்கு மேலும் வலுச்சேர்த்தனர்.

ஓவியத்தில் தான் பெற்ற அறிவுப்பின்புலத்தை கொண்டு போர்ட்ரைட் (portrait), லேண்ட்ஸ்கேப் (Landscape) போன்ற இரு வகையிலும் பென்சில் வரைதல், சார்கோல் வரைதல், ஓயில் பெயிண்டிங்,





பேனா மற்றும் மை ஓவியம் (pen and ink drawing), நீர்வர்ண ஓவியம் போன்ற பல வகை ஓவியங்களை வரைந்து தனது சமூக ஊடகப் பக்கம் மூலமாக அவை மக்களை சென்றடையும் தளத்தினை உருவாக்கியிருக்கிறார்.

இவரிடம் பல்வேறு மக்கள் நேரடியாகவோ, ஊடகங்கள் மூலமோ தொடர்புகொண்டு தமக்கு நெருக்கமான உறவுகளுக்கும், தமக்குமென ஓவியங்களை வரைந்து பெற்று கொடுக்கின்றனர், உள்நாட்டில் மாத்திரமன்றி வெளிநாடுகளில் இருந்தும் இவருடன் தொடர்பு கொண்டு தமக்கு தேவையான ஓவியங்கள் வரைவதுக்கு ஓடர்களை வழங்குகின்றனர். அத்துடன் இவர் வரையும் ஓவியங்கள் ஆட் கலரி (Art gallary) மூலமாகவும் விற்பனை செய்யப்படுகிறது. இவ்வாறு ஓவியங்களை வரைந்து வர்ணம் தீட்டி விற்பனை செய்து வரும் வருமானத்தை கொண்டு பல்கலைகழக கல்வியை தொடர்ந்து வருகின்றார்.

மனித முகங்களை வரையும் போதும் அவற்றிற்கு வர்ணம் தீட்டும் போதும் பல்வேறு விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு முகங்களுக்கும் காணப்படும் மாறுபட்ட சருமத்தின் நிறம் (skin tone) அவர்களது வேறுபட்ட முகத் தோற்றங்கள் போன்றவற்றை செம்மையாக வரைவதற்கும், நிறம் தீட்டுவதற்கும் அடிப்படை பயிற்சியும் அதிக நேரமும் தேவைப்படுகிறது. அத்துடன் பழைய புகைப்படங்கள், தெளிவற்ற புகைப்படங்களை பார்த்து வரைவதற்குத் தேவைப்படும் அதிக நுட்பங்களை தமது பயிற்சிகளின் மூலம் தினமும் கற்றுக் கொள்வதில் கிஷாந்தின் ஆர்வம் வியக்கத்தக்கது.

மூலைக்கு மூலை ஓவியர்கள் நிறைந்துள்ள இக்காலத்தில் அவர்களிடமிருந்து தன்னை வேறுபடுத்தி காட்டுவதற்காக புதிய நுட்பங்களையும் வழிமுறைகளையும் கையாள்வதோடு கென்வஸ் துணியில் ஒயில் பெயிண்டிங் செய்வதன் மூலமாக தனக்கென தனித்துவமாக அதிக ரசிகர்களை தன் பக்கம் ஈர்க்கவும் இவர் மறக்கவில்லை.

ஓவியங்களை வரைவதற்கும், அவற்றிற்கு வர்ணம் தீட்டுவதற்குமென பல்வேறு வகைப்பட்ட உபகரணங்கள் காணப்படுகின்றன. ஆனால் வடமாகாணத்தில் அவ் உபகரணங்களை பெற்றுக் கொள்ளமுடிவதில்லை.அவ்வாறு அவை கிடைத்தாலும் அதன் விலை ஒப்பீட்டளவில் உச்சபச்சமாகவே காணப்படுகிறது. இதனால் நிகழ்நிலை (online) மூலமாக பல்வேறு தளங்களை அணுகி அவற்றினூடாக குறைந்த விலையில் உபகரணங்கள் எங்குள்ளன

(12 ஆம் பக்கம் பார்க்க)



நேர்கண்டவர்
கிரிஜா அருள்பிரகாசம்



# இலங்கை கலையுலகை வலம் வந்த கேரளத்து இசைக்குயில் விசாலாட்சி ஹமித்



இலங்கை வானொலியில் 1960ஆம் ஆண்டு இணைந்து கொண்டவர் விசாலாட்சி குகதாசன். மேடை நாடக கலைஞராகவும் வானொலி நாடகக் கலைஞராகவும் உலா வந்தவர், அறிவிப்பாளராகவும் திகழ்ந்தவர், இன்றும் திகழ்ந்து கொண்டிருப்பவர்.

இலங்கை வானொலி பெரும் எண்ணிக்கையான கலைஞர்களை உருவாக்கிக் கொடுத்த ஒரு பழம் பெரும் நிறுவனம். இந்த மாபெரும் விருட்சத்தின் நிழலில் தங்களது கலைத் திறன்களை வளர்த்துக் கொண்டவர்கள் ஏராளமானோர்.

இன்றும் இந்த விருட்சத்தின் நிழல் தம் மீது படாதா, தமக்கும் இந்த விருட்சம் நிழல் தராத என ஏங்கிக் கொண்டு இருப்பவர்கள் பலர்.

இற்றைக்கு பல ஆண்டுகளுக்கு முன் இந்த வாய்ப்பு ஒரு பெண்மணிக்கு கிடைத்துள்ளது. தனக்குக் கிடைத்த அந்த வாய்ப்பை தக்க வைத்துக் கொண்டு அதில் பெரும் வெற்றியீட்டிய ஒரு பெண்மணி தான் திருமதி வீசாலாட்சி ஹமித்.

இவர் 1963ஆம் ஆண்டு ஹமித் என்பவரை திருமணம் செய்து கொண்டார். அவர் ஒரு வர்த்தகர். கொழும்பு, பழைய சோனகத் தெருவில் அவரது வர்த்தக நிலையம் இருந்தது.

செல்வி விசாலாட்சி குகதாசனாக இருந்தவர், திருமணத்தின் பின் திருமதி விசாலாட்சி ஹமித் ஆனார்.

இவரது திருமணம் மனம் கவர்ந்த ஒரு காதல் நறுமணம். இந்து மதத்தைச் சார்ந்த இவரும் இஸ்லாமிய மதத்தைச் சார்ந்த அவரும் கரம் பற்றிக் கொண்டு நல்லிணக்கத்துடன் வாழ்ந்து வந்துள்ளார்கள்.

இவர்களது இணைவுக்குக் காரணம் கலைதான். இவர் ஒரு கலைஞர். அவர் ஒரு கலைப்பிரியர். இந்த இவர், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையின் இலவச இணைப்பிதழாக வாரவாரம் வெளிவெளிவரும் செந்துாரம் இதழுக்கு அவர் வழங்கிய செவ்வி



**முதலில் தங்களைப் பற்றிக் கூறுங்கள்.**

நான் கேரளத்தில் பிறந்தவள். எனது தாய் தந்தையர் 1938 இல் இலங்கை வந்தனர். தந்தையார் மாநகர சபை கட்டிட மேற்பார்வையாளராக பணி புரிந்ததார். அப்போது எனக்கு ஒரு வயது. எனக்கு இரு சகோதரர்கள். நான் படித்தது கொழும்பு விவேகானந்தா பாடசாலையாகும். அந்த வேளையில் ஆர் எஸ் சோதிநாதன் ஆசிரியர் இலங்கை வானொலியில் பாலர் கழகம் நிகழ்ச்சியை நடத்தி வந்தார். நான் சங்கீத மாணவியாக இருந்ததனால் என்னையும் நிகழ்ச்சிக்காக அழைத்துச் செல்வார்.

**இலங்கை வானொலியில் எப்போது இணைந்தீர்கள்?**

நான் பகுதிநேர அறிவிப்பாளராக 1972இல் இணைந்தேன். ச.சண்முகநாதனின் குரல் தேர்வில் தெரிவு செய்யப்பட்டு நாடகங்கள் நடிக்கத் துவங்கினேன். அந்த நடிப்புத் துறையில் சிறப்பாக செயல்பட்டதன் மூலம் திருப்திகரமாக பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ள கூடியதாக அமைந்தது. விசாலாட்சி குகதாசன் என்ற என்னுடைய பெயர் பிரபலமாகியது.

**ஆரம்பத்தில் எந்தத் துறைசார்ந்து கடமை புரிந்தீர்கள்?**

எனக்கு ஆரம்பமே பகுதி நேர அறிவிப்பாளராகவே கடமை புரிய கிடைத்தது. ராஜேஸ்வரி சண்முகம், புவனலோஜினி ஆகியோர் நடத்திய சஞ்சிகை நிகழ்ச்சிகளை அவர்கள் விடுமுறையில் செல்லும் போது நான் செய்வேன். வாரத்தில் மூன்று நாட்கள் செய்வேன். அதில் கவிஞர் வைரமுத்துவின் ஒரு கவிதையைக் கொடுத்து பதில் கவிதை எழுதுங்கள் என நேயர்களுக்கு அறிவித்தேன். நிறைய கவிதைகள் வந்தன. நான் அதை கவிஞர் வைரமுத்துவுக்கு அனுப்பினேன். அவர் அதை ஒலிப்பதிவு செய்து எனக்கு அனுப்பினார். அது நான் பெருமைப் பட்ட விடயமாகும். அடுத்து முத்துவிதானம் எனும் நான் நடத்திய நிகழ்ச்சியும் பெரும் வரவேற்பைப் பெற்றது.

**குடும்ப உறவுகளின் ஒத்துழைப்புகள் எவ்வாறு உங்களுக்கு உதவியாக இருந்தன?**

நானும் கணவரும் என் தந்தை தாயாருடன் தான் வசித்தோம். எனது மூன்று பிள்ளைகளையும் படிப்பு விடயம் தவிர எனது தாயாரே கவனித்துக் கொண்டார்.

படிப்பு சம்பந்தமான விடயங்களை நான் கவனித்தேன். அதிகமான பாடங்களை நானே கற்பித்தேன். ஆக என் குடும்பத்தார் பெரிதும் உதவியாக இருந்தார்கள். எனது கணவர் ஹமிட்டும் சா. சானாவின் நாடகங்களில் விருப்பத்தோடு நடித்தார். 1999 இல் காலமானார். நான் தனியாக இருந்த போதும் என் பெற்றோர் எனக்கு பெரும் துணையாக இருந்தார்கள்.

**அன்றைய கால, இன்றைய கால ஒலிபரப்புத்துறை பற்றிய விளக்கத்தை.....எதிர்பார்க்கின்றேன்**



அன்று எங்களுக்குத் தேடல் இருந்தது. இசைத் தட்டு களஞ்சியம் இருந்தது. எட்டு மணிநேரத்தில் இரண்டு மணிநேரம் அறிவிப்பாளராக இருந்தால் மிகுதி ஆறு மணிநேரம் இசைத் தட்டு களஞ்சியத்தில் வேலைப் பார்க்க வேண்டும். அதனால் சிறந்த நிகழ்ச்சிகளைக் கொடுக்கக் கூடியதாக இருந்தது.

இன்றைய காலத்தவர்களுக்கு தேடுவதற்காக நேரம் கிடைப்பதில்லை. தொழில் நுட்ப வளர்ச்சியில் பாடல்களை கணனியில் தட்டித் தருகின்றார்கள். இசைத் தட்டில் கேட்கும் போது வித்தியாசமான ரசனையைத் தரும். கால மாற்றம் தான் காரணம்.



ஒய்வுபெற்று இருக்கும் இந்த காலத்தை எவ்வாறு கழிக்கின்றீர்கள்?

இப்போதும் நிகழ்ச்சி செய்து கொண்டு தான் இருக்கின்றேன். ஒவ்வோரு சனிக்கிழமையும் மாலை நான்கு மணிக்கு "இன்னிசை சுவடுகள் "என்ற நிகழ்ச்சியை எனது குரலில் ஒலிபரப்புகின்றேன்.

எனது குரல் இன்னமும் மாறாமல் இருக்கின்றது. கடவுளுக்கு நன்றி.

**நீங்கள் பெற்ற பதவிகள், விருதுகள் பற்றிக் கூறுங்கள்......!**

நான் வேறு தொழில்களுக்காக விண்ணப்பிக்கவும் இல்லை.

(07ஆம் பக்கம் பார்க்க)

திருமதி பவானி சச்சிதானந்தன்



# அதிபர் மகேசனின் காலகட்டமே கொழும்பு விவேகானந்த கல்லூரியின் பொற்காலம்

முன்னாள் அதிபர் அமரர் சு.ம கேசனின் காலகட்டமே கல்லூரி வளர்ச்சியின் பொற்காலமாக போற்றப்படுகின்றது. கல்லூரியின் முக்கிய பிரச்சினையாக இருந்த இடப்பற்றாக்குறையை நீக்கி புதிய கட்டடங்களை அமைப்பதற்காக இரவு பகலாக வீடு வீடாக சென்று நிதி சேகரிப்பதில் ஈடுபட்ட அவர்இ கல்வி மறுசீரமைப்பு நடவடிக்கை களிலும் புதிய யுக்திகளை வகுத்து செயற்படுத்தி வெற்றி கண்டார்.

அவரது காலகட்டமான 1978 ஆம் ஆண்டு பெண்களுக்கான கீழைத்தேய பாண்ட் வாத்தியக் குழு ஸ்தாபிக்கப்பட்டதுடன்இ இக்குழு அகில உலக இந்து மாநாட் டின் போதும் நேபாள மன்னரின் இலங்கை விஜயத்தின்போதும் பங்கேற்று பாடசாலைக்கு புகழை யீட்டிக் கொடுத்தது. இதனைவிட 1981 ஆம் ஆண்டு இங்கிலாந்து மகாராணியாரின் இலங்கை விஜ யத்தின்போது அவரது வரவேற்பில் கலந்துகொண்ட ஒரேயொரு தமிழ் பாடசாலை என்ற கௌரவத்தையும் தன்வசப்படுத்திக்கொண்டது.

கல்வித்துறையில்....

உயர் தர விஞ்ஞான பிரிவை ஆரம்பித்தமை.(1974)

அன்றைய நாளில் அறிமுகப்ப டுத்தப்பட்ட புதிய கல்வித் திட்டத் திற்கமைய தொழில் முன்னிலைப் பாடம், அழகியல் (சங்கீதம்,நட னம்,நாடகம்) ஆகிய பாடங்களுக் கான வகுப்பறை வசதிகளை ஏற்ப டுத்தியமை.

இதன் மூலம் 1975 இல் முதன் முறையாக தே.க.பொ.த(N.C.G.E) பரீட்சையில் தோற்றிய 56 மாணவர்களில் 36 பேர் உயர்த ரக்கல்வி(H.N.C.E) கற்கத் தகுதி பெற்றனர். அதே ஆண்டில் வர லாற்றின் முதன்முறையாக(G.C.E A/L) வர்த்தகப் பிரிவிலிருந்து பல் கலைக்கழக அனுமதியும் பெற்ற னர்.

ஆங்கிலக்கல்வியை மேம்ப டுத்த அவரே களமிறங்கி உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு ஆங்கிலப் பாடத்தைப் போதித்தார்.

69 வரையான வகுப்பு மாண வர்களுக்கு தேர்ச்சி பெற்ற முன்னாள் மாணவர்கள் மூலம் விசேட மேலதிக வகுப்புகளை நடாத்தினார்.

1976 இல் பாடசாலையின் பொன்விழாவையும், பரிசளிப்பு விழாவையும் நடாத்தி மாணவர் களை உற்சாகப்படுத்தியதோடு பாடசாலையையும் பிரபலப்படுத்தி னார்.

விளையாட்டுத்துறையின் முன் னேற்றத்திலும் அதீத கவனம் செலுத்தினார். விளையாட்டு மைதானம் இல்லாத போதும் பாடசாலை மட்டத்தில் மட்டுப்ப டுத்தப் பட்டிருந்த மாணவர்க ளின் விளையாட்டுத் திறன்களை மாவட்ட மட்டத்திற்கு உயர்த்தினார். மெய் வல்லுனர் போட்டிகளை சுகததாச விளையாட்டு அரங்கில் முதன் முறையாக நடாத்தி மாண வர்களை உற்சாகப்படுத்தினார். ஆசிரியர், மற்றும் காரியாலய உத வியாளர்கள் பற்றாக் குறையை நீக்க கல்விக் காரியாலயங்களில் கையேந்தி நிற்கவில்லை.

மாறாக திறமை வாய்ந்த முன்னாள் மாணவர்களின் உதவி யையே பெற்றார். (அபிவிருத்திச் சங்கத்தினூடாக சிறு கொடுப்பன வும் வழங்கப்பட்டது.)

சாரணர், சாரணிய இயக்கங் களை நவீனமயப் படுத்தி மாணவர் ஒழுக்க விழுமியங்களை மேம் படுத்தினார். அவர்களைச் சமூக விழாக்களில் தொண்டரணியாக களமிறக்கி,விவேகானந்தாவின் நற் பெயரைச் சமூக மயப்படுத்தினார்.

விழியுணர்வற்றோருக்கான தமிழ்மொழி மூலமான கற்ற லுக்கு வாய்ப்பளித்த முதல் தமிழ் பாடசாலை என்ற பெருமையும இவரது காலத்திலேயே கிடைத்தது. முன்னாள் அதிபர் அமரர் மகேச னின் நினைவுதின நிகழ்வு எதிர் வரும் 2024.09.29ஆம் திகதி மாலை 4 மணிக்கு விவேகானந்த கல்லூரியின் பிரதான மண்டபத் தில் நடைபெறும். கொழும்பு விவே கானந்தா கல்லூரியின் அபிவிருத்தி சங்கமும் பழைய மாணவர் சங்க மும் அகில இலங்கை சபரிமலை ஐயப்ப குருசுவாமிகள் ஒன்றி யமும் இணைந்து முன்னாள் அதிபர் அமரர். மகேசன் நினைவு தினத்தை முன்னிட்டு பாடசாலை யில் புலமைப்பரீட்சையில் சித் தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவை எதிர்வரும் 29 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடாத்தவுள்ளது.

இந்நிகழ்வு விவேகானந்தா கல்லூரியின் அதிபர் மூக்கப் பிள்ளை மூவேந்தர் தலைமையி லும் M.Z.M. பாரூக் (முன்னாள் ஆசிரியர்) முன்னிலையிலும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத் தக்கது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந் தினர்களாக மொழிவாணன் (நீதிராஜா) (ஜனரஞ்சக எழுத் தாளர்), மங்களேஸ்வரி, கோ. நாகரத்தினம் (ஜோதிடர்), சி.



சுந்தரத்தம்மாள், ஆறுமுகம் சங்கர லிங்கம், ச. ராமலெட்சுமி, க. சுப்பி ரமணியம் (ஜெயராம்), சு. நர்மதா தவத்திரு ரெங்கதாஸ் விஜயானந் சுவாமி (தேவி ஸ்ரீ கருமாரி அம்மன் ஆலயம்) ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்கள்.

இந்நிகழ்வை எஸ். சீத்தாராம னும் பிரம்மஸ்ரீ சசாங்கன் சர்மா வும் தொகுத்து வழங்கவுள்ளார்கள்.

இந்நிகழ்வில் ஆறுமுகம் ரவிந்தி ரன் குருசுவாமி (தலைவர், அ.இ.ச. ஐயப்ப குருசாமிகள் ஒன்றியம்) வாழ்த்துரையும் பழைய மாணவர் சங்கத்தின் பிரதித் தலைவரான சோ. மீனாட்சிசுந்தரம் சிறப்புரை யையும் சு. ரவிந்திரகுமார் நன்றியு ரையையும் நிகழ்த்தவுள்ளனர்.

முன்னாள் அதிபர் மகேசன் அவர் களின் 41வது வருட நினைவு தினத்தை முன்னிட்டு விவேகா னந்தா கல்லூரியில் புலமைப்பரீட் சையில் சித்தியடைந்து மாணவர் களுக்கான கௌரவிப்பு விழாவும் பரிசில் வழங்கலும் நடைபெறவுள் ளது. ஆசிரியர்களையும், மாணவர் களையும், பெற்றோர்களையும், பழைய மாணவர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு விழா ஏற்பாட்டாளர் கள் அழைத்துள்ளனர்.

# கிராமிய கலைகள் ஒன்றிய எஸ். பி. பாலாவின் பாமாலை இசை நிகழ்ச்சி

அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் வரு டாந்தம் நடத்தும் பிரபல பாடகர் எஸ். பி. பாலசுப்பிரம ணியத்தின் பாமாலை என்னும் இசை நிகழ்ச்சி இன்று 2024.09.29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொழும்பு 11, செட்டியார் தெரு, கலயாண மண் டபத்தில் நடைபெறவுள்ளது. பிரபல பாடகர் எஸ். பி. பால சுப்பிரமணியத்தின் நான்காம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இந்நிகழ்ச்சி நடத்தப்படவுள்ளது. இதில் பிரபல பாடகர் எஸ். பி. பாலசுப்பிரமணியம் பாடிய பாடல்களை கெரோக்கியில் பாடக்கூடிய பாடகர்கள் இருந்தால் இந்நி கழ்வில் பாடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் பாட விரும்புகிறவர்கள் என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. இதற்கான அனுசரணையை ரகு கனகநாதன் வழங்குகிறார்.




# CYCLONE MUSICAL SOLUTIONனின் புதிய களம்

CYCLONE MUSICAL SOLUTION மற்றும் கண்ணகி கலாலயம் பெரு மையுடன் இணைந்து வழங்கும். இதோ... உங்களுக்கான ஒரு புதிய களம். உங்களுக்கான அடையாளத் தினை நீங்களே உருவாக்குங்கள்.

5 வருடங்களுக்கு மேல் நீங்கள் சமூக வலைத்தளங்களில் பிரகாசிப் பவர் என்றால்.. உங்களுக்கான அங் கீகாரத்தை கௌரவத்துடன் வழங்கி நாம் உங்களை எங்களில் ஒருவ ராக ஊக்குவிக்க உள்ளோம். உங் களின் எண்ணங்களுக்கான விண் ணப்பங்களை ஆவணங்களுடன் எமது வட்சப் இலக்கமான A.M.J.C. ரோஹான் 0788597577 தொடர்பு கொண்டு அனுப்பி வைப் பதுடன் மேலதிக விடயங் களை அறிந்து கொள்ள வும் முடியும். இதற்காக உங்கள் விண்ணப்பங் களை நவம்பர் 31ம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கலாம். இந்நிகழ் வுக்கான விருது வழங் கல் நிகழ்வன்று இலங் கையின் முன்னணி இசைக்குழுவில் ஒன்றான கருப்பையா பிள்ளை பிரபாகரனின் LEGENDS LIVE MUSICAL BAND, இன் இசையில் RATHNAKALAA MEGA MUSICAL NIGHT எங்களின் முன்னணிக் கலை ஞர்களுடன் உங்களை மகிழ்விக்க காத்திருக்கிறது என A.K.இளங்கோ தெரிவித்துள்ளார்.




# இலங்கை கலையுலகை...

*(06 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

வேறு தொழில்கள் செய்யவும் இல்லை.

தென்னிந்திய வானொலி நேயர்களின் ரசிகர் எ. பி. எஸ். ரவீந்திரன் "சிந்தனை சிப்பி "என்ற விருதினை வழங்கி எனது நூலையும் அவருடைய செலவி லேயே அச்சிட்டு வெளியிட்டார். இலங்கை கலாச்சார அமைச்சு விருது வழங்கி கௌரவித்தது.

***அறிவிப்பாளர் ஒருவர் எவ்வாறு நேயர் உள்ளங்களில் நீண்டிருப்பார்?***

நேயர்களுடன் அவர்களோடு நாம் உரையாடும் முறை ஒன்றுள் ளது. நல்ல தமிழ் கற்க வேண்டு மென்றால், இலங்கை வானொலி கேட்க வேண்டுமென்று எமது தென்னிந்தியர்கள் கூற நான் கேட்டுள்ளேன். இப்போது அறி விப்பாளர்கள் 'சுகமாய் இருக் கின்றீர்களா' என்று கேட்க, நேயர் அழகாக "நான் நலமாய் இருக் கின்றேன்" என்று கூறுகிறார். அதாவது நேயர்கள் நல்ல தமிழ் பேசுகின்றார்கள். எனவே இத்து றைச் சார்ந்தவர்கள் இதனை கவ னிக்க வேண்டும் என்பது எனது ஆசை.

செந்தூரம்



# 10 ரூபாயில் தொடங்கிய பயணம் கோடிகளில் கொடி நாட்டுது

பல கோடிகளில் சம்பளம் வாங்கி, பல கோடி சொத்துக்கு அதிபதியாக இருக்கும் இந்த நடிகை, முதல் படத்திற்கு 10 ரூபாய் மட்டுமே சம்பளமாக பெற்றுள்ளார். இவர் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி, பெங்காலி மற்றும் மராத்தி போன்ற மொழிகளில் நடிக்கும் நடிகையாவார். இவர் தெலுங்கு திரைப்படத்தின் மூலமே திரையுலகிற்கு அறிமுகமானார்.

இவர் 300க்கும் மேற்பட்ட திரைப்படங்ளில் நடித்தவர் ஜெயபிரதா. குறிப்பாக, 197080 கால கட்டங்களில் தமிழ்த்திரையுலகில் சூப்பர் ஹிட் அடித்த நினைத்தாலே இனிக்கும், சலங்கை ஒலி உள்ளிட்ட படங்களில் நடித்து தமிழ் ரசிகர்களின் நெஞ்சிலும் இடம்பெற்றவர். கடைசியாக கமல் நடித்த தசாவதாரம் படத்திலும் ஒரு கேமியோ ரோல் செய்திருந்தார்.

சர்கம், ஊரிக்கி மொனகாடு, கம்சோர், கவி ரத்ன காளிதாசா, சம்சாரம் போன்ற படங்கள் இவர் நடித்த சிறந்த படங்களாக உள்ளன. 300 படங்களுக்கு மேல் நடித்த இவர் தொடக்கத்தில் நடிக்க விரும்பவில்லை என கூறப்படுகிறது. அவர் மருத்துவராக வேண்டும் என்றே விரும்பி உள்ளார். 30 ஆண்டுகளாக, நடிகைகள் ஜெயபிரதா மற்றும் ஸ்ரீதேவிக்கு இடையே கடும் போட்டி நிலவியது. maqsad திரைபடத்தில் ஜெயபிரதா மற்றும் ஸ்ரீதேவி திரையில் ஒன்றாக தோன் றினாலும், வெளியே இருவரும் பேசிக் கொள்வதை தவிர்த்ததாக கூறப்பட்டது. என்னதான் முன்னணி நடிகையாக இவர் வலம் வந்தாலும், அவ்வப்போது சர்ச்சைகளில் சிக்கியுள்ளார்.



**சூர்யா 44 பொங்கலுக்கு ரிலீஸ்! அப்போ, கங்குவா? கதி அவ்ளோ தானா?**

## தங்கலான் படத்தில் முதலில் நடிக்க இருந்த முன்னனி நடிகை யார் தெரியுமா?

நடிகர் சியான் விக்ரம் மற்றும் மாளவிகா மோகனன் நடிப்பில் வெளியாகிய தங்கலான் படம். தற்போது வரையில் நல்ல விமர்சனங்களை பெற்று வருகிறது. கோலார் தங்க சுரங்கம் அருகில் வசிக்கும் பழங்குடியினர் பற்றிய கதையை இயக்குனர் பா.ரஞ்சித் படமாக்கி இருக்கிறார்.





தங்கலான் படத்தில் முதலில் ஹீரோயினாக நடிப்பதற்கு ராஷ்மிகா மந்தனாவை தான் அணுகி இருக்கிறார் பா. ரஞ்சித். ஆனால் அதற்கு பிறகு அவர் நடிக்க முடியாமல் போனதால், மாளவிகா மோகனனை தேர்வு செய்திருக்கிறார் இயக்குனர். ராஷ்மிகா வெளியேறியது ஏன் என கேட்டதற்கு, அவர் டேட் ஒதுக்குவதில் சிக்கல் இருந்தது அதனால் விலகிவிட்டார் இயக்குனர் தெரிவித்துள்ளார்.



## ரசிகரின் கேள்விக்கு மரண பதிலடி கொடுத்த கெனிஷா

ரசிகரின் கேள்விக்கு ரசிகரின் கேள்விக்கு மரண பதிலடி கொடுத்த கெனிஷாமரண பதிலடி கொடுத்த கெனிஷா எந்த பக்கம் திரும்பினாலும் ஜெயம் ரவியின் விவாகரத்து பிரச்சினை தான் பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றும் படி ஜெயம் ரவி கொடுத்த பேட்டி அமைந்துவிட்டது. என்னுடைய விஷயத்தில் யாரையும் இழக்காதீர்கள், கெனிஷா சர்டிபிகேட் சைக்காலஜிஸ்ட், அவருடன் இணைந்து எதிர்காலத்தில் ஹீலிங் சென்டர் அமைக்க நான் திட்டமிட்டு இருக்கிறேன் என்று ஜெயம் ரவி சொல்லி இருக்கிறார்.

ஜெயம் ரவியின் விவாகரத்து பிரச்சனையில் ஆரம்பத்தில் கெனிஷாவின் பெயர் ஒரு சந்தேகமாகத்தான் வந்தது. அடுத்தடுத்து வெளியான நிறைய விஷயங்களின் மூலம் இந்த விஷயம் ஊர்ஜிதம் ஆகிவிட்டதாக பலரும் தற்போது கமெண்ட் செய்து வருகிறார்கள்.

கெனிஷா பிரான்சிஸ் கோவாவில் பப்பில் பாடுபவர். அது மட்டும் இல்லாமல் இவர் ஒரு சைக்காலஜிஸ்ட் என்றும் சொல்லப்படுகிறது. ஜெயம் ரவிக்கு நண்பர்களுடன் அவ்வப்போது கோவாவுக்கு ட்ரிப் போவது வழக்கமாக இருந்திருக்கிறது.

அப்படி ஒரு ட்ரிப்பில் அவர் சந்தித்தவர் தான் கெனிஷா. ஆரம்பத்தில் கெனிஷாவின் குரலுக்கு பரீட்சையமான ஜெயம் ரவிக்கு பின்னர் அவருடன் நெருங்கிய நட்பு ஏற்பட்டதாக சொல்லப்படுகிறது. இணையவாசிகளுக்கு ஏதாவது ஒரு கன்டென்ட் கிடைத்துவிட்டால் போதும், வச்சு செய்து விடுவார்கள்.அப்படித்தான் ஒரு ரசிகர் தன்னுடைய வேலையை காட்டி இருக்கிறார். கெனிஷா போட்ட ஒரு பதிவில் ஜெயம் ரவி உங்களுடன் பாதுகாப்பாக இருக்கிறாரா என கமெண்ட் செய்திருக்கிறார் அந்த ரசிகர். அதற்கு கெனிஷா நீங்கள் உங்கள் அப்பா அம்மாவுடன் பாதுகாப்பாக இருக்கிறீர்களா.

உங்களின் கெட்ட எண்ணத்தில் இருந்து பாதுகாப்பாக இருக்கிறீர்களா. முதலில் நீங்கள் ஒரு பாதுகாப்பான நபரா என பதில் அளித்து இருக்கிறார். ஜெயம் ரவி விஷயத்தில் இதுவரை வாயை திறக்காத கனிஷா இப்படி ஒரு பதிவை போட்டு தற்போது எரிகிற நெருப்பில் எண்ணெயை ஊற்றி இருக்கிறார் என்று தான்.





# வெளிப்படையாக கூறிய நடிகை ஷாலினி பாண்டே

சினிமா திரைத்துறையில் தெலுங்கில் வெளியான 'அர்ஜூன் ரெட்டி' மூலம் அறிமுகமானவர் தான் ஷாலினி பாண்டே. இப்படத்தை தொடர்ந்து தமிழில் 100% காதல் படத்தில் ஜிவி பிரகாஷ் ஜோடியாக நடித்திருந்தார். இந்த படத்திற்கு சரியான வரவேற்பு கிடைக்கவில்லை. அதன் பின் மாதவன் நடித்த 'சைலன்ஸ்' படத்தில் நடித்துள்ளார். தற்போது ஷாலினி பாண்டே ஹிந்தி படங்களில் நடித்து வருகிறார். சமீபத்தில் பேட்டி ஒன்றில் கலந்துகொண்ட ஷாலினி பாண்டே தனது நடந்த கசப்பான அனுபவத்தை தொடர்பாக பேசியுள்ளார்.

அவர், "அர்ஜூன் ரெட்டி படத்தில் நடிக்கும் போது, என்னை நிறைய பேர் பாடிஷேமிங் செய்தார்கள். அந்த சமயத்தில் நான் கொஞ்சம் அதிக எடை கொண்டிருந்தேன். ஃபிட்னஸ் என்பது உடல் ஆரோக்கியத்துடன் தொடர்புடையது, உடல் தோற்றத்துடன் அல்ல". "எனக்கு தென்னிந்திய மொழிகள் தெரியவில்லை என்பதால், ரசிகர்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முயன்றுகொண்டிருந்தேன்.

என் மானேஜர்கள் என்னுடைய அப்பாவித்தனத்தை தவறாகப் பயன்படுத்தி சில திரைப்படங்களில் நடிக்கச் சொல்லி ஏமாற்றினர். அந்த நேரத்தில் எனக்கு ஆதரவாக இருந்தது என்னுடைய குடும்பம் தான்" என்று ஷாலினி பாண்டே கூறியுள்ளார். இந்த விடயம் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது. அத்துமீறிய மேனேஜர்கள்...

# விஜய் விவகாரத்தில் கொதித்தெழுந்த சிம்ரன்

நடிகை சிம்ரனின் இன்ஸ்டாகிராம் பதிவு பலரையும் கலங்கடித்திருக்கிறது. சிம்ரன் பொதுவாக தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருப்பவர். திருமணம் ஆகி, பிள்ளைகள் தோலுக்கு மேல் வளர்ந்த பிறகும் சிம்ரனின் பழைய சினிமா வாழ்க்கையை பற்றி நிறைய செய்திகள் இதுவரை வெளியாகிக் கொண்டுதான் இருக்கின்றன.

ராஜு சுந்தரத்துடன் காதல் உறவில் இருந்தார், கமலஹாசன் சரிகா விவாகரத்திற்கு சிம்ரன் தான் காரணம் என இன்று வரை நிறைய பேர் பேசி இருக்கிறார்கள். இது எதற்குமே சிம்ரன் செவி கொடுத்தது இல்லை, பதிலும் சொன்னது இல்லை.

கிடைத்த வாய்ப்பை சரியாக பயன்படுத்தி தனக்கு எது வருமோ அதை செய்து வருகிறார். அதே போன்று வாய்ப்புகளுக்காக போட்டோ ஷூட் எடுக்கிறேன், பிரபலம் தேடிக் கொள்கிறேன் என சிம்ரன் இதுவரை எதுவுமே செய்தது கிடையாது.

அப்படி இருக்கும் பட்சத்தில் திடீரென நேற்று கொதித்து எழுந்து சிம்ரன் இன்ஸ்டாகிராமில் போட்ட பதிவு எல்லோருக்குமே சற்று ஆச்சரியம் தான். சிம்ரன் இந்த அளவுக்கு கோபப்படும் அளவுக்கு அவரை சீண்டியது யார் என எல்லோருக்குமே கேள்வி எழுந்தது.

அந்த அற்புதமான வேலையை செய்தது வலைப்பேச்சு யூடியூப் சேனல் தான். ஏற்கனவே கடந்த சில வாரங்களாக யோகி பாபுவை கண்டன்ட்டாக பயன்படுத்தி வந்தார்கள். அதை தொடர்ந்து மீண்டும் சினிமா கதை ஆரம்பிக்கிறேன் என்ற பெயரில் சிம்ரனை வம்புக்கு இழுத்து வைத்திருக்கிறார்கள்.

சிம்ரனின் கணவர் தயாரிப்பாளராகி, அந்த படத்தில் சிம்ரன் நடிக்க இருப்பதாக செய்திகள் வெளியானது. இதை தொடர்ந்து வலைப்பேச்சு யூடியூப் சேனலில் சிம்ரன் விஜய் இடம் தான் தயாரிக்கும் படத்திற்கு கால் சீட் கொடுக்கும் படி சொன்னதாகவும், அதற்கு விஜய் இதெல்லாம் உங்களுக்கு செட்டாகாது என எடுத்துரைத்ததாகவும் அந்த சேனலில் பேசி இருக்கிறார்கள்.

அது மட்டுமில்லாமல் உள்ளூர்காரனுக்கு தான் விஷயம் தெரியும், வெளியூர்காரன் தான் தெரியாமல் மாட்டிக் கொள்வது. இவர்களெல்லாம் நடிகைகளாக இருக்கும் பொழுது ஷூ போடுவதற்கு கூட தனியாக ஆள் வைத்திருப்பார்கள்.

ஆனால் இவர்களே தயாரிப்பாளரானால் நிலைமை என்னவாகும் என்பது தெரியாததால் தான் இப்படி எல்லாம் முடிவெடுக்கிறார்கள் என பேசி இருந்தார்கள். இதற்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் தான் சிம்ரன் பதிவிட்டிருக்கிறார்.

அந்த பதிவில் சிம்ரன், நான் இதுவரை அமைதியாக இருந்தேன், இனிமேல் அது முடியாது. நான் எந்த ஒரு பெரிய ஹீரோக்களுடனும் இணைந்து பணியாற்ற விரும்பவில்லை. இதற்கு முன்னால் பணியாற்றி இருக்கிறேன்.

என்னுடைய பெயரை பயன்படுத்தி நான் எந்த இடத்திலும் அட்வான்டேஜ் ஆக நடந்து கொள்ள வேண்டும் என நினைத்தது இல்லை. என்னைப் பற்றிய வதந்திகளுக்கு யாருமே முடிவெடுக்க முன்வரவில்லை. இதனால் நானே அதை செய்கிறேன்.

ஸ்டாப் என்பது ரொம்பவும் பவர்ஃபுல்லான வார்த்தை. அதை நான் இப்போது உபயோகிக்கிறேன் தயவு செய்து என்னை பற்றி யாரும் பேச வேண்டாம் என பதிவிட்டு இருக்கிறார்.





# வலிய வந்து வாய்ப்பு கேட்ட நயன்..

விஜய் சேதுபதியின் ஐம்பதாவது திரைப்படமான 'மகாராஜா' என்ற வெற்றி திரைப்படத்தை இயக்கிய நிதிலன் சுவாமிநாதன் இயக்கும் அடுத்த திரைப்படத்தில் நடிக்க நயன்தாரா வலிய வந்து வாய்ப்பு கேட்டதாகவும் ஆனால் அவரது கோரிக்கை ரிஜெக்ட் செய்யப்பட்டதாகவும் கூறப்படுவது கோலிவுட்டில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

விஜய் சேதுபதி நடித்த 'மகாராஜா' படத்தை இயக்குவதற்கு முன்பே நயன்தாராவை வைத்து ஹீரோயின் சப்ஜெக்ட் படம் ஒன்றை இயக்க நிதிலன் சுவாமிநாதன் திட்டமிட்டார். பிரபல தயாரிப்பு நிறுவனம் இந்த படத்தை தயாரிக்க முன்வந்த போது நயன்தாரா அதிக சம்பளம் கேட்டதாகவும், இயக்குனருக்கு ஏகப்பட்ட நிபந்தனைகளை விதித்ததாகவும் கூறப்பட்டது. இதனை அடுத்து இந்த படம் கைவிடப்பட்டதாகவும் அதன் பிறகு தான் 'மகாராஜா' படம் ஆரம்பிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இந்த நிலையில் தற்போது 'மகாராஜா' திரைப்படம் வெற்றி பெற்றதை அடுத்து நாம் ஏற்கனவே கைவிட்ட படத்தை மீண்டும் தொடரலாம் என்று நிதிலன் சுவாமிநாதனிடம் நயன்தாரா கேட்டதாகவும் ஆனால் அவர் கொடுத்த டார்ச்சரை மனதில் வைத்துக் கொண்டே நிதிலன் சுவாமிநாதன் 'வேண்டாம்' என மறுத்து விட்டதாகவும் ஆனால் அதே நேரத்தில் அந்த ஹீரோயின் சப்ஜெக்ட் படத்தை அவருடைய அடுத்த படமாக இயக்க இருப்பதாகவும் அதில் நயன்தாராவுக்கு பதில் வேறு நாயகி நடிக்க இருப்பதாக கூறப்படுகிறது.

நயன்தாரா நடிக்க வேண்டிய கேரக்டரில் நடிகை அனுஷ்கா ஷெட்டியிடம் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாகவும் விரைவில் நிதிலன் சுவாமிநாதன் இயக்கத்தில் அனுஷ்கா நடிக்கும் ஹீரோயின் சப்ஜெக்ட் படம் தொடங்கும் என்றும் கூறப்பட்டு வருவது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# எல்லை மீறி போறீங்கடா?

## கடுப்பான வைரமுத்து

தமிழ் சினிமா பாடல்களில் தவிர்க்கவே முடியாதவர் வைரமுத்து. இதுவரை 7000க்கும் மேற்பட்ட பாடல்களை எழுதியிருக்கும் அவர் நாவல்களையும், சிறுகதைகளையும் எழுதியிருக்கிறார். கிட்டத்தட்ட 7 தேசிய விருதுகளையும் வென்றிருக்கிறார். இளைய பாடலாசிரியர்களுக்கு போட்டியாக இப்போதும் திகழ்ந்துகொண்டிருக்கிறார் வைரமுத்து.

கவிஞர் வைரமுத்து தமிழ் திரையுலகில் கவிஞர் கண்ணதாசன், வாலிக்கு அடுத்தபடியாக பெரும்பாலான ரசிகர்களால் தமிழ் திரையுலகில் கொண்டாடப்படுகிறார். மண் மணம் மாறாத கவிகளுக்குச் சொந்தக்காரான இவர். இவர் புகழுக்கு மட்டுமல்ல சர்ச்சைக்கும் பெயர் போனவர். மீ டூ புகாரை தொடர்ந்து, அவ்வப்போது சர்ச்சைக்குள் சிக்குவார்.

அப்படி தான் சமீபத்தில் பாடகி சுசித்ரா வைரமுத்து பற்றி பகீர் கிளப்பியிருந்தார். மேலும் தனது பாட்டிக்கு கூட pantene ஷாம்பூ வாங்கி கொடுத்தார் என்று சொல்லி இருந்தார். எப்போதும் தன்னை பற்றிய சர்ச்சைகளை கண்டும் காணாமல் இருக்கும் வைரமுத்து தற்போது சுசித்ரா குற்றச்சாட்டுக்கு ரியாக்ட் செய்யும் விதமாக ட்வீட் போட்டுள்ளார்.

அதில், " வாழ்வியல் தோல்விகளாலும், பலவீனமான இதயத்தாலும், நிறைவேறாத ஆசைகளாலும், மன அழுத்தத்திற்கு உள்ளாகி, அதன் உச்சமாய் மூளைப் பிறழ்வுக்கு ஆளாகும் சிலர் ஒருதலையாய் நேசிக்கப்பட்டவர்கள் மீது வக்கிர வார்த்தைகளை உக்கிரமாய் வீசுவர்; தொடர்பற்ற மொழிகள் பேசுவர்.

பைத்தியம்போல் சிலநேரமும், பைத்தியம் தெளிந்தவர்போல் சிலநேரமும், காட்சியளிப்பர். தம்மைக் கடவுள் என்று கருதிக்கொள்வர். இந்த நோய்க்கு 'Messianic Delusional Disorder' என்று பெயர். அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் அல்லர்; இரக்கத்திற்குரியவர்கள்; அனுதாபத்தால் குணப்படுத்தக் கூடியவர்கள்.

உளவியல் சிகிச்சையும் மருந்து மாத்திரைகளும் உண்டு, உரிய மருத்துவர்களை அணுக வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார். இதற்க்கு நெட்டிசன்கள், "அவர் மனநோயாளியாகவே இருக்கட்டும். நீங்கள் உத்தமர்.. அப்படி தானே?" என்று நக்கல் செய்து வருகின்றனர்.



# குழந்தைகளின் வளர்ச்சியை பாதிக்கும் தொழில்நுட்பங்கள்

இப்போதெல்லாம், தொழில்நுட்பம் குழந்தைகளின் வளர்ப்பில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்களா? ஆம், உண்மையில், தொழில்நுட்பம் இப்போதெல்லாம் எல்லா இடங்களிலும் ஆதிக்கம் செலுத்துகிறது. மேலும் இது குழந்தைகளின் வளர்ச்சியை பாதிக்கிறது.நிபுணர்களின் கூற்றுப்படி, கடந்த 20 ஆண்டுகளில் பெற்றோர்கள் குழந்தைகளை வளர்க்கும் வழிகளில் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இப்போதெல்லாம், பெரும்பாலான பெற்றோர்கள் இந்த ஐந்து தவறுகளை செய்கிறார்கள், இது குழந்தைகளை பாதிக்கிறது. குழந்தை அழும்போது மொபைல் கொடுப்பதுஇப்போதெல்லாம், ஸ்மார்ட்போன் கிட்டத்தட்ட ஒவ்வொரு வீட்டிலும் உள்ளது மற்றும் ஒரு குழந்தையை அமைதிப்படுத்த, இது பெற்றோருக்கு சிறந்த கருவியாகும்.

அவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு மொபைலில் வீடியோக்கள் அல்லது கேம்களை வழங்குகிறார்கள், இது குழந்தையின் கவனத்தை திசை திருப்பி அவர்களை அமைதிப்படுத்துகிறது. ஆனால் உலக சுகாதார நிறுவனத்தின் படி, மொபைலின் நீல ஒளி குழந்தைகளுக்கு (ஆறு மாதங்களுக்கும் குறைவான வயது) ஆபத்தானது மற்றும் அவர்களின் கண்பார்வை சேதப்படுத்தும் என்பது உங்களுக்குத் தெரியுமா? இது தவிர, மூன்று வயதுக்கு குறைவான குழந்தைகளுக்கு, 60 நிமிடங்களுக்கு மேல் (தினசரி) மொபைலைப் பயன்படுத்துவது அவர்களின் மூளையின் பல பகுதிகளை வளர்ச்சியடையாமல் விட்டுவிடுகிறது.

வெளிப்புற விளையாட்டுகளுக்கு பதிலாக டிவிதொலைக் காட்சியும் குழந்தைகளின் ஆரோக்கியத்தை பாதிக்கிறது.

இப்போதெல்லாம் பெரும்பாலான குழந்தைகள் பள்ளியிலிருந்து திரும்பிய பிறகு டிவி பார்ப்பதிலும், கணினி விளையாட்டு விளையாடுவதிலும் மும்முரமாக உள்ளனர்.



இது குழந்தைகளின் நடத்தை மற்றும் உளவியலை மோசமாக பாதிக்கிறது. சிறு குழந்தைகள் உடல் ரீதியாக சுறுசுறுப்பாக இருக்க, சூரிய ஒளியில் இருந்து வைட்டமின் டி கிடைக்க, அவர்களை வெளியே விளையாட அனுமதிக்க வேண்டும்.ஸ்மார்ட்போன் காரணமாக உறவுகளில் தூரம் இப்போதெல்லாம், வேலையில் இருந்து திரும்பிய பிறகு, பெரும்பாலான மக்கள் தங்கள் மொபைல்களில் சமூக தளங்கள், செய்தி பயன்பாடுகள் மற்றும் உலாவல் போன்றவற்றில் பிஸியாக இருக்கிறார்கள். அதே நேரத்தில், குழந்தைகள் இணையம், வீடியோக்கள் போன்றவற்றில் பிஸியாகி விடுகிறார்கள்.

இதன் காரணமாக (டீனேஜ் வரை), பெற்றோருக்கும் குழந்தைகளுக்கும் இடையில் அத்தகைய பிணைப்பு இல்லை. பெற்றோர்கள் ஒவ்வொரு நாளும் 23 மணி நேரம் தங்கள் குழந்தைகளுடன் நேரத்தை செலவிட வேண்டும். குழந்தைகள் தங்கள் அன்றாட வீட்டு வேலைகளிலும் பெற்றோருக்கு உதவ வேண்டும். இப்போதெல்லாம், பெற்றோர்கள் குழந்தைகளுக்கு கல்வி அவசியம் என்று நினைக்கிறார்கள்.

எனவே அவர்களின் முழு கவனமும் நல்ல மதிப்பெண் / படிப்பு ஆகியவற்றில் மட்டுமே கவனம் செலுத்தப்படுகிறது. வீட்டை சுத்தம் செய்தல், துணி துவைத்தல், பாத்திரங்கள் கழுவுதல், சமையல், அத்தியாவசிய பொருட்களை சந்தையில் இருந்து கொண்டு வருதல் போன்ற சிறிய வீட்டு வேலைகளை குழந்தைகளுக்கு கற்பிப்பது கட்டாயமாகும். குடும்பத்தினருடன் தொடர்பில் இருப்பதற்கு இந்த பழக்கங்கள் அத்தியாவசியமாகும் பணத்தின் மதிப்புஇப்போதெல்லாம் மக்களின் "வாங்கும் திறன்" கணிசமாக அதிகரித்துள்ளது (முன்பை விட), இதன் காரணமாக பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு விலையுயர்ந்த வாழ்க்கை முறையை வழங்குகிறார்கள். ஆனால் குழந்தைகள் நீண்ட காலத்திற்கு பணத்தின் மதிப்பைப் புரிந்து கொள்வதில்லை.

இந்தியாவில் இப்போதெல்லாம், நடுத்தர குடும்பங்களின் குழந்தைகளில் "பகட்டாக" காட்டும் போக்கு கணிசமாக அதிகரித்துள்ளது. இதற்கு பெரிய காரணம் என்னவென்றால், பெற்றோர்கள் குழந்தைகளுக்கு பணத்தின் மதிப்பை விளக்கவில்லை.

குழந்தைகளின் சுகபோகங்களை கவனித்துக் கொள்வது அவசியம். ஆனால் அவர்களுக்கு கஷ்டப்படுவதையும் கற்பிக்க வேண்டும். சற்று அசௌகரியம் மற்றும் அதிருப்தி போன்றவற்றையும் அவர்களுக்கு அளிக்க வேண்டும்.

# நெருங்கிய உறவுகளுக்குள் விரிசல் ஏனோ!

**உறவுகளுடன் மனம் விட்டுப் பேசாமை**

என்னதான் பிரச்சினை என்றாலும் ஒருவருக்கு ஒருவர் பேசிக் கொள்ளும் போது பிரச்சினைகள் தீர்ந்துவிடும், அல்லது ஒரு தெளிவு கிடைக்கும்.

பெரிய பிரச்சினையாக இருந்தாலும் கொஞ்சம் அவகாசம் எடுத்து கொஞ்சம் தள்ளிப்போட்டு பிரச்சினையின் சூடு தணிந்தப் பின் மனம் விட்டுப் பேசினால் காட்டாயம் பிரச்சினை தீர்ந்துவிடும். அப்படி பேசுவதற்குத்தான் பலர் இங்கு தயாராக இருப்பதே இல்லை.

முடிந்தளவு சம்பந்தப் பட்டவரிடம் நேரிடையாக பேசுவதே சரி! மனசுக்குள் வைத்து விரோதம் வளர்ப்பதை விட வாய் விட்டு பேசி விடுங்கள்.

எப்படி இருப்பினும் மனம் விட்டு பேசுவதே சிறப்பு. பேச்சு எதிரில் இருக்கும் நபருக்கு பொருத்தமாக, அவர்கள் பேசும் பிரச்சினையை வளர்க்கும் விதமாக இருக்க வேண்டாம்.

**வேண்டாம் மூன்றாம் நபரின் தலையீடு குடும்பங்களில்**

குறிப்பாக கணவன் மனைவி, மருமகள் மாமியார் போன்ற உறவுகளுகிடையில் சின்ன சின்ன பிரச்சினைகளுக்கும்

வேறு நபர்களை இடைத் தரகர்களாக வைப்பது பிழையே! உண்மையில் இந்த இடையில் நின்று பேசும் நபர்களால் சின்னப் பிரச்சினை கூட பெரிதாக வாய்ப்புக்கள் உண்டு.

மூன்றாம் நபர் நன்மையாக நினைத்து செய்யும் செயல் அல்லது பேச்சு நிச்சயமாக உங்கள் உள்ளுணர்வின் வெளிப்பாடாக நீங்கள் சொல்ல நினைக்கும் அன்பின் வெளிப்பாடாக அமையும் வாய்ப்பாக இருக்காது.

எந்த பிரச்சினை வந்தாலும் அதை எந்த காரணத்துக்காகவும் மூன்றாம் நபரிடம் கொண்டு போகாமல் நேரிடையாக பேசுவதே சிறப்பு. சம்பந்தப் பட்ட இருவருமே பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும். சம்பந்தப் பட்ட இருவருமே முகத்திற்கு நேரே கேட்டு விட்டு நகர்வது மன அழுத்தத்தில் இருந்து விடு பட வைக்கும். எனவே மூன்றாவது நபர் ஒருவர் உங்கள் பிரச்சினைக்குள் வந்தாலோ நீங்களாகவே கொண்டு சென்றாலோ நீங்கள் வேறு ஒரு பிரச்சினைக்குள் சிக்க தயாராகி வருகிறீர்கள் என்பதுதான் மறைமுகப் பொருள்.

இனியாவது கவனமாக உங்கள் வீட்டுப் பிரச்சினையைப் பேணுங்கள்.

**வீட்டு வன்முறை அல்லது துன்புறுத்தல்:**

சிலர் பேசிக்கொண்டு இருக்கும் போதே தாக்குவது வீட்டுப் பொருட்களை உடைப்பது, கெட்ட வார்த்தைகள் உபயோகிப்பது என்று இருப்பார்கள். உண்மையிலேயே இதுபோன்று செயற்படுபவர்கள் கோழைகள் என்றே சொல்ல வேண்டும். தங்களால் சொல்ல முடியாத விடயத்தை, முடியாத காரியத்தை அல்லது புரிய வைக்க பொறுமை இல்லா நிலையை அவர்கள் வன்முறையூடாக தீர்த்துக் கொள்கிறார்கள்.



இது போன்ற நபர்கள் பெரும்பாலும் அன்புக்காக ஏங்குபவர்களாகவும் தங்கள் எண்ணங்கள் உடனே மாற்றிக் கொண்டு இறங்கி வர மறுபவர்களாகவும் இருப்பார்கள். கொஞ்சம் எதிர்ப்பு தெரிவிக்காமல் விட்டுப் பிடித்தால் வழிக்கு வந்து விடுவார்கள். அடிப்பது, சண்டை போடுவது மட்டுமல்ல, விட்டு விலகிப்போவதும் ஒருவகையில் துன்புறுத்தல்தான். அப்படியான ஒன்று நிகழும்போது உறவுகளுக்கு இடையில் விரிசல் தொடங்கும் நேரத்திலே இதுபோன்ற விடயங்களை தவிர்க்கப் பார்த்தால் உறவின் நிலை வலுபெறும்.

**பிடிவாதம் வேண்டாம்**

உறவுகளுக்குள் பிரிவு வரும் பின் பிடிவாதம் என்கிற உறவு தொடரும். இது வழமையான ஒன்று.

சண்டை வந்தப்பின் யாரோ ஒருவர் இறங்கி சென்று கதைக்க வேண்டும். இல்லாவிட்டால் யார் இறங்கி வருவது, நான் ஏன் இறங்கிப் போய் கதைக்க வேண்டும்? வந்தால் வரட்டும் இல்லாவிட்டால் போகட்டும்! என்கிற பிடிவாதம் உறவை முறிக்கும் வழிகளுக்குள் ஒன்றாகி விடும்.

பிடிவாதம் தவிர்த்து விட்டுக் கொடுத்தல் உறவை பிரிவின்றி நீடிக்க உதவும்.

**வலைத்தளப் பாவனை தொலைக்காட்சி தொடர்**

இன்று பல உறவுகளுக்கு இடையில் ஏற்படும் பிரச்னைக்கும் விரிசலுக்கும் முக்கிய காரணமாக இருப்பது வலைத்தளங்களின் உலா மற்றும் தொலைக்காட்சி தொடர்கள் என்றால் உண்மையே.

வீடுகளில் சாப்பிடும் போதும் வீட்டாருடன் பேசமறந்து கைபேசியுடனே சாப்பிடும் வேளையிலும் இருப்பது கொடுமை.

உங்கள் உறவுகளுவுடன் பேச நேரம் ஒதுக்குங்கள். அதேபோல் தொலைக்காட்சி நாடங்களில் மூழ்கி வீட்டில் சமைக்காமல் விடுவது அல்லது சமையல் என்கிறப் பெயரில் ஏதோ ஒன்றை சமைத்து வைப்பது போன்றவை உறவுகளுக்கு இடையில் உள்ள நெருக்கத்தை குறைத்து விடும். வீட்டு அங்கத்தினர்கள் வீட்டில் இருக்கும் வேளையில் அனைவரும் ஒன்றாக அமர்ந்து உண்ணுவது, மனம் விட்டு பேசுவது உறவில் விரிசல் ஏற்படுத்துவதை குறைக்கும்.

அருகருகில் இருந்தும் தூரமாய் இன்று உறவுகள் வாழ்கிறார்கள். எனவே புனிதமான உறவுகளை இருக்கும் போதே கொண்டாட வலைத்தளங்களின் பாவனை தொலைக்காட்சி தொடர்கள் என்பவற்றை கொஞ்சம் தள்ளி வைக்க முயலுவோம். உறவினைப் பேணுவோம்.

மேலே குறிப்பிட்டுள்ள சில காரணங்களை தவிர்த்து நடந்துக்கொண்டாலே உறவில் விரிசல் குறைந்து ஆரோக்கியமான குடும்ப சூழல் உருவாகும்.



கவிஞர் நடராஜா தாமரைச் செல்வி...

# குறும்பட தயாரிப்பாளர் பிரபாலினி பிரபாகரனுக்கு கனடாவில் சர்வதேச பட விருது














இலங்கையைச் சேர்ந்த குறும்படத் தயாரிப்பாளர் பிரபாலினி பிரபாகரன் கனடாவில் சர்வதேச பட விருதைப் பெற்றுக் கொண்டார்.

ஐக்கிய அமெரிக்க ஸ்டுடியோ தயாரிப்பில் புஷ்பாஞ்சலி என்ற குறும்படம் கனடாவில் நடந்த டொரண்டோ தமிழ் சர்வதேச பட விருது விழாவில் சிறந்த படத்திற்கான விருதை பெற்றுள்ளது.

புஷ்பாஞ்சலி உடல் உறுப்பு தானத்தை மையப்படுத்தி எடுக்கப்பட்ட குறும்படம் டொரண்டோ தமிழ் பன்னாட்டு திரைப்பட விழாவில் சிறந்த வெளிநாட்டு படமாக தேர்வு பெற்று விருது வழங்கப்பட்டது.

500க்கும் மேற்பட்ட குறும்படங்கள் பங்கேற்ற இந்த போட்டியில் புஷ்பாஞ்சலி திரைப்படம் வெற்றி பெற்றது. இந்த திரைப்படம் உடல் உறுப்பு தானம் பற்றி விழிப்புணர்வு படம் என்பதால் சிறந்த படமாக விருது பெற்றுள்ளது.

இந்த படத்தை அமெரிக்கா வாழ் இலங்கை தமிழ் பிரபாலினி பிரபாகரன் தயாரித்து உள்ளார். இவர் இலங்கையின் முதல் பெண் இசையமைப்பாளர் என்பது குறிப்பிடத்தக்கது

பிரபல பெண் ஒளிப்பதிவாளர் வைஷாலி, கதை வசனம், எழுதி இயக்கியுள்ளார். வைஷாலி பிரபல ஒளிப்பதிவாளர், ஆர்.டி ராஜசேகர் அவரிடம் உதவியாளராக பணியாற்றி தற்போது படங்களுக்கு ஒளிப்பதிவு செய்து கொண்டிருக்கிறார். இந்த குறும்படத்தின் மூலம் இயக்குனராக வெற்றி பெற்றுள்ளார். இந்த படத்திற்கு திரைக்கதை மீனா குமாரி எழுதி உள்ளார். இவர் இயக்குனர் மிஷ்கினிடம் உதவியாளராக பணியாற்றியவர். இந்தப் படத்தில் இசையமைப்பாளர் ஏ.ஜெ. அலிமிர்ஸக் விஜய் டி.வி புகழ் நடிக்கும் போ ஸ்க்னல் என்ற படத்தின் இசை இயக்குனர் அருமையான இசையுடன் தேவாரம் பாடலையும் கம்போஸ் செய்துள்ளார். அந்தப் பாடலை ஜீ தமிழ் ஸரிகமப புகழ் அஷானி பாடியுள்ளார்.

ஒளிப்பதிவு ஹரிஹரன் ராமன், கலை மதன், உடையலங்காரம் பிரியங்கா ,ஒப்பனை கலை அருள் தேவி, எடிட்டிங் பாண்டி துறை, டப்பிங் யோஹ் பால் (சசிகலா ஸ்டுடியோ), மிக்சிங் கிருஷ்ண மூர்த்தி (சசிகால ஸ்டுடியோ, டொக்டர் நந்தா (வர்ண ஸ்டுடியோ), சவுண்டு எபெக்டஸ் ரவிச்சந்திரன், இணை இயக்குனர்கள் செல்வா பாண்டி, குரு கௌதம்.

இந்தப் படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் திரைப்பட நடிகை எதிர் நீச்சல் சீரியல் புகழ் (ஜானசிராணி) காயத்ரி கிருஷ்ணன் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க ஏழ்மையான குடும்ப பின்னணியில் எடுக்கப்பட்ட மனதை தொடும் சிறந்த படமாகும்.

அவருக்கு மகனாக சந்தீப் என்ற புதுமுகம் நடித்துள்ளார். மகளாக சிறுமி வந்தனா நடித்துள்ளார். கான்ஸ்டபிள் ஆக தமிழ் சுரேஷ் என்பவரும் இன்ஸ்பெக்டராக சாலமன் மற்றுமொரு கான்ஸ்டபிளாக சங்கர் கலெக்டராக சாய் பாரதி மற்றும் பலர் நடித்துள்ளனர்.

இந்த விருதினை இக்குறும்படத்தின் தயாரிப்பாளர் திருமதி பிரபாலினி பிரபாகரன் பெற்றுக் கொண்டார். இவர் யாழ்ப்பாண உள்ளூர் பாடகர் திருமலை எம்.பி பரமேஸ் மகள். அமெரிக்காவில் புலம்பெயர்ந்து வாழ்பவர். இவர், அண்மையில் வெள்ளவத்தையில் தனது தந்தையின் உள்ளூர் பாடல்கள் படக் காட்சிகள் தயாரித்து வெளியிட்டு இருந்தது குறிப்பிடத் தக்கது.

தமிழ்நாட்டின் உடல் உறுப்பு தான தினத்தில் இவ்விருதினை பெறுவதில் பெருமை கொள்வதாகத் தயாரிப்பாளர் தெரிவித்தார்.

உடல் உறுப்பு தானம் செய்தால் அரச மரியாதையுடன் உடல் அடக்கம் செய்யப்படும் என்ற மாநில அரசின் அறிவிப்பை பெருமைப் படுத்தும் விதமாக இந்த குறும் படம் தயாரிக்கப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டு 23 ஆம் திகதி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உடல் உறுப்பு தானம் செய்பவர்களின் இறுதி சடங்கில் அரச மரியாதை செய்யப்படும் என உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடதக்கது. அதன் பிறகே உடல் உறுப்பு தானம் செய்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# 11 வயது கிளிநொச்சி மாணவனின் சாதனைப் பயணம்

11 வயது கிளிநொச்சி மாணவனின் சாதனைப் பயணம் 25.09.2024 அன்று ஆரம்பமானது. கிளிநொச்சி கோணாவில் பகுதியைச் சேர்ந்த முரளிதரன் டியோஜன் எனும் 11 வயது மாணவன் இலங்கையைச் சுற்றி முழுமையாக நடை பயணம் ஒன்றினை 25ம் திகதி ஆரம்பித்தார்.

புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி சித்தியடையாத நிலையில், சிறுவயதில் ஏதாவது ஒரு சாதனையை நிலைநாட்ட வேண்டும் எனும் நோக்கில் குறித்த பயணம்





அன்று ஆரம்பித்ததாக அவரது தந்தை குறிப்பிடுகிறார். 25092024 புதன் அன்று காலை 8.30 மணியளவில் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக சமய நிகழ்வுகளுடன் ஆரம்பித்த பயணம் முல்லைத்தீவு நோக்கி ஆரம்பமானது.

குறித்த பயணத்தை குடும்ப உறுப்பினர்களும், சமயத்தலைவர்களும், பிரதேச மக்களுமாக இணைந்து ஆரம்பித்து வைத்தனர். குறித்த சிறுவனுடன் அவரது தந்தையும் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ் நகரில் நடைபெற்ற இலக்கிய மாலை பல்துறை ஆளுமைமிக்கவர் வி.ரி. இளங்கோவன்











பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்தாலும் தாயகத்தை மறவாத படைப்பாளி இளங்கோவன். இங்குவரும் போதெல்லாம் தனது நூல்களை வெளியிட்டுப் பாராட்டுப் பெறுகிறார். அவரது மூத்த சகோதரர்கள் புகழ் பெற்ற படைப்பாளிகள். அவர்கள் வழியில் இளங்கோவன் இலக்கியம், மருத்துவம், ஊடகத்துறை என பன்முக ஆளுமை மிக்கவராக விளங்குகிறார். புகழ்பெற்ற படைப்பாளி கே. டானியலோடு மக்கள் இலக்கிய பெருமன்றச் செயற்பாடுகளில் ஈடுபட்டவர். டானியலின் இறுதி மூச்சுவரை உடன் நின்று தோழமையைப் பெருமைப்படுத்தியவர் இளங்கோவன்.

இவ்வாறு யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற இலக்கிய மாலை| நிகழ்வுக்கு தலைமை வகித்து உரையாற்றிய வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ் குறிப்பிட்டார்.

பிரான்ஸ் நாட்டில் வாழும் மூத்த படைப்பாளி வி. ரி. இளங்கோவனின் இரு நூல்கள் இந்நிகழ்வில் வெளியிடப்பட்டன. இளங்கோவனின் படைப்புக்கள்| (874 பக்கங்கள்) என்ற பாரிய தொகுப்பு நூலும், ஈழத்து இலக்கியச் சிற்பிகள்| என்ற நூலும் வெளியிடப்பட்டன.

இளங்கோவன் படைப்புகள்| என்ற தொகுப்பில் சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், தமிழர் மருத்துவம் நோய் நீக்கும் மூலிகைகள், நேர்காணல்கள், முன்னுரைகள் உட்பட பல விடயங்கள் தொகுக்கப்பட்டன.

நூலிலுள்ள சிறுகதைகள் குறித்து உரையாற்;றிய யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் த. அஜந்தகுமார், ஷஷஎண்பதுகளின் பிற்பகுதியில் யாழ் மருத்துவமனை யுத்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டதைக் கதையில் யதார்த்தபூர்வமாகச் சித்தரித்திருப்பது மனதைக் கலங்கடிக்கிறது. கதைகளில் யுத்த கால அவல நிலைகளையும், புலம் பெயர்ந்த நாட்டில் எம்மவர் சிலரின் நெறி கெட்ட வாழ்வையும் சுட்டிக் காட்டி மனக்கொதிப்பை வெளிக்காட்டுகிறார். அவரது மன இயல்பை அவரின் படைப்புகளில் காணக்கூடியதாக உள்ளது என்றார்.

தொகுப்பிலுள்ள கவிதைகள் சமூகம் சார்ந்த கவிதைகளாக, தீண்டாமைக் கொடுமைகளைச் சாடுகின்றவையாக, எழுச்சியூட்டுவனவாக உள்ளன எனக் கலாநிதி எஸ். குணேஸ்வரன் குறிப்பிட்டார்.

தமிழர் மருத்துவத்தின் சிறப்புகள், யுத்த காலத்தில் மக்களைக் காப்பதற்கான அறிவுரைகள், மூலிகைகளின் பயன்பாடுகள் குறித்த இளங்கோவனின் பயனுள்ள ஆய்வுகள், பிலிப்பைன்ஸ் நாட்டில் ஐ. நா. தொண்டராகப் பணிபுரிந்து இளங்கோவன் பெற்ற விருதுகள், சிறப்புகள் யாவும் எம்மால் பாராட்டத்தக்கன|| என்றார் மருத்துவர் உடுவில் அரவிந்தன்.

ஈழத்து இலக்கியச் சிற்பிகள் பலருடனும் இளம் வயதிலேயே பழகும் வாழ்ப்பு இளங்கோவனுக்குக் கிடைத்திருக்கிறது. அவரது குடும்ப சூழ்நிலை அவருக்கு அத்தகைய வாய்ப்பை அளித்துள்ளது. நாம் மறந்துவிட்ட, தெரிந்து கொள்ளாத சிறந்த படைப்பாளிகளைச், சாதனையாளர்களை அவர் நமக்கு இனங்காட்டியுள்ளார் எனக் கலாசார உத்தியோகத்தர், இலக்கியச் செயற்பாட்டாளர் சபா தனுஜன் குறிப்பிட்டார்.

ஆசிரியர் மயூரன், ஷஈழத்து இலக்கிய சிற்பிகள்| நூலின் சிறப்புகள் குறித்து வியந்து பாராட்டிப் பேசினார். முனைவர் மனோன்மணி சண்முகதாஸ், வட இலங்கை சர்வோதய அறங்காவலர் பொன். ஜமுனா தேவி, கொழும்பு மாநகரசபை முன்னாள் உறுப்பினர் எஸ். பாஸ்கரா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். ஏற்புரையை நூலாசிரியர் வி. ரி. இளங்கோவன் நிகழ்த்தினார். நிகழ்வுகளை மாதவி உமாசுதசர்மா தொகுத்து வழங்கினார். இளங்கோவன் படைப்புகள்| தொகுப்பு நூலைக் கொழும்பு ஞானம்| பதிப்பகமும், ஈழத்து இலக்கியச் சிற்பிகள்| நூலைக் கே. டானியல் பதிப்பகமும் பதிப்பித்து வெளியிட்டுள்ளனர். முன்னோடிகள் இலக்கியவட்டம் (பாரிஸ் கொழும்பு) கே. டானியல் பதிப்பகம் ஆகியன இணைந்து இலக்கிய மாலை| நிகழ்வை நடாத்தியமை குறிப்பிடத்தக்கது.

## அவுஸ்திரேலியா சிட்னியில் சர்வதேச சிலப்பதிகார மாநாடு–2024

அவுஸ்திரேலியா தலைநகரான சிட்னியில் 2024 நவம்பர் 30,டிசம்பர் 1 ஆகிய இரு நாட்கள் மூன்றாவது சர்வதேச சிலப்பதிகார மாநாடு நடைபெறவுள்ளது. இம்மாநாட்டை சிட்னி கலை இலக்கிய மன்றத்தின் தலைவர் டாக்டர் இரத்தின மகேந்திரன் தலைமையேற்று நடத்தவுள்ளார்.

இதில் உலக அளவில் தமிழறிஞர்களும் பேராசிரியர்களும் ஆய்வாளர்களும் பங்கேற்கின்றனர்.

மாநாட்டின் ஒருங்கிணைப்பாளர்களான முனைவர் மோ. பாட்டழகன், முனைவர் மா. பத்மபிரியா மாநாட்டு க்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றனர். மாநாட்டில் பங்கேற்க விரும்புகிறவர்கள்+91 9380417307., +91 9486862263 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.



## காவியங்களை ஓவியமாக... (05 ஆம் பக்க தொடர்ச்சி)

என்பதைக் கண்டறிந்தே அவற்றை கொள்வனவு செய்துவரும் இவருக்கு, அச்செலவுகளை ஈடுசெய்யும் வகையில் ஓவியங்களை உள்நாட்டில் விற்பனை செய்வது பாரிய சவாலாகவே உள்ளது.

எதிர்காலத்தில் மன்னார் மாவட்டத்தில் ஆர்ட் கேலரி *(Art Gallery)* ஒன்றினை ஆரம்பித்து, அதில் ஓவியங்களை காட்சிப்படுத்தி அதனூடாக மன்னார் மாவட்டத்தில் உள்ள பலருக்கு இத்துறை சார்ந்த அறிவினை வழங்க வேண்டும் என்பதும், ஓவியம் வரைவதற்கு தேவைப்படுகின்ற உபகரணங்களுக்கு நிலவும் பற்றாக்குறையை நீக்கி உபகரணங்களை குறைந்த விலையில் இலகுவில் அனைவரும் பெற்றுக் கொள்ள வாய்ப்புக்களை ஏற்படுத்த முனைவதும், தொழில்நுட்பத்தின் பலனாக வரைதல் கலையின் தோன்றியுள்ள பல்பரிணாம பக்கங்களை கற்றுக் கொண்டு அதிலும் நன்கு தேர்ச்சி அடைய வேண்டுமென்பதே இந்த இளம் ஓவியரது எதிர்பார்ப்பு.

# சமூகத்தின் மீது அக்கறை கொண்டவர்களே இலக்கியவாதிகளாக பிரகாசிக்கின்றார்கள்

## அம்பலவாணர் சிவபாலசுந்தரனின் நூல் வெளியீட்டு விழாவில் ஒன்றாரியோ எம்பி லோகன் கணபதி



"தாம் வாழும் சமூகத்தின் மீது அக்கறை கொண்டவர்களே இலக்கியவாதிகளாக பிரகாசிக்கின்றார்கள். அத்துடன் அவர்கள் சமூகத்தின் அங்கமாக விளங்கும் மாந்தர், அரசு மற்றும் அமைப்புக்கள் ஆகியவற்றை நாடி பிடித்துப் பார்த்து தமது அவதானிப்பை கவிதை போன்ற இலக்கிய வடிவங்களின் மூலம் வெளிக்கொண்டுவந்து பிரச்சினைகளுக்கான தீர்வையும் தேடுகின்றவர்களாக விளங்குகின்றார்கள். இந்த வகையில் இலக்கியவாதிகள் கூட ஒரு சமூக வைத்தியர்கள் என்ற முடிவிற்கு நாம் வரலாம்





இவ்வாறு கனடா மார்க்கம் நகரில் உள்ள அரச சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்ற யாழ்ப்பாணம் முன்னாள் அரசாங்க அதிபரும் கவிஞர் 'ஆரணி' என்னும் புனைபெயரைக் கொண்டவருமான அம்பலவாணர் சிவபாலசுந்தரனின் 'நினைவிடைத் தோய்தல்' கவிதைத் தொகுதி வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி புகழாரம் சூட்டினார்.

பேராசிரியர் இ. பாலசுந்தரத்தின் தலைமையில் நடைபெற்ற இக் கவிதைத் தொகுதி வெளியீட்டு விழாவில் கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களில் ஒருவருமான ஆர். என் லோகேந்திரலிங்கம் வரவேற்புரையையும் அறிமுக உரையையும், கவிஞர் அகணி சுரேஸ் வெளியீட்டு உரையையும் முனைவர் வாசுகி நகுலராஜா ஆய்வுரையையும் டாக்டர் போல் ஜோசப் நயப்புரையையும் ஆற்றினார்கள். திருவாளர்கள் கிருஸ்ணபிள்ளை திருவருள் சிவன் இளங்கோ. க. ரவீந்திரநாதன். சி இளஞ்செழியன். குருசாமி சுப்பிரமணியம், தென்புலோலியூர் கிருஸ்ணலிங்கம் ஆகியோர் வாழ்த்துரைகள் வழங்கினார்கள்.

விழா நிகழ்ச்சிகளை திருமதி ஜோதி ஜெயக்குமார் சிறப்பாக தொகுத்து வழங்கினார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி தனது உரையில் பின்வருமாறு தெரிவித்தார்.

கலை இலக்கியவாதிகளின் பங்களிப்புக்கள் தற்காலத்தில் மிக அவசியமாகத் தேவைப்படுகின்றன. மனிதனின் அவலங்களையும் தேவைகளையும் அவற்றிக்கான தீர்வையும் தீர்க்க தரிசனத்துடன் படைக்க வேண்டிய பொறுப்பு எம் மத்தியில் வாழும் படைப்பாளிக்களுக்கும் கவிஞர்களுக்கும் உள்ளது. எமது கவிஞர் ஆரணி தான் வாழும் சமூகத்தினதும் இனத்தினதும் அவலங்களை நல்ல கலையம்சங்களோடு கவிதைகளாக வடித்து அங்கிருந்து நூல்களை இங்கு கொண்டுவந்துள்ளார். அவருக்கு நாம் ஆதரவையும் ஊக்குவிப்பையும் வழங்க வேண்டும்" என்றார்.

**மனிதனின் அவலங்களையும் தேவைகளையும் அவற்றிக்கான தீர்வையும் தீர்க்க தரிசனத்துடன் படைக்க வேண்டிய பொறுப்பு எம் மத்தியில் வாழும் படைப்பாளிக்களுக்கும் கவிஞர்களுக்கும் உள்ளது.**

அங்கு தலைமையுரையாற்றிய பேராசிரியர் இ. பாலசுந்தரம் தனது உரையில் " எம் மத்தியில் வெளிவருகின்ற இலக்கியப் படைப்புக்களை நாம் தற்காலத்தில் மூன்று தளங்களில் வைத்து பார்க்க வேண்டும். தாயகம் தமிழகம் மற்றும் புலம் பெயர் தேசம் ஆகிய மூன்றுதளங்களில் எமது படைப்புக்கள் பார்வைக்கும் விமர்சனத்திற்குமாக காட்சிப்படுத்தப்பட வேண்டும். அந்த வகையில் எமது இன்றைய நூலாசிரியர் கவிஞர் ஆரணி தனது கவிதை நூலை இலங்கையில் வெளியிட்டு வைத்து விட்டு தற்போது நாம் வாழுகின்ற புலம் பெயர் தேசமான கனடாவிற்குக் கொண்டு வந்துள்ளார். அவர் ஒரு சரியான இடத்திற்கே கொண்டு வந்துள்ளார் என்றே நாம் கருதுகின்றேன். காரணம் கனடாவில் நாம் பல இலக்கிய அமைப்புக்களை நடத்தி வருகின்றோம். இங்கு நூற்றுக்கு மேற்பட்ட கவிஞர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். கனடாவில் உள்ள கவிஞர்கள் மற்றும் கவிதைச் சுவைஞர்கள் மத்தியில் இந்த நூல்வெளியிடப்படுகின்றது பெருமைக்குரியதும் உயர்ந்த அங்கீகாரத்தைப் பெறக்கூடியதுமாகிய ஒரு விடயமாகும். எனவே நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து கவிதை நூலின் ஆக்ககர்த்தா அம்பலவாணர் சிவபாலசுந்தரனை பாராட்டுவோம் கொண்டாடுவோம்" என்றார்

இவ்வெளியீட்டு விழாவில் சுருவில் சரவணை மற்றும் தீவகம் ஆகிய இடங்களைச் சேர்ந்த நண்பர்கள் உறவினர்கள் மற்றும் இலக்கியவாதிகள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து சிறப்பித்தார்கள்.அவர்கள் அனைவரும் நூலின் பிரதிகளை அன்பளிப்புக்களை வழங்கி நூலாசிரியரிடமிருந்து பெற்றுச் சென்றார்கள்.

இறுதியில் பதிலுரையாற்றிய நூலாசிரியர் மிகுந்த உற்சாகத்துடன் உரையாற்றினார். தனது எழுத்துக்களுக்கும் கருத்துக்களுக்கு மதிப்பளித்து இந்த விழாவை ஏற்பாடு செய்த விழாக்குழுவினருக்கும் நன்றி தெரிவித்து தனது படைப்புக்கள் பற்றிய திறந்த விமர்சனங்களை வழங்கிய அனைத்து உரையாளர்களுக்கும் நன்றி தெரிவித்தார். சுருவில் மற்றும் சரவணை மக்கள் ஒன்றியங்கள் சார்பில் பாராட்டுக் கேடயங்கள் கவிஞர் ஆரணிக்கு வழங்கப்பெற்றன.

**சத்தியன்**



# கிட்டத்தட்ட சிறுவர்களைத் தின்ற போர்



சிறுவர்களைக் கடந்த நூற்றாண்டிலும், இந்தநூற்றாண்டிலும் பலி கொண்ட போர் குறித்த கவிதைகள் உலகின் பல மொழிகளில் வரலாற்றாவணமாக உள்ளன.

அவை கொற்றவைக்கும் வலியும் வலியுள்ள உறைந்த வாழ்வுமாக தொலைந்து போன கோடானகோடிச் சிறுவர்களை வரலாறு நெடுகிலும் காணுகிறோம்.

சிறுவர்கள் போர்ப் பூமியில் கவிதையாகின்றமையை பலஸ்தீனக் கவிதைகளும் பேசுகின்றன.

ஹான் மிக்காயில் அஷ்றாவியின் கவிதை எம்.ஏ.நுஃமான் மொழிபெயர்ப்பில் பலஸ்தீனக் கவிதைகள்திரட்டிலிருக்கிறது.

ஒரு துயரச் சம்பவத்தின் சிறுமியொருத்தியின் வாக்குமூலமாகி அல்லது மனப்பதிவாகி வருகிற கவிதை தொற்ற வைக்கும் துயர்க் கவிவு மிக அதிகம். 1988 இல் இஸ்ரேல் ராணுவத்தின் ரப்பர் குண்டால் ஒற்றைக்கண்ணை இழந்தறஷா ஹெவ்சிய்யே என்கிற நான்கு வயதுச் சிறுமி.

இந்தக் கவிதையை ஒரு பத்தியாகவும் வாசித்து விடலாம். இதுதான் கவிதை. கிட்டத்தட்ட நான்கு வயதுச் சிறுமி ஒருத்தியின் நாட்குறிப்பில் இருந்து

நாளை கட்டை அவிழ்ப்பார்கள் எனக்கு யோசனையாக இருக்கிறது எஞ்சியிருக்கும் என் ஒற்றைக் கண்ணால் ஆப்பிள் பழத்தின் ஒரு பாதியை மட்டும்

தோடம்பழத்தின் ஒருபாதியை மட்டும் என் தாயின் பாதி முகத்தை மட்டும் என்னால் பார்க்க முடியுமா?

துப்பாக்கிக் குண்டை நான் பார்க்கவில்லை என் தலைக்கு வெடித்த அதன் வலியை மட்டுமே உணர்ந்தேன் பெரிய துப்பாக்கியுடன் நடுங்கும் கைகளுடன் கண்களில் ஒரு வெறித்த பார்வையுடன் அந்த ராணுவ வீரன் என் மனதில் அழியாதிருக்கிறான் அதைத்தான் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை

என் மூடிய கண்களால் இவ்வளவு தெளிவாக அவனைப் பார்க்க முடியுமென்றால் எங்கள் தலைகளுக்குள்ளே நாம் இழக்கும் கண்களை ஈடுசெய்ய இன்னும் ஒரு சோடிக் கண்கள் உள்ளன போலும்

அடுத்த மாதம் என் பிறந்த நாளுக்கு முற்றிலும் புதியதோர் கண்ணாடிக் கண் எனக்குக் கிடைக்கும் சிலவேளை பொருட்கள் நடுவில் தடித்தும் வட்டமாயும் தெரியக்கூடும் நான் விளையாடும் கண்ணாடிக் குண்டுகள் ஊடே உற்றுப் பார்த்திருக்கிறேன்

அவை உலகத்தை வினோதமாய்க் காட்டும் நான் கேள்விப்பட்டேன் ஒன்பது மாதக் குழந்தை ஒன்றும் ஒற்றைக் கண்ணை இழந்ததாக

என்னைச் சுட்ட ராணுவ வீரன் தான் தன்னை மற்றும் பார்க்கும் சின்னஞ் சிறுமிகளைத் தேடும் ஒரு ராணுவ வீரன் தான் அவளையும் சுட்டானோ என்று எனக்கும் யோசனையாக இருக்கிறது

நானோ வளர்ந்தவள் கிட்டத்தட்ட நாலு வயது போதிய அளவு நான் வாழ்க்கையைப் பார்த்துள்ளேன் ஆனால் அவளோ சின்னக் குழந்தை எதுவும் அறியாச் சின்னக் குழந்தை

**மழுவால்**

**முல்லை முஸ்ரிபா**

# சிறுவர் உலகம் விந்தையானது! அது உணர்வுகளின் கூடு



கூடு சிதையாதவாறு சிறுவர்களின் சிறகுகளை விரித்தல்; பறப்பு வெளியை எளிமைப்படுத்தல்; எண்ணங்களை வரைதலென சிறுவர் இலக்கிய உலகு அழகானது.

சிறுவர்களைச் சிறுவர்களும் பெரியவர்களும் வாசிப்புச் செய்வதூடாக சிறுவரை எழுத்தில் நிறுவுதல் சாத்தியமாகிறது.

சிறுவர் இலக்கிய வகைமை தமிழிலும் ஏனைய மொழி வழியிலும் இன்று மேலோங்கியிருக்கிறது. வாழ்வின் ஒரு கூறாகிய சிறுவருலகு இலக்கியத்தின் ஒருகூறாகக் கட்டமைவது முக்கியமானது தான்.

தமிழில் சங்க காலத்திலேயே சிறுவர்களை மையப்படுத்திய இலக்கியங்கள் தோன்றி விட்டன.

குறிப்பாக சிற்றிலக்கிய வகையான 'பிள்ளைத்தமிழ்' சிறுவர் இலக்கிய மையங் கொண்டது.

பாட்டுடைத்தலைவனின் அல்லது பாட்டுடைத்தலைவியின் வாழ்த்தை பிள்ளைப்பருவ செயற்பாடுகளோடு இணைத்துப் பாடப்படும் முறைமை சிறுவரிலக்கியத்தின் தொன்ம ஒழுங்கெனலாம்.

மற்றும் நாட்டுப்புறவியலில் தாலாட்டு,விளையாட்டு வகைகள் சிறுவரிலக்கியத்தின் பெறுமானங்களாகவுள்ளன.

நவீன இலக்கிய படைப்பு வெளியில் சிறுவரைப் பாடுபொருளாக அல்லது கருப்பொருளாகக் கொண்ட படைப்புகளைக் காணுகிறோம்.

இத்தகைய இலக்கிய வெளி சிறுவர் வாழ்வு வெளியின் பதிவு எனலாம்.

சிறுவரை வாசிப்பதனூடாகவும் எழுதுவதனூடாகவும் அவர்களது உலகு குறித்த சிந்தனை விரிவுறுவதோடு இலக்கிய வரலாற்று ஆவணமாகவும் சிறுவருலகு மிளிர்கிறது.

# ரூமியின் வைரங்கள்



மறவாதே!
புனித தளத்தின் வாசல்
உன்னுள்தான் உள்ளது
அரை மூச்சின் அளவே
சுருக்கமான இவ்வாற்றின்
காதலரைத் தவிர
வேறெதையும்
விதைக்காதே!
சுடரேற்றுப் படுவதற்குக்
காத்திருக்கிறது
உன்னுள்
மெழுகுவர்த்தி ஒன்று
நிரப்பப்படுவதற்கு
ஆயத்தமாய்
உன் ஆன்மாவில்
உள்ளதொரு வெறுமை
இதை நீ
உணர்கிறாய் இல்லையா?
ஒவ்வொரு தேய்ப்பிற்கும்
எரிச்சல் அடைகிறாய்
எனில் எப்படி
மெருகேறுவாய் நீ?
உண்மையின் பூ
முகை அவிழ்கிறது
முகத்தில்
ஒரு போதும்
நம்பிக்கை இழக்காதே
என்னருமை இதயமே!
உன் பார்வைக்கு
அப்பால் மறைந்துள்ளன
அதிசயங்கள் ஆயிரம்!
உன் முன்னே
விரிகின்ற
கதைகளைக் கொண்டு
களித்திருக்காதே
உனது தொன்மத்தின்
உட்பொருளைத் திற
எண்ணங்களைக்
கடந்து பார்
இக்கணத்தின்
இன்பத்தேன் அருந்துவாய் நீ
உன் ஒளியில் கற்கிறேன்
காதலிக்கும் கலை
உன் அழகில் கற்கிறேன்
கவிதைகள் எழுத
யாருமே உன்னைப்
பார்க்காத என் நெஞ்சினுள்
ஆடுகிறாய் நீ
சில நேரம் பார்க்கிறேன் நான்
அந்தப் பார்வைதான்
இந்தக் கவிதை ஆகிறது
இவ்வளவு மனத்துயர் ஏன்?
இவ்வளவு வேதனை ஏன்?
எக்கச்சக்க
எண்ணங்களில்
சிக்காயுள்ளார்கள்
எல்லோரும்

**வைரங்கள் சுடரும்**

# செல்லம்மாள் பாரதியார் உரை: ஊருக்குப் பெருமை என் வாழ்வு



விநோதங்கள் என் வாழ்க்கையில் அதிகம்.

உலகத்தோடு ஒட்டி வாழ் வகை அறியாத கணவருடன் அமர வாழ்வு வாழ்ந்தேன் என்றால் உங்களுக்குச் சிரிப்பாகத்தான் இருக்கும்.

யாருக்கு மனைவியாக வாழ்ந்தாலும் வாய்க்கால். ஆனால் கவிஞன் மனைவியய் இருப்பது கஸ்டம்.கவிஞர்கள் போக்கே தனி.உண்பதிலும் உறங்குவதிலும் கூட சாதாரண மனிதரைப் போல் அவர்கள் இருப்பதில்லை.

என்பதாக திருமதி செல்லம்மாள் பாரதியார் 1951 இல் திருச்சி வானொலியில் பேசினார் தலைப்பு "என் கணவர்".

வையகத்தார் கொண்டாட வாழ வேண்டும் என்ற என் கனவு ஓரளவு பலித்ததென்னவோ உண்மைதான்.என்று மகிழ்கிறார் செல்லம்மாள்.

இன்று என் கணவரின் புகழ் விண் முட்டிச் செல்கிறது.

இன்று மகாகவியின் மனைவியாக போற்றப்படும் நான்,அன்று பைத்தியக்காரன் மனைவியென்று பலராலும் ஏசப்பட்டேன் என "என் கணவன்"குறித்து அவர் உரையமைகிறது.

கற்பனைச்சிறகு விரித்துக் கவிதை வானில் வட்டமிடும் பறவை ,பூலோகத்திலே இருண்ட வீட்டிலே மனைவிக்கும் மற்றவருக்கும் சம்பாத்தியம் செய்து போட்டு சாதாரண வாழ்க்கை வாழ முடியுமா?

வறுமை கவிஞனின் தனி உடைமை என்கிற இவரது கூற்று பாரதியுடனான வலிமிகுந்த ஆனால் உறுதியான வாழ்வின் கணங்களை ஞாபகமீட்டுகிறது

கவிஞனுக்கு இந்த மண்ணுலகில் இன்பம் அளிப்பது கவிதை; ஆனால் வயிற்றுக்கு ணவு தேடி வாழும் வகையை அவன் மனைவிதான் கண்டு பிடிக்க வேண்டிவருகிறது.

இப்படிக்கூறுகிற கவிஞனின் மனைவி செல்லம்மாவின் கனத்த வாழ்வு எல்லோருக்குமாகிறது.

கவிஞன் விசித்திரமான தன்மை நிறைந்தவன் ;அவனுக்கு எதுவும் பெரிதில்லை.

சுகமாக வாழ்வதற்கு சொர்க்கலோகம் சென்றால் த்யானம் முடியும் என்ற நிலை கவிஞன் மனைவிக்கு ஏற்பட்டு விடுகிறது.

அந்த நாளிலிருந்து சத்தி முத்தப் புலவரின் மனைவியிடமிருந்து இன்று என்வரை சுகவாழ்வு ஒரே விதமாகத்தான் அமைந்திருக்கிறது.

என்பதாக செல்லம்மாள் பாரதியோடு வாழ்ந்த வாழ்வின் அனுபவங்களின் உணர்வுகளில் பெய்கிறார்.

**(இன்னும் பெய்வார்)**

# கறுப்பு காந்தி நெல்சன் மண்டேலா

உலகமே கொண்டாடிய தலைவரின் காதலை இந்திய வம்சாவளி பெண் ஏற்க மறுத்தது ஏன்?

நெல்சன் மண்டேலா ஒருமுறை நகைச்சுவையாக இவ்வாறு தெரிவித்தார்: "பெண்கள் என் மீது பார்வையைச் செலுத்துகிறார்கள் என்றால், அது எனது தவறு அல்ல. உண்மையைச் சொல்வதென்றால், நான் எப்போதும் அதை எதிர்க்க மாட்டேன்."

மூன்று முறை திருமணம் செய்துகொண்ட நெல்சன் மண்டேலா, உலகம் முழுவதும் பெண்களால் அதிகம் விரும்பப்பட்ட நபராக இருந்தார். வயது முதிர்ந்த காலத்திலும் கூட அவரால் பெண்களைக் கவர முடிந்தது.

ஆனால், மண்டேலாவின் காதலை ஏற்காத ஒரு பெண் இருந்தார். இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அந்தப் பெண்ணின் பெயர் அமினா கச்சாலியா.மண்டேலாவின் காதலை ஏன் இந்தப் பெண் நிராகரித்தார்?

தென்னாப்பிரிக்காவில், அந்நாட்டு அரசின் இனவெறிக்கு எதிரான இயக்கத்தில் அமினா பல்வேறு பங்களிப்புக்களை அளித்திருந்தார். அவருக்கு அப்போது 21 வயது தான் ஆகியிருந்தது. ஒருமுறை அவரது பிறந்த நாள் விழாவுக்கு நெல்சன் மண்டேலா வந்திருந்தார். இதே போல் நெல்சன் மண்டேலா போல்ஸ்மூர் சிறையில் அடைக்கப்பட்டிருந்தபோது அவருக்கு ஆறுதல் கூறும் விதமாக அமினா அந்த சிறைக்குச் சென்று அவரைப் பார்த்துவிட்டுத் திரும்பினார்.



பின்னர் யூசுஃப் கச்சாலியா என்பவரை அமினா திருமணம் செய்துகொண்டார். அப்போது தான் மண்டேலா தனது இரண்டாவது மனைவியான வின்னியிடம் இருந்து விவாகரத்து பெறும் முயற்சியைத் தொடங்கியிருந்தார்.நெல்சன் மண்டேலாவுடன் இணைந்து நிறவெறிக்கு எதிரான போராட்டங்களில் அமினா கச்சாலியா பங்கேற்றார்

"மண்டேலாவும் எங்களது பெற்றோர்களும் நெருங்கிய நண்பர்களாக இருந்தனர் என்பது எங்கள் அனைவருக்கும் தெரியும். அவர் அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வந்து சென்றார். என்னுடைய அம்மாவை மண்டேலா திருமணம் செய்துகொள்ள விரும்பியதாகவும், அதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் 90களில் என்னிடமும், எனது சகோதரியிடமும் என் அம்மா சொல்லியிருக்கிறார்," என அமினாவின் மகன் கலெப் கச்சாலியா தெரிவித்தார்.

அப்போது நெல்சன் மண்டேலாவின் வயது 80, அமினாவின் வயது 68.

மண்டேலாவைத் திருமணம் செய்துகொள்ள அமினா ஏன் மறுத்துவிட்டார் என கலெப்பிடம் நான் கேட்டேன்.

"அவர் மீது என் அம்மாவுக்கு உண்மையில் ஆழமான அன்பு இருந்தது. அதே நேரம் எனது அப்பாவின் நினைவுகளை மறக்க அவர் கொஞ்சம் கூட விரும்பவில்லை. என் அப்பா, அம்மாவை விட 15 வயது மூத்தவர். ஒருவேளை என் அப்பாவுக்குப் பின் வேறு ஒரு வயதான நபர் அவருடைய வாழ்க்கையில் நுழைவதை அவர் விரும்பாமல் இருந்திருக்கலாம்," என்றார் அவர்.


நெல்சன் மண்டேலா சிறையில் இருந்து விடுதலையான போது தான் முதல் முறையாக அமினாவை சந்திக்கும் வாய்ப்பு தனக்குக் கிடைத்ததாக பிரபல ஊடகவியலாளர் சயீத் நக்வி கூறுகிறார். அப்போது அமினாவின் கணவர் யூசுஃப் உயிருடன் இருந்தார். சிறையில் இருந்து வெளிவந்த பிறகு டெஸ்மண்ட் தூட்டுவின் இல்லத்தில் நெல்சன் மண்டேலாவைப் பார்க்கச் சென்ற போது, மண்டேலாவுக்குப் பக்கத்தில் அ மினா அமர்ந்திருந்ததைப் பார்த்தாக அவர் கூறுகிறார்.

"அமினாவைப் பார்த்தபோது, அவர் ஒரு காலத்தில் மி க வும் அழகாகவும், கவர்ச்சியாகவும், விளையாட்டுத்தனமாகவும் இருந்திருக்க வேண்டும் என்று உணர்ந்தேன். அவர் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியில் இணைந்து பல்வேறு பணிகளை ஆற்றியிருக்கிறார். மேலும், அவர் மண்டேலாவின் நெருங்கிய தோழியாகவும் இருந்திருக்கிறார். இது மட்டுமல்ல, அவரது முதிர்ச்சியும், அறிவாற்றலும் மண்டேலாவுக்கு சமமாக இருந்தது," என்று ஊடகவியலாளர் நக்வி கூறுகிறார்.

சுவாரஸ்யமான இன்னொரு கதை என்னவென்றால், 1948 இல் தென்னாப்பிரிக்காவிற்கு சுற்றுப்பயணம் செய்த ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரரான கீத் மில்லர், அமினாவை காதலித்து வந்தார். அப்போது அவருக்கு திருமணம் ஆகவில்லை. அந்த நேரத்தில் மில்லர் உலகின் புகழ்பெற்ற ஆல்ரவுண்டராக இருந்தார்.

"அவர்கள் இருவரும் ஒரு விருந்து நிகழ்ச்சியில் சந்தித்துக் கொண்டனர். அதன் பின் மில்லர் அடிக்கடி இரவு பகல் பாராமல் அமினாவை தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அவரால் அமினாவுடன் தொலைபேசியில் பேசமுடிந்ததே ஒழிய, நேரில் சந்திக்க முடியவில்லை. ஏனென்றால், அமினா ஒரு வெள்ளைக்கார பெண்ணல்ல.

அமினா வாழ்ந்து வந்த பகுதி இந்தியர்கள் வாழும் குடியிருப்பு. அமினாவின் கணவர் யூசுஃப் பாய் நிறவெறியை வென்றது குறித்து அடிக்கடி நகைச்சுவையுடன் கதைகளைக் கூறிவந்த நிலையில், வெள்ளையரான கீத் மில்லர் அப்பகுதிக்கு ஒருநாளும் வரமுடியவில்லை. இல்லை என்றால் அவர் அங்கு வந்து அமினாவை நேரில் சந்திக்க முயன்றிருப்பார்," என்கிறார்.



கலாபூஷணம்
**பரீட் இக்பால்...**
யாழ்ப்பாணம்

# சிவாஜியும் பத்மினியும் ஒரு படத்தில் நடிக்க 65 ஆண்டுகளுக்கு முன் வாங்கிய சம்பளம்

பிரபல நடிகர்களான சிவாஜியும் பத்மினியும் ஒரு படத்தில் நடிக்க 65 ஆண்டுகளுக்கு முன் வாங்கிய சம்பளம் எவ்வளவு தெரியுமா? அப்போவே அவ்வளவா பலரும் அறியாத தகவல்..

1942 இல் ஜுபிடர் பிக்சர்ஸ் கண்ணகி திரைப்படத்தை தயாரித்து வெளியிட்டது. ஜுபிடர் பிக்சர்ஸின் எம்.சோமசுந்தரம், எஸ்.கே.மொகைதீன் இருவரும் சிறந்த கலாரசிகர்கள். இலாபத்தைக் கடந்து திரைப்படங்களை நல்லமுறையில் தர வேண்டும் என்ற வேட்கை கொண்டவர்கள். தமிழின் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரத்தைப் படமாக்குவது என்றதும், அதற்கு திரைக்கதை எழுதும் பொறுப்பை இளங்கோவனிடம் ஒப்படைத்தனர்.

1941இல் வெளிவந்த பாகவதரின் வெற்றிப் படம் அசோக்குமாருக்கு அவர்தான் திரைக்கதை எழுதியிருந்தார். பி.யூ.சின்னப்பா கோவலனாகவும், கண்ணாம்பா கண்ணகியாகவும், எம்.எஸ்.சரோஜா மாதவியாகவும் நடிக்க படம் தயாரானது.

சுமார் 2.5 இலட்சம் செலவில் எடுக்கப்பட்ட கண்ணகி திரைப்படம் 110 நகரங்களில் வெளியிடப்பட்டது. ஒரு கோடிக்கும் அதிகமானவர்கள் படத்தைப் பார்த்தனர். பணம் கொட்டியது. கண்ணகியின் லாபத்தில் கோவை சென்ட்ரல் ஸ்டுடியோவை லீசுக்கு எடுத்து படங்கள் தயாரிக்க ஆரம்பித்தது ஜுபிடர் பிக்சர்ஸ்.



சி.என்.அண்ணாதுரை திராவிட நாடு பத்திரிகையில் கண்ணகி படம் குறித்து எழுதினார். ஐம்பதுகளின் இறுதியில் கண்ணகி படத்தை ரீமேக் செய்ய எம்.சோமசுந்தரம் திட்டமிட்டார். படம் அண்ணாவுக்கும், ஏஎஸ்ஏ சாமிக்கும் திரையிடப்பட்டது. புராண, சரித்திரப் படங்கள் வழக்கொழிந்து, சமூகக் கருத்துள்ள படங்கள் முதன்மை பெற்றிருந்த நேரம். கண்ணகியை அப்படியே மறுபடி எடுத்தால் இந்தக் கால கட்டத்தில் வெற்றி பெறுவது கடினம் என்றார் அண்ணா. அவரது கருத்தை சோமசுந்தரமும், ஏஎஸ்ஏ சாமியும் ஏற்றுக் கொண்டனர். அதேநேரம், தனது கணவனை போராடி மீட்கும் கண்ணகியின் சித்திரம் அவர்களை விட்டு அகலவில்லை. அந்த ஒருவரியில் புதிதாக ஒரு கதையை எழுதுவது என்று தீர்மானித்தனர்.

அந்தக்காலத்தில் ஹாலிவுட்டின் தி எஜிப்தியன் திரைப்படம் பிரபலமாயிருந்தது. அந்தக் கதையின் பாதிப்பில் அரு.ராமனாதனும், ஏஎஸ்ஏ சாமியும் தங்கப் பதுமை கதையை எழுதினர். அதன் ஸ்கெலிட்டல் வடிவம் அப்படியே கண்ணகியை கொண்டிருந்தது. ஆனால், கதை வேறு. கோவலனை பிரதிபலிக்கும் மணிவண்ணன் என்ற கதாபாத்திரத்தில் சிவாஜி கணேசனும், கண்ணகியை பிரதிபலிக்கும் செல்வி என்ற வேடத்தில் பத்மினியும் நடித்தனர். மாதவிக்காக மாய மோகினி என்ற கதாபாத்திரம் உருவாக்கப்பட்டது. ஆண்களை மயக்கும் வசீகர மோகினியாக நடிக்க அஞ்சலிதேவியை அணுகினர். அவர் மறுக்க, பானுமதியிடம் சென்றனர். அவரும் நடிக்க மறுத்தார். லலிதாவும் முடியாதென்றார். இறுதியில் டி.ஆர்.ராஜகுமாரியிடம் வந்தனர். கொல்லும் விழியாள் என்று வர்ணிக்கப்படும் டி.ஆர்.ராஜகுமாரி மாய மோகினியாக நடிக்க ஒப்புக் கொண்டார்.

அவரே அந்த கதாபாத்திரத்துக்கு பொருத்தம் என்று சொல்லும் அளவுக்கு மாய மோகினியை தனது நடிப்பால் உயிர்பெறச் செய்தார். ஏஎஸ்ஏ சாமி இயக்கத்தில் சுமார் 8 இலட்சம் ரூபாய் மதிப்பில் தங்கப் பதுமை தயாரானது. மணிவண்ணன் சிவாஜிக்கு நிகராக பத்மினியின் செல்வி கதாபாத்திரம் படைக்கப்பட்டிருந்தது. படப்பிடிப்பு இடைவேளையில் ஓய்வு எடுக்காமல் பத்மினி வசனங்களைப் படித்து மனப்பாடம் செய்து நடித்தார். நாயகன், நாயகி இருவருக்கும் சம வாய்ப்பு என்பதால் சிவாஜிக்கு அளித்த 60,000 ரூபா சம்பளம் அப்படியே பத்மினிக்கும் வழங்கப்பட்டது. மாதவியாக நடித்த டி.ஆர்.ராஜகுமாரிக்கு 25,000 ரூபாய்.

கண்ணகி படம் எப்படி அதிக நகரங்களில் வெளியிடப்பட்டு வசூலை அள்ளியதோ, அதற்கு நேரெதிராக தங்கப் பதுமையை குறைவான திரையரங்கில் வெளியிட்டு சொதப்பியது, படத்தின் விநியோக உரிமையை வாங்கியிருந்த ராமகிருஷ்ணன் பிலிம்ஸ். பிறகு அவர்களிடமிருந்து விநியோக உரிமையை ஜெயராமன் பிக்சர்ஸ் வாங்கி சிறந்தமுறையில் வெளியிட்டது. படமும் ரசிகர்களால் வரவேற்கப்பட்டது. 6 வது தேசிய திரைப்பட விழாவில் தமிழின் சிறந்தப் படத்துக்கான இரண்டாவது பரிசை தங்கப் பதுமை பெற்றது குறிப்பிடத்தக்கது.



**எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...**
கம்பளை



# கிண்ணியா மண்ணிலிருந்து சீனடிக்கலையின் பரவல்

கிண்ணியா மண்ணிலிருந்து சீனடியின் வளர்ச்சி பல இடங்களுக்கும் பரவலடைந்ததையும் எடுத்துக் கூறியாகவேண்டும். புல்மோட்டை, குச்சவெளி, நிலாவெளி, மூதூர், கந்தளாய், முள்ளிப்பொத்தானை, சாய்ந்தமருது, கல்முனை, அககரைப்பற்று, இறக்காமம் வரையிலான ஊர்களில் சீனடி பயில்வான்கள் அதாவது அண்ணாவிகள் வாழ்ந்து தமது பரம்பரைக்கு கற்றுக் கொடுத்துச் சென்



றுள்ளதை அந்தந்த மண்ணிலே தற்போது சீனடியிலே சிறந்த இடத்தை பெறுகின்றவர்களின் வாயிலாக அறிய முடிகிறது. எனவேதான் அதன் வளர்ச்சிப்போக்கை பின்வரும் அம்ஸங்களுடன் தொடர்பு படுத்தி நோக்கலாம்

01. உறவு முறையால் சீனடிக்கலையின் வளர்ச்சி

02. நட்பு முறையால் சீனடிக்கலையின் வளர்ச்சி

03. தொழில் ரீதியாக சீனடிக்கலையின் வளர்ச்சி

04. வீரத்தின் அடையாளமாக சீனடிக்கலை காணப்பட்டமை

உறவு முறையால் சீனடியின் வளர்ச்சி

உறவு முறை என்னும்போது கிண்ணியாவில் அக்காலத்தில் திருமணம் முடித்தவர்கள் சீனடியை கண்டு தானும் பழகணும் என்ற ஆசையுடன் சீனடியை அண்ணாவிகளிடம் கற்றுக் கொண்டனர்.பிற்காலத்தில் தான் கற்ற விளையாட்டை தமது ஊர்களில் அரங்கேற்றம் செய்து அதனூடாக கலையை வளர்த்தனர்.

இவ்வாறு திருமண உறவால் சீனடி தற்காப்புக் கலை வெளிப் பிரதேசங்களில் வளர்ச்சி காணத் தொடங்கியது.

**நட்பு முறையால் சீனடியின் வளர்ச்சி**

பல்கலைக் கழகங்கள் மற்றும் ஆசிரியர் கலாசாலைகள், தேசிய கல்விக் கல்லூரிகளுக்கு கிண்ணியாவிலிருந்து தெரிவு செய்யப்பட்டு சென்றவர்களில் சிலர் சீனடி வித்தை தெரிந்தவர்களும் அன்றிருந்தனர். அவர்கள் தமது ஓய்வு நேரங்களில் சக பல்கலைக் கழக நண்பர்களுக்கும் கல்வியல் கல்விக் கல்லூரி நண்பர்களுக்கும் சீனடி தற்காப்புக் கலையினை கற்றுக் கொடுத்ததனூடாக சீனடி அங்கும் சிறப்பாக வளர்ச்சியடையத் தொடங்கின.

**தொழில் ரீதியாக சீனடியின் வளர்ச்சி**

தமது அரச நியமனங்களை ஏற்று கடமை புரிந்திட ஆசிரியர்களாகவோ அல்லது அரச அலுவலர்களாகவோ கிண்ணியாவுக்கு வந்து தங்கியிருந்து சேவை புரிந்த காலங்களில் சீனடிக் கலையை விரும்பி பலர் கற்றிருந்தனர். அவ்வாறு கற்றவர்களில் மருதூர் ஏ மஜிதை குறிப்பிட்டுச் சொல்லலாம்.

மணிப்புலவர் மருதூர் ஏ மஜிது அவர்கள் தனது ஆசிரிய பயிற்சி கலாசாலை நிறைவு பெற்றதன் பின்னால் 1961ஆம் ஆண்டு கிண்ணியா அரசினர் முஸ்லிம் ஆண்கள் வித்தியாலயத்தில் உதவி ஆசிரியராக நியமனத்தை ஏற்று கிண்ணியாவில் கடமை புரியும் காலத்தில் அவர் சீனடிக் கலையை கற்று பலருக்கு கற்றுக் கொடுத்துள்ளார். மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடாத்திய சீனடிப்போட்டிகளுக்கும் நடுவராக செயற்பட்டுள்ளார். இவர் 'பன்னீர் வாசம் பரவுகிறது' எனும் சிறுகதை மூலம் இலக்கிய உலகிற்கு எழுத்தாளராக அறிமுகமானவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் இவர் வட கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் கடமை புரிந்த காலத்தில் கிண்ணியாவில் தேசிய மீலாத் விழா நடாத்துவதற்கு பங்களிப்புச் செய்தமையும் குறிப்பிடத்தக்கது. கொழும்பில் வசித்த அவரது பிற்காலப் பகுதிகளில் சீனடியை அங்கும் கற்பித்துக் கொடுத்ததாக அறிய முடிகிறது.

இவ்வாறு பலர் தொழில் ரீதியாக வந்து சீனடிக் கலையை கற்று தேர்ச்சி பெற்று இந்த மண்ணிலிருந்து வெளியாகி உள்ளார்கள் என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும்.

**வீரத்தின் அடையாளமாக சீனடி காணப் பட்டமை**

சீனடி என்ற விளையாட்டுக் கலை ஒரு விளையாட்டாக இருந்தபோதும் அது ஒரு வீரமிக்க கலையாகவே பார்க்கப் பட்டது. சீனடிக்கலை தெரிந்தவர்களே வீரர்கள் என்றும் அவர்களுக்கே பெண்களைத் திருமணம் முடித்துக் கொடுத்த வரலாறுகள் கிண்ணியாவில் ஆரம்ப காலங்களில் காணப்பட்



டன. திருமணம் என்பது வாழ்வில் முக்கிய பகுதியாகும். எனவே, அதனை அடைவதற்கு சீனடி முக்கிய பங்கு வகித்துள்ளது.

அதன் நிமித்தம் உள்ளூர் ஆண்களும் வெளியூர் ஆண்களும் சீனடியை கற்பதிலே மிகவும் ஆர்வம் காட்டினார்கள். தமக்கு கிடைக்கும் நேரங்களை இரவோ, பகலோ என்று பாராமல் சீனடி பயில நேரத்தை அதற்கென ஒதுக்கிக் கொண்டார்கள். வீரமிக்க ஆண்பிள்ளை என்ற அந்தஸ்தைப்



பெற சீனடிக்கலை கற்கவேண்டிய நிர்ப்பந்தமும் அன்று காணப்பட்டமையால் சீனடிக் கலையின் வளர்ச்சி ஓங்கி நின்றது.

சீனடிக் தற்காப்புக் கலையின் பரம்பலை அல்லது வளர்ச்சியை தகவல்கள் தேடிய போது பின்வரும் வெளிப் பிரதேச சீனடிக் கலைஞர்களிடமிருந்து பெற்ற தரவுகளின் அடிப்படையில் இங்கு அறிமுகம் செய்யப் படுகிறது. ஆரம்பமாக அக்கரைப்பற்று பிரதேசம் அது பல்வேறு கலைகளை கொண்ட பிரதேசமாகும். அதில் சீனடி பற்றிய தகவல்களை நேர்காணல் மூலம் பெற்றதைக் கொண்டு தரப்படுகின்றது

கிண்ணியாவைச் சேர்ந்த சுல்தான் என்பவரிடமிருந்து சீனடிக் கலையினை அக்கரைப் பற்றைச் சேர்ந்த மொம்மலியார் எனப்படும் முகம்மது அலி அண்ணாவியார் கற்றுக் கொண்டார். அவரிடமிருந்து சீனடி மற்றும் சிலம்பம் என்பவற்றைக் கற்று தேர்ச்சிபெற்றவரே சீனடிக் கலைஞர் எம்.எம்.றியாசுதீன் ஆகும். றியாசுத்தீனிடமிருந்து அப்பிரதேசத்தின் இன்னொரு சீனடிக் கலைஞராக ஐ. எல்.முகம்மட் நப்ரிஸ் சீனடி மற்றும் சிலம்படி விளையாட்டுக்களை கற்றுக் கொண்டவராவார்.

**(மேலும் தொடரும்)**

ஏ.எம்.கஸ்புள்ளா

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி

எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

Whatsap: 0714901181



Thurairasa Suresh



பாசிக்குடா அமையா விடுதியில்..






Wishwakeerthi Udaya

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 செப்டெம்பர் மாதம் 29ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.